# பாலகுமாரன்



# கை வீசம்மா கைவீசு

என் இனிய எழுத்தாளர்

லா. ச. ராமாமிருதம்

அவர்கட்கு சமர்ப்பணம்

**PRICE Rs. 30/-**

Page: iv+352

□ KAI VEESAMMA KAI VEESU— A contemporary Novel in Tamil by S. V. BALAKUMAREN (c) □ First Edition: July 1989 □ Published by : T S Raamalinghoam, Narmadha Pathippagham, Madras-600 017 □ Printed at: Manian Achagam, Madras-600 004 □

# கை வீசம்மா கை வீசு...

பாலகுமாரன்

நர்மதா பதிப்பகம்

# கடிதப் பூக்கள்

பட்டுக்கோட்டை பிரபாகர்

30, தலையாரி தெரு
பட்டுக்கோட்டை

உயர்திரு அன்பார்ந்த பாலகுமாரன் அவர்களுக்கு,

வணக்கம். நலம். நலமா? முகவரி மாற்றக் கடிதம் வந்தது. குறித்துக் கொண்டேன். இந்த புதிய மாற்றம் தங்கள் எழுத்துலக, சினிமா உலக வேட்கையுடன் கூடிய முயற்சிகளிலும் பிடித்தமான மாற்றங்களை உண்டு செய்யட்டும்.

உங்கள் ஜூனியரில் எழுதச் சொல்லி எங்கள் சார்பாய் நான் எழுதிக் கேட்ட போது மாத இதழிலா என்று ஒதுங்காமல், புதிய பத்திரிகையிலா, என்ன ரீச் இருக்க முடியும் என்று கணக்கிடாமல்...ஆத்மார்த்தமாக உடனே ஒப்புக்கொண்டு...ஒரு மாதம் கூட உங்களால் எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் எழுதிக் கொடுத்து ஒத்துழைத்த பண்புக்கும், பாங்குக்கும் என் தலையாய நன்றிகள்.

ஒவ்வொரு இதழிலும் உங்கள் எழுத்தில் இருந்த வார்த்தைகளின் அன்பு இழைகளால் செய்யப்பட்ட பின்னலும், சமயங்களில் திராவக வீச்சுகளுமாய்...ஒரு கட்டுரைத் தொடரை கதையின் சுவாரசியத்துடன் கொடுத்தீர்கள். 'அழகு யதேச்சை, முயற்சி செய்து பெறுவதல்ல, காதல் காமத்திற்காக மட்டுமல்ல' என்று பல வரிகள் நெஞ்சில் அசையாமல் அமர்ந்திருக்கின்றன.

ப்ரியங்களுடன்,
பட்டுக்கோட்டை பிரபாகர்

□□

ஜெய்குமார் மேலூர்
1—6—88

அருமை நண்பர் பாலாவுக்கு,

வணக்கம். எல்லோரும் உன் எழுத்துக்களைப் படித்து நுனி நாக்கால் பாராட்ட, பாராட்ட...யம்மா எனக்கு ரொம்ப மலைப்பாக இருக்கிறது. உன் எழுத்தை முழுவதும் புரிந்து கொண்டார்களா? எல்லாம் அறிந்து கொண்டார்களா? எனக்குத் தான் முழுவதும் புரிய வில்லையா? ஒருவேளை எனக்கு அனுபவமில்லையா?

ஏமாற்றியும் வஞ்சித்தும் நிறைய தவறுகள் செய்து கர்வத்துடன் அலைந்தவனை உன் அறிமுகம் கிடைத்த பின் அவைகளைத் தவறு, தவறு என்று மனது அலறி, வயிறு குமைந்து, நெஞ்சு கலங்கித் தான் போகிறது.

நீ வாங்கிய அடிகள், எனக்கு வலிக்கிறபோது,

நான் வாங்கிய அடிகள், உனக்கு வலிக்கிறதா?

என்றென்றும் அன்புடன்
ஜெய்குமார்

□□

செல்வி சுப்ரமணியம் வேலூர் (வ. ஆ)
22, திருவள்ளுவர் தெரு
சாயிநாதபுரம்

இனிய பாலா,

நமஸ்காரம். நலமா? கொஞ்ச நாளாய் எழுதவே முடியவில்லை. "நல்ல சிநேகிதம் கடிதங்களைப் பொருட்படுத்துவதில்லை." பாலாவின் வாசகங்களே எனக்கு உதவின. தாயில் வரும் பாலகுமாரனின் அனு பவம் அற்புதம். அழுக்கு வேட்டியும், கிழிந்த சட்டை யும், தெவச சாப்பாடும், சேரியில் கிடைத்த கூழும், கம்யூனிஸ்ட் பாலாவும், சியாமளிக்குத் தெரிந்த பாலா வும், இன்னிக்கு இரும்பு குதிரைகள் பாலாவும், சுப்ரமண்ய—ராஜுவுக்கு நெகிழ்ந்து போகும் பாலாவும் எனக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது.

வேறு வீடு மாற்றி விட்டேன். நிறைய மாற்றங்கள். எழுதுங்களேன், பாலா.

என்றென்றும் அன்புடன்
செல்வி சுப்ரமணியம்

□□

K. N RAGHU
Maruthi Chambers,
20/6, Rangan Street
T. Nagar, Madras-17

Dear Mr. Bala

உங்கள் அன்பான கடிதம் கண்டேன். நீங்கள் சொல்வது முற்றிலும் சரி. ஒரு முறை J. K. வை உணர்ந்த பின் அவர் தேவையில்லை. நான் உங்களுக்கு அனுப்பியிருந்த Thought-4, Timeless கட்டுரை அவரின் சிந்தனை என்னுள் ஏற்படுத்திய அழுத்தமான பாதிப்பின் ஒரு பிரதிபலிப்பு. அவ்வளவே, நீங்கள் குறிப்பிட்டுள்ளது போல், வாதப் பிரதிவாதம் செய்து முடிவு கட்டும் விஷயம் அல்ல இந்த விழிப்புணர்வு.

பாலகுமாரன் எனக்கு பதிலெழுதி விட்டார் என்று சொல்லி உங்கள் கடிதத்தை நாலு பேரிடம் காட்டி— அதில் ஒரு சின்ன கர்வம்.

ரகுவின் மனதில் ஒரு அசாதாரண அசத்தலை உண்டு பண்ணிய பாலகுமாரனின் முதல் பரிச்சயம்— எந்தக் கதை தெரியுமா?

மெர்க்குரிப் பூக்கள்.

அதைப் படித்தவுடன் என்னுள் எழுந்த அந்த exclamatory feeling-"What a powerful writer" இத்தனை வருடங்களாக இந்த ஆளை எப்படிக் கோட்டை விட்டு விட்டோம்.

வேணும் விக்ஞாபனம். வாசக தோஷ: க்ஷந்தவ்ய

With Love,
K. N. Raghu

□□

G. DEEPA
Room No. 31
The Instt. of Social Service
Prabhatara, R. K. Puram,
New Delhi-110 066

அன்புள்ள அப்பாவுக்கு,

ப்ரியங்களுடன் மகள் தீபா... 'நான் ஊரை விட்டு விலகி டெல்லி வந்து Indian Air Force-Air Head Quarters-ல் LDC வேலைக்கு சேர்ந்து கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் ஆகப் போகின்றன. Dad, கை வீசம்மா கை வீசு, பந்தயப் புறா இரண்டும் படித்தேன். பந்தயப் புறா செல்வி நீயா என்று என் ஊரில் இருந்து நிறைய பேர் கேட்டு எழுதியிருக்காங்க.

என்னை மாதிரி நிறைய செல்விகள் நம்ம நாட்டில் இருக்கிறாங்கன்னு இன்னும் நிறைய பேருக்குப் புரியலை. நான் என்னிக்குமே கதையுடன் அதிகமாய் ஒன்றிப் போவதில்லை. செல்வியை விட ராஜிதான் என்னை மிகவும் கவர்ந்தவள்.

டெல்லியில் வெயில் மட்டுமில்லாமல் ஆந்தி (புயற்காற்று) மழை என்று எல்லாம் நல்லா இருக்கு. முன்னீர்கா என்ற இடத்திலுள்ள உடுப்பி ஹோட்டலில் இரவு உட்கார்ந்து சாப்பிடும் நேரங்களில் வானத்தில் பறக்கும் விமானங்களைப் பார்க்க நேரிடும் சமயங்களில் 'பயணிகள் கவனிக்கவும்' என்று யாரோ சொல்வது போல் ஒரு பிரமை, dad.

என்றென்றும் அன்புடன்
தீபா

□□

ஸ்ரீரங்கம் சேகர்
73, South Gate
Srirangam.
Trichy-6

மனித மனங்களுக்காக கவலையுறும் மகத்துவமே
மனித பாஷை மறந்த மாக்கள் நிறைந்த நாளில்
குதிரையும், முதலையும்
உனக்குப் பேச்சுத் துணையாய்
போனது எங்ஙனம்? எங்ஙனம்?

வலியைத் தாங்க வலியே மறக்கும்
வலியை மறக்க வலிக்கும் மேலும்
கதறிட மேலும் நகைக்கும் உலகை
கனிவுடன் சொன்ன கடவுள் நீயே!

தேன்மொழியும், சியாமளியும், ஸ்வப்னாவும், அகல்யாவும், விஜியும், செல்வியும் தெரிந்த பின் என்னுள் பெண்ணாய் பிறந்திருக்க வேண்டும் என்கிற பேராசை எழுந்தாலும்,

தியாகுவும், சிவசும், ரங்கராஜனும், ராமானுஜமும், பரமுவும் வரதும் ஏன் ஸ்டீபனும் என்னை பாலாவாய் வாழ பிடித்திழுக்கிறார்கள்.

ஸ்ரீரங்கம் சேகர்

□□

Tmt. R. NIRMALA DEVI,
6B, EVS Road Trichy-620 006.
Srirangam

குமாரா,

என் பிள்ளையின் மார்க் எனக்கு நிறைவைத் தந்தது. இன்று மார்க் ஷீட் பார்த்ததும் வரிசையாய் பழசு அனைத்தும் ஞாபகம் வந்தது.

உன்னைப் புகழவில்லை; பாராட்டவில்லை; அதற்கு எத்தனையோ பேர் இருக்கிறார்கள் உனக்கு. 'செய்கிற தொழிலை சிரத்தையாக செய்கிறேன் அவ்வளவு தான். இலக்கியத்தில் என் இடம் எது என்று எனக்குத் தெரியாது' என்று ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாய். 'சந்தேகத்திற்கு இடமில்லாமல் சிரத்தையாகச் செய்திருக்கிறாய் என்பதற்கு அத்தாட்சியாய் நான் இருக்கிறேன்' என்று என்னை வெளிப்படுத்திக் கொள்கிறேன். கதைகளினூடே சொல்லப்பட்ட Message ஒரு வாசகியின் ரசனை எல்லையோடு நின்று விடாமல் வாழ்க்கையோடு இணைந்து பயன்பட்டிருக்கிறது என்ற Sense of Satisfaction எல்லா Writers க்கும் கிடைத்து விடாது. உன் பாக்கியம் அது.

Yours Lovingly,
R. நிர்மலாதேவி.

# கை வீசம்மா... கை வீசு!

பட்டம்மாள் அந்தப் பெரிய பையை சிரமப்பட்டு தூக்கியபடி லஸ் பிள்ளையார் கோயில் பஸ் ஸ்டாப்புக்கு வந்து நின்றாள். அந்தப் பை நிறைய பாலிகைத் தொட்டிகள் இருந்தன. எல்லா பாலிகைத் தொட்டியிலும் முளைவிட்ட விதைகள் தூவப்பட்டிருந்தன. தொட்டிமண் ஈரத்தோடு கனமாய் கனத்து பை காது இழுத்தது. கை விரல்கள் நெரித்தது. பட்டம்மாள் பஸ் ஏறினாள்.

"எல்லா சாமானும் எடுத்தாச்சா... ஒரு தடவை நீங்களே சத்திரம் முழுக்க செக் பண்ணிடுங்க" வாட்ச்மேன் உரக்க எச்சரித்தான். பட்டம்மாள் சத்திரம் சுற்றி வந்து பார்த்தாள். ஒரு கூடம், இரண்டு ரூம், ஒரு டைனிங் ஹால், சமையலறை... இதுதான் சத்திரம். எண்ணூறு ரூபாய் வாடகை. இரண்டு தடவை சுற்றி வந்தபோது கதவு மூலையில் இந்த பத்து சட்டிகள் இருந்தன.

காலையில் சந்தோஷமாய் ஐந்து சுமங்கலிப் பெண்கள் நீர் தெளித்து விதை பரவிய தொட்டிகள் இவை. பத்தும் அநாதையாய்க் கிடந்தன. பட்டம்மாள் அதை பையில் எடுத்து அடுக்கிக்

கொண்டாள். பாலிகை உயிருள்ள விஷயம். விளைய வேண்டிய பொருள்.

சத்திரத்துத் தகரக்கூரை கீழே காய விட்டு விடுவது பாவம்; எவர் காலாவது பட்டு உடைபட்டால் பெரும் பாவம்! ஐந்து சுமங்கலிகள் அன்போடு தூவின விதை கள். எங்கேயாவது கரைத்துவிட வேண்டும். சட்டி உடைபடாது ஈர மண்ணோடு எடுத்து ஓடுகிற நீரிலோ, குளத்துக் கரையிலோ மெல்ல நோகாது கரைத்து, 'முளை யிட்ட விதைகளே எங்கேனும் போய் ஒண்டி வாழுங் கள், வேர்விட முயற்சி செய்யுங்கள். ஈரமான மண் ணோடு ஓடுகிற நதியில் உங்களை அனுப்புகிறேன். ஒதுங்கி வேர் பிடித்து உரமாய் வளர்ந்து பல்கிப் பெருகுங் கள். இந்த பூமிக்கு தாவரம் அவசியம். நானும் உங் களை மாதிரி ஒரு தாவரம். நானும் எங்கேனும் ஒண்டி, உயிர் ஒண்டி, உயிர் வாழ்வேன். வளர்வேன். பெருகு வேன். நீங்களும் அவ்வாறே...ததாஸ்து!

எங்கேயோ எவனோடோ ஒண்டிக் கொண்ட சந்தோஷத்தில் பெண் கரைக்க வேண்டிய பாலிகை, எவளோடோ பிணைத்துக் கொண்ட கர்வத்தோடு பிள்ளை கரைக்க வேண்டிய பாலிகை, பையில் பத்து தொட்டி பாலிகை.

கரைக்க மாப்பிள்ளை இல்லை. மணப் பெண் கண் திறக்கவில்லை. பையில் பத்துசட்டிப் பாலிகை, பஸ்ஸில் பட்டம்மாள் மடியில் கொஞ்சம் நரைத்து குலுங்கியபடி பயணமாகிற்று.

பத்து மண் சட்டி, அரைப்படி மண், ஆழாக்கு பயறு என்று பட்டம்மாளால் எண்ண முடிய வில்லை.

இரண்டு நாள் ஊற வைத்து வெள்ளை முளை கட்டி கம்மென்று பச்சை வாசனையோடு இருக்கிற விதைகளைப் பார்த்ததும் மனசு நெகிழ்ந்தது. இதை வாட விடணுமா என்று கேள்வி வந்தது. எழுந்து பையில் போட்டுக் கொண்டு விட்டாள். எங்கே கரைப்பது?

மெட்ராஸில் நதியில்லை. எந்த குளத்திலும் ஜலமில்லை. எங்கே கரைப்பது? இப்போது எல்லா கல்யாணத்திலும் பாலிகையை பக்கெட்டில் கரைத்து சாக்கடையில் கொட்டுகிறார்கள். அல்லது சத்திரத்துக் கொல்லையில் மரத்தடி மண்ணில் சரித்து விடுகிறார்கள். பயறு முளைப்பதேயில்லை. தொட்டிக்கு நூறாய் இதில் ஆயிரம் பயறு இருக்குமா? ஒண்ணு முளைச்சா கூட போதும்; புண்ணியம். முளைக்குமா? முளைக்கும்படி இடம் இருக்குமா?

பெண் வாழ்க்கை பாழாய் போயிற்று, இந்தப் பயறு பாழாவானேன். முளைவிட்டுக்கிளம்பிய ஈர விதைகளை அழிப்பானேன். பட்டம்மாள் பையை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

நேத்து ராத்திரியே 'கசமுச கசமுச' என்று இருந்தது. விடியலில் சண்டையாயிற்று. வெளிச்சம் வர இந்தக் கல்யாணம் நடக்கவே நடக்காது என்று சப்தமிட்டார்கள். மாப்பிள்ளையின் அண்ணன் மூட்டைப் பூச்சி மருந்து குடித்துவிட, வாரி எடுத்துக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

வரலாம், வருவார்கள் என்று முகூர்த்த நேரம் தாண்டி காத்திருந்தது வீணாயிற்று. அப்படியே அத்தனைக் கூட்டமும் பஸ் ஏறி விட்டதாம். மாப்பிள்ளை தான் முதலில் பஸ் ஏறினானாம்.

தாம்பாளம் நிறைய சாதம் எடுத்து தரையில் வீசினார். "அந்த படவா பாழாப் போகணும். நான் பார்க்கணும்." சப்தமிட்டார். நாலு பேர் இறுகப் பிடித்துக் கொண்டார்கள்.

பத்தரை மணி முகூர்த்தம். இட்லி, பொங்கல் தீர்ந்து போய், உப்புமா கிண்டி பரிமாறின பிறகுதான் தேவேந்திரன் அண்ணா மூட்டைப்பூச்சி மருந்து குடித்தார். அதுவரை சண்டை நடந்து கொண்டிருந்தது. டிபன் பாட்டுக்கு டிபன் நடந்து கொண்டிருந்தது.

"நான் செத்துப்போறேன்—என் தம்பி கல்யாணத்துக்கு முன்னே செத்துப்போறேன். என் பொணத்துக்கு மாலை போட்ட பிறகு தாலி கட்டுங்கோ. எனக்கு சங்கு ஊதிட்டு மேளம் கொட்டுங்கோ!" —வாய் நுரை தள்ளி கூடத்தில் விழுந்தார்.

"என்னை வுட்டுறாதீங்கண்ணே... என்னை கை வுட்டுறாதீங்கண்ணே! என்னை வுட்டுப்போயிடாதீங்கண்ணே!" தேவேந்திரன் கதறி அழுதான். டாக்டருக்குச் சொல்லி ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனான்.

இருபத்தேழு வயசுப் பெண்ணை—சந்தனக் கட்டி மாதிரி நிறத்தில் அமைந்த பெண்ணை சிலை மாதிரி அழகை — சிரிக்கச் சிரிக்கப் பேசும் புத்தியை— ராஜேஸ்வரியை— ராஜிக் குட்டியை கைவிட்டான். தனியே விட்டு விட்டு பஸ் ஏறிப் போய்விட்டான்.

அது அழுதது. முழங்கையில் முகம் புதைத்து உடம்பு குலுங்க அழுதது. பக்கத்தில் உட்கார்ந்து

முதுகு தடவிக் கொடுத்தும் தாவி மடியில் படுத்து இறுக்கிக் கொண்டு வாய்விட்டுக் கதறிற்று. 'அம்மா... அம்மா' என்று புலம்பிற்று.

'மோசம் போயிட்டேனே' என்று அழுதது. பெண் அபலை. மோசம் பண்ணிட்டானே என்று அழத் தெரியாத அபலை. குழந்தையைப் பார்க்கப் பார்க்க வயிறு எரிந்தது.

இது பாபம்...மகா பாபம்! யார் இதைச் செய்தாலும், விதை முளையை வெயிலில் எறிந்த பாபம். பசுவை முளையோடு இறுக்கிக் கட்டி வெட்டிக் கொன்ற பாபம்...

ஆனால் ஜனங்கள் பாபிகள்! பாபம் செய்து பிறந்தவர்கள். பிறந்து விட்டு பாபம் செய்கிறவர்கள். சாகிற நேரம் வரையிலும் துவேஷமும், தூஷணையுமாய் வாழத் துடிப்பவர்கள். எது உலகத்தை ஆள்கிறது? பேயா? கடவுளா? கடவுள் உண்டா? அப்படி யாராவது உண்டா?

''இதெல்லாம் பகவான் பண்ற சோதனை. தாங்கிக் கோம்மா.''—கல்யாணத்திற்கு குக்கர் ப்ரஸண்ட் பண்ண வந்தவர், அதை மூலையில் வைத்து விட்டுப் பேசினார். இருபத்தியேழு வயசுக்கு இப்படி சோதனை உண்டா? கொதிக்கிற எண்ணெய்ச் சட்டிக்குள் முழுக்குப்போடுகிற சோதனையா? உடம்பு முகமெல்லாம் வெந்த பிறகுதான் தேஜஸ் வருமா? அப்படி எதுக்கு தேஜஸ்...

தலையெழுத்து, நிறைய பேர் இதைத்தான் கடைசி வார்த்தையாய்ச் சொன்னார்கள். எழுதினது யார்? ஏன்? எப்போது? எங்கே?

என் கருவிலா. அப்பன் விந்திலா. சினை முட்டை உடைந்து கரு புகுந்து முட்டை மூடிக் கொண்டு நான் தயார் என்று அறிவித்த பிரம்ம நேரத்திலா. வயிறு நழுவி இடுப்புத் தசை முறுக்கி மூச்சு திணற விழிபிதுங்க முக்கியதும் நகர்வது தெரிந்ததே...ஐயோ என்று உயிர் போகிற வலியில் கத்தினேனே? அப்போதா...மருத்து வச்சி தலை தாங்க ஈரப்பாயில் குழந்தை முதுகு பட்டதே அந்த நேரமா. நாலு விரலால் இரண்டு கால்களையும் தூக்கி முதுகு தட்ட மூக்கு ஜலம் தெரித்து வீல் என்று குழந்தை அழுதாளே...அப்போது எழுதின எழுத்தா?

என் பாபமா...என் புருஷன் பாபமா...என் முத்தோர் வாங்கின சாபமா? இல்லை, இது போன ஜென்மத்தில் வாங்கி வந்த வரமா?

எந்தச் செடியை கசக்கியோ, எவர் குடும்பம் கலைத்தோ, எவரைத் துடிக்க வைத்தோ, மறுபடி பெண்ணாய்ப் பிற. புருஷனுக்குப் பேயாய் அலை. பிடித்தவனும் உதற, பொங்கி பொங்கி அழு! அப்போ புரியும் உனக்கு என்று எவர் போட்ட சாபம்...இது அனுபவிக்கறது என்று?

ஒரு வேளை இது எதுவுமே இல்லாது மேலே பட்ட காக்கை எச்சமாய் 'ச்சீ...போ!' என்று துடைத்துக் கொண்டு முழுக்குப் போடத் தெரியாமல் உழல் கிறோமோ, இந்தக் குழந்தை மனசு துடைக்குமா, நினைவுக்கு முழுக்குப் போடுமா, மறுபடி உயிர்த் தெழுமா, பகவானே...இதுக்கு உதவி செய்வியா? இந்த முளைப் பயிரை, உயிர்த் துடிப்பை வளராது விருக்ஷ மாகும் சூல் கருவை கரைக்கிறேன். வாட விடாமல்

வாழ வைக்கிறேன். என் குழந்தைக்கு உதவி செய். பலம் தா. புதிதாக்கு. வளர வை. வாழ வகை செய். விதை ஒன்று போட்டால் சுரை ஒண்ணு முளைக்குமா? நான் நல் விதையை நல்ல விதமாய் விடுகிறேன். என் குழந்தைக்கு நல்லது செய்.

பட்டம்மாள் ஈகா தியேட்டர் அருகே இறங்கினாள். பட்டணத்தில் நதி தேடினாள். சேத்துப்பட்டு பாலத்தில் ஏறினாள். மீன்வளத்துறை என்கிற போர்டு பார்த்தாள். பெரிய குட்டை மாதிரி ஏரி. கரையோரம் சில மரப்படகுகள். நடுவே தீவு. ஒற்றை மரம். பாலச் சுவருக்கு அப்பால் பையை வைத்தாள். சுவர் தாண்டி இறங்கினாள். நெருஞ்சி படர்ந்து கிடந்தது. அவள் கை வைத்ததும் ஆறு ஏழு உருண்டை முட்கள் பாதம் தைத்தன. மெல்ல பிடுங்கி எறிந்தாள். நுனிக்காலில் நடந்தாள். ஏரிக்கு அருகே போனாள்.

பையிலிருந்து பாலிகைகளை எடுத்து கரையில் வைத்தாள். பத்து பாலிகைத் தொட்டிகள்...தொட்டியெல்லாம் ஈரமண். மண்ணில் புதைந்து வெள்ளையும் வெளுத்த பச்சையுமாய் முளைப்பயறு. வெயில் பட்டவுடனே வீசும் பசுமை வாசனை.

குழந்தை மேலும் இப்படித்தான் ஒரு வாசனை வீசும்.

''என்ன வாசனை இது?'' — மருத்துவச்சிடம் கேட்டாள்.

''உங்க பால் வாசனை. அது மட்டும் தானே குழந்தை சாப்பிடுது...அதால அந்த வாசனைதான் வீசும்.''

"பச்சை வாசனையா இருக்கே?"

"நீங்க சாப்பிட்டிருப்பீங்க. ஏதாவது பச்சையா... வெள்ளரிக்கா, வெண்டைக்கா, கீரை மாதிரி..."

"இல்லையே. காபியும் ரொட்டியும் தானே திங்கறேன்" அணைத்து முகர நெடியாய் வீசும்.

"டெட்டால் வாசனை அடிக்குதும்மா தங்கை மேல." — மூத்த பிள்ளை முகர்ந்து பார்த்துவிட்டு சொன்னான்.

"அது இடுப்புத் துணிடா. குழந்தை மேல ஒரு வாசனையும் வீசல...?"

"இவ மக நட்சத்திரம். ராட்சஸ கணம். யோனி அம்சம். ஆண் எலி. பலா மரம். பெண்ணா பிறந்து, பாலுள்ள மரமான நட்சத்திரத்தில் பிறந்தா கொஞ்சநாள் இப்படி பச்ச வாசனை வீசும்". யாரோ ரொம்பத் தெரிந்தவராய் அடித்துச் சொன்னபோது 'ஓஹோ' என்று கேட்டுக் கொள்ளத்தான் முடிந்தது. நம்ப முடியவில்லை, நாலு நாளுக்குப் பிறகு குழந்தை மேல் எந்த வாசனயும் இல்லை.

இப்போது இந்த பச்சை செடி வாசனை முகர்ந்து பார்க்கிறபோது அது சிவந்து அழுது, கை—கால் உதைத்தது ஞாபகம் வருகிறது. பவுடர் அப்பி, சட்டை போட்டு, சீட்டிப் பாவாடையோடு பாண்டி ஆடியது ஞாபகம் வருகிறது. ஈரத்தலையோடு பாத்ரூமிலிருந்து எட்டிப் பார்த்து, "அம்மா, இங்க வா...என்னமோ ப்ரௌன் ப்ரௌனா குளிக்கறச்ச போறது."

"ப்ரௌனா...ரெட்டா?"

"ப்ரௌன் தான்... இல்லம்மா, ரெட்!"

"இருடி... இருடி! நான் பார்க்கப் படாது. கதவு திறக்காத... இரு...மொத மொத பெத்த தாய் பார்க்கப் படாது. இரு, மாமி, மாமி..." அடுத்த வீடு ஓடி நாலு பேர் அழைத்து வந்து உள்ளே அனுப்பி காத்திருந்து... அதுதான்...அது தான்...

"கௌரி கல்யாணம் வைபோகமே...

சீதா கல்யாணம் வைபோகமே..."

பெண் பெரியவளாவதே கல்யாணம் மாதிரி கவலைதான். கட்டிக் காக்கணுமே இதை என்கிற கவலைதான்!

பெண் கூன் போட்டது. நிமிர்ந்தது. அலை பறக்கிற கூந்தலும் குழி முகவாய் அழகும் மதாளித்த உடம்புமாய் மலர்ந்தது. ராஜேஸ்வரி...ராஜேஸ்வரி — ஊரெல்லாம் மொய்த்தது.

காவலுக்கு ஆள் இல்லை. கட்டி, கரை சேர்க்க ஆளில்லை. இங்க நிக்காதே ... அங்க நிக்காதே. அதட்டி அரற்ற வைத்த அளவுக்கு அந்தக் குழந்தைக்கு அணைத்து புத்தி சொல்ல ஆளில்லை.

தானே வயப்பட்டு—தானே தேடி—தானே சம்மதித்து—தானே நாள் பார்த்து—தானே தாலி வாங்கி, புடவை எடுத்து, சீருக்கு சேர்த்து, தாலி கட்டிக் கொள்கிறபோது சிதைந்து விட்டது.

சிதைந்தாலும், சீரழிந்தாலும் இது என் பெண்—என் குழந்தை—என் செல்வம்.

பட்டம்மாள் ஈரமண் எடுத்தாள். உள்ளங்கையில் ஏந்தினாள். கண் மூடினாள். மெல்ல நீர் விட்டு அலசிக் கரைத்தாள். அலசின இடத்தில் தண்ணீர் வட்டம் போட்டது. மண் கரைந்து அடி வேரோடு முளைகள் மேலெழும் அலைய இடமும் வலமுமாய் ஒதுங்கின. பட்டம்மாள் இன்னொரு பாலிகை சட்டி எடுத்தாள். மறுபடி மறுபடி மெதுவாய் கரைத்தாள்.

கண்ணில் நீர் கோர்த்தது. என் குழந்தை இன்று எத்தனை சந்தோஷமாய் கரைக்க வேண்டிய பாலிகை இது. தாலி தொங்க, புடவை சரிய, மெட்டி மினுக்க, கொலுசு சிலும்ப, வளையல் குலுங்க, மருதாணி விரல் வழித்த மண் சருக்கென்று கரைய மெல்ல ஈரமுளைப் பயிருக்கு விடை கொடுத்து அனுப்பும் விழா இது.

"பகவானே, இதை இப்படி கரைக்க என்ன பாபம் பண்ணினேன்...பகவானே!"

கடைசி பாலிகை கரைக்கும்போது பொங்கிவிட்டது. வாய் உதறி அழுகை புறப்பட்டது. உடம்பு தள்ளாடிற்று. பட்டம்மாள் நிமிர்ந்தாள். தலை சுற்றிற்று. பின்னுக்குத் தள்ளிற்று. நீரிலிருந்து ஒரு கால் எடுத்து கரையில் வைத்து ஏறினாள். வழுக்கிற்று. ஜாக்கிரதையாய் கால் ஊன்றி இடக்கால் எடுத்து புல் தரை மீது வைத்தாள். காலடியில் ஏதோ குறு குறுத்தது. நத்தை ஓடு உடைந்து நெளிந்தது. உதறினாள். உதறின வேகம் கால் சறுக்கிற்று. பட்டம்மாள் அந்த ஏரியில் மல்லாக்க விழுந்தாள். உட்கார, களிமண் வழுக்கி கையசைத்து உள்ளே போனாள்...முற்றிலுமாய் நீரில் மூழ்கினாள்.

ஸ்கூட்டரை பாலத்தின் விளிம்பில் நிறுத்திவிட்டு யாருக்காகவோ காத்துக் கொண்டிருந்தவன்தான் முதலில் கவனித்தான். ஐந்து நிமிடம் முன்பு ஏதோ கரைத்துக் கொண்டிருந்த பெண்மணி 'மளேர்' என்று மல்லாக்க விழுவதை அவன்தான் முதலில் கவனித்தான். ஏரிக்கு ஓடுவதா? இல்லை, இங்கிருந்து கத்துவதா என்று அவனுக்குப் புரியவில்லை. இரண்டும் செய்யாது சில கணங்கள் தாமதித்தான். அந்தப் பெண்மணி எழுந்து உட்கார்ந்து மறுபடி மூழ்கி ஆழத்திற்கு நகர்வதை தெளிவாய் புரிந்து கொண்டான்.

"விழுந்துட்டாங்க... விழுந்துட்டாங்க!" —ஏரியை நோக்கி கத்தினான். அவனைக் கடந்து கொண்டிருந்த சைக்கிள்காரன் நிறுத்தி எட்டிப் பார்த்தான். அவனுக்கும் புரிந்தது. சைக்கிளை தடேல் என்று விட்டு விட்டு சுவர் அருகே ஓடி வந்தான். சைக்கிள் விழுந்த சப்தம் கேட்டு சிலர் திருப்பிப் பார்த்தார்கள். எதிர்ப்பக்க பாலத்தி லிருந்து ஏரிக்கரை சுவருக்கு ஓடிவந்தார்கள். திடீரென்று ஆட்கள் குறுக்கே ஓடுவது பார்த்து ஸ்கூட்டரும் சைக்கிள் களும் மெதுவாயின—நின்றன-எட்டிப்பார்த்தன. முதலில் கூவியவன் சுவரில் பூட்ஸ்கால் வைத்து மறு பக்கம் குதித் தான். மடமடவென்று நாலைந்து பேர் குதித்தார்கள். நெருஞ்சி இலை வழவழப்பில் சறுக்கினான். சறுக்கி கை வைத்தவர்கள் முகுண்டைகளுடன் எழுந்து 'ஐயோ' என்றார்கள்.

சைக்கிள்காரன் நீர்கரைக்கு முதலில் போனான். செருப்பு கழற்றி வேகமாய் பேண்ட் அகற்றி கால் வைத் தான். சேறு சறுக்க தள்ளாடினான். ஸ்கூட்டர்காரன் கையை எட்டிப் பிடித்துக்கொண்டான். ஏறினா லும் சறுக்கிற்று; இறங்கினாலும் சறுக்கிற்று.

"நீச்சத் தெரியுமா?"—பாலத்துக்கு குறுக்கே ஓடி வந்தவர் தடுமாறுகிற சைக்கிள்காரனைப் பார்த்துக் கூவினார்.

''தெரியாதே!''

''அப்ப என்ன மயித்துக்கு இறங்கின...ஏறுய்யா!'' வேட்டி அவிழ்த்தார்; சட்டை கழற்றி பக்கத்தாளிடம் கொடுத்தார். கரையில் உட்கார்ந்தார்; உட்கார்ந்தபடி இறங்கினார். உட்கார்ந்து கழுத்தாழம் இறங்கியதும் முழங்கால் போட்டு மெத்தென்ற களிமண்ணில் நடந்தார். மறுபடி கழுத்தாழம்வர கால் ஊன்றி ஜலம் துளாவி உள்ளே போனார். சட்டென்று நீந்தினார். இரண்டு வீச்சில் பட்டம்மாளை எட்டிப் பிடித்தார். பட்டம்மாள் மணிக்கட்டைப் பிடித்து எதிர்ப் பக்கமாய் சுழற்றி முதுகு வரும்படி செய்து இரண்டு புஜங்களையும் பற்றித் தூக்கினார். கால் உதைத்து கரைக்கு வந்தார். களிமண்ணில் கனத்தோடு கால் வைக்க தள்ளாடிற்று. சட்டென்று ஜனங்கள் யாரோ சொல்ல சங்கிலியானார்கள். ஒருவர் முழங்கையை ஒருவர் பற்றியபடி வேட்டி ஆளின் பனியனை பற்றிக் கொண்டார்கள்—இழுத்தார்கள். கரையில் ஏறி வழுக்கியவர்களை நின்றவர்கள் பிடித்துக் கொண்டார்கள். மெல்ல பட்டம்மாளைக் கரையேற்றினார்கள்.

ஏரிக்கு வடக்குப் பக்கம் இருக்கும் மீன் வளத்துறை இலாகா மொத்தமாய் வெளியே வந்தது.

''காப்பாத்திட்டாங்கன்னு நினைக்கிறேன்.''

''போலீஸுக்குப் போன் பண்ணு.''

''சார்...நான் சேத்பட் ஃபிஷரிஸ் கிளார்க் பேசறேன். ஒரு ஆள் ஏரில விழுந்திடுச்சு சார். ஜனங்க எடுத்து வெளிய போட்டுருக்காங்க. செத்துடுச்சா, இருக்கா

தெரியலை. போய் பார்க்கணும். எம் பேரு மாணிக்கம் சார்."

முதுகில் ஒரு அழுத்து அழுத்த பட்டம்மாள் குபுக் கென்று ஜலம் வாயிலெடுத்தாள். இன்னொரு முறை அழுத்த, மறுபடி வாயிலெடுத்தாள். இருமி சேறு துப்பினாள்.

"பொழைச்சிட்டாங்க...பேரு என்னம்மா?"

பட்டம்மாள் மறுபடி இருமினாள். "மெள்ள மேல எடுத்துட்டுப் போயிடுவோம். காத்து வுடு...காத்து வுடு."

"உம் பேரு என்னா...எந்த ஊரு உனக்கு?"— பட்டம்மாளுக்கு பேச முடியவில்லை. நெஞ்சு அடைத்து பயத்தில் உடம்பு உதறிற்று.

"இருங்க...இருங்க...அமைதியா இருங்க." இறங்கி யவர் வேட்டி வாங்கி உடுத்திக் கொண்டு, ஈர ஜட்டி அவிழ்க்க போலீஸ் ஜீப் நின்றது. சாதாரண உடை போலீஸ் எட்டிப் பார்த்து சுவரேறி குதிக்க, கூட்டம் காணாமற் போயிற்று.

ஜட்டி பிழிந்து கொண்டிருந்தவனைப் பிடித்துக் கொண்டது.

"யார் இது...என்ன ஆச்சு?"

"தெரியலை. ஜனம் சத்தம் போட்டது. ரோடோட போனவன் இறங்கி இழுத்துப் போட்டேன்."

"உன் பேரு என்ன...எங்கிருக்க நீ? உட்காரு. ஏன் நிக்கற? அப்படி குத்தவச்சு உட்கார்!" காப்பாற்றியவன்

வேட்டியோடு நெருஞ்சிச் செடி மீது குத்துக்காலிட்டு ஈர உடையோடு தலையில் அடித்தபடி உட்கார்ந்தான். பயத்தில் கண் சொருகின. பட்டம்மாளை இரண்டு போலீஸார் தூக்கினார்கள். ரோடுக்குக் கொண்டு வந்தார்கள். இன்ஸ்பெக்டர் நாடி பார்த்தார்.

"பல்ஸ் ஜாஸ்தி இருக்குய்யா. ஜி. எச். கொண்டு போ. எய்ட் நாட் த்ரீ, ப்ராப்பர்ட்டி இருக்கா...வாரிக் கிட்டு வா, யார் அது உட்கார்ந்திருக்கிறது...இட்டா அவனை."

ஜீப்பில் கிடத்தப்பட்டதும் பட்டம்மாள் திடுக் கிட்டாள்.

"என் பை...பாலிகைப் பை! பெரிசா இருக்குமே என் பாலிகைப் பை!"

"இருக்கு... இருக்கு... உங்க பேர் என்னா?" பட்டம்மாள் நினைவிழந்தாள். ஜீப் ஜி. எச்சுக்குப் பறந்தது.

பாலிகைப் பையில் பத்திரிகை இருந்திருக்கிறது. பத்திரிகையில் சத்திர விலாசம் இருந்திருக்கிறது. சத்திர ரிஜிஸ்தரில் வீட்டு அட்ரஸ் கிடைத்து விட்டது. பட்டம் மாள் விழுந்த முக்கால்மணி நேரத்தில் வீட்டு வாசலில் போலீஸ் வந்து விட்டது.

"யாரு... ராஜேஸ்வரி நீங்கதானா? நாகராஜ ஐயர் யாரு... நீங்களா? உங்க மனைவி பேரு பட்டம்மாளா? நீ யாரப்பா, உன் பேரு என்னா? வெங்டேசனா? வித் பெஸ்ட் காம்ப்ளிமென்ட்ஸ்ல போட்டுருக்கு. எல்லாரும் ஜி. எச்.வாங்க. பட்டம்மா அங்க அட்மிட் ஆகியிருக்கு!"

தேவேந்திரன் இல்லையா... எங்க இப்ப? என் கேள்விக்கு பதில் சொல்லு. முதல்ல தேவேந்திரன் யாரு? எங்க இப்ப?

நின்னு போச்சா... கல்யாணம் நின்னு போச்சா! ஏன்?

ஓடிட்டாரா... மாப்பிள்ளையா? ம்ம்... என்ன தகராறு. சீரா, வரதட்சணையா? பட்டம்மா நல்லா இருக் காங்க, உயிருக்கு ஒண்ணும் ஆகலை. இப்ப சொல்லு... ஏன் கல்யாணம் நின்னது?

பளீர்னு அடிப்பேன். இங்கிலீஷ்ல பேசாதே. ஏன் மாப்பிள்ளை ஓடினதை போலீஸ்ல சொல்லலை? கிரிமினல் குத்தமில்லை? ஒரு புகார் எழுதிக் குடு. அதெல் லாம் வேணாமா? நீ எழுதிக் குடு. முட்டிக்கு முட்டி தட்டி இந்தக் கல்யாணத்தை நான் நடத்தறேன்.

வேற ஜாதியா... நீங்க என்னா ஜாதி? பிராமின்ஸா... பிராமின்ல என்ன ஜாதி? ஐயரா? எழுதிக்கப்பா... நாக ராஜ ஐயர். அவர் மனைவி பட்டம்மாள். அவர்களுக்கு மகள் ராஜேஸ்வரி. சொந்த ஊர் எது... கும்பகோணமா... அட்ரஸ் சொல்லுங்க.

எழுதிக்கப்பா. தேவேந்திரன் என்ன ஜாதி... பிள்ளைமார். அவங்கப்பா பேரு என்ன... கருப்பசாமிப் பிள்ளை. எந்தூரு... பட்டுக்கோட்டையா? எப்படி கல்யாணம் நிச்சயமாச்சி? லவ்வா? நீங்க ஒத்துக்கிட்டீங்க அவங்க ஒத்துக்கலை. யாரு? பெரியண்ணன். மாப் பிள்ளைக்குப் பெரியண்ணன் பேரு என்னா? கஜேந் திரன். என்ன காரணம்? ஜாதி வித்தியாசம். அவங்க

ஜனம் ஒத்துக்கலை. அப்ப அந்தப் புடுங்கி தேவேந்திரன் ஏன் லவ் பண்ணான்? ஒரே வீடு. வலதுபக்க ரூம். எழுதிக்கப்பா...

யாரு நிறுத்தினது... கல்யாணத்தை என்ன சொல்லி நிறுத்தினாங்க? ஏன் நிறுத்த ஒத்துக்கிட்டீங்க? மூட்டைப் பூச்சி மருந்தா பெரியண்ணன் குடிச்சான்! பாம்பு புத்தா இருக்கே... தனியா எழுது இதை. மாப்பிள்ளையின் பெரியண்ணன் கஜேந்திரன் விஷம் குடித்தார். எப்படி?

அந்த பேமானி...

பேமானிதான். சத்திரத்து சாமான் கல்யாணம் நடக்காத இங்க இறங்கியிருக்கு, அப்படித்தான? நிறைய செலவு பண்ணியிருக்கீங்களே. இது என்னா தகரத்தில? பருப்பு தேங்கா. அப்படீன்னா? துன்றதா? இத்தினியும் நாசம் பண்ணிட்டு அவன் தம்பியோட பஸ் ஏறிட்டானா எப்படி வுட்டாங்க? உங்கப் பக்கம் என்னா பால்ட்? ஒரு போன் அடிச்சிருந்தா போலீஸ் வந்து அவங்க கூட்டத்தை அப்படியே கூண்டுலே ஏத்தி கல்யாணம் நடத்தியிருக்குமே. என்னா பால்ட் உங்க பக்கம்? பொண்ணு பெத்தது பால்ட்ன்னு ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதாம் வருஷத்து குற்றப்பத்திரிகைல எழுத முடியாது.

ஐயரே, ஏன் அழுவுற? ஏன் அழுவுற... படிச்ச ஜாதி தானே? போலீஸ் அராஜகம், சைக்கிள்ல லைட் இல்லை என்று பிடிப்பது தவறுன்னு எழுதிப் போட்டிருந்தீங்கல்ல இங்கிலீஸ், தமிழ் பேப்பருக்கு... இதுக்கு எழுதிப் போடத் தெரியலையா?

மானம் போயிடுச்சா... டொன்டி ஃபோர் அவர்ஸ் டைம்ல அந்த தேவேந்திரனை இங்க நிக்க வைக்கட்டுமா...போலீஸ்காரனும் புள்ளை, பொண்ணு பெத்தவன்தான்.

பட்டம்மா சேத்துப்பட்டு ஏரில உழுந்து ஜனம் காப்பாத்தி கொண்டார ஜி. எச் ல அட்மிட் பண்ணிட்டம். உசிருக்கு ஆபத்தில்லை.

இப்ப இது என்னன்னு தெரியணும். தற்கொலையாயிருந்தா சமாசாரம் டஃப்பா பூடும்! இது என்னா சட்டி... முளைப்பயிறு சட்டிதானே? இது கரைக்கப் போயிருக்குன்னு நினைக்கிறேன். கல்யாணம் முடியாத கரைப்பாங்களா? மாட்டாங்க. அப்ப ஏன் போனாங்க?

ச்சு, இதுபத்தி எனக்கும் தெரியும். எங்க ஜாதிலயும் முளைப்பயிறு கரைக்கிறது உண்டு.

நான் என்னா சொல்றேன். உங்களைப் பாத்தா நல்லபடியா தெரியுது. இது தற்கொலைன்னு கேஸூ பதிவாச்சின்னா ரொம்ப கஷ்டமாயிடும். எனக்குப்புரியுது சார். ஏற்கெனவே அடி. மரண அடி. பாப்பாவ பார்த்தா எனக்கே கஷ்டமா இருக்கு. இதுல இந்த அம்மா இப்படி வேற செய்துகிட்டதா ப்ரூவ் ஆச்சி... நான் என் டூட்டிய செய்ய வேண்டி வரும்.

கல்யாணம் நின்னு போச்சு. பெத்தவ ஏரில குதிச்சான்னா, கோர்ட்ல யாரு அது...தேவேந்திரனை விலங்கு போட்டு இட்டான்னுவான். விஷம் குடிச்சவனை அரெஸ்ட் பண்ணி பதினைஞ்சு நாள் உள்ள வைன்னுடுவான். அதான் கேட்கிறேன். நீங்க ஏன் வுட்டீங்க... அந்த பார்ட்டி பஸ் ஏற...?

அழுவாதம்மா... அழுவாத. என்னா சொல்லு. என்னா சொல்லும்மா. நான் இருக்கேன். கூடப் பொறந்தவனா நினைச்சுக்க. கல்யாணத் தகராறு, வரதட்சணைக் கொடுமை இன்னி தேதிக்கு கேஸுன்னு ஆச்சுன்னா பொண்ணுங்க பக்கம்தான் பார்ப்பாங்க, பயப்படாத பேசு.

ஏன் தேவேந்திரனை பஸ் ஏற வுட்டீங்க? நீ சொல்லு தாயே. உன் பேச்சுதான் முக்கியம். நீ பேசு. தைரியமா பேசு. ஏன் விட்டுட்ட?

ராஜேஸ்வரி முகம் துடைத்துக்கொண்டாள். புடவை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

''குருவி சேர்க்கற மாதிரி காசு சேர்த்து என் கல்யாணத்தை நானே நடத்திக்க எல்லா ஏற்பாடும் பண்ணிட்ட பிறகு எனக்கு எங்கண்ணன் உசிருதான் முக்கியம்னு பஸ் ஏறிப்போயிட்டவனை போறப்ப புடிச்சு இழுத்துண்டு வந்து தாலி கட்டிண்டா நான் சுகப் படுவேனா? சிரிச்சு குடித்தனம் பண்ண முடியுமா? என்னை மன்னிச்சுக்கோ! என்னால் என் வீட்டை மீற முடியலை. அடுத்த ஜென்மத்திலாவது கல்யாணம் பண்ணிக்கலாம்' னு ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிருந்தாக்கூட...''

''பாஞ்சோத்... அழுவாத... அழுவாத எனக்குப் புரியுது. அப்போ, இதுக்கு கம்ப்ளெயிண்ட் பண்ண மாட்டீங்க. விஷம் குடிச்சதும் வெளியவராது. எந்த ஆஸ்பத்திரில எனிமா குடுத்தான். சொல்ல மாட்டீங் களா? சரி, கஷ்டம்தான். ம்ம்...

ஒண்ணு செய்றேன். நான் ஒண்ணும் விசாரிக்கலை. பட்டம்மா கால் கழுவப் போனபோது தடுக்கி வுழுந்துட் டாங்கன்னு ரிப்போர்ட் எழுதிடறேன். ஆனா அதான்னு எனக்குத் தெரியாது. ஆமான்னு கேஸ் எழுத நேரம் ஆவாது. அது எரியற வீட்டுல பீடிக்கு நெருப்பு பத்த வச்சமாதிரி. நான் அதைச் செய்யலை. செய்ய மாட் டேன். என் வண்டிலயே வந்து ஜி. எச். ல இறங்கிக் குங்க.

என்னா...என்னா கேட்கற? புரியலை. எவ்வள வுன்னா... எவ்வளவு தருவ நீ? போடா முண்டம்! போய் உன் கூடப்பொறந்தவளுக்கு இன்னொரு நல்ல புள்ளையா பாத்து கட்டி வை. இத்தினி நேரம் வாய்ல விரலை வச்சுக்கினு இருந்துட்டு எனக்கு சொறிய வரான். ஒதிப்பேன். போ அப்படி!''

பட்டம்மாள் கண் விழித்தபோது ராஜேஸ்வரி, மருதாணி விரல்களால் ஸ்பூன் பிடித்து ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டிருந்தாள். ''அம்மா முழிச்சுண் டியா...'' அருகே வந்தாள்.

பிள்ளை எட்டிப் பார்த்தான். முகம் சிவந்தான். பல் கடித்தான். ''ஏன் முழிச்சுண்டே... ஏன் முழிச் சுண்டே... சாகறதுதானே? அப்படியே ஏரில முழுகி செத்துத் தொலையறதுதானே... இருக்கறவா பிராணனை வாங்கறதுக்குன்னே அம்மாவும் பொண்ணும் கங்கணம் கட்டிண்டிருக்கேளா?''

பட்டம்மா அயர்ச்சியுடன் வசவு கேட்டபடி கண் களை மூடிக் கொண்டாள்.

ஆளுக்கு ஆள் திட்டப் போகிறார்கள். விசாரித்து வையப் போகிறார்கள். பெத்த பிள்ளை ஒழியேன், சாவேன் என்று எகிறப் போகிறான். இவர் கை நீட்டி 'மடேர் மடேர்' என்று இரண்டு அடி அடித்தாலும் ஆச்சரியமில்லை.

அம்பத்திரண்டு வயசுக்கு வேணுமிங்கற அடி வாங்கியாச்சு...இன்னும் இரண்டு. எதுவும் குறைந்து விடப்போவதில்லை.

ஆனால் நான் தற்கொலைக்கு முயற்சிக்கவில்லை என்று சொன்னால் நம்புவார்களா? இனி இந்த வீட்டில் யார் எது சொன்னாலும் நம்பமாட்டார்கள். பரஸ்பரம் எது குறித்தும் எவர்மீதும் நம்பிக்கை கொள்ளமாட்டார் கள். அத்தனை விரிசல் வந்துவிட்டது. ஏற்கனவே கோணல் சுவர். விரிசலும் விழ, சாயக்கூட பயமாய் இருக்கும். சின்ன இடிக்குக் கூட உட்கார்ந்து விடுமோ என்கிற கலவரம் இருக்கும். இப்போது இடித்தது பெரிய இடி!

மெல்ல ஜில்லென்று ராஜேஸ்வரியின் கை நெற்றியில் பட, பட்டம்மாள் விழித்துக் கொண்டாள்.

"கொஞ்சம் எழுந்துக்க 'ட்ரை' பண்றியா? கார்த்தா லேர்ந்து வெறும் வயத்தோட இருக்கியே... ஒரு மடக்கு ஹார்லிக்ஸ் குடி."

"போலீஸ்காரா போயிட்டாளாடி..."

"போயாச்சு."

"கேஸ் எழுதிண்டுட்டானோ..."

"இல்லை. வழுக்கி கால் தவறி விழுந்துட்டேன்னு எழுதி டாக்டர்கிட்ட கொடுத்துட்டான்."

"இனி ஒன்னுமில்லையே."

"இல்லை."

"ஈஸ்வரா!"

பயம் மனசு விட்டுப் போயிற்று. பயம் போனதும் பசித்தது. வயிறு குழைந்து குழைந்து எகிறி உணவு கேட்டது. நகர்ந்து உயர்த்தின தலையணைக்கு முதுகு கொண்டு போகையில் இடுப்பு விண்ணென்று தெறித்தது.

"என்னம்மா பண்றது?"

"இடுப்பு ஏகமாய் வலிக்கறதுடி."

"நச்சுன்னு விழுந்துட்டியாமே... அப்படியே மல்லாக்க. இதைக் குடி. டாக்டர் பெயின்கில்லர் கொடுத்திருக்கார். சாப்டுட்டு தூங்கு."

"இது என்ன இடம்?"

"ஜி. எச்."

"ஆமா... போலீஸ்காரன் சொன்னான். இங்க எத்தனை நாள் இருக்கணும்? எனக்கொன்றும் இல்லையே...போயிடலாமா?"

"இன்னிக்கு வேண்டாம். நாளைக்கு பத்து மணிக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடுவா."

''இப்ப மணி என்ன?''

''ஆறு.''

''இருட்டிடுத்தா?''

''ஆமா.''

''அப்பா ரொம்ப கோச்சுண்டாளா என்னை.''

''இல்லை. பயந்துட்டா. வாசல்ல உட்கார்ந்து அழுதா. இவன்தான் கிடந்து ஆச்சா போச்சான்னு குதிக்கறான்.''

''சரி. அவனுக்குத்தான் ஏகப்பட்ட அவமானம். நாலுபேர் கேட்கறத்துக்கு பதில் சொல்லியாகணுமேங்கற கோவம்.''

''கத்தினா அவமானம் போயிடுமா. ஆஸ்பத்திரில இருக்கறவா என்ன ஏதுன்னு விசாரிக்கணுமா.''

''விசாரிக்கத்தான் விசாரிப்பா. கல்யாணம் நடந்தது விசாரிக்காட்டாலும், நின்னது விசாரிப்பா. ஏன் என்னன்னு துருவி துருவி கேட்பா. பதில் சொல்லலைன்னா திமிரப் பாரு... வேணும் இதுகளுக்கும்பா. பதில் சொன்னா, உங்களுக்கு புத்தி போறலை. தீர விசாரிக்க வேண்டாமோன்னு உபதேசம் பண்ணுவா. எல்லாம் கேட்டுக்க வேண்டியதுதான்.''

''இன்னும் ஒரு வாய் குடி.''

''வேண்டாம்...போறும்.''

“ப்ளீஸ் குடிம்மா.”

“ஏது ஹார்லிக்ஸ்!”

“உன்னை காப்பாத்தினாரே ரெங்கசாமி நாயுடு அவர் வாங்கிண்டு வந்தார்.”

“ஐயோ எதுக்குடி.... பாவம், யார் அது? வெளியே போயிருக்கார். போலீஸ் அவரை, ‘நீதான் தள்ளி விட்டியா? ரோட்ல போறவன் எதுக்கு ஏரில இறங்கி னே’ன்னு கேட்டாளாம். பயந்துட்டார். பெரியம்மா கண்ணு முழிச்சு ஒண்ணுமில்லேன்னாதான் எனக்கு நிம்மதின்னு உட்கார்ந்திருந்தார். நான் நின்றுபோன விவரம் சொன்னேன். பெருமாளேன்னு காது பொத் திண்டு வெளிய போய் ஹார்லிக்ஸ் பாட்டிலோட வந்தார். வாங்க மட்டேன்னேன், கேட்கவேயில்லை. வச்சுட்டு போயிடுத்து.”

“உலகத்துல நல்லவா இருக்கா ராஜி.”

“இருக்காம்மா.”

“அவர் எங்க...?”

“வரேன்னுட்டு போயிருக்கார். ஆமா... நீ ஏம்மா பாலிகையை எடுத்துண்டு அந்த ஏரிக்குப் போன?”

“மெட்ராஸ்ல குளமே இல்லடி. எல்லாம் வரண் டிருக்கு. எனக்கு முளைப் பயறு வாட வைக்க இஷ்ட மில்லை. யாரை எங்க வாட வச்சோமோ நமக்கு இப்படி ஆயிட்டுத்து...”

''ஒரு செகண்ட் நீ என்னமோ தப்பு பண்ணிட் டேன்னு எல்லாருமே நினைச்சுட்டோம்.''

''தற்கொலை பண்ணிக்கற அளவுக்கு எனக்கு தைரியமில்லை ராஜி. இதுக்கெல்லாம் நான் சாகவும் மாட்டேன். முப்பத்திரெண்டு வருஷம் உங்கப்பா வோட குடித்தனம் பண்ண வேதனைவிடவா இன்னிக்கு வேதனை பெரிசு?''

''அப்பாவும் ரொம்ப ஆடிப் போயிட்டார்.''

''உனக்கு தெளிஞ்சுடுத்தா.''

''நீ விழுந்துட்டே ஏரிலேன்னு கேட்டதும் தெளிஞ் சுடுத்து. நீ விழக் கூடாது. என்னால விழக்கூடாது. எனக்கு ஒன்னுமில்லை. கல்யாணம் நின்னு போனது பெரிய விஷயமில்லை. பூமில இது புதுசு இல்லை. நடந்து நாருமே இந்த மட்டிலும் நடக்காம நின்னுபோனதே... நா வாழா வெட்டியில்லை. கன்னிப் பொண். சாகற வரைக்கும் கன்னிப் பொண். ஊர் உலகத்துல அப்படி இல்லையா என்ன?''

''வெறுத்துப் பேசறடி?''

''இல்லம்மா. எல்லாம் நல்லதுக்குன்னு பட்டுன்னு உள்ள பட்டுது. நீ சாகக் கூடாது. உன்னை சாக விடக் கூடாதுன்னு தோணித்து.''

''நமக்கு மட்டும் ஏண்டி இப்படி விதி ஆடறது?''

''ஆடட்டும். இனி என்ன ஆடினாலும் கவலை யில்லை. இன்னொரு தம்ளர் ஹார்லிக்ஸ் கரைக்

கட்டுமா? கொஞ்சம் ப்ரெட் சாப்பிடறயா? ஜூஸ் வேண்டாம்னுட்டார் டாக்டர். அம்மா, அந்த ரெங்க சாமி நாயுடு வரார்...'' ராஜி இரண்டடி பின்னுக்குப் போனால்.

''பெரியம்மா, முழிச்சுட்டிங்களா. அப்பா வெங்கடா ஜலபதி சகாயம். அடி கிடி அதிகமில்லீங்களே.''

''இல்லீங்க. உங்களுக்கு ரொம்ப சிரமம். பாவம், பாதையோட போறவாளுக்கு பெரும் கஷ்டம் கொடுத் துட்டேன்'' பட்டம்மாள் கை கூப்பினாள்.

''பொழைச்சுட்டீங்களே தாயே...அது போதும்.''

''போலீஸ்காரா ரொம்ப சிரமப்படுத்திட்டாளா?''

''அது அப்படித்தான். வேற மாதிரி ஆயிருந்தது... என்னை உள்ளாற போட்டிருப்பான். என் பொண்டாட்டி பசங்க பார்க்கணுமின்னாங்க. ஓட்டுக்குப் போயி கூட்டியாந்தேன். த்த...இங்க வா.''—சற்று பருமனாய் அசட்டுச் சிரிப்பாய் காவிப் பல்லாய் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அசைந்து வந்தாள்.

''சுகமாயிட்டாங்களா?'' என்று கேட்டாள்.

''உசிரு காப்பாத்திட்டு ஊரைக் கூட்டறானேன்னு நினைக்க வேணாம். ரேஷன் கார்டு அண்டர்வேர் பைல வச்சிருந்தேன். நினைப்பில்லாத தண்ணீல இறங்கிட் டேன். காலைல சர்க்கரை வாங்கப் போன ஆளா நீன்னு கத்துனா. விஷயம் சொன்னேன்...பார்க்கணும்னாங்க.''

''அதான் பொண்ணா?'' அந்தம்மாள் கிசுகிசுப்பாய் நாயுடுவிடம் கேட்டாள்.

"ஆமா."

"ஐயோ பாவம்!"

அம்மா விழுந்ததைவிட ராஜி விழுந்ததுதான் விஷயம், இனி லட்சக்கணக்கில் இப்படி முகத்துக்கெதிரே ஐயோ பாவம் சொல்லப்படும்.

"பட்ட காலிலேயே படும். கெட்ட குடியே கெடும்னு வாங்க. சோதனையைப் பாரேன். இந்தப் பொண்ணு தனக்குன்னு அழுமா... தாயாருக்குன்னு அழுமா."

இனி அழுகையில்லை. இந்த க்ஷணம் உள்ளே ஹா என்கிற வறட்சிதான் நிற்கிறது. இவ்வளவுதான் அடியா, ரைட்; ஓகே. இது தாங்குவேன். இன்னமும் தாங்குவேன் என்கிற வீறாப்பு வந்து விட்டது. இந்த மாதிரி எதிரே நின்று உற்றுப் பார்த்து ஐயோ பாவம் என்கிறதுதான் மணல் துகளாய் உறுத்துகிறது. அடி சாதம் மோரில் கரைத்து வாயில் விட்டுக் கொள்ள நரநரவென்று பொடிக்கல் சிலசமயம் உறுத்துமே... அது மாதிரி துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வேதனை வருகிறது. துப்பிவிட வேண்டும். உன் பரிதாபம் வேண்டாம் என்று விலக்கி விட வேண்டும்.

இங்கே விலக்கி விட வேண்டாம். விலக்க முடியாது. நாயுடுவுக்காக பொறுத்துக் கொள்ள வேண்டும்.

"அப்ப நான் வரேங்க. இது எங்க அட்ரஸ். என் பையன் பேரு போட்டிருக்குது. சொஸ்தமாயிட்ட பிறகு ஒரு நாள் வாங்க வூட்டுக்கு."—நாயுடு கை கூப்பினார். அந்த அம்மா தலையசைத்து விடைபெற்றாள். பிள்ளை

பின்னால் போனான். போகும் முன் மௌனமாய் தயங்கி நின்று ராஜியைப் பார்த்தார்கள். எல்லார் கண்ணிலேயும் ஐயோ பாவம் நின்றது. "ஐயோ பாவம்: பிராமணா ளுங்க போல நல்லா தெரியுது." வராண்டாவில் அந்த அம்மாளின் குரல் கேட்டது.

"இவங்கதான். இவங்கதான் மூத்த புள்ளை" நாயுடு அறிமுகப்படுத்துவது கேட்டது. ராஜேஸ்வரி எட்டிப் பார்த்தாள். வெங்கடேசன் சோகமான புன்னகையோடு கைகள் கோர்த்து நிற்க, அங்கேயும் ஐயோ பாவம் சொல்லப்பட்டது.

"அப்ப நாங்க வரோங்க."

ராஜி தலையை இழுத்துக் கொண்டாள். அம்மாவுக்கு அருகில் ஸ்டூல் போட்டு உட்கார்ந்து கொண்டாள். வெங்கடேசன் உள்ளே வந்தான்.

"இந்த நாயுடு எதுக்கு பொண்டாட்டி பையனோட இங்கே வந்தான்?"

"தெரியலை."

"பாப்பாத்தியை சேத்துலேர்ந்து காப்பாத்தின பெருமை காட்ட வந்துருப்பான்." அவனே பதில் சொன்னான்.

"வீரச்சக்ரா விருது உண்டான்னு விசாரிக்கப் போறான் பாரு. இதுக்குத்தான் அப்பவே சொன்னேன். நீயும் வேண்டாம். உன் ஹார்லிக்ஸூம் வேண்டாம்... போய் சேருன்னு சொல்லி இருக்கணும். கொடுத்ததும்

டக்குன்னு வாங்கிண்ட. இப்போ...எக்ஸிபிஷனே நடக்கறது.''

''எப்படி மறுக்கறது வெங்கடேஷ்...அவர் இல் லைன்னா இப்போ அம்மா இல்லை. அனாவஸ்யமா பேசாதே.''

''ரைட் நான் பேசலை! பேச்சு கேட்கவும் போற தில்லை. நாளை சாயந்திரம் அத்தனை பேரும் ஊருக்குப் போறோம். பஸ் டிக்கெட் வாங்கிட்டேன். இங்க உங்கார்ந்து வரவாளுக்கு காபி போட்டு கொடுத்துட்டு கஷ்ட நஷ்டம் சொல்லிண்டிருக்க முடியாது. நான் லீவு முடிஞ்சு மெட்ராஸ் திரும்புவேன். நீங்க அங்கேயே இரண்டு மாசமோ, மூணு மாசமோ இருந்து ஊர் பேச்சு அடங்கினதும் வாங்கோ, போறும்.''

''அரிசி பருப்புன்னு நிறைய சாமான் கிடக்கேடா...'' அம்மா மெல்லிய குரலில் கேட்டாள்.

''எடுத்துண்டு போய் அங்கயே வண்ணமா சமைச்சு சாப்பிடலாம். அரிசி பருப்பு மட்டுமா...இரண்டு கூடை பூந்திலாடு இருக்கு. பருப்பு, தேங்காய் இருக்கு. என்ன பண்ணப் போறேள் அதை.''

''யாராவது ஏழை பாழைகளுக்கு கொடுத்துடு.''

''கொடுத்துட்டேன். ஒரு தூக்குல நமக்கு எடுத்து வச்சுண்டு, மிச்சத்தை கோவில் வாசல்ல பிடிபிடியா எடுத்துக் கொடுத்துட்டேன். அங்கியும் ஒருத்தன் கேட்டான்-சாமி உனக்குப் பொறந்த நாளா சாமின்னு. என்னத்த சொல்றது...நீ செத்திருந்தா, இது கருமாந்திரத் துக்குப் பண்ணின பண்டம்னாவது சொல்லலாம்...''

''வெங்கடேஷ்...'' ராஜி சீறினாள்.

''சீறாதடி. உன் கல்யாணம் நின்னது எனக்குப் பெரிசாப் படலை. இது நிக்கும்னு ஒவ்வொரு க்ஷணமும் எதிர்பார்த்துண்டு இருந்தேன். நின்னுது. ஆனா அம்மா பண்ணின கூத்து இருக்கே...பாலிகை...பாலிகை கரைக் கலைன்னு இங்க யார் அழுதா?''

''இப்ப சொல்றேன். இன்னிக்கு எனக்கு, ராஜிக்கு, என் தம்பிக்கு வந்த அவமானத்துக்குக் காரணம் நீ. உன்னாலதான் சகலமும் தப்பா நடந்தது. நடக்கறது. உன் யோக்கியதைக்கு நீ குழந்தை பெத்துருக்கக் கூடாது. அப்படியே பெத்தாலும் காவிரில அமுத்தி சாகடிச்சிருக்கணுமே தவிர வளர்த்துருக்கப்படாது. இன்னிக்கு இளக்காரமா நாங்க போனதுக்குக் காரணம் நீ. உன் கல்யாணம் உன் அசிங்கமான குடித்தனம். என்னடா பெத்த பிள்ளையே இப்படி பேசறானேன்னு உனக்குப்படும். இது ஆத்திரம். என் வேதனை. இருவத்தஞ்சு வருஷமா அடக்கி அடக்கி வச்சுண்டிருந்த வேதனை...''

வெங்கடேசன் பேசிக் கொண்டே உடம்பு குலுங்க அழுதான். அம்மா கண்மூடிக் கொண்டாள். அடுத்த கட்டிலில் எட்டிப் பார்த்தார்கள். ராஜி அவனை புஜம் பிடித்து உலுக்கினாள். மெல்ல அவனைத் தள்ளி வெளியே அனுப்பினாள்.

ஆக...இனி திரும்பவே மாட்டேன் என்று நினைத்த ஊருக்கு நாளை போக வேண்டும். கும்பகோண பட்டா மணியத் தெருவில் நுழைய வேண்டும். தலை குனிந்து மௌனமாய் எதுவும் நடக்காதது போலப் போக-

வேண்டும். கும்பகோணத்தில் இருக்கிறவர்களுக்குத் தெரிந்திருக்குமா நின்னு போனது. போய்தான் தெரிந்து கொள்ள முடியும்.

ராஜேஸ்வரி அயர்ச்சியுடன் அம்மாவுக்கு அருகில் கட்டிலில் தலை சாய்த்துக் கொண்டாள்.

மனசு சமாதானமாகி அண்ணா இரவு சென்ட்ரல் வாசலில் பஸ் ஏறி விட்டான்.

"நீ வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துக்கோ... நான் அம்மாவப் பார்த்துக்கறேன். மத்தியானம் ஒருமணி பஸ். சுருக்க எழுந்து என்னென்ன தேவையோ— பாத்திரம் பண்டம், புடவை துணிமணி எடுத்து மூட்டை கட்டி வை. டாக்ஸி வச்சுண்டு சாமான் எடுத்து அப்படியே ஹாஸ்பிடல் போய் அம்மாவைக் கூட்டிண்டு பஸ் ஏறிடுவோம்..."

குமுறி அழுததோ, இல்லை, குளிர் காற்றோ அண்ணாவின் குரல் தெளிவாய் இருந்தது.

"எல்லாரையும்விட உனக்கு கஷ்டம் வெங்கடேஷ்." சமாதானமாய் ராஜி பேசினாள்.

"எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை ராஜி. எல்லாம் நல்லதுக்குன்னு பட்டுடுது. அவன்கிட்ட மாட்டிண்டு காலாகாலத்துக்கு நீ சித்திரவதைப்படாம கடைசில உதறிட்டுப் போனானே...அதுவரைக்கும் நிம்மதின்னு தோணித்து. அவனை தங்க விட்டிருக்கப்படாது. முதல் தப்பு அதுதான். வீடு பார்க்க அலைஞ்சா னேன்னு கூட சேர்த்துண்டது பிசகு. எட்டியே வச்சிருக்கணும். வுட்டுட்டோம்..."



ராஜி மௌனமாய் இருந்தாள்.

"ஆனா... ஒண்ணு ராஜி. மறந்துபோயும் சாகறத்துக்கு 'ட்ரை' பண்ணாதே. சின்னதா ஒரு நினைப்புகூட வரவிடாதே! மறுபடி உனக்கு கல்யாணம் நடக்கும் ராஜி. எவனா இருப்பான்... இது ஒண்ணுதான் உன்கிட்ட நான் கேட்கறது."

"ச்சே... ச்சே! எதுக்கு இப்படி பேசற வெங்கடேஷ்? நான் சாக மாட்டேன். அப்படியே கல்யாணம் நடக்கலைன்னா என்ன... இப்படியே இருந்துட்டுப் போறது. அம்மாவை அனாவஸ்யமா கோச்சுக்க வேண்டாம் வெங்கடேஷ். அது பாவம்! புருஷனாலே சுகப்படலை. நம்மால ஹிம்ஸைப்பட வேண்டாம். முடிஞ்சா உதவியா இருப்போம். இல்லையா, வாயை மூடிண்டு அவா அவா காரியத்தைப் பார்த்துண்டு வளைய வருவோம். கோபத்தை விடு முதல்ல."

"பஸ் வந்தாச்சு. ஏறு."

எக்மோர் ஸ்டேஷன் வாசலில் இறங்கி விறுவிறு என்று வீடு நோக்கி நடந்து சாவி போட்டுத் திறக்க, ஹாலில் கிடந்த பாத்திரங்களையும் கூடைகளையும் பார்க்கும்போது ஒழிக்க நாலு நாள் ஆகும் என்று தோன்றியது. முதலில் குளிக்க வேண்டும். சில்லென்று உடம்பெல்லாம் ஜலம் வழிய கசகசப்பு போக குளிக்க வேண்டும்.

அடுப்பு மூட்டி குக்கர் வைத்தாள். ஒரு படி தயிர் எவர்சில்வர் தவலையில் இருந்தது, சத்திரக்காரன் எடுத்தது போக மிச்சம். மூடி திறக்க, புளிப்பு நெடி மூக்கைத் துளைத்தது—நீர்க்க கரைத்து உப்பு போட்டால் சாதம் பிசைந்து விழுங்கி விடலாம். இரவு இது

போதும். புடவையை உருவி முற்றத்துக் கொடியில் போட்டு விட்டு பாத்ரூம் கதவு திறந்து ப்ளவுஸ் பட்டன் அவிழ்த்தாள்.

மார்புவரை பாவாடையைத் தூக்கிக் கட்டிக் கொண்டாள். தொட்டியில் இருக்கிற தண்ணீரை எடுத்து தலையில் ஊற்றிக் கொண்டாள். உடம்பு முழுக்க குளிர் பரவிற்று. மறுபடி வேகமாய் தண்ணீர் எடுத்து விட்டுக் கொள்ள, உடம்புக்குள் ஒரு உஷ்ணம் வேகமாய் பரவ, குளிரை எதிர்த்தது. ஆறாவது சொம்பு ஜலத்தில் ஒரு நிதானத்துக்கு வர முடிந்தது. சோப்பு குழைத்து உடம்பெல்லாம் தேய்த்து எழுந்து தொட்டி விளிம்பில் கால் வைத்து சோப்பு தேய்க்கும் போது தொட்டிக்குள் வெள்ளையாய் ஏதோ சுருண்டு கொண்டிருந்தது.

என்ன இது தொட்டிக்குள்? பூனையா...கடவுளே இந்த ஜலமா குளித்தேன்! கதவு திறந்து மடிக்கழி எடுத்து குத்தி தூக்க, துணி என்று தெரிந்தது. கடவுளே என்ன துணி இது...பனியன் — முண்டா பனியன். எடுத்துப் பிரிக்க முதுகுப் புறத்தில் 'டி' என்கிற ஆங்கில எழுத்து கருஞ்சிகப்பாய் தெரிந்தது. தேவேந்திரனின் பனியன். இப்போது என்ன பண்ணுவது இதை... குப்பையில் போட்டு விடலாமா?

பனியன் மட்டுமா இருக்கிறது இங்கே? சூட்கேஸ், ட்ரங்க் பெட்டி, புத்தக மூட்டை, ஆபீஸ் பேப்பர் எல்லாம் இந்த வீட்டில் தான் இருக்கிறது. எங்கே போடுவது எல்லாவற்றையும்?

ராஜேஸ்வரி பனியனை உதறினாள். நடு மார்பில் பாசி பச்சை பட்டிருந்தது. அழுத்தி கை சோப்பால்

தேய்த்தாள். சொம்பு ஜலம் விட்டு குமுக்கினாள். கசக்கி கறை நீக்கினாள். முறுக்கிப் பிழிந்து உதறினாள். கதவில் போட்டாள்.

இந்த பனியனை, சட்டையை, பேண்டை எத்தனை முறை இந்த இடத்தில் தோய்த்திருக்கிறேன். எத்தனை முறை சாதம் பரிமாறி இருக்கிறேன். எல்லாவற்றையும் உதறி விட்டு எப்படி ஓடத் தோன்றிற்று. வாய் கோணி அழ முடிந்தது... ஒரு வார்த்தை கூட சொல்லாமல் எப்படி ஓட முடிந்தது?

இது கேவலமில்லையா? இது உறுத்தாதா...சாகிற வரையில் சுள் சுள்ளென்று முள்ளாய் மனசில் தைக்காதா...சாவு தீட்டுக்கு தலை முழுகுவது போல் நிம்மதியாய் தலை முழுகுகிறேன். உன்னால் முடியுமா?

விரல் கோர்த்துக் கொண்டு பார்த்த சினிமாவும் உரசிக் கொண்டு கேட்ட விவித்பாரதியும் மறந்து விடுமா? "நான் கொடுத்து வச்சிருக்கணும் ராஜி. உன்னை மாதிரி ஒரு வொய்ஃப் கிடைக்கறதுக்கு..."— பேசினது நினைவிலிருந்து போகுமா? "பெரிய கண்டத்திலிருந்து எங்க புள்ளை தப்பிச்சிடுச்சு. இனி எதுவும் நியாயம் பேச அங்க வராதீங்க. நல்லாருக்காது!"— எச்சரித்தார்களாம்.

இனிமேதான் கண்டம். மேஜை விளிம்பில் முழங்கால் இடித்தால்கூட இதனால் தான் இந்த வலியோ என்று நினைக்கிற கண்டம். நித்தியம் மரண பயம்... உள்ளே ஆறாத புண் நாள்பட, நாள்பட, வயசு ஏற, ஏற புண் முற்றி சீழ் வைத்து அறுத்தாலும் தீராத

கட்டியாகி...ச்சே...எனக்கு எதுக்கு இத்தனை ஆத்திரம்? போகட்டும். போய் எங்கேனும் நன்றாய் இருக்கட்டும்.

மற...மற...தேவேந்திரனை மற! எல்லா ஆண்களையும் மற. ஆண் வஞ்சனையை மற. நீ நித்யகன்னி; பூக்காத கொடி; காய்க்காத மரம்...பழமாய் காய்க்காது போனால் என்ன? நிழல் கொடு. எவருக்கேனும் இதம் கொடு. போ. சகலமும் மறந்து போ.

ராஜேஸ்வரி சொம்பு சொம்பாய் ஜலம் ஊற்றி நினைவுகளை அலம்பினாள். துண்டு சுற்றி வெளியே வந்தாள். உடுத்துக்கொண்டாள். தன் துணிகளைப் பிழிந்து உலர்த்தினாள். பனியனையும் பிரித்து காயப் போட்டாள். குக்கர் கூவிற்று. அடுப்பு தணித்து விட்டு புடவைத் துணிமணிகளை அடுக்கி வைத்தாள். பாத்திரங்களை சாக்கு தேடி மூட்டை கட்டினாள்.

பன்னிரண்டு மணி ஆயிற்று. முதுகு வலித்தது. இறுக்கி இறுக்கி மூட்டை கட்டி உள்ளங்கைகள் எரிந்தன. பாதி பாத்திரங்கள் என்று எடுத்துக் கொண்டாலும் மூணு மூட்டை பாத்திரம், மூணு மூட்டை துணி மணி தவிர நாலு தலையணை...பெட்ஷீட்.

குக்கர் திறக்க ஆவி முகம் தாக்கிற்று. சாதம் எடுத்து தட்டில் பரப்பி சூடு ஆற்றினாள். மோரை ஒரு கலக்கு கலக்கி ஊற்றிக் கொண்டாள்.

இன்று சகலமும் ஒழுங்காய் நடந்திருந்தால் முதலிரவு. ஏதோ ஒரு கட்டிலில் புதுப் படுக்கையில் அமர்ந்து சில்மிஷங்களோடு நிம்மதியாய் ஈடுகொடுத்துக் கொண்டிருக்கும் முதல் இரவு. இப்படி ஒரு மோர்சாத வெறுமை வரும் என்று இரண்டு நாள் முன்பு நினைக்கவில்லை.

ஒரு பிடி அள்ளி வாயில் போட்டுக் கொண்டதும் இரண்டுங் கெட்டானாய் மோர்சாதம் இருந்தது. சாதம் சூடு...மோர் புளிப்பு. அழுத்தி பிசைந்தாலும் ஒட்டாமல் வாய்க்குள்ளே இரண்டாகப் பிரிந்தது உணர முடிந்தது.

"ராத்திரி இரண்டு பேருக்குமே டிபன்தான். விரதம் இருந்து, பூஜை பண்ணி, தாலி கட்டி, ராத்திரி சாதம் சாப்பிடக் கூடாது. பகல்ல பால் சாதம் சாப்பிடணும் கட்டாயம்."

"பால் சொம்போட உள்ள போய் ஓரமா வச்சுட்டு கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணி, தொட்டு எழுப்பற வரைக்கும் அப்படியே இருந்து, எழுப்பின பிறகு பாலை தம்ளரில் ஊத்தி குடிக்கச் சொல்லி அவன் பாதி குடுச்சதும் நீ வாங்கி எச்சலை குடிச்சு எதாவது பேசுங்கோ. பேச்சு வாக்கில பழம் உரிச்சு கொடு. ஊட்டி விடு. பேசினது போறும்னு விளக்கு அணைச்சுடு. போனதும் அணைச்சுடாதே. சிரிப்பா."

"தலைகாணிக்குக் கீழே நைலக்ஸ் புதுப்புடவை இருக்கு. கட்டியிருக்கிற பட்டு அவுத்துட்டு அதை உடுத்திக்கோ. சமத்தா இருக்கறவன் நைலக்ஸ் கட்டிக்க விடமாட்டான். இழுத்து மடில உட்கார வச்சுக்குவான்."

அம்மா வசந்தி கல்யாணத்தில் அவளுக்கு உபதேசம் செய்தாள். இவள் திருமணத்தில் அதற்கு வாய்ப்பில்லாது போய் விட்டது. ஒரு வேளை வாய்ப்பிருந்தாலும் செய்திருக்க மாட்டாளோ. கல்யாணத்துக்கு முன்பே பாவாடையும் சட்டையுமாய் அவன் மடியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்ட பிறகு இதை சொல்லத் தோன்றாதோ...

அம்மா பார்த்த பிறகுதான் இந்த திருமணமே நிச்சயமாயிற்று.

''என்னடி இது...'' —திடீரென்று கதவு திறந்து வந்த அம்மா கலவரத்தோடு கூவினாள். இறுக்கிக் கட்டி கன்னத்தில் முத்தமிட்டுக் கொண்டிருந்த தேவேந்திரன் எழுந்து விலகி நின்றான். ராஜி புடவையை வாரி நெஞ்சில் போர்த்திக் கொண்டாள்.

''தேவு, இது தப்பு...மகா தப்பு!'' —அம்மா திரும்பி கூடத்துக்குப் போனாள்.

தேவேந்திரன் பின்னால் ஓடினான்.

''மாமி, நான் சொல்றதக் கேளுங்க...எனக்கு ராஜியப் பிடிச்சிருக்கு. நான் அதைக் கட்டிக்கிறேன்.''

''கண்ணால பார்த்தேனே...அந்தக் கண்றாவிய.''

''நான் கல்யாணம் கட்டிக்கிறேன் மாமி.''

''இதோ பாரு. தேவு...பொம்மனாட்டிய உசுப்பி விடறது ரொம்ப சுலபம். இருவத்தேழு வயசுப் பொண்ணை இடறி விடறதுக்கு பலம் தேவையில்லை. எடுத்து நிறுத்தி குடித்தனம் பண்றதுக்குத்தான் தேவை. இனிமே இந்த மாதிரி பண்ணாதே. இதே கடைசி தடவையா இருக்கட்டும்.''

''மாமி...''

''எங்காத்துப் பொண்ணை நான் கண்டிக்கறேன். நீ ஆம்பளையா இரு.''

''ஆம்பளையா நின்னு சொல்றேன் மாமி, ராஜி எனக்கு மனைவி. நீங்க என் மாமியார்.'' காலில் விழுந்தது.

இது மன்னிப்பா...மங்கள வாக்கு எதிர்பார்த்தா...

அம்மா இரண்டும் செய்யவில்லை. காலை இழுத்துக் கொண்டாள். சமையலறைக்குப் போனாள். அடுப் பெதிரே உட்கார்ந்து கன்னத்தில் கைவைத்து அழுதாள்.

''போ...ராஜி...போய் அவங்களை சமாதானப் படுத்து. உங்கம்மா அழுதா எனக்குத் தாங்காது ராஜி. அவங்க மனசு சுருங்குச்சுன்னா நான் நல்லா இருக்க மாட்டேன், ராஜி! ப்ளீஸ்...போ. திட்டினா வாங்கிக்க. தைரியம் சொல்லு. நாளைக்கு கல்யாணம்னாலும் நான் ரெடி!''

''ஏம்மா, இப்ப என்ன நடந்துடுத்துன்னு அழுற? எனக்கு புடிச்சுருக்கு தேவேந்திரனை. தேவேந்திரனுக்கு என்னைப் புடிச்சுருக்கு. ஏன் அழுகை? ஜாதி வேறன்னா...?''

அம்மா, 'இல்லை'யென்று தலையசைத்தாள்.

''ஏன் சொல்லு?''

''உனக்கு அடக்கிண்டிருக்க முடியலையே. உடம்பை உதற முடியலையே...மனசைக் கட்டுப்படுத்த முடிய லையே...ஏன்...ஏன்? இடுப்புப் பாவாடையோட ஒருத் தன் முன்னாடி நிக்கணும்னா எத்தனை நாளா இது நடந் திருக்கணும். என் கண்ணுக்குப் படலையே. ஏன்? உன்னைக் கவனிக்கணும்னு தோணலையே ஏன்?''

"இது என்ன கேள்வி?"

"கேள்விதான்டி. எனக்கு என் பிரச்சினை பெரிசா யிடுத்து. புருஷனைத் தாண்டி குழந்தைகளை கவனிக்கத் தெரியல்லை. என் புருஷனுக்கும் குடித்தனம் பண்ற புத்தி யில்லை. குழந்தைகளுக்குப் பசிக்குமேன்னு நான் சாதம் போட்டதில்லை. புருஷன் பசியே தீர்த்துண்டு இருந் துட்டேன்."

"அப்பாவ ஏன் இழுக்கற..."

"கள்ளக் குடித்தனம்தானடி இது...முதல் பொண் டாட்டி இருக்கறபோதே வெத்தலைப்பாக்கு கட்டோட வீட்டுக்கு வந்து பொண் கேட்டு, என் வீடு தலையாட்டி, மெட்ராஸ்ல சொந்தக்காரா வீட்டுக்குப் போறோம்னு பொய் சொல்லிட்டு பரங்கிமலைல கல்யாணம் பண்ணி இருவது நாள் ஹோட்டல் ரூம்ல தங்கிட்டு கும்மோணம் போன கல்யாணம்டி இது. வாசப்படில காலை வச்சதுமே மண் வாரி இறைச்சா அவ. அது உறுத்தறது இப்ப."

"சரி...இப்ப என்ன சொல்ற?"

"அவன்கூட பேசாதே!"

"ஏம்மா?"

"ஒரு பத்து நாள் பேசாதே. எதிர்க்க போய் நிக்காதே. என்னஏதுன்னு கேட்டாக் கூட மூஞ்சி கொடுக்காதே!"

"ஏன்?"

"யோசிக்கட்டும்."

"என்ன யோசிக்கணும்?"

"உடம்பா, மனசா... காமமா, கல்யாணமான்னு யோசிக்கட்டும்."

"புரியலையே..."

"நேர பார்த்துட்டேன்னு படபடப்புல கட்டிக்கிறேன், கட்டிக்கிறேங்கறான். இத நம்ப முடியாது. நல்லது கெட்டது நாலு பக்கமும் யோசிக்கட்டும்."

யோசிக்க விடாதது ராஜி செய்த தவறு.

"சொல்லுங்கோ... என்னை கை விட்டுறுவேளா?" ரேழி இருட்டில் நெருங்கி அணைத்து கேட்டபோது 'மாட்டேன்' என்று தலையாட்டினான். 'சத்தியம் பண்ணுங்கோ' என்றபோது "இப்ப வேணாம் ராஜி நான் நேர போய் சொல்றேன்."

"அம்மா விலகி இருங்கறா...எனக்குப் பிடிக்கலை அது."

"எனக்கும் ராஜி."

"என்னை விட மாட்டேளே...?"

நீரிலிருந்து மீனை வலை போட்டு தூக்கினால் துள்ளி மடியில் விழும். மீனுக்கு மடியில் உட்கார்ந்து கொள்ள ஆசை என்று நினைப்பார்களோ...மடியில் விழுந்த மீனை விட்டுப் பிடிக்கலாம் என்பது கெட்டிக்காரத் தனமோ...துடிப்பது கண்டு இரங்கி நீரில் விட, மீன் திரும்பிப் பார்க்காமல் திசையே தெரியாமல் போய் விட்டது.

வலையும், விழுந்து நாறின மடியும் இப்போது வேதனைப் படுத்துகின்றன.

ராஜி கையலம்பினாள். தட்டு கழுவினாள். எச்ச லிட்டாள்.

தரையில் பாய் விரித்தாள். தலையணை போட்டாள். வாசற்கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அப்பா தலை கலைந்து முகம் சிவந்து தள்ளாடி உள்ளே வந்தார்.

"சாப்பிடறயாப்பா?"

"ஆச்சு..."

"ஏன் ஒருமாதிரியா இருக்க?"

"செலவோட செலவு."

"என்ன செலவு?"

"நூத்து நாப்பது ரூபா கொடுத்து ஒரு லாயர் நோட்டிஸ் விட்டேன்."

"ஐயோ...எதுக்கு...கேஸ் போடப் போறியா?"

"பார்ப்போம்."

"யார் லாயர். ஏம்பா இது?"

"நானே லாயர். வெறும் கிருஷ்ணசாமி பி.ஏ.,பி.எல்., அட்வகேட்னு நானே எழுதி லாயர் நோட்டீஸ். பத்து

நாள்ல பதில் சொல்லல...கிரிமினல் கேஸ் போடுவேன்னு அனுப்பினேன். ஏமாத்தல், பணம், திருட்டு, நம்பிக்கை துரோகம் எல்லாம் எழுதி நூத்தி நாப்பது ரூபா ஆச்சு.''

''எதுக்கு?''

''சாகட்டும் படவா!''

''பதில் வரலைன்னா?''

''வேற வெடி வச்சிருக்கேன்.''

''கேஸா?''

''இல்லை. அவன் கம்பெனில உச்சி வரைக்கும் போய் அழுது வேலைக்கு வெடி வைக்கறேன்.''

''ஏன்?''

''நிம்மதியா தூங்கவிடக்கூடாது...அந்த ஒள்ளார ஒழிய துடிக்க வைக்கணும்! சோறு தின்னாம, தூக்க மில்லாம கதறணும். ஈரத்துணி போட்டு கழுத்தறுக்கற துன்னா என்னன்னு காட்டறேன். அவன் கையாலயே அவனைத் தூக்கு மாட்டிக்க வைக்கறேன். எனக்கு கும்மோணம்டி. நான் விடமாட்டேன். ராஜி...''

''என்னப்பா?''

''பசிக்கறது. சாதம் போடு!''

''சாப்பிட்டாச்சுன்னீயே...''

''மறுபடி பசிக்கறது. நல்லா சாப்பிடப் போறேன். பளிச்சுன்னு உடுத்தப்போறேன். நாப்பது பேரைப்

போய் பார்க்கப் போறேன். நாகராஜன்னு பேர் கேட்டா அந்தக் கும்பலை அலற வைக்கப் போறேன். பாரு... வேடிக்கை பாரு.''

''எதுக்காக இது...எனக்காகவா... எப்படியாவது கல்யாணம் நடத்தவா?''

''இனி நடக்காது! இது முடிந்த கதை. நடந்தாலும் சிறக்காது. தெளிவா தெரியறது. அவாளை சிறுகச் சிறுக சாகடிக்கறதுதான் வழி!''

''நான் மாட்டேன்னு தடுத்தா...?''

''தூங்கறபோது உன் உடம்புல கிரஸின் ஊத்தி கொளுத்திட்டு தற்கொலைன்னு சொல்லுவேன். காரணமா அவனைக் காட்டுவேன். நான் சும்பனில்லடி. என் வீட்ல எச்ச துப்பிட்டு அவன் நிம்மதியா வலம் வரப் படாது. இனிமே எனக்கு நீ முக்கியமில்லடி. அவன் தான் முக்கியம். பாரு...வேடிக்கை பாரு. பெரிய பெரிய ஆட்களை தெருவுல நிக்க வச்சவன் நான். இவன் சுண்டக்கா!''

'நீ யாரையாவது கோபுரத்துல ஏத்தி வச்சிருக்க யாப்பா...' கேட்கத் தோன்றியது. பதில் வராது. பாம்பு பாதாளம் போகும்; கோபுரம் ஏறாது. நஞ்சுள்ளது மறைந்து ஒளிந்து வாழும். பின்னால் வந்து கொத்தும். இருட்டில் தலை தூக்கி படம் எடுக்கும்.

அப்பா பாம்பு.

வீட்டில் உறையும் பாம்பு.

பெரிய நாகப்பாம்பு அம்மாவைச் சுற்றிப் படுத்துக் கொண்டிருக்கிறது. அம்மா கட்டிலில் நிலைகுலைந்து கிடக்கிறா...

''ம்ம்...என்ன?''

''பெரியவனுக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டணும்...''

''ம்ம்...''

''சீமெண்ணெய் ஆயிடுத்து... இந்தப் பக்கம் கடைல கிடைக்கறதும் இல்லை.''

''ம்ம்...வேறென்ன?''

''எங்க தாத்தாவோட திவசம் வர்றது. அப்பா எதாவது கேட்டு வாங்கி வைன்னு சொன்னார்.''

பாம்பு சட்டென்று அம்மா நெஞ்சில் படமெடுத்து நிற்கிறது. அம்மா கண்ணில் மிரட்சியுடன் பார்க்கிறாள்.

''ம்ம்... அப்புறம்?''

''வேறொன்றும் இல்லை.'' பாம்பு மெல்ல படம் இறக்கி அம்மாவை இன்னும் இறுக்கிக் கொள்கிறது. இது கனவா? இல்லை, இது கனவு இல்லை. தூக்கம் கண்ணை அழுத்தினாலும் உடம்பு அசதி துவளப் போட்டாலும் புத்தி ஏதோ நினைத்து நினைத்து கோர்த்துக் கொண்டிருக்கிறது ..

ச்சே... ஏன் இப்படி அம்மாவை—நிலை குலைந்த அம்மாவை நினைத்துக் கொள்கிறோம். பார்த்திருப்பதாலேயா... அப்பாவை பாம்பு என்று அப்போது நினைத்துக்கொண்டோமே, அதனால் உள்ளே வந்த நினைவா...

என்ன பார்த்தோம், எப்போது பார்த்தோம்... அம்மாவும் பாம்பும்... ச்சே... அம்மாவும் அப்பாவும் படுத்துக் கொண்டு பேசுவதை...

அஞ்சாவதா... ஆறாவதா?

எதற்கோ பள்ளியில் முட்டி மீது அடி வாங்கி வலியில் தூக்கம் வராது புரண்டு புரண்டு படுத்தபோது பார்த்திருக்கிறேன்.

அம்மா ஏதோ கேட்டுக்கொண்டிருக்க, அப்பா ஒருக்களித்து படுத்தபடி—பெரிய முதுகு காட்டியபடி படுத்திருக்க.. அம்மா என்ன கேட்டாள்... அரிசியோ... பருப்போ மாதிரி ஞாபகம்...

''அம்மா, எனக்கு கலர் பென்சில்மா...''... அரைத் தூக்கத்தில் பள்ளி நினைவு பாதி, வீட்டு நினைவு பாதியாய் எழுந்து உட்கார்ந்து கேட்க—

''ஐயோ... அது முழிச்சிண்டுருக்கு!'' என்று அம்மா அலமலந்து எழுந்த வேளை, அவள் ஆடை குலைந்து கிடந்தது, அரை இருட்டில் பார்க்க முடிந்தது. விலக்கி விட்டு அருகே வந்து 'படுபடு... வாங்கித் தரேன், படு' என்று தட்தட் என்று தட்டி தூங்கச் செய்ததும் நினைவிருக்கிறது.

காலையில் பல் தேய்த்துக் கொண்டிருக்கும்போது அம்மா தலையில் 'ணங்' என்று குட்டினாள்.

''ஏண்டி சனியனே! நானே அரிசி— பருப்புக்கு அலை மோதறேன்... கலர் பென்சில் கேட்கறதா... கலர்

பென்சில்...இனிமே நடு ராத்திரி எழுந்தே, கொன்னு விடுவேன் கொன்னு!'' நஞ்சன்கூடு சிகப்பு பல்பொடி வாய் ஒழுக அழுதது ஞாபகம் இருக்கிறது.

அப்போது புரியவில்லை. அப்புறம் புரிந்தது...

அம்மா இளையாள் என்று பத்து வயதில் செய்தியாய் இருந்தது. பதின்மூன்று வயசில் பூடகமாய் புரிந்தது. அவனுக்கு மூத்தாளை விடமுடியலை. ஏக சொத்து இருக்கு அவகிட்ட. சொத்து இருக்கு போறும்னு சும்மா இருக்கவும் முடியலை. சுகப்படறதுக்கு இவளைக் கல்யாணம் பண்ணிட்டான்.

''எப்படி விட்டா மூத்தவ?''

''விடறது என்ன... அவளுக்குத் தன் குறை தெரியும். ஹார்ட் பேஷண்ட்...''

''ஐயோ ஹார்ட்டா!''

''பதறதுக்கு ஒண்ணுமில்லை. கொழுப்பு ஜாஸ்தி. ஊட்டமான குடும்பம். சித்த... பருமன். ஓடி ஆட முடியாது. குடம் தண்ணி ஆத்துலேர்ந்து குனிஞ்சு மொண்டு வீட்டுக்கு வரமுடியாது. உளுந்து சிந்தினா அள்றதுக்கு ஆள் பார்ப்போ. உட்கார்ந்தா உட்கார்ந்த வண்ணம்... படுத்தா படுத்த வண்ணம்...''

''நடமாட்டம் இல்லியா?''

''நடப்போ. தேர் போறாப்பல இருக்கும். தெருவுல போறவன் நின்னு இந்தம்மா எப்படி நடக்கிறான்னு பார்த்துட்டுத்தான் போவான். அத்தனை பாரம்!''

"ஆக ஆம்படையானுக்கு ருசியா இருக்க முடியலை..."

"அடடடா... அப்ப நாகராஜன் சொத்துக்கும் பொண்டாட்டிக்கும் காவல்தான்."

"சொத்துக்கு காவல். பொண்டாட்டிய எவன் தூக்கிண்டு போக முடியும்?"

"அது சரி. பல்லக்குன்னா தூக்கிண்டு போலாம். தேர்ங்கறேளே..."

"கரெக்ட். முத்துப் பல்லாக்கா வேணும்னுதான் இவளைப் புடிச்சான்."

"எப்படி? ஊருக்குத் தெரிஞ்சேவா?"

"ஊரு... மயிரப் புடுங்கின ஊரு... எட்டு வேலி நிலம், ரைஸ் மில், இரண்டு வீடு, மாடு, கன்னு, தென்னந் தோப்பு, கொடிக்கால்..."

"அடேங்கப்பா... கேட்கவே ரசமா இருக்கு!"

"ஆளும் ரசமான ஆள் யாரு?"

"நாகராஜன்."

"வண்டி பூசணிக்காய் வரும் அக்ரஹாரத்துக்கு. மடத்துக்கு நேர வந்து நாட்டிப்பிடுவான். சொட சொடன்னு குவியலா விழும். யார் வேணா எவ்வளவு வேணா எடுத்துண்டு போலாம். மிஞ்சினதை குடியான வத் தெரு ஜனங்க வாரிண்டு போகும்."

''கோகுலாஷ்டமி அன்னிக்கு மாயவரத்துலேர்ந்து வெள்ளைப் படுதா வரும். ப்ரொஜெக்டர் வரும். ஏழு மணி... இருட்டினதும் படம் போட ஆரம்பிச்சிடுவான் சம்பூர்ண ராமாயணம், பக்த மார்கண்டேயா, அது இதுன்னு...லாரல் ஹார்டி படம் கூடப் போட்டான்.''

''எதுக்குடா படம்னு கேட்டா, எல்லார் வீட்லயும் இன்னிக்கு சீடை முறுக்கு. விட்டத்தைப் பார்த்துண்டு சீடை தின்றதுக்கு சினிமா பார்த்துண்டு திங்கட்டுமேன்னு தான்னு பதில் சொல்வான்.''

''அடடே ரசம்தான்.''

''மாட்டுப் பொங்கல் அன்னிக்கு தஞ்சாவூர் கிராமங்கள்ல என்ன நடக்கும்?''

''என்ன... வண்டி கட்டி ஊர்வலம் போனவன். பசுவுக்கு மணி கட்டி மிரள மிரள புடிச்சுண்டு போனவன். சில இடங்கள்ல மஞ்சு விரட்டு.''

''இங்க கிடையாதுன்னேன்.''

''மாட்டுக்குப் பூஜை இல்லியா?''

''உண்டு.''

''எட்டு மணிக்கு அடங்கிடும். அப்புறம் ஷேக் சின்ன மௌலானா, இல்லை... சேதுராமன் —பொன்னு சாமி...நிச்சயம் பெரிய பார்ட்டி... நாலு லவுட் ஸ்பீக்கர் வச்சு விடிய விடிய நாதஸ்வரம்...''

''எதுக்கு?''

"அன்னிக்காவது காது குளிர சங்கீதம் கேட்டபடி பசுவும், வண்டி மாடுகளும் அசைபோடட்டுமேன்னு தான்."

"யேங்கப்பா..."

"கடன்னு போய் நில்லு... தருவான்."

"வட்டியில்லாமலா?"

"வட்டியோட... அது தர்றதுக்கு ஆள் வேணுமே ஓய்?"

"அது சரி..."

"ஊர் என்ன புடுங்கும் அவனை...? இவன் புடுங்கினா என்ன தப்பு கேட்கும்..."

"வலிக்காத புடுங்குப்பான்னு சொல்லும்"

"அப்படித்தான் சொல்லித்து."

"ஊர்ல நாலு பேருகிட்ட கேட்டு அவாளும் தலையாட்டி, பூ, வெத்தலை பாக்குத் தட்டோட உள்ள நுழைஞ்சு பொண் கேட்டான் இளையாள..."

"இவாளுக்கு என்ன முடையோ?"

"சொர்ணபுஷ்பம்தான். கைக்கும் வாய்க்கும் அல்லாடற குடும்பம். இரண்டு கரையேத்தி மூணாவது..."

"பசங்க இல்லையா?"

''இருக்கான். கரண்டி உத்தியோகம்.''

''தகப்பனார்?''

''சிவன் கோவில் கணக்கு.''

''பொண் நன்னாயிருப்பாளோ?''

''செப்புச் சிலை! எல்லா கோவில் வாசல்லயும் ஏகாடிப் பெண் செதுக்கியிருப்பானே அந்த அம்சம். முன் சுமாரா இருக்கும். நான் சொல்றது...''

''புரியறது...''

''சுவாமிமலைல கல்யாணம். மாயவரத்துல சாந்தி முகூர்த்தம். நாலுநாள் கழிச்சு கங்கணதாரியா வந்து சபைல கலந்துண்டு சீட்டாட்டம்...''

''ரசம்தான்.''

"நாங்க ஏதாவது ஓதியிடலாமாடா உன் இரண்டாம் கல்யாணத்துக்குன்னு கேட்டோம்.''

''கொடு. அப்படியே உன் வீட்டுக்கு விருந்து சாப்பிடவும் கூப்பிடு. நீ ஓதியிட்டதை உன் பொண்டாட்டி ஆரத்தி தட்டுல போட்டுடறேன்னான். நாங்க ஓதியிடவும் இல்லை. விருந்துக்குக் கூப்பிட்டு ஆரத்தி கரைக்கவும் இல்லை. அப்படியே அந்தப் பொண்ணு அவன் சொத்துன்னு ரிஜிஸ்டர் ஆயிடுத்து.''

''இன்னொரு வேலி நிலம்...''

"உழுது பயிரிட்டு ஓஹோன்னு இருக்கு. இதோ இந்தக் குட்டி ரெண்டாவது அறுப்பு. குட்டி, உம் பேரென்ன...?"

"ராஜேஸ்வரி."

ஊர் பேசினது உற்று கேட்ட பத்து வயசில்தான் புரிந்தது. அப்பா ஏன் பகலில் வருவதில்லை என்பது புரிந்தது. தாத்தாவும் பாட்டியும் பகல் முழுவதும் வீட்டுக் கூடத்தில் இருப்பார்கள். இரவானால் திண்ணைக்குப் போய் விடுவார்கள். இவளையும் திண்ணையில்தான் தூங்கச் சொல்வார்கள். கொசு புடுங்கறது என்று இவள் அழுதபோது திண்ணைக் கூரையில் மின்விசிறி போடப் பட்டது. திண்ணையில் ஃபேன் போட்ட ஒரே வீடு பட்டாமணித் தெருவில் இவர்களுடையதுதான். போட்ட காரணம் புரிந்த போது, திண்ணை விசிறியைப் பார்க்கப் பார்க்க வேதனையாய் இருந்தது. கலர் பென்சில், கவுன், பள்ளிக்கூட சம்பளம், பப்பர்மின்ட், உருளை, அரிசி, பருப்பு, புளி, புடவை, சினிமா எல்லாவற்றுக்கும் அம்மாதான் கேட்க வேண்டும். கேட்கிற நேரம் யாரும் இருக்க முடியாது; இருக்கக்கூடாது. அப்பா வந்தவுடன் திண்ணைக்குப் போய்விட வேண்டும். திண்ணைக்குத் தூங்கப் போகிற நேரம்தான் அப்பா வரும் நேரம்.

மழைச்சாரல் என்று உள்ளே கொண்டு வந்து போட்ட நாளில் கூடத்தில் தூங்க முடியும். அப்படி கூடத்தில் போட்ட நாளில் தான் கண் விழித்தது. மனசு விழித்தது.

மனசு கேட்ட கேள்வியை அண்ணா வாய்திறந்து கேட்டான். சாப்பிடும்போது சாதாரணமாய் கேட்டான்.

"நீ இரண்டாந்தாரமா ஏன் கல்யாணம் பண்ணிண்ட?"

"தலையெழுத்து..."—அம்மா ஒற்றை வரியில் பதில் சொன்னாள்.

"எனக்கு அவமானமா இருக்கு."

"என்னடா அவமானம்?"

"எல்லா பசங்களும் அப்பாக்கிட்ட லீவ் லெட்டர் வாங்கிண்டு வரபோது நான் உன்கிட்ட லீவ் லெட்டர் வாங்கிண்டு போறது அவமானமா இருக்கு!"

"போ... போய் எங்கயாவது ஆத்துல குளத்துல விழுந்து சாவு!"—அம்மா அவன் சாப்பிடுகிற தட்டை இழுத்து எறிந்தாள்.

"நீ சாவேன்...செத்துத் தொலையேன். எங்களுக்கு அப்பாவும் இல்லை; அம்மாவும் இல்லைன்னு நினைச்சுக்கறோம்..."

"என்ன சொன்னே...! என்ன சொன்னே..." விசிறிக் காம்பால் முகம், முதுகு, முழங்கை என்று விளாறி விட்டாள்; "ஒதுங்கி, ஒருக்களிச்சு ஓடா தேயறேன்... உங்களுக்காக...என்னை சாவுங்கறயா... கடங்காரா!"

அம்மாவின் துக்கம் பிள்ளைக்குப் புரியவில்லை. பிள்ளையின் துக்கம் அம்மாவுக்குப் புரியவில்லை.

ராஜேஸ்வரிக்கு புரிந்தது. எல்லா வார்த்தைக்கும் அர்த்தம் புரிந்தது.

"உனக்கு லீவ் லெட்டர்தானடா வேணும்..." மறு நாள் காலை அப்பா அவனை எழுப்பிக் கேட்டார். அண்ணா பதில் சொல்லாது விழித்தான்.

அப்பா தோல் பை திறந்து ஒரு ரப்பர் ஸ்டாம்ப் எடுத்துப் போட்டார். "இதுல ப்ளாக் இங்க் தடவி நீயே லீவ் லெட்டர் எழுதி கீழ குத்திடு. லீவ் லெட்டர் எழுதத் தெரியுமா உனக்கு?"

"தெரியும்."

"போ..."

அந்த ரப்பர் ஸ்டாம்ப் எடுத்து இங்க் போட்டு தங்கள் எல்லா நோட்டுகளிலும் அண்ணாவும் தங்கையும் தம்பியும் குத்திக் கொண்டார்கள். கன்னத்தில் குத்திக் கொண்டார்கள். வீட்டு நிலைப்படியில், சுவரில், கடிகாரக் கண்ணாடியில் அப்பா சாப்பிடுகிற தட்டில், காலண்டரில், தயிர் கணக்குப் புஸ்தகத்தில், மளிகை கணக்கு நோட்டில் குத்திக் கொண்டார்கள்.

ஆத்திரம்... தன்னுடைய அப்பா தனக்கே சொந்தம் என்கிற ஆத்திரம். யாரும் அவர் உன் அப்பா இல்லையே என்று சொல்லி விடக்கூடாதே என்கிற ஆதங்கம்...

அப்படி நோட்டு நோட்டாய் குத்திக் கொண்டது கூட அவமானம் என்பது இன்னும் இரண்டு வருடம் போகப் புரிந்தது.

"இருநூறு ரூவா போறலை. பத்து நாளைக்குக்கூட வரமாட்டேங்கறது. குழந்தைகள் பெரியவளாயிட்டா... நோட்டு, கலர் பென்சில், ஜாமெட்ரி பாக்ஸ் எதாவது

ஒண்ணு கேட்டுட்டுருக்கு...பள்ளிக்கூடத்துக்கு சம்பளம் இல்லைன்னு பேரே ஒழிய..."

"என்னங்கற இப்ப..."

"இருநூறு ரூவா போறலை."

"இதுக்கு மேல முடியாது."

"பட்டும் பனாரஸூமா கேட்டேன்!"

"நை நைன்னா செருப்படி படுவ!"

"எண்பதாயிரம் ரூவா கொடுத்து கார் வாங்கியிருக்கேள். இங்க சமையல் உள் அப்படியே தொங்கறது. எப்ப இடிஞ்சு விழுமோன்னு இருக்கு. இதை ரிப்பேர் பண்ண வேண்டாமா?"

"என்கிட்ட காசில்லை."

"இருநூறு ருவால குடித்தனம் பண்ண முடியாது."

"ஒழி. எக்கேடும் கெட்டுப்போ!"

"போயிடுவேன்...மூணு குழந்தை பெத்துட்டேனே... அதுகளை படிக்க வச்சு கரையேத்தணுமே..."

"படிப்பு போறும். எங்கயாவது வேலை வெட்டிக்கு அனுப்பு."

"உங்களுக்குத்தான் அவமானம். அவன் எதுக்கு படிப்பு நிறுத்தணும். கிளாஸூக்கு இரண்டு வருஷம்

உட்கார்றதெல்லாம் படிக்கிறேன்னு அழிக்கறது. எம்புள்ளை தங்கமா படிக்கறான். அவனை எதுக்கு நிறுத்தணும்.''

''இருநூறு ருவாதான்...படிச்சா படிக்கட்டும், இல்லை பாழாப் போகட்டும்!''

''பாழாப் போறது யாருன்னு பார்க்கத்தான் போறேன். எட்டு வேலியும் தென்னந்தோப்பும் பாழாப் போனா எம்புள்ளை படிப்புதான் சோறு போடும். அங்க எச்சல் சோறுகூட கிடைக்காது!''

''என்னடீ சொன்னே...!'' பொத் பொத்துன்னு அடிக்கிற சப்தமும், சுவரில் தலை முட்டுகிற சப்தமும் கேட்டது. அண்ணாவும் தங்கையும் உள்ளே ஓடினார்கள். அம்மாவின் உச்சி மயிரைப் பிடித்துக் கொண்டு அப்பா கன்னம் கன்னமாய் அறைந்து கொண்டிருந்தார். அண்ணா அலறிக் கொண்டு உள்ளே பாய்ந்தான். அடி பட்டான். ராஜேஸ்வரி அம்மாவை இறுக அணைத்துக் கொண்டாள். பயத்தில் அலறினாள்.

அப்பா சட்டையைப் போட்டுக் கொண்டார். தோல் பையை எடுத்துக் கொண்டார்.

''எனக்கு எதாவது கொடுத்துட்டுப் போங்கோ...''— அம்மா சீற்றத்துடன் அப்பாவை பார்க்க, திரும்பி முறைத்தார்.

''முறைப்பென்ன...ராத்திரி மட்டும் பொண்டாட்டி வேண்டியிருக்கோன்னோ... மானங்கெட்டத்தனமா...''

"வேண்டாம் போடி! நீயில்லன்னா வேற நாய் கிடைக்காதா...போ...போ!" நின்ற வாக்கிலேயே முகத்தில், முதுகில், இடுப்பில் எட்டி உதைத்தார். குழந்தைகள் அலறின. அம்மா வலி தாங்காது வீறிட்டாள்.

"பொறுக்கி ராஸ்கல்!" அண்ணா அப்பாவைப் பார்த்து சீறினான். எட்டி அவன் தலைமயிரைப் பிடித்து முதுகில் பேய் மாதிரி அடித்தார். அண்ணா சுருண்டு விழ, வாசலுக்குப் போனார்.

வீடு அரைமணி நேரம் லாரியில் அடிபட்ட பூனையாய் நெளிந்தது. மூன்று உயிர்களும் பயத்தில்—வெட்கத்தில்—அவமானத்தில் துடித்து கிடந்தன. தம்பி மட்டும் பட்டன் அறுந்த அரை நிக்கர் மேல் அரைஞாண் கயிறு போட்டு இறுக்கிக் கொண்டு உள்ளே ஓடிவந்தான். "சாதம் போடும்மா...பசிக்கறது" என்று தட்டோடு அலைந்தான்.

அம்மா சாதம் போட்டாள். ரசம் சாதம் கரைத்துக் குடித்து சுருண்டு படுத்தாள்.

"அப்பாக்கிட்ட காசு இல்லையா...ஏன் தரமாட்டேங்கறா?"—ராஜேஸ்வரி, அண்ணாவைக் கேட்டாள்.

"எட்டு வேலி சொத்து இருக்குடி. அந்தக் கடங்காரன் தரமாட்டேங்கறா நமக்கு".

"ஒரு வேலி நாம் எடுத்துண்டா என்ன?"

"ஒரு வேலியா...சரிபாதி தரணும். அதான் சட்டம்."

"உனக்கெப்படி தெரியும் சட்டமெல்லாம்."

''கௌரவாளுக்கும், பாண்டவாளுக்கும் பாதிப் பாதியா தேசம் பிரிச்சு கொடுக்கலையா...அது மாதிரி.''

''அப்பா வாங்கின கார்கூட இரண்டா பிரிச்சுடு வாளா?''

''பிரிக்க முடியாது. அதை வித்து இரண்டா காசு பங்கு போட்டுக்கணும்.''

''நாம் பிரிச்சுக்குவோம்.''

''வேற ஐடியா வச்சுருக்கேன்.''

''என்ன?''

''சொத்த இரண்டா பிரிச்சுருக்கேன்னு லெட்டர் எழுதி அதுல அப்பா கையெழுத்துப் போட்டுட்டா...?''

''எப்படி?''

''ரப்பர் ஸ்டாம்ப் இருக்கே...''

''ஐயோ...அது தப்பு!''

''அதான் வழி. ஒரு பேப்பர் எடு.''

ஒன்பதாவது படிக்கிற பையனுக்கு இந்த குறுக்குப் புத்தி அதிகம்தான். ஆனால் இது வேதனையில் விளைந்த புத்தி. வெறுப்பில் விளைந்த எண்ணம். சீல் செல்லாது என்பது தெரியாத பேதமை. தாயைக் காப்பாற்ற அந்த பதினாலு வயசுப் பையன் செய்த முதல் முயற்சி.

"மேற்படி என் சொத்துக்கள் யாவும் இரண்டாகப் பிரித்து..."

"மேற்படின்னா என்னடா?"

"அப்படித்தாண்டி எழுதறா. நான் பார்த்திருக்கேன்."

"சரி, எழுது."

'அதில் சரி பாதியை பட்டம்மாளுக்கும், மீதியை என் முதல் மனைவிக்கும் எழுதுகிறேன். —இப்படிக்கு நாகராஜன்.' கையெழுத்து ரப்பர் ஸ்டாம்ப் கவனமாய் இடப்பட்டது.

"இப்ப இதை என்னடா பண்றது?"

"கோனேரிராஜபுரத்துக்கு அனுப்புவோம்."

"அனுப்பினா..."

"அவா அலறி அடிச்சுண்டு சமாதானத்துக்கு வந்துடுவா."

"வந்து ரப்பர் ஸ்டாம்ப் பிடுங்கினா?"

"ஒளிச்சு வச்சுடுவோம்."

கிணற்றுப் பிறையில் ரப்பர் ஸ்டாம்ப் ஒளித்து வைக்கப்பட்டது. கடிதம் ஒட்டப்பட்டு கோனேரிராஜபுரம் அப்பா அட்ரஸுக்கு அனுப்பப்பட்டது. அன்று இரவு அப்பா வந்தார். நானூறு ரூபாய் கொடுத்தார். "ஏதாவது வேணும்னா நிதானமா கேளு. கேட்ட கோவத்துக்கு மாட்டேம்பேன். கொடுக்காத போயிடுவேனா?"

"நீங்க புள்ளைய ஒழின்னேள். அதான் கோவம் வந்துடுத்து..."

"வரப்படாது. நீ சொல்றதில்லையா? ஒழின்னா ஒழிஞ்சுடுமா? என்ன பண்ணியிருக்கே?"

"சப்பாத்தி–பயத்தம் பருப்புக்கூட்டு."

"கொண்டா..."

ராஜேஸ்வரிக்குப் பகீரென்றது. அண்ணா வாயை மூடு என்று சைகை செய்தான். அப்பா சப்பாத்தி சாப்பிட்டு அறைக்குள் போனதும், அம்மா பாய் தலைகாணி எடுத்து வாசல் திண்ணையில் போட்டு விட்டாள். ஹோம்ஒர்க் விடிஞ்சு பண்ணிக்கலாம் என்று சொல்லி விட்டாள்.

மறுநாள் அப்பா கடிதம் பிரித்து அம்மாவிடம் காட்டினார். அண்ணாவைக் கூப்பிட்டார். ரப்பர் ஸ்டாம்ப் எடுக்கச் சொன்னார். அண்ணா அது காணோம் என்று சொன்னவுடன் பளீரென்று அறைந்தார். ராஜேஸ்வரி ஓடிப்போய் கிணற்றுப் பிறையிலிருந்து அதைக் கொண்டுவந்து கொடுக்க, அம்மா அண்ணாவை 'சுளீர் சுளீரெ'ன்று விசிறிக்கம்பால் அடிக்க, அண்ணா வலியில் பல் கடித்துத் தவித்தான்...

"உனக்கென்ன திமிரு. வேணுங்கறது கிடைக்கறதில்லை. உனக்கென்ன திமிரு. என் ஹிம்ஸை பெரிசாக்கவே பொறந்திருக்கியா நாயே...அன்னிக்கு அப்பா சொன்னது பொய். இப்ப நான் சொல்றது நிஜம். ஒழி... ஒழி! எங்கயாவது கண் காணாத ஒழி!" தரதரவென்று

இழுத்து வெளியே தள்ளி கதவு சாத்தினாள். அப்பாவின் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தாள்.

ரப்பர் ஸ்டாம்ப் அந்த வீட்டில்தான் நெடுநாள் இருந்தது. ஆனால் அதை யாரும் தொடுவதில்லை. லீவு லெட்டரில், ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டில் அம்மா கையெழுத்து போதும் என்றாகி விட்டது.

ஆனால் அந்தக் கடித விஷயம் அத்தோடு போகவில்லை. பெரிதாய் பூதமாய் வளர்ந்து விட்டது.

''சப்ஜாடா எனக்கு எழுதிவை. இல்லை, கோர்ட்ல இரண்டாந்தாரம் வச்சுண்டிருக்கேன்னு கேஸ் போடுவேன். முளைச்சு மூணு இலை விடலை. அது இப்பவே பாதி பிரின்னு லெட்டர் போடறதே? நீ பொசுக்குன்னு கண்மூடிட்டா என்ன ஆகும் என் கதி! எழுதி வை...எழுதி வச்சா கும்பகோணம் போலாம். இல்லை, போலீஸ் ஸ்டேஷன்தான்.''

கும்பகோணம் பட்டாமணி தெரு ஓட்டு வீடு தவிர, அத்தனை வேலி நிலமும் தோப்பும் அவளுக்கு எழுதி வைத்தாகி விட்டது. எழுதி வைத்த கூத்தும் பிறகுதான் தெரிந்தது.

எட்டு பவுன் சங்கிலி, ஒரு முத்துமாலை, நாலு வளையல்கள், இரண்டு மோதிரம். பத்து கிலோ வெள்ளிப் பாத்திரம் தவிர வேறு சொத்து இல்லை.

நெல்லும் பருப்பும் கடனே என்று வந்து சேர்ந்தன. கரும்பு காசில் பொய் சொல்லி பாதி இங்கே வந்தது.

மில்லில் நஷ்டக் கணக்கு எழுதி குழந்தைகள் படிப்புக்குக் காசு வந்தது. உரமுட்டையில், ட்ராக்டர்,

கூலியில், வெள்ளை அடிக்கிற செலவில் பிய்த்து பிய்த்து இரண்டாம் குடித்தனம் நடந்தது. அப்பாவுக்குப் பொய் சொல்ல பொய் சொல்ல, முகம் மாறிப் போயிற்று.

ராஜேஸ்வரி எஸ். எஸ். எல். சி. எழுதினாள். அண்ணா பி. ஏ. முதல் வருஷம் எழுதினான்.

வாசல்பக்கம் இரண்டு திண்ணைகளை இடித்து விட்டு, அப்பா கடை கட்டினார். பம்பு ஷெட்டும், மாட்டுத் தொழுவமும் கட்டுகிற கணக்கில் கொத்தனாரை சேர்த்துக் கொள்ளச் சொன்னார்.

''வயசுப்பொண் வீட்ல இருக்கறச்ச வாசல்ல கடை கட்டுவாளா...''

''உனக்குன்னு எதாவது வருமானம் வேணு மோன்னோ...'' கடைக்கு நூறு ரூபாய் இருநூறு ரூபாய் வருமானம் வந்தது. இடது பக்கம் வெற்றிலை பாக்குக் கடையும், வலது பக்கம் வண்ணப் படங்களுக்கு சட்டம் போடுகிற கடையும் வந்தது.

திண்ணையில் உட்கார்ந்து வாய் விட்டுப் படிச்சு மனனம் செய்ய முடியாது போயிற்று. முற்றத்தில் அலைந்து அலைந்து படிக்க வேண்டியிருந்தது. தாத்தாவும், பாட்டியும் ஹாலுக்குக் குடிபெயர்ந்தார்கள்.

அண்ணா படிக்க கோவிலுக்குப் போய் விடுவான். ராஜேஸ்வரி வீட்டில் அடைபட்டாள்.

வெற்றிலை பாக்குக் கடை அந்தத் தெருவில் போணி யாகவில்லை. மெயின் ரோடிலிருந்து சந்துக்கு வந்து யாரும் வியாபாரம் செய்யவில்லை.

மூன்று மாசத்துக்கு ஒரு ஆள் மாறிக் கொண்டிருந்தான். அம்மாவின் தம்பியே நான் நடத்துகிறேன் என்று முன்வந்த போது வாடகை நூறு ருபாய் போயிற்று. "என்கிட்டவே வாடகை கேட்டா எப்படி...வியாபாரம் சூடு பிடிக்கட்டும். லாபத்துலேயே பங்கு தரேன்."

தடியாய் வெற்றிலை வாயாய் முள்ளம் பன்றித் தலையாய் ஒரு மாமன் திடீரென்று வந்தபோது வியப்பாய் இருந்தது.

"பாம்பேல ஒரு ஓட்டல்ல காஷியரா இருந்தேன். பெங்களூர்ல லாரிக் கம்பெனி ப்ரோக்கரா இருந்தேன். மெட்ராஸ்ல சீட்டுக் கம்பெனி நடத்தினேன். எம் போறாத காலம் எல்லாத்துக்கும் காம்படிஷன் ஜாஸ்தி."

"மாமா, நீ இந்தி பேசுவியா?"

"இந்தி, மராட்டி, தெலுங்கு, கன்னடம் எல்லாம் தெரியும்." பேசிக் காட்ட வியப்பாய் இருந்தது.

"பாம்பேல படிச்சவாளுக்கு வேலை கிடைக்குமா?" —வெங்கடேஷ் ஆவலாய் கேட்டான்.

"தடுக்கி விழுந்தா வேலை. ஆனா ஜாக்கிரதையா இருக்கணும். கெட்டபய ஊரு அது!"

"ஏன்?"

"வாசல்ல சிகப்பு விளக்குப் போட்டு, 'வா வான்னு' கூப்புடற ஊரு. தெருவுல பத்து வீட்டுக்கு சிகப்பு லைட் எரியும்..."

"டாக்டர்ஸ் ஜாஸ்தியா?"

"டாக்டரா..."

"ஆமா...மொய்தீன் டாக்டர் வீட்டு வாசல்ல சிகப்பு விளக்கு போட்டுருக்கு."

"இது அந்த விளக்கு இல்லடா. வேற விளக்கு."

ராஜேஸ்வரிக்குப் புரிந்தது. அண்ணாவுக்குப் புரிய ஐந்து நிமிடமாயிற்று.

"ஐயோ..."

"பெங்களூர்ல அதைவிட மோசம். யாரெல்லாம் கெட்டவா, யாரெல்லாம் நல்லவான்னு தெரியவே தெரியாது."

"மெட்ராஸ்?"

"அவ்வளவு மோசமில்லை. நல்லவா நிறைய உண்டு."

"அங்க வேலை கிடைக்குமா?"

"நீ படி. உன் வேலைக்கு நானாச்சு."

"ஆமா. நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக்கலை? முப்பத்திரண்டு வயசுங்கறேளே..."

"எனக்கு கல்யாணமே வேண்டாம். நாலு ஊர் பார்த்தவன் எவனுக்கும் குடித்தன ஆசை வராது. இப்ப

கும்மோணம் பிடிக்கலைன்னு வச்சுக்கோ, நேர டில்லி போயிடுவேன். எதாவது ஒரு பிஸினஸ் ஆரம்பிப்பேன். ராஜா மாதிரி சுத்தணும். பிக்கல் பிடுங்கல் இல்லாம இருக்கணும். கல்யாணம். குழந்தை—குட்டி வந்தா இப்படி ஊர் சுத்த முடியுமா? நாலு பாஷை பேச முடியுமா?''

''மெட்ராஸ்ல லேடீஸ் வேலைக்குப் போறாளாமே?''

''எந்த ஊர்ல போகலை. இந்த கும்மோணத்தை தவிர, எல்லா ஊர்லயும் போறா. ஜென்ஸோட சகஜமா பேசறா. உன்னை மாதிரி ஆளைக் கண்டா சமைய லறைல ஒளியறதில்லை.''

வாடகை வரவில்லை. கடையில் வருமானமும் வரவில்லை. ஆனால் ஊர்பட்ட விஷயங்கள் தெரிந்து கொள்ள முடிந்தது. கும்பகோணம் தாண்டி, கோனேரி, ராஜபுரம், அது தாண்டி கடல் என்கிற கனவு போய், தமிழ்நாடு பெரிய இடம் என்று புரிந்தது. பாரத தேசம் மிகப் பெரிய தேசம் என்பது புரிந்தது. புரிய வைத்தது மணி மாமா.

தாத்தா மட்டும் அவனை ஏறெடுத்தும் பார்ப்ப தில்லை. ஏன் என்றும் கேட்பதில்லை. தத்தாரி, சோம் பேறி..., களவாணி என்று தான் திட்டுகிறார்.

'இங்க எதுக்குடா வந்தே' என்றுதான் முதலில் பார்த்ததும் கேட்டார்.

''உன்னையும் அம்மாவையும் பார்த்து நமஸ்காரம் பண்ணிட்டுப் போலாம்னு வந்தேம்ப்பா.''

''ஒரு எழவும் வேண்டாம். புறப்படு.''

''ஏன்?''

''இதுவே இரண்டுங்கெட்டான் குடித்தனம். நீ வேற எதுக்கு இங்க...''

எதற்கு இத்தனை வெறுப்பு பிள்ளை மேல என்று புரியவில்லை. பிள்ளையின் நிஜ ரூபம் புரிய ராஜேஸ்வரிக்கும் வெறுப்பு வந்தது.

வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. ரேழியில் தரதரவென்று ஒழுகிற்று. ஹாலும் அப்பாவின் அறையும் ஒழுகலிலிருந்து தப்பித்தன. சமையலறை ஓதம்... வராண்டாவில் சாரல் அடிக்கும்.

நாலு நாட்களாய் அப்பா வரவில்லை. காப்பித் தூளுக்கும் பசும்பாலுக்கும் மணி மாமா தலையில் துண்டு போட்டு தெரு நீரில் சளக் சளக்கென்று நடந்து போய் வந்தான். ''வத்தக்குழம்பு பண்ணேன் பட்டு. இந்தக் குளிருக்கு சுளீர்னு உறைக்கற வத்தக் குழம்பு என்னம்மா இருக்கும் தெரியுமா!''

அப்பா வந்தாலும் வரலாம். நடு நிசியில் தூக்கத்தில் இடம் பெயர்வது நன்றாய் இராது என்று எல்லோரையும் அம்மா ஹாலில் படுக்கச் சொல்லிவிட்டாள். தம்பி, தாத்தா, பாட்டி, ராஜி, அண்ணா, அண்ணாவுக்கு நேர் எதிரே வராண்டாவுக்கு கால் நீட்டியபடி மணி மாமா. மின்தடங்கல் ஏற்பட்டு விடி விளக்கும் அணைந்து போயிற்று.

வற்றல் குழம்பு ருசியில் கூட இரண்டு பிடிசாதம் உள்ளே போனதும் குளிரும், போர்வை சுகமும் படுத்த உடனே கண்ணை இழுத்துக் கொண்டு போயின. அண்ணா குறட்டைவிடுவது அரைத் தூக்கத்தில் கேட்டது.

கனா...வினோதமான கனா... கும்பேஸ்வரர் கோவில் மாடு முதுகில் சின்ன முரசுடன் மழை நீரில் ஓடிக் கொண்டிருக்கிறது. மழை முரசில் மோதி தபதப வென்று சப்தம். ராஜேஸ்வரி வாசலில் நின்று வேடிக்கை பார்க்கிறாள். அந்த மாடு அவள் வீட்டுக்கருகில் நின்று பார்க்கிறது. கிட்ட வந்து ராஜியை முகர்கிறது. நாக்கால் புறங்கையை நக்குகிறது. நிமிர்ந்து கழுத்தை நக்குகிறது. ராஜி திகைப்புடன் பயத்துடன் உறைந்து நிற்கிறாள்.

ஸ்வாமி மாடு— விரட்டலாமா, கூடாதா என்று யோசிக்கிறாள். பின்னே நகர்கிறாள். சுவரோடு ஒதுங்குகிறாள். மாடு முன்னேறி ஜாக்கெட்டோடு அவள் இடது மார்பை நக்குகிறது. உடம்பெல்லாம் ஒரு சந்தோஷம்; விதிர்ப்பு. மாட்டின் நெற்றியில் கைவைத்து தள்ளுகிறாள். மாடு சுவரோடு தேய்த்து அவள் நெஞ்சு முழுக்க முகத்தைத் தேய்க்கிறது. ஐயோ என்று பயத்தில் கத்துகிறாள். சப்தம் வரவில்லை; திமிருகிறாள். மாடு முன்கால்களை தூக்கி நின்று அவளைச் சுவரோடு சாய்க்க, தூத்தெறி என்று முழு பலத்துடன் மாட்டை விலக்குகிறாள்.

விழிப்பு வந்து விட்டது. ஜாக்கெட்டிலிருந்து ஒரு கை வெளியேறிற்று.

"யார் அது—?" நடுங்கும் குரலில் அதட்டினாள்.

"ச்சு... சத்தம் போடாத. நான்தான் மணி மாமா."– குரல் மிக அருகே கேட்டது.

"ச்சீ! சனியனே..." தலையணை எடுத்து பட்டென்று இருட்டில் சப்தம் வந்த இடம் நோக்கி அடித்தாள்."

"சரி, சரி... படு"—மணி மாமா சுருண்டு படுப்பது தெரிந்தது.

ராஜி அப்படியே உட்கார்ந்திருந்தாள். எழுப்பி அண்ணாவிடம் சொல்லலாமா? என்ன சொல்வது? மணி மாமா கை போட்டான் என்றா... போய் அறைக்குள் அம்மாவிடம் படுத்துக் கொள்ளலாமா? "அப்பா எப்ப வேணா வருவாரே ... நீ ஏன் இந்த ரூமுக்கு வர... வேண்டாம்... ஹாலுக்குப் போ!" ராஜி சுவர்மீது முதுகு சாய்த்து உட்கார்ந்திருந்தாள். நெஞ்சில் நகம் பட்டு இரண்டு மூன்று இடங்கள் எரிந்தன.

என்ன துணிச்சல் இந்த தடியனுக்கு. கேட்க ஆளில்லை என்கிற தைரியம்தானே... முட்டினது மாடா? இவனா? இத்தனை நேரம் கனா என்று படுத்திருந்ததை தேவையென்று நினைத்து விட்டானோ. ராஜி தம்பியைத் தூக்கி தன்னிடத்தில் போட்டாள். அவள் தலையணையை எடுத்துக் கொண்டு தாத்தாவுக்கு அருகே படுத்துக் கொண்டாள்.

இந்த வீடு சரியாய் இல்லை. ஏழ்மை மட்டுமில்லை. கௌரவமும் சரியாக இல்லை. இவர்களைவிட ஏழைகள் உண்டு கும்பகோணத்தில். யாரும் அந்த வீட்டுப்பெண் நெஞ்சில் கை வைத்துவிட முடியாது. ஆண் இல்லாத

குடித்தனம். இரவு மட்டும் ஆளுகைக்கு உட்படுகிற குடித்தனம். பாவாடைக்கும். படிப்புக்கும், சோற்றுக்கும் அம்மாவை நம்புகிற குடித்தனம். யார் வேண்டுமானாலும் மாடு மாதிரி உள்ளே நுழையலாம், ஏதாவது உறவு சொல்லி நெஞ்சில் முட்டலாம்.

விடிகிற வரை புரண்டு புரண்டு படுத்தாள். திடீரென்று விழித்து மாடு எங்கே என்று பார்த்தாள். தூக்கம் சுத்தமாய் போய்விட்டது. அம்மாவை உலுக்கி எழுப்பி இந்த நாய் என் மார்ல கை வச்சுது என்று கத்த தோன்றியது.

மாமா தாண்டி, போனா... போட்டம் விடு என்று அம்மா சொல்லி விடுவாளோ என்கிற பயம் வந்தது. 'நான் இரண்டாந்தாரம் வாக்கபட்டதுக்கு இவனையே நீ கல்யாணம் பண்ணிக்கலாம். கொஞ்சம் வயசு ஜாஸ்தி. அதனால என்ன... ஆம்பளைக்கு வயசு என்ன...ஆம்பளை ஆம்பளையா இருந்தா போறாதா?'

மாடும் எழுந்து உட்கார்ந்தது.

''என்ன?'' குரல் எடுத்து ராஜி அதட்டினாள்.

''ஒண்ணுமில்லை...'' குப்புறப் படுத்துக்கொண்டு விட்டது.

விடிய, சமையலறைக்குப் போனாள். அடுப்பு மூட்டி வெந்நீர் வைத்தாள். காற்று பலமாய் இருந்தது. மழை விடாது பெய்தது. வயிறு கனக்க, பின்பக்கம் போனாள். கால் அலம்பி கொல்லைவாசலில் கால் வைக்க, 'தடே'ரென்று சப்தம் கேட்டது. சரசரவென்று ஓடுகள் அருகே விழுந்தது.

சமையலறை அப்படியே உட்கார்ந்து விட்டது. 'அம்மா' என்று காது பொத்திக் கொண்டு ராஜேஸ்வரி கூவினாள்.

புகைபடாத இடமும், புகைபட்டு கறுத்த இடமுமாய் ஓடுகள் இரட்டைக் கலரில் தரையில் மல்லாந்து கிடந்தன.

"ராஜி...அடியே ராஜி, எங்க இருக்கே..." அம்மா கத்துவது கேட்டது. சமையலறை குவியலில் மாட்டிக் கொண்டு விட்டதாக எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நினைத்துக் கொள்ளட்டும்...

அண்ணாதான் கொல்லைப்பக்கம் ஓடி வந்தான். "இங்கயா இருக்க, உள்ள மாட்டிண்டயோன்னு நினைச்சேன். மாமா தள்ளிண்டிருக்கான். உள்ள வா...மழையில் நனையாதே."

சுத்தி உள்ளே வந்தபோது, சமையலறை முழுக்க அப்படியே உட்கார்ந்து விட்டது தெரிந்தது. ஐந்து நிமிடம் தாமதித்திருந்தால் தலையில் விழுந்திருக்கும்.

"ராஜி...உனக்கொன்றும் ஆகலையேடி." அம்மா ஓடிவந்து அணைத்துக் கொண்டாள். தாத்தாவும் பாட்டியும் வாய்விட்டு அழுதார்கள். அடுத்த வீடுகள் உள்ளே ஓடி வந்தன. துக்கம் கேட்டன.

"இது நல்லதேயில்லை. வேண்டிக்கோடி பட்டு... இது நல்லதேயில்லை."—யாரோ மாமி சொன்னாள்.

உத்திரத்துப் பனங்கட்டை மூன்றாய் முறிந்து கிடந்தது. குறுக்கு மூங்கில்கள் பொடிப் பொடியாய் கிடந்தன.

''மழையைப் பாத்தா நடக்காது. பாத்திரங்களை எடுக்கணும். வெங்கடேஷ் வாடா.''

மாமா களத்தில் இறங்கினான். மேலே ஊறின பூச்சி பொட்டுகளைத் தட்டிவிட்டு, ஓடுகளை, கட்டைகளை விலக்கி பாத்திரம் எடுத்துக் கொடுத்தான். சொடேர் சொடேர் என்று குஞ்சும் குளுவானுமாய் நாலைந்து தேள்களை அடித்தான்.

நன்றாய் விடிந்தபோது ஸ்டவ் உள்பட எல்லா பாத்திரங்களையும் எடுத்துக் கொடுத்து விட்டான். குடம் நெளிந்து கிடந்தது. அப்பா சாப்பிடுகிற தட்டு ஒரு பக்கமாய் நசுங்கி இருந்தது. ஸ்டவ் முழுக்க மண் விழுந்து அணைந்து கிடந்தது.

மாடு நக்கிய கனா—இல்லை நிஜம்—மறந்தே போயிற்று. உடம்பு முழுக்க ஒட்டுக்கரி தூசாய் வேலை செய்கிற மாமாவைக் குற்றம் சொல்ல முடியவில்லை. கூடை கூடையாய் கொல்லையில் கொண்டு கொட்டினார்கள்.

''சுவர் நன்னாயிருக்கு அக்கா... உத்திரக் கட்டை தான் உடைஞ்சுடுத்து. சாயந்திரமே கூரை போட்டுட றேன் பாரு. ஒரு இருநூறு ரூபா கொடு.''

அம்மா, சாமி உண்டியல் உடைத்து கால் கொலுசு கழற்றிக் கொடுத்தாள்.

மூங்கில் சட்டம் போட்டுப் பின்னிய ஓலைத்தடுக் கோடு மாமா உள்ளே வந்தான். பக்கத்து வீட்டு ஏணி கடன் வாங்கி இரட்டை இரட்டையாய் போர்த்தினான். நார் போட்டு இறுக்கினான். மணிக்கயிறு போட்டு சுவரில் முளை அடித்து இறுக்கினான். அம்மாவும் ராஜியும் உள் அலம்பி விட்டார்கள். சமையலறை மறுபடி சரியாகி விட்டது.

இரவு உலையேற்ற முடிந்தது.

"நல்லவேளை மணி இருந்தான்...மறுபடி இங்க சாதம் வேகறது. இல்லைன்னா ஹால்லதான் சமையல். ஒழுகாதேடா..."

"ஒரு சொட்டு வராது."

"எத்தனை ஆச்சு?"

"மூங்கில் சட்டத்தோடு தடுக்கு முன்னூறு ரூபா!"

"ஐயோ!"

"நூறு கை காசு போட்டுருக்கேன். சரக்கு எடுக்கணும் நாளைக்கு."

"கோனேரிராஜபுரம் போய் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வரயா?"

"சாதம் போடு. சாப்டுட்டுப் போறேன்."

அக்காவும் தம்பியும் குசுகுசுவென்று சமையலறை யில் பேசிக்கொண்டார்கள். இப்போது போய் மாடு

முட்டின கனா சொல்ல முடியுமா? ஜாக்கெட்டிலிருந்து உருவின கையை சொல்ல முடியுமா?

''வெங்கடேஷ், மாமா சரியில்லை.'' ராஜி அண்ணாவை தனியே அழைத்துப் பேசினாள்.

''எனக்குத் தெரியும்.''

''என்னது?'' ராஜி திகைத்தாள். முழிச்சிண்டிருந்திருப்பானா?

''நூத்தம்பது ரூபா ஆயிருக்கு தடுக்குக்கு, முன்னூறு ரூபா எங்கடா வாங்கினன்னா உனக்கென்னங்கறான்? திருடன்...''

''அது இல்லடா.''

''தெரியும். அப்பா வரவரைக்கும் அப்படியே விட்டு வச்சா மறுபடி ஓடு போட்டு கொடுப்பார். இப்ப ஓலைக்கூரையே போறும்னுடுவார்.''

''அது இல்லடா!''

''இப்ப அவன் கோனேரிராஜபுரம் போய் கூட நூறு ரூவா வாங்கிப்பான். அதுக்கு இதுக்குன்னு அடிக்கடி போவான். நமக்கு கிடைக்கற நாலு காசும் திசை மாறும். இந்த முட்டாள்கிட்ட் கையேந்தும்படி ஆகும்.''

''அது இல்லடா·''

''அவன் போறதுக்கு முன்னே நானே கோனேரிராஜபுரம் போப்போறேன். அம்மாகிட்ட சொல்லிடு...

அண்ணா போயிட்டான் ... மாமாவை அனுப்ப வேண்டாம்னு.''

''ஐயோ! அவனை யார் போகச் சொன்னது. போடா மணி...சீக்கிரம் போ. அது எங்கயாவது யார் கிட்டயாவது தத்துபித்துன்னு உளறப்போறது.''—பத்து ரூபாய் வாங்கி மணி ஓடினபோது அம்மாவும் பெண்ணும் வாசலில் நின்றார்கள்.

''எதுக்கும்மா மணி மாமாவை வீட்ல சேர்த்தே?''

''ஏன், என்ன தப்பு?''

''ஏண்டி மாமாவ வீட்டோட கொண்டு வந்து வச்சுட்டியா...நல்லதுதானாங்கறா பக்கத்தாத்து பாட்டி.''

''அவ கிடக்கா. அவன் வயசென்ன...உன் வயசென்ன. உடம்பொறந்தான் மாதிரின்னு சொல்லு.''

''மாமா பார்க்கறதுகூட, எனக்குப் புடிக்கலை.''

''நாலு ஊர் சுத்தினவன்டீ. கூச்சமில்லாம பார்ப் பான். பேசுவான்...மனசுல ஒன்றும் கிடையாது. நீயா எதையாவது கற்பனை பண்ணிண்டு அலையாத. நமக்கு மனுஷா வேணும். இப்ப வீடு விழுந்துடுத்து. நான் போய் நிக்க முடியுமா? நீ போய் நிக்க முடியுமா? இவன்தான் போகணும். தெருக்கோடில நின்னு ஆள்விட்டு அனுப்பு. தனியா வரட்டும், அப்ப பேசுன்னு அனுப்பியிருக்கேன். இந்த சண்டாளன் எதுக்குப் போனான் தெரி யலையே.''

அண்ணாவும் மாமாவும் இரவு பத்து மணிக்குத் திரும்பினார்கள். சமையலறை விழுந்துவிட்டது...

மற்றது எப்ப வேணா விழும் என்று சொன்னானாம் மணி.

ஆறு மூட்டை அரிசியும், அம்பது ரூபாய் பணமும் கொடுத்தாராம். கும்பகோணம் நாடார் கடையில் வண்டியிலிருந்து அரிசி இறக்கி அறுநூற்று நாப்பது ரூபாய் வாங்கிக் கொண்டு வந்து விட்டானாம். கதம்ப சரம், கோதுமை அல்வா, கார பக்கோடா போக மிச்சம் என்று காசு நீட்டினான்.

''இதெல்லாம் எதுக்குடா வாங்கினே?''

''ஏதோ தோணித்து வாங்கினேன்.''

''அவ ஏதாவது சொன்னாளா?''

''யார் பார்த்தா அவளை. இனிமே காசு வாங்கற பொறுப்பு என்கிட்ட விடு. மாசா மாசம் நானே வாங்கிண்டு வரேன். அதான் அவருக்கும் சௌகரியம். எனக்கும் சௌகரியம். இலை போடு ராஜி.''

மாடு நடு ஹாலில் உடல் சிலுப்பி தலை துவட்டிக் கொண்டது. மாடு முட்டினதும் நக்கியதும் சொல்ல முடியுமா?

''நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே. அவருக்கு அங்க ஆயிரம் பிடுங்கல். ரொம்ப மனக்கஷ்டத்தோட இங்க வரார். இங்கயும் கஷ்டம் கொடுத்தா, பிரச்சினை பண்ணினா கோவம்தான் வரும். இதமா நடக்கறதுதான் நல்லது.''

இரவு படுக்கைக்குப் போகும்போது ராஜி படுக்கை தேடி நேர் எதிரே போட்டுக் கொண்டது. வெற்றிலை மென்றது.

"உம்புள்ளைகிட்ட கேளு பட்டு... நான் எப்படி பேசினேன் அத்திம்பேர்கிட்டன்னு. பொண்டாட்டிய இல்லைன்னுடலாம். என்னிக்கிருந்தாலும் இந்த மூணு குழந்தைகளுக்கும் நீர் பதில் சொல்லித்தான் ஆகணும்னு பேசினேன். சரி பாதி சொத்து கேட்டு எழுதினானாமே வெங்கடேஷ். இரண்டு வருஷம் முன்னாடி நான் வந்திருந்தா ஓசைப் படாத சொத்து பிரிச்சிருப்பேன். அவசரப் பட்டுட்டேள்."

"அம்மா, நான் உள்ள படுத்துக்கட்டுமா?"

"ம்ம் வேண்டாம். திடும்னு அத்திம்பேர் வந்தா நன்னாயிருக்காது. ஹால் விழலடி ராஜி. விழுந்தாலும் நானிருக்கேன்." புஜம் மடித்துக் காட்டியது.

இந்த முறை கத்தி ரகளை செய்வது என்று தீர்மானத்துடன் படுத்தாள்.

விடியலில் கண் அசத்த உறங்கினாள். யாரோ இறுக்கிக் கட்டிக் கொண்டார்கள். முதுகு முழுக்கப் படர்ந்தார்கள். நெஞ்சில் கை போட்டு இறுக்கினார்கள்.

"ச்சீ ...யார் அது?"

"நான்தான். த்தோ பார்... வீணா கத்தாதே. உனக்கு, உங்கம்மாவுக்கு நல்லது பண்றவன் நான். உனக்கு முறை. ஏன் தள்றே? இது நல்லதில்லை."

"எழுந்து போறயா, இல்லை கத்தட்டுமா?"

"அத்தனை திமிரா நாயே, உன்னை வழிக்கு கொண்டு வரேன் பார்!"—கறுவிவிட்டு நகர்ந்தது.

மறுநாள் கணக்குப் புத்தகத்தைக் காணோம். விழுந்து விழுந்து தேடினாள். மேஜையில் குப்புறப் படுத்துக் கொண்டு அழுதாள்.

கணக்குப் புத்தகத்தை தடேரென்று மணி போட்டான். "எதுக்குடி அழுறே? இந்த வாரத்தோட உன் படிப்பு நிக்கப் போறது. உன் கல்யாணம் பத்தி நானும் உங்கம்மாவும் இன்னிக்கி உங்கப்பாக்கிட்ட பேசப் போறோம். வீணா அழுது உடம்பைக் கெடுத்துக் காதே."

ராஜேஸ்வரி வெளிறினாள்.

"வெங்கடேஷ், மாமா என்கிட்ட தப்பா நடக்கறாண்டா. ராத்திரி தூங்கறச்சே கண்ட இடத்துல தொடறான். திட்டினா, உனக்கு அடுத்த வாரம் கல்யாணம்... இத்தோட படிப்பு க்ளோஸ்ங்கறான். வெங்கடேஷ், என்னைக் காப்பாத்துடா."

ராஜி தமையன் தோளைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

"அம்மாக்கிட்ட சொன்னயாடி?"

"இல்லை வெங்கடேஷ்."

"இன்னிக்கு எனக்கும் பாட்டிக்கும் நடுவுல படுத்துக்கோ. நான் தூங்கிட்டா ஒரு உலுக்கு உலுக்கி எழுப்பு. உதை பின்னிடறேன்... படவா!"

"கல்யாணம்கறானே..."

"நீ படிக்கணும்... வேலைக்குப் போகணும். இப்ப நடக்காது. இதுக்கு காசு ஏது? சும்மா பயமுறுத்த றான்."

"அம்மாவோட குசுகுசுன்னு பேசறானே?"

"அந்த முண்டச்சி செத்தாதான் நமக்கு விடிவு."

"பாவம்டா... அப்படி சொல்லாதே. அவளுக்கு எதுவும் தெரியாது."

"இன்னிக்கு ஏதாவது பேச்சு வரட்டும். அப்ப கட் அண்ட் ரைட்டா சொல்லிடலாம்."

"எனக்கு சப்போர்ட் பண்ணுடா."

"நான் இருக்கேன்டீ. பயப்படாதே. மூட்டைத் தூக்கியாவது, வண்டி இழுத்தாவது உன்னைக் காப்பாத்துவேன். இந்த கும்பேஸ்வரர் மேல சத்தியம்!"

சகோதரனே தகப்பனாய், குருவாய், கடவுளாய், தேவதூதனாய் ராஜேஸ்வரிக்குத் தெரிந்தான். அப்பா வுக்காக எல்லோரும் காத்திருந்தார்கள். அப்பா நுழைந்தார். சமையலறை சென்று தடுக்கு ஓலையைப் பார்த்தார். உடைந்த பனங்கட்டையைச் சோதித் தார்.

"பிரிச்சு ஒடு போட்டுடறேன் மறுபடி."

"ஆயிரம் ரூபா ஆகும்." மாமா அருகே நின்று சொன்னான்.

"இதுக்கு என்ன ஆச்சு?"

''முன்னூத்தி அம்பது.''

''கார்த்தால முன்னூறுதானே சொன்னேள்!''—ராஜி ஆத்திரத்துடன் கூவினாள்.

''கூலி சேர்க்காத, தடுக்கு மட்டும் முன்னூறு...''

''நூத்தம்பதுகூட ஆயிருக்காது. சும்மா டூப் விடறேள்.''— அண்ணா முறைத்தான்.

அப்பா இருவரையும் உற்றுப் பார்த்தார்.

''இப்ப என்ன அதுக்கு?''—கேட்டார்.

''மாமா பொய்க் கணக்கு காட்றான்!''

''நீ போய் ஒழுங்கா படி. பொய் மார்க் சொல்லாம இரு... அது போதும்.''

''காசு வந்துதா...'' அம்மாவிடம் கேட்டார்.

''ம்ம்... கொடுத்தான்.''

''எவ்வளோ?''

''அறநூத்தி சொச்சம்.''

''ஏண்டா?''

''ஈர அரிசி இப்போதைக்குப் போகாது. இதுதான் முடியும்னுட்டார் நாடார்.''

''மூடைக்கு இருபது ரூபா குறைச்சு கொடுத்துருக்கே...''

''காசாக்கணும்னு அவசரம். அவனும் மாட்டேன்னுட்டானா? இந்த கும்மோணத்துல எங்க போய் விக்கறது?''

''சரி... என்னவோ பேசனும்னியாமே பட்டு...''

''ராஜிக்கு சட்டுன்னு ஒரு கல்யாணம் பண்ணிட்டா உங்க பொறுப்புல பாதி குறைஞ்சுடும்.''

''எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்.'' ராஜி சீறினாள்.

''போடி வெளியே...!'' அப்பா கை ஓங்கிக் கொண்டு வந்தார்.

''ஒரு பேச்சு பேசறபோதே அஸ்து கொட்டறது.''

''நான் படிக்கணும்.''

''கிழிச்சே... போய் உன் வேலையப் பாரு. என்ன இப்ப திடீர்னு அவளுக்கு...''

''இங்க நின்னு பேசினா இது ஏதாவது கத்தும்... உள்ள வாங்கோ.''

அம்மா உள்ளே போனாள். அப்பா பின் தொடர்ந்தார். மாமா அறை வாசலில் நின்று கேட்டான்.

''நீ சொல்றது சரிதான் பட்டு. அங்கயும் இரண்டு பொண்கள் நிக்கறதே.''

''அவா எட்டு வேலிக்காரா... எப்படியும் கல்யாணம் நடக்கும். எனக்குன்னு என்ன இருக்கு... இடிஞ்சு விழுற வீட்டத் தவிர.''

''யாராவது பார்த்து வச்சுருக்கியா?''

''மணிக்கே கொடுத்துடலாம்னு தோன்றது. அவனும் ஆசைப்படறான்.''

'இவனுக்கா...' ராஜி அதிர்ந்தாள். முன் தலையும், காவிப்பல்லும், தொந்தியுமாய் நிற்கிற இவனா புருஷன்? விரல் நகம் சுத்தமின்றி, கால்களில் தடித்த தழும்பு களோடு இவனா புருஷன்? இதைவிட மகாமக குளத்தில் விழுந்து சாகலாம். ஊரைவிட்டு எங்கயாவது ஓடலாம்.

அப்பா தலைகுனிந்து யோசித்துக் கொண்டிருப்பது புரிந்தது.

''மணி, நீ செத்த வெளிய இரு.''

''இருவது ரூபா கொடுங்க அத்திம்பேர், போறும். இதே கடையை காவிரி பாலத்தடில வச்சுடறேன். இருநூறு ரூவா பிஸினஸ் ஆகும். அங்க சத்திரம் இடிச்சு கடையா கட்றா. பஞ்சாயத்துல ஒரு வார்த்தை சொன்னேள்னா இடம் கிடைக்கும். எனக்கு செட்டில் ஆகணும்னு ஆசை அத்திம்பேர். பட்டுக்குத் துணையா கடைசி வரைக்கும் இருப்பேன்.''

''நீ செத்த வாசல்ல இரு.''

மணி தலையாட்டிவிட்டுப் போனான்.

''இவன் தலைல எதுக்குடி குழந்தையைக் கட்டற? பைத்தியமா உனக்கு.''

ராஜி வயிற்றில் பால்குடம் சரிந்தது.

"எனக்குத் துணை வேண்டாமா? எத்தனை நாள் உங்களை இழுத்துப் புடிச்சு நிறுத்த முடியும்... எனக்கு வயசாகலையா?"

"நான் எங்கடி போறேன்?"

"எங்க வேணா போவேள். வராதவே இருந்துருவேள். நான் கேட்க முடியுமா? கோனேரிராஜபுரம் வர முடியுமா?"

"எதுக்கு?"

"நீங்களும் நானும் திடமா இருக்கறச்சையே இதை முடிச்சுடறது நல்லதில்லையா?"

"வேண்டாம்... அவ படிக்கட்டும்."

"உங்களுக்கு மனசில்லை. இருவது ரூபா கொடுக்க இஷ்டமில்லை. இஷ்டமில்லை என்ன... வக்கு இல்லை. இரும்பு சாவி அவகிட்ட இருக்கு. இருநூறு முன்னூறு திருட்டுத்தனமா வரது. இருபதாயிரம் எப்படி திருடறதுன்னு யோசிக்கறேள்."

"ஆமா...வக்கில்லை. என்ன பண்ணப் போறே இப்போ?"

"சாகறேன். ஆத்துலியோ குளத்துலியோ விழுந்து சாகறேன்."

"எதுக்குடி கத்தறே. இப்ப என்ன அவ கல்யாணத்துக்கு அவசரம். ஸ்கூல் ஃபைனல் முடிக்கட்டும்."

"அதுவரைக்கும் இந்த குடித்தனம் இருக்குமோ, இல்லை எழவுன்னு போயிடுமோ... யார் கண்டா?"

"நீ எழவா போயிடலாம். என் குழந்தைகளுக்கு நான் எதாவது பண்ணுவேன்... நிச்சயம் பண்ணுவேன்."

"இன்னி தேதிக்கு என்ன பண்ணியிருக்கேள். ஒத்தவடம் சங்கிலி உண்டா... காது மூக்குக்குப் பொட்டுத் தங்கம் உண்டா?"

"டேய் மணி... போய் ஒரு வண்டி புடிச்சுண்டு வா."

மணி மாட்டுவண்டிக்கு ஓடினான்.

"ஏன், போணுமா?"

"எங்கம்மாவோட நகை ஏதோ பொட்டில இருக்கு. குழந்தைக்குன்னு கொண்டு வரேன் .. இப்போதைக்கு கல்யாணப்பேச்சை விடு."

"இருந்துட்டு நாளைக்குப் போறது... எங்க போறது நகை?"

"என்னமோ மனசு சரியில்லை. நாளைக்கு வரேன். ராஜி..." அப்பா கூப்பிட்டார்.

"நீ படி... கவலைப்படாம படி... படிச்சு பாஸ் பண்ணு."

"மணி மாமா?"

"அவன் கிடக்கான் அனாதப்பய!"

"தப்பா நடக்கறாம்ப்பா ராஜிகிட்ட..."

"நினைச்சேன்... நீ உள்ள படுத்துக்கோ. கதவத் தாழ் போட்டுரு."

அது நல்ல நேரம். இத்தனை நாள் கழித்து இன்று விடிமோக்ஷம்.

வண்டி வந்தது.

"வண்டில ஏறுடா." மணியைப் பார்த்துச் சீறினார்.

அரைமணியில் மணி மட்டும் திரும்பினான். அப்பா கன்னத்தில் அறைந்திருப்பார் போலிருக்கிறது. கண்கள் சிவந்து கலங்கியிருந்தன. உள்ளே போய் தகரப் பெட்டியை எடுத்துக் கொண்டான். கொடியில் கிடந்த துணிகளை ஈரத்தோடு சுருட்டி உள்ளே வைத்தான்.

"அக்கா, அத்திம்பேர் அனாவஸ்யமா எம்மேல சந்தேகப்படறார்... அவரோட கையாலாகாத்தனத்தை மறைக்க என்னை அனாவஸ்யமா கத்தி அடிக்கறார். ஒண்ணு நிச்சயம்... இன்னும் ஒரு வருஷம், அதுக்கு மேல உன்னை சீண்டமாட்டார். அங்க சகலமும் ஆட்டம் கண்டு போச்சு. நிலம் விக்க ஆரம்பிச்சுட்டா. நீ முழிச்சுக்கோ. அப்புறம் இன்னொரு ரகசியம்... ராஜிக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்கறாரேன்னோ... அங்க இரண்டு பொண்களுக்கும் ஒரே மாசத்துல கல்யாணம் நடக்கறதுக்கு ஏற்பாடு நடந்துண்டிருக்கு. மாப்பிள்ளை இரண்டும் பட்டணம். எண்பதாயிரம் கைல ரொக்கம்னு பேச்சு. நான் உசுப்பிவிடறேனாம். உசுப்பி விட்டாலும் உனக்கு சீறத் தெரியாது. நீ செத்த பாம்பு... எப்படியோ போ..."

மாடு போகும் போது 'ணங்' என்று நிலைப்படியில் தலையை இடித்துக் கொண்டு போயிற்று.

•

ராஜியை அன்று இரவும் மாடு மடக்கியது. நாக்கால் நெஞ்சு நக்கியது. இரண்டு முழங்காலையும் தூக்கி சுவரோடு அழுத்தி...

'ஐயோ' என்று எழ... வெங்கடேஷ் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

''என்னடி...''

''ஏதோ கனா...''

''பயப்படாத, நான் இருக்கேன்... தூங்கு.''

மாடு போய்விட்டது. வரவேயில்லை. ஆனால் அது முட்டின தழும்பு மட்டும் நெடுநாள் இருந்தது. கிள்ளக் கிள்ள ரணம் அதிகமாயிற்று. மணி மாமா தொட்ட தோடு விட்டிருக்க வேண்டும். நல்லவேளை ஒழிந்தது சனி என்று மனசு அமைதியாகியிருக்க வேண்டும்.

ஆண்—மாடு என்றால், பெண்—குரங்கு. பயந்த குரங்கு. ஒருமுறை சுள்ளென்று அடி வாங்கிவிட்ட குரங்கு. காற்றுக்குக் கிளை அசைந்தாலும் தன்னை நோக்கித்தான் பாம்பு வருகிறதோ என்று பயப்படும். கிளைவிட்டு கிளை தாவும். கீச்சு கீச்சென்று கத்தும். அனாவஸ்யமாய் கத்தி, இருக்கும் இடம் காட்டும். குரங்கு இருக்கிறது என்று தெரிந்த பிறகுவேடிக்கை பார்க்க கும்பல் கூடும். வேடிக்கை கும்பலைக் கண்டு மேலும் அலையும். பெண் மனசு குரங்கு. பயந்த

குரங்கு. மனசு, 'சரி என்னமோ நடந்தது போ' என்று விட்டு விடாது. மற என்று கட்டளையிட்டு மறக்காது. மறுபடி மறுபடி நினைவு கூறும்.

மணி மாமா ஏன் மார்ல கை வச்சா...லேடீஸ் களுடைய மார்பு ஜென்ட்ஸுக்கு ரொம்ப புடிக்குமா? நிறைய பேர் ஓரக் கண்ணால அதுதான் பார்க்கறா. ஏன் இழுத்துப் போர்த்திண்டாலும் உத்துப் பார்க்கறா. ஏன்... அம்மாகூட... அம்மாகூட...

தலையைக் கோதி தாய் சொல்லித்தர வேண்டிய பருவகால கேள்விகளைத் தானே கேட்டுக் கொண்டு அலைந்தது.

சினிமா போஸ்டரில் ஜோதிலட்சுமி மார்பு மீது 'ஐ லவ் யூ' என்று பென்சிலில் எழுதியிருந்தது. எதை லவ் யூ...மார்பையா, மனுஷியையா? கன்னத்தில் எழுத வில்லை. படத்தில் எழுதவில்லை. பொங்கின மார்பு களில் எழுதியிருந்தது. அப்பா...ஜோதிலட்சுமிக்கு என்ன ஷேப்! எனக்கும் அப்படி வருமா? அப்படி வந்ததால் தான் சினிமாவில் நடிக்கிறாளா...சினிமாவில் நடிப்பதால் அப்படி காட்டுகிறாளா? நெய்யா...தொன்னையா...எது எதற்கு ஆதாரம்?

மணி டாக்கீஸில் இன்டர்வெல் முடிந்து ஒரு இங்கிலீஷ் பட ட்ரைலர் காட்டினார்கள்...சாம்சன் டிலைலா. சாம்சன் மிருகம் மாதிரி இருந்தான். ஆனால் நல்லவனாய் இருந்தான். இடுப்பில் துண்டு மட்டும் கட்டிக் கொண்டிருந்தான். குறுந்தாடியுடன் கரளை கரளையான தோள்களுடன் இரும்புச்சட்டம் போல மார்புடன் பிரம்மாண்டமாய் இருந்தான். உடம்புதான்

முரடே தவிர, கண்களும், பேச்சும் மிருதுவாய் இருந்தன. டிலைலா கொள்ளை அழகு. பொன்முடி—உரித்த வாதுமை நிறம்—அவளுக்கும் பொங்கின மார்பு. சட்டென்று இழுத்து டிலைலாவை சாம்சன் உதட்டோடு, உதடு பொருத்திக் கொண்டதும் தியேட்டரில் விசில் பறந்தது. சின்னப் பையன்கூட துள்ளிக் குதித்தார்கள்.

...ச்சீ என்ன இது...இரண்டு பெரிய ஐஸ்கட்டி களுக்குள் ராஜேஸ்வரியை அழுத்தி நசுக்கின மாதிரி ஒரு சிலிர்ப்பை ராஜி உணர்ந்தாள். வாய் பொத்தி வெட்கப் பட்டாள். உடம்பு பரபரத்துப் போயிற்று. ச்சீசீ என்று அடிக்கடி சொன்னாள். ட்ரைலர் முடிய ஜனம் மறந்து விட்டு கற்புடைய தமிழ்ப்படத்து மீதியைப் பார்த்தது. ராஜியால் மறக்க முடியவில்லை. யங் லேடீஸ்னாலே ஜென்ட்ஸுக்குப் புடிக்கும் என்கிற உண்மை புரிந்தது.

மழை நின்று விட்டது...தீபாவளிக்கு இரண்டு வாரங்கள் முன்பே மழை நின்று விட்டது. சுள்ளென்று பகல் முழுவதும் வெயில். இரவு ஒரு ஊதற்காற்று. அப்பா தன் பெயரில் உள்ள பெரிய மாந்தோப்பை வெற்றிலைக் கொடிக்கால் வைத்திருக்கும் முஸ்லீம் குடும்பத்தினருக்கு விற்று விட்டு நேரே பணத்தோடு அம்மாவிடம் வந்தார்.

''இந்தா, இது உன் காசு, எனக்கு ஒண்ணும் பண்ணலை...எனக்கு ஒண்ணும் பண்ணலைன்னு இனிமே சொல்லாதே.''

'கற்றைக் கற்றையாக நோட்டு பார்த்தது அப்போதுதான். பேங்கில் காசு போட்டு அம்மா பெயருக்கு செக் புக் வந்தது.

அம்மா நிலைகொள்ளாமல் தவித்தாள். யார்

வீட்டுக்கும் போகாதவள் அடிக்கடி போனாள். தீபாவளிக்குப் பட்டு வாங்கிக் கொள்ளட்டுமா என்று கேட்டாள். மாசா மாசம் பட்டுப்புடவை வாங்கும் ஒரு மாமியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போய் அறுநூறு ரூபாய்க்கு நாலு விரல்கடை சரிகையோடு மயில்கழுத்துப் புடவையும், ராஜிக்கு இன்னும் அகல பார்டரில் பாவாடையும் வாங்கினாள்.

மஞ்சள் பட்டு ஊதா பார்டர்—ஊதா தாவணி—மஞ்சள் ரவிக்கை டைலரிடமிருந்து பாவாடை வாங்கி உடுத்திக் கொண்டு பார்த்தபோது சொடேரென்று இருந்தது. உடுத்தினால்தான் மனுஷா அழகு என்று தோன்றிற்று. பன்னிரண்டு ரூபாய்க்கு ஜிமிக்கி, இருபது ரூபாய்க்கு மாட்டல் என்று கவரிங் வாங்கிப் போட்டுக் கொள்ள, முகம் பூரிப்பாயிற்று.

மனசுதான் உடம்பு. மனசு சந்தோஷமாக, உடம்பு தானாய் கூடும். வளம் காட்டும். கொஞ்சம் காசு வீடு பார்க்க உணவு வகைகள் பெருகின. உண்டதில் குதூகலம் வர, உடம்பில் உரம் ஏறிற்று. கன்னத்தில் சிறிய சிகப்பு படர, தோல் நிறத்தில் பளபளப்பு ஏற, இடையும், பிருஷ்டமும், தோள் சரிவும், மாரும் கிண்ணென்று ஆயிற்று. எதிர்கால நம்பிக்கையை காசு தர, பேச்சில் துள்ளல் வந்தது. நடையில் சந்தோஷம் தெரிந்தது.

முழங்கால் வரைக்கும் பாவாடை ஏற்றி நாப்பது ரூபாய் கொலுசு சப்தமிட, பக்கெட் துணிகளை முற்றத்தில் உதறி உயரக் கை உயர்த்திக் கொடியில் உலர்த்தும் போது,

''வெங்கடேஷ்'' என்று வாசலில் கேட்டது.

“யாரது?” எட்டிப் பார்த்தாள். நாலைந்து வாலிபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். வெங்கடேஷை விடப் பெரியவர்களாய் இருந்தார்கள்.

சட்டென்று பாவாடையை தழையவிட்டு தாவணியை இழுத்துக் கொண்டாள். இளைஞர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“வெங்கடேஷ் இல்லையே...”

“உங்க அப்பா?”

“இல்லை.”

“உங்க அம்மா?”

“கடைக்குப் போயிருக்காங்க. என்ன விஷயம்?”

“வாசல்ல கடை இருக்குதுல்ல...”

“ம்ம்...”

“காலிதானே?”

“ம்ம்...”

“சிவகாசிலேர்ந்து தீபாவளிக்குன்னு பட்டாசு தருவிக்கிறோம். நாங்க நாலு பேர் பார்ட்னர்ஸ். இந்தக் கடை கார்த்திகை தீபம் வரைக்கும் வாடகைக்குக் கொடுத்தீங்கன்னா நல்லா இருக்கும்.”

“சாயந்திரம் அப்பா வருவாரா...”

"உங்க பேருதான் ராஜியா?"—நடுவே நின்று முதன் முதலில் குரல் கொடுத்தவன் கேட்டான்.

"ம்ம்..."

"எம் பேர் ராஜசேகரன். வரதராஜ முதலியார் பையன். டபீர் தெருவுல இருக்கோம்."

"பண்ணை..."

"ஆமாங்க பண்ணை வரதராஜ முதலியார்..."

"உட்காருங்க."

"இல்லீங்க. உங்க அப்பா வந்தவுடனே சொல்லுங்க, நான் வந்தேன்னு. இதுக்கு முன்னாடி கடை போட்டிருந்தவரு என்ன வாடகை கொடுத்தாருங்க?"

"தெரியலை!"

"லேடீஸை ஏம்ப்பா தொந்தரவு பண்றே?"

"இவங்களை தெரியும் ப்ரதர். டவுன் ஸ்கூல்ல ப்ளஸ் ஒன் படிக்கறாங்க. தினம் நம்ம கடை தாண்டி போவாங்க."

ராஜி வியந்தாள். இவர்கள் எல்லோரும் என்னை கவனிக்கிறார்களா?

"வாசல்ல நிக்கறேங்க. உங்க ஃபாதர் வந்தா பார்த்து பேசிட்டு போயிடறம்." இறங்கி வெளியே போனார்கள். வெளியே போய் ராஜசேகரன் ரேழியின்

கம்பிக் கதவைச் சாத்திக் கொண்டான். சாத்தும் போது கூர்மையாய் ராஜியைப் பார்த்தான். புன்முறுவல் செய்தான்.

ராஜி சட்டென்று உள்ளே பதுங்கிக் கொண்டாள்.

"உலகத்துலியே பெரிய மிருகம் எது கண்ணா?"— ராஜசேகரன் கேட்டான்.

"யானை."

"கரெக்ட்."

"யானையைவிட பெரிய மிருகம் எது?"

"ஒட்டைச்சிவிங்கி."

"இல்லை. தப்பு."

ராஜியும் யோசித்தாள்.

"தெரியலையே..." பதில் சொன்னவன் விழித்தான்.

"இன்னொரு யானை."

'ஓஹோ' என்று சிரித்தார்கள்.

ராஜியும் சிரித்தாள். ஜன்னலுக்குப் பின்னாலிருந்து வாய் பொத்தி சப்தம் கேட்காதவாறு சிரித்தாள்.

ஜன்னல் வழியே கடை தெரிந்தது. திறந்த கடை வழியே அந்தப் பையன்கள் தெரிந்தார்கள்.

"பாலசந்தர் படத்துல குதிரை பின்னாடி போகும். கமல் ஓட்டிட்டு போவார். எப்படி அது?" யாரோ வியந்தார்கள்.

"குதிரையை கமல் ரிவர்ஸ்ல ஓட்டறான்டா. ப்ராக் டிஸ்ல வரும்." யாரோ பதில் சொன்னார்கள்.

"இல்லை."—ராஜசேகர் மறுத்தான்.

கூட்டம் அமைதியாய் இருந்தது.

"குதிரையை கமல் முன்னாலதான் ஓட்டிட்டுப் போவாரு. காமிரா நார்மலா ஷூட் செய்யும். ப்ரிண்ட் போடறபோது ரிவர்ஸ்ல போடுவாங்க."

"புரியலை, ராஜசேகர்."

"ஃப்ரேம்—ஃப்ரேமா ஃபிலிம் வருதா. கட்டம் கட்டமா வருதில்லை ஃபிலிம். அதுல கடைசி கட்டத்தை முதல் கட்டமா பிரிண்ட் போட்டு, முதல் கட்டத்தை கடைசியா பிரிண்ட் போட்டுக் காட்டினா ரிவர்ஸ் வரும்."

"புரியலை. பிரிண்ட்ன்னா என்னா?"

"காமிரால ஓடற ஃபிலிம், ரா ஃபிலிம். பச்சை மண்ணு."

"சரி. புரியுது."

"அதைக் கழுவினா நெகடிவ்."

"நெகடிவ்லேர்ந்து நாம கேமிரா ஃபிலிமை எடுத்து போட்டோ போடற மாதிரி பிரிண்ட்னு இன்னொரு

ஃபிலிம் எடுப்பாங்க. அதான் நாம தியேட்டர்ல பார்க்கறது. அப்படி பிரிண்ட் போடச் சொல்ல..."

"புரியுதுடா."

"டெக்னிக்கலா எப்படிடா பேசற?"

"படிச்சதுதான்."

"எதுல?"

"ஒரு இங்கிலீஷ் புக்குல."

"நீ எம். ஏ. இங்கிலீஷ். புரியுது. எனக்கு ஒரு புக்கும் புரியமாட்டேங்குதே..."

"உனக்குத் தமிழ்ல எழுதின இன்ப ரகஸ்யமே விளங்கலை. டவுட் கேட்கற..."

வாய்விட்டுச் சிரித்தார்கள்.

ராஜியும் சிரித்தாள். இன்ப ரகஸ்யம் என்றால் என்ன...பையன்கள் என்னென்ன பேசுகிறார்கள்... பசங்கன்னாலே ஒரு ஜாலி செட்டப். எவ்வளவு சந்தோஷமாய் நடுரோடில் வாய்விட்டு சிரிக்கிறார்கள். எந்தப் பெண் க்ரூப்பும் இப்படி சிரிப்பதில்லை. வாய் பொத்திய கிக்கிலிப்புதான்...புடவைத் தலைப்பைப் பொத்திய பேச்சுதான்...

அப்பா மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார்.

பையன்கள் கை கூப்பினார்கள்.

அப்பா புருவம் தூக்கினார்.

"நான் பண்ணை வரதராஜ முதலியார் பையனுங்க. பேரு ராஜசேகர்."

"அடட...வா...என்ன சமாசாரம்?"

"கடை விஷயமா பேச வந்தோங்க."

"உள்ள வாங்கோ."

பையன்கள் உள்ளே நுழைந்தார்கள். அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள். எல்லா கண்களும் ஆவலாய் அவளைத் தேடுவதை உணர்ந்தாள். உள்ளே சிரிப்பு பொங்கிற்று...

"உட்காருங்கோ."

"பரவாயில்லை சார்..."

"உட்காருப்பா...அப்பா எப்படி இருக்கார்?"

"நல்லா இருக்காருங்க."

"நிலம் வாங்கிக்கிட்டே இருக்காரே..."

"அது பொழுதுபோக்காயிடுச்சுங்க அவருக்கு. பாங்க்ல கடன் வாங்கியாவது நிலம் வாங்கிடறாரு!"

"நல்லதுதானே...சொல்லு?"

"நானும் பாங்க்ல கடன் கேட்டுருக்கேன்."

"அடி சக்கை...எதுக்கு?"

"பட்டாஸ் கடை போடலாம்னு இருக்கோம். தீபாவளி வருது."

"குட்!"

"ஏழாயிரம் முதல் போடறேங்க. இவங்க மூணு பேரும் ஆயிரம் போடறாங்க. நாலு பேரா சேர்ந்து நேரா சிவகாசி போய் பட்டாஸ் பிடிச்சு கும்மோணம் கொண்டாந்து கடை போடப் போறேன்."

"ஏன் திடீர்னு..."

"ஒரு கோவம்தாங்க."

"யார் மேல?"

"போனதடவை நாடார் நனைஞ்ச பட்டாசு வித்து கொள்ளை லாபம் அடிச்சாருங்க. பொறுக்கலை, சரக்கு சுத்தமில்லை. விலையும் கூட. அதான் நாமே விக்கலாம்னு ஒரு கோவத்தோட..."

"முதலியார் புள்ளையா கொக்கா!"

"நாளைக்கு சிவகாசி போறம்."

"நான் என்ன செய்யணும்?"

"இந்த வாசல் கடையை ஒரு மாசம் வாடகைக்குத் தரணும். கார்த்திகை வரைக்கும் வேணும்."

"எடுத்துக்கோ. என்ன விலைக்கு விப்பே?"

''ஒண்ணரை விலைக்கு வித்தா அஞ்சாயிரம் லாபங்க. நாடார் மூணு விலைக்கு விக்கறாரு. அதுவும் நமுத்த பட்டாசு. வாடகை எவ்வளவுங்க?''

''முதலியார் புள்ளைக்கு வாடகையா... அப்புறம் உங்கப்பனுக்கு யார் பதில் சொல்றது? ஆனா பட்டாஸ் சமாசாரம். லைசென்ஸ் வாங்கிட்டியோ?''

''இவங்க அப்பா டெபுடி தாசில்தார். ஏற்பாடு பண்ணிட்டோம்.''

''முதல்ல அதப் பண்ணு.''

''நாளைக்கு வருமுங்க லைசென்ஸ்.''

''குட். லைசென்ஸ் காட்டு. ஒருவேளை தீப்புடிச்சு துன்னு வச்சுக்கோ. புடிக்காது, சேதாரத்துக்கு நீ பொறுப்புன்னு ஒரு கையெழுத்துப் போடு. வாடகை வேண்டாம்.''

''ஐயோ வாடகை தந்துடறேங்க.''

''பட்டாசா கொடு.''

''நல்லதுங்க. எழுதிடுங்க நீங்களே... நாங்க கையெழுத்துப் போடறோம்.''

அப்பா எழுதினார்.

நால்வரும் படிக்காது கையெழுத்திட்டார்கள். ''படிக்கத் தெரியுமோன்னோ எல்லாருக்கும்? மட மடன்னு படிக்காத கையெழுத்துப் போடறேள்!''

"பேப்பரு எதுக்கங்க. சொல் போதும். இதுல சொத்தா எழுதி வாங்கிவிடுவீங்க? நாங்க உங்களை நம்பறோம்."

"அடேங்கப்பா. தூள் கிளப்பிடுங்கோ. உம் பேர் என்ன சொன்னே?"

"ராஜசேகர்."

"உங்கப்பாவுக்குத் தெரியுமா கடை சமாசாரம்?"

"தெரியுங்க. பர்மிஷன் கேட்டுட்டேன். அவருதான் பாங்க்ல ஷ்யூரிடி போட்டாரு."

"தயார் பண்றாரா உன்னை..."

"அதெல்லாமில்லீங்க. இது சின்ன வியாபாரம்."

பத்தாயிரம் சரக்கு... பெரிய பெரிய பண்டிலாய் வந்து கடையில் இறங்கியது. முன்னே தடுக்குப் பந்தல். நாலு டியூப் லைட். பந்தல் போட்டது அத்தனையும் பையன்கள். பண்டில் பிரித்து அடுக்கி பலகையில் துணி போட்டு பரப்பி வியாபாரம் கவனித்து பொட்டலம் கட்டி கணக்குப் போட்டு காசு எண்ணி வியாபாரம் பொறி பறந்தது.

அந்த விலைக்குப் பட்டாசு சிவகாசியில் கூடக் கிடைக்காதாம். சுத்து பத்து அக்ரஹாரம் எல்லாம் வாங்கியது. தீபாவளிக்கு நான்கு நாட்கள் முன்பு மொத்த சரக்கும் தீரும் நிலைமை. இரவோடு இரவாக லாரி பிடித்து ராஜசேகர் கிளம்பினான்.

மறுநாள் கடையில் பையன்கள் மட்டும் உட்கார்ந்து வருவோர் போவோருக்கெல்லாம் இல்லை இல்லை என்று கை விரித்தார்கள். ராத்திரி லாரில சரக்கு வரது என்று உறுதி கூறினார்கள்.

அன்று ராத்திரி முழுவதும் ராஜசேகர் வரவில்லை. பையன்கள் தவித்தார்கள். போனார்கள். பதினோரு மணிக்கு ராஜி பெயருக்கு டெலிகிராம் வந்தது. நல்ல வேளை அப்பா இல்லை. ராஜி பயத்துடன் கையெழுத் திட்டு பிரித்தாள்.

போய் இருபதாயிரம் சரக்குடன் கிளம்பி விட்டேன். லாரி வாடகை நானூறு ஏற்பாடு செய்யவும்— ராஜசேகர்.

ராஜிக்குப் புரியவில்லை.

பையன்களிடம் நீட்டினாள். 'ஹோ'என்று கூச்சலிட் டார்கள். 'எல்லா காசும் எடுத்துட்டுப் போயிட்டான். லாரி வாடகை எப்படி...' என்று திகைத்தார்கள். அம்மா 'நான் தரேன், அப்புறமா கொடுங்கோ' என்றாள். காலில் விழாத குறையாய் நமஸ்கரித்தார்கள்.

'ஏன் டெலிகிராம்... எங்கிருந்து, எதற்கு வந்தது?' ராஜி விழித்தாள்.

விடியற்காலை நாலு மணிக்கு லாரி வந்தது. ராஜசேகரன் தள்ளாடி இறங்கினான். தூக்கமேயில்லை யாம். பையன்கள் சரக்கு இறக்க ரேழியில் மணைக் கட்டை வைத்து தூங்கினான். கடையில் சரக்கு வைக்க இடமில்லை. ரேழியில் அடுக்கினார்கள். ஹாலில் வைத்தார்கள்.

பத்து மணிக்கு ராஜசேகர் எழுந்தான். காப்பி கேட்டான். ராஜி போட்டுக் கொடுத்தாள்.

"ஏன், என் பேருக்கு டெலிகிராம்..." மெள்ள கேட்டாள்.

"ஸாரிங்க. உங்கப்பா பேரு மறந்துட்டேன். பசங்க பேருக்கு டெலிகிராம் கொடுக்க பயம்... இவனுங்க கடைல இல்லைனு டெலிவரி பண்ணாத போயிடுவானோன்னு. உங்க பேரு ஞாபகம் இருந்தது. எப்படியும் பசங்ககிட்ட சேர்த்துருவீங்கன்னு ஒரு நம்பிக்கை. ஸாரிங்க."

"அதனாலென்ன... பரவாயில்லை." ராஜிக்கு உள்ளே இனம் புரியா சந்தோஷம் கிளை விட்டது.

பாதி சரக்கு மாயவரம் பார்ட்டி எடுத்துக் கொண்டு போயிற்று. மீதி தீபாவளி முதல் நாள் மாலை வரை விற்றது.

பட்டாசு வாடகையா தரேன்னானே. என்ன பண்ணுவான். சுத்தமா கடை துடைச்சு வச்சுருக்கே...

மாலை ஆறு மணிக்கு பெரிய பண்டிலோடு ராஜசேகர் உள்ளே வந்தான்.

"அப்பா இல்லீங்களா?"

"இல்லை, வருவார்."

"இது வாடகை இல்லீங்க. என் காணிக்கை."

அவள் காலடியில் பண்டிலை வைத்து விட்டுப் போனான்.

ராஜிக்கு கிறுகிறுத்தது.

பையன்கள் கடை பூட்டிப்போன பிறகு அப்பா வந்தார்.

"என்னம்மா இது..."

"ராஜசேகர் கொடுத்தார். கடை வாடகையாம்." காணிக்கை என்று அவன் சொன்னதைச் சொல்ல வில்லை. வெட்கமாய் இருந்தது.

"இடுப்பு உயர பண்டிலாய் இருக்கே. பிரி."

பிரித்தாள். வெங்கடேஷ் தனித்தனியாய் அடுக் கினான்.

இருநூறு ரூபாய் சரக்கு...கும்மோணம் நாடார் விலைக்கு தாராளமாய் நானூறு ரூபாய் சரக்கு. சரவெடி யும், புஸ்வாணமும், பெரிய கம்பி மத்தாப்பும் ராக்கெட்டு களும்...

"ம்ம்...ஜமாய். உள்ள கடைல சரக்கு இல்லையே..."

"சுத்தமா வித்துடுத்துப்பா."

"கெட்டிக்காரப் பசங்க. வெங்கடேஷ், நீ எப்ப கத்துக்கப் போற இதெல்லாம்?"

"அவன் எம்.ஏ. படிக்கறான். வாங்கமுடியும், விக்கமுடியும். நான் பி. ஏ. முதல் வருஷம் தான்."

''வியாபாரத்துக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லைடா. அதுக்கு ஒரு சுழி வேணும்.''

அப்பா தீபாவளிக்குத் தங்கின சந்தோஷம். பட்டுப் பாவாடை சந்தோஷம், ஜிமிக்கி சந்தோஷம், மாட்டல் சந்தோஷம், ஓசி சரவெடி சந்தோஷம்–தீபாவளி சந்தோஷம்...

தெரு திமிலோகப்பட்டது.

ஆறு பாட்டிலில் ராக்கெட் வைத்து மடமடவென்று வெங்கடேஷ் கொளுத்தி விட்டுவர ஒன்றன்பின் ஒன்றாய் வானம் நோக்கி சீறி கும்பகோணம் பட்டமங்கலத் தெருவையே ஒளியில் நனைத்தது. அம்மா கோதுமை அல்வா கிளறியிருந்தாள். சுள்ளென்று காரத்தோடு மிக்ஸர் பண்ணியிருந்தாள்.

''ராஜி, உனக்குப் பட்டுப் பாவாடை நன்னாயிருக்கு. நன்னா வளர்ந்துட்டே இல்லையா. புஸ்வாணம் வெளிச் சத்துல டாலடிக்கற.'' —எதிர்வீட்டு மாமி சொல்ல, பெருமை பொங்கிற்று. அடுத்த தெரு வாண்டுகள் எல்லாம் இவள் வீட்டைச் சுற்றி நின்று பட்டாஸ் வெடிப் பதை வேடிக்கைப் பார்த்தனர்.

நீண்ட சரவெடி. ஆயிரம் வெடி கோர்த்த சீனவெடி பற்ற வைத்து வெங்கடேஷ் பதற்றமாய் ஓடி வந்து ராஜி கை கம்பி மத்தாப்பில் இடித்துக் கொண்டான். கம்பி பட்டென்று உடைந்து கீழே விழ, ராஜியின் இடது கால் பாவாடை, விரல் நுனி க்ஷண நேரம் நெருப்பு முத்தமிட்டு மேல் தோல் பொசுங்கியது.

ராஜி வீறிட்டாள்.

கால் உதறினாள்.

அம்மாவும் அப்பாவும் வாசலுக்கு ஓடிவர,கால் தூக்கி நொண்டினாள்.

''காட்டுடி...காட்டுடி...''

சின்ன காயம்தான். பட்டாசு சுட்ட எரிச்சல், கண்ணில் ஜலம் வரவழைத்து விட்டது. அப்பா பேனா திறந்து அப்படியே இங்க் ஊற்றினார். பட்டுப்பாவாடை நுனி கறையாகியது.

''ஒன்றுமில்லடி...திருஷ்டி. மாட்டலும், ஜிமிக்கியும், பட்டுப் பாவாடையுமா வளைய வரயோன்னோ... எனக்கே என் பொண்ணு என்ன அழகுன்னு தோணித்து. சுத்துப்பட்டவாளுக்குத் தோணாத இருக்குமா? எந்த கொள்ளிக்கண்ணு பட்டதோ...போதும் பட்டாசு...வா.''

பலபலவென்று விடிகிறவரை ராஜி பட்டாசு வேடிக்கைப் பார்த்தாள். நாலு வீடுகளுக்குப் போய் பட்சணம் கொடுத்துவிட்டு வந்தாள்.

''என்னடி...நொண்டற?''

''பட்டாசு சுட்டுடுத்து மாமி.'' பாவாடை இங்க் கறை தெரியாதவாறு பின்பக்கம் வைத்துக் கட்டிக் கொண்டாள். இட்லியும் கொத்ஸூம் தேங்காய் சட்னியும் சாப்பிட்டு கையலம்பின வேளை ராஜசேகர் வந்தான்.

''அப்பா இருக்காங்களா...'' என்று ரேழியில் நின்று கேட்டான்.

"வாங்கோ... அப்பா இருக்கா."—ராஜி வரவேற்றாள்.

"வணக்கம்ங்க. தீபாவளி ஆச்சா? ஸாரி, கங்கா ஸ்நானம் ஆச்சா?"

"வாய்யா முதலியாரே, எல்லாம் ஆச்சு. வியாபாரம் தூள் கிளப்பிட்ட போலிருக்கே."

"உங்க ஆசீர்வாதம் சார்."

"ஏகத்துக்கு வாங்கி எல்லாத்தையும் வித்துட்டியே... வெரிகுட்."

"இட ராசிங்க இது."

"என்னத்த ராசி. இதுக்கு முன்னாடி இருந்தவனெல் லாம் அட்ரஸ் காணோம்."

"நாமளும் உழைக்கணுமில்ல..."

"அதச் சொல்லு. நாப்பது வேலி நிலத்துக்குச் சொந்தக்காரன் நீ. வரதராஜ முதலியார் முதல் பையன், தோள்ல மூட்டை தூக்கிண்டு வந்தியாமே...வெங்கடேஷ் சொன்னான். டிகனிடி பார்க்காத வேலை செஞ்சுருக்க..."

"இறங்காத வரைக்கும் டிக்னிடிதாங்க. இறங்கிட்டா நான் லேபர்."

"அடடா...என்ன தேறித்து?"

"ஒத்தைக்கு ரெட்டை லாபங்க. இந்தாங்க கணக்கு."

நோட்டுப்புத்தகம் நீட்டினான். அப்பா மேலோட்ட மாப் பார்த்தார்.

"ம்ம்...செலவெல்லாம் போக நைன்டி பர்ஸண்ட் நிக்கும்."

"ஆமா சார்."

"வெரிகுட். கீப் இட் அப்."

"இது வாடகைங்க." —கவர் நீட்டினான்.

"அதான் பட்டாஸ் கொடுத்துட்டியே!"

"அப்பாக்கிட்ட சொன்னேன். கண்டமேனிக்குத் திட்டிட்டாருங்க."

"எதுக்குத் திட்டறது?"

"அவரு மாட்டேன்னா கொடுக்காத விட்டுடறதான் னாரு. பட்டாஸூ கொடுத்துட்டேன்னேன். அது நன்றிடா. வாடகை கொடுன்னாரு. வாடகை வச்சிருக் கேன்."

"எவ்வளோ?"

"நானூறு."

"சரி. மாமிக்கிட்ட கொடு. வாங்கிக்க பட்டு."

நூத்தம்பது வாடகையே வராத இடத்துக்கு நானூறு வாடகை. அம்மாவின் முகத்தை பிரகாச மாக்கியது. கவர் பிரித்து எண்ணினாள்.

''ஐயோ'' என்று கூவினாள்.

''என்ன...?''

''இதுல எண்ணூறு இருக்கு.''

''லாரி வாடகை—உங்கக்கிட்ட கடன் வாங்கினது. திருப்பிக் கொடுத்துருக்கேன்.''

''ஆமாமா.''—அம்மா அசடு வழிந்தாள்.

ராஜி மெல்ல விழித்தாள். யாரும் லாரி வாடகை கொடுத்தது பற்றி அப்பாவிடம் சொல்லவில்லை. மறந்துவிட்டது.

''சரி...கடனும் வாடகையுமா எண்ணூறு சரியா யிடுத்து.''

''அப்ப வரேங்க.''

''இருப்பா. பையனுக்கு காபி கொடு. ஸ்வீட் கொடு. நிக்கறியே.''

ராஜியும் அம்மாவும் உள்ளே ஓடினார்கள். அம்மா காபி கலக்க, ராஜி பெரிய விழுதாய் ஹல்வா போட்டு, சுற்றி மிக்ஸர் இட்டு, ஸ்பூன் வைத்து அவன் எதிரே வைத்தாள்.

''இது என் டாட்டர்...தெரியுமோ?''

''தெரியுங்க.''—எழுந்து வணங்கினான்.

ராஜிக்கு சிரிப்பு வந்தது. டெலிகிராம் கொடுத்து, காப்பி சாப்பிட்டு, லாரி வாடகைக் கடன் வாங்கி,

பட்டாஸ் கட்டை காணிக்கை என்று காலடியில் வைத்து விட்டு, என்னமோ இப்பத்தான் பார்க்கறா மாதிரி ஒரு கும்பிடு. பெரிய ஆள் இவன். மனசுள் குதூகலம் பொங்கியது.

''சரக்கு பற்றி ஒன்றும் கம்ப்ளெய்ன்ட் இல்லையே?''

''இல்லை சார். வெடிக்கலைன்னு ஒரு இடத்துலயும் கம்ப்ளெய்ன்ட் இல்லை. கைல வெடிச்சுது, கால்ல வெடிச்சுதுன்னுதான் கம்ப்ளெய்ன்ட்.'' மெல்ல சொன்னான்.

வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''இவளுக்குக்கூட கால்ல பட்டுடுத்து. காலங்கார்த் தால கத்தி ஊரை கூட்டிட்டா.''

''ஐய்யய்யோ...'' ஹல்வா வாயோடு பதறி எழுந்தான்.

''ஒண்ணுமில்ல... கட்டவிரல்ல கம்பி மந்தாப்பு உடைஞ்சு விழுந்துடுத்து.''

''உடையாதுங்க.''

''வெடி வச்சுட்டு வெங்கடேஷ் வந்து மோதிட்டான். பட்டுன்னு கம்பி உடைஞ்சு நுனிக்கால்ல...''

''ரொம்ப எரியுமே...''

''இங்க் போட்டுருக்கு.''

''இங்க்கா, போறாதுங்க.''

"போரும். சின்ன காயம்தான்."

"தள்ளி நிக்கப்படாதுங்களா. பட்டாசு காயம் சுறு சுறுன்னு எரியும். இந்த தீபாவளிக்குத்தாங்க நான் ஒரு வெடிகூட வெடிக்கலை. ஒரு அசதில விடியறவரைக்கும் தூங்கிட்டேன்."

"வியாபாரியாயிட்டே. இனிமே விளையாடத் தோணுமா புத்தி."

"அது இல்லீங்க. ஒரே அலைச்சல். இரண்டாவது தடவை சரக்கு புடிக்கப் போய் அத்தினி காசுக்கும் பட்டாசு வாங்கிட்டேன். பத்து பைசா மீதி இல்லை பைல. ஒரே பசி. லாரி டிரைவர்கிட்ட கடன் வாங்கி டிபன் சாப்பிட்டேன். ராத்திரியோட ராத்திரியா ஆறுமணி நேரத்துல கும்மோணம் வந்துட்டம். வந்து உங்க வீட்டு ரேழில படுத்து ஒரு தூக்கம் தூங்கினோம், பாருங்க... அப்படி ஒரு தூக்கம் என் லைஃப்ல தூங்கினதில்லை."

"லேபர்...லேபர்னுடைய மகிமை அது. மெய் வருத்தம் பாரார், பசிநோக்கார்—கண் துஞ்சார்னு தெரியாதயா சொல்லியிருக்கான். காபி எடுத்துக்கோ. அம்மாடி, எனக்கும் ஒரு தம்ளர் காபி கொடு. நான் கிளம்பறேன். ராத்திரி அங்க வேலை இருக்கு."

ராஜசேகர் அவசரமாய் காபி குடித்து விட்டு வணக்கம் கூறி விடைபெற்றான். கடை திறந்து கணக்கு போட்டுக் கொண்டிருந்தான். பையன்கள் பங்கு பிரித்துக் கொண்டிருந்தனர். நிகர லாபத்தை வகுத்து ஆயிரத்துக்கு கணக்குப் பார்த்து காசு எண்ணிக் கொண்டிருந்தனர்.

அம்மா நானூறு எடுத்துக் கொண்டு தெருக்கோடி மாமி வீட்டுக்குப் போனாள். அங்கு வீட்டோடு ஒரு புடவைக் கடை இருந்தது. ராஜிக்கு ஒரு நீல நைலெக்ஸூம், தனக்கு ஒரு சின்னாளப்பட்டும் எடுத்தாள். வெங்கடேஷூக்குப் பாண்ட் சட்டை எடுத்தாள். பாக்கி எழுபது ருபாயோடு திரும்பினாள். சாப்பிட்டு விட்டு அயர்ந்து கூடத்தில் படுத்துத் தூங்கினாள்.

ராஜிக்குத் தூக்கம் வரவில்லை.

வாசலுக்குப் போய் நின்றாள்.

ராஜசேகர் கடையில் உட்கார்ந்திருந்தான். உள்ளே நுழைய முற்பட்டபோது, 'ராஜி' என்று அடிக்குரலில் கூப்பிட்டான்.

"என்ன?"

"இந்தா" என்று ஒரு பர்னால் ட்யூப் நீட்டினான்.

"இங்க் போட்டா போறாது ராஜி. இது போடு, ப்ளீஸ். கம்பி மத்தாப்புல சுட்டுக்குவாங்களா யாராவது?"

"வேண்டாம். இப்ப சரியாயிடுத்து."

"ராஜி, ப்ளீஸ் வாங்கிக்க. எனக்கு ரொம்ப கஷ்டமாயிடுச்சு. உன் கால்ல பட்டாசு சுட்டது தெரிஞ்சது லேர்ந்து ரொம்ப சிரமமாயிடுச்சு. பட்டாசு நெருப்பு விட்டுட்டா சீழ் கோர்த்துடும் இதப் போடு ராஜி, ப்ளீஸ்."

ராஜி கை நீட்டி, மருந்து வாங்கிக் கொண்டாள். கூடத்தில் உட்கார்ந்து விரல் முழுவதும் அப்பினாள். கால் எரிச்சல் குறைந்து மருந்து குளுமை பரவியது.

மாலை ஆறு மணி. தடம் தடம் என்று வாசலில் இரட்டை வெடி சப்தம் கேட்டது.

"யார் வெடிப்பது...வெங்கடேஷா?"

வெங்கடேஷ் சுவரோரம் தூங்கிக் கொண்டிருந்தான்.

எழுப்பினாள்.

"வாசல்ல யார் வெடிக்கறது?"

"ராஜசேகர். சாயந்தரம்தான் எனக்கு தீபாவளின்னான். அவனாத்தான் இருக்கும்." முகம் துடைத்துக் கொண்டு வாசலுக்குப் போனான்.

மேலும் வெடிச்சத்தம் கேட்டது.

ராஜி புது நைலெக்ஸ் உடுத்திக் கொண்டாள். பவுடர் பூசினாள். அகல் விளக்குகள் ஏற்றி, தட்டில் வைத்து வாசலுக்கு வந்தாள். வாசல் குறட்டில் நிலைப் படியோரம் வைத்தாள்.

பெரிய புஸ்வாணம் நின்று எரிந்தது.

"ராஜி, ஒரு விளக்கு நம்ம கடைலயும் வையுங்க. ராசியான இடம்." ராஜசேகர் விண்ணப்பித்தான்.

வெடியும் வாணமுமாய் தெரு துவம்சம் ஆயிற்று.

ஐயாயிரம் சரவெடிகள் அடுத்தடுத்து வைக்கப் பட்டன. சரம் கொளுத்திவிட்டு வாசலில் நிற்க முடிய வில்லை. நாலாப் புறமும் சீறியடித்தது. ராஜசேகர் சுவர்

ஓரம் தலைபொத்தி நின்றான். இரண்டு மூன்று அடிகள் தலையிலும் முதுகிலும் வாங்கினான்.

"ராஜி, வெங்கடேஷ்...இடம் வுடுங்க. உள்ள வந்துடறேன்."

சரவெடி வைத்துவிட்டு ரேழியில் வந்து ராஜி அருகில் ஒண்டிக் கொண்டான்.

ஒரு கட்டு எகிறி ரேழியில் வெடித்து சடசடவென்று சிதறியது. இருட்டில் யாரும் அறியாது ராஜி கையை மெல்லப் பற்றினான். வெடி பயத்தில் ராஜியும் அவன் விரல்களைப் பற்றிக் கொண்டாள்.

கலர் கலராக ராக்கெட்டுகள் பறந்தன. சிகப்பும், நீலமும், பச்சையும் வானில் சிதறின. தெரு முழுக்க வியந்து பாராசூட் சிகப்பு ஒளியைப் பார்க்கும்போது ராஜசேகர் மெல்ல ராஜி காதில் கிசுகிசுத்தான்.

"ராஜி ஐ லவ் யூ!"

ராஜியும் சிவந்தாள்.

"கும்பகோணத்திலேயே நெறைய வெடி வெடிச்சது உங்க தெருவுலதாண்டி. ஏகப்பட்ட ராக்கெட் விட்டாங் களாமே!"

பள்ளிக்கூடத்தில் சக மாணவிகள் கேட்டார்கள்.

"யாரோ வெள்ளைச் சட்டை, வெள்ளை பேண்ட் போட்டுண்டு ஒரு பையனாம்... அவன்தான் விட்டானாம்..."

"பண்ணை முதலியார் புள்ளைடி. ராஜி வீட்டு வாசல்ல கடை போட்டுருக்கான். டெட் சீப். நாங்க கூட அங்கதான் வாங்கினோம்."

"யாரு... சுருள் கிராப்பா... ஐயப்பன் குதிரைக்கிட்ட நிப்பானே நாம போற போது..."

"அவன்தான். பட்டை பெல்ட்காரன்தான். ராஜசேகரன்னு பேரு."

"செம டாவடிக்கறான்டி. கரெக்டா க்ராஸ் பண்ற போது எதாவது ஜோக் அடிப்பான்."

"ஏய்... நீயும்தான் டாவடிக்கற. அவனைத் தாண்டிப் போறபோது பேசறத நிறுத்திடுவே."

"டக்கர் ஃபெல்லோ. ராஜி! நீ அவன் கூட பேசுவியா?"

ராஜி மாட்டேன் என்று தலையசைத்தாள். உள்ளே பெருமைப்பட்டாள். அந்த டக்கர் ஃபெல்லோ இவள் கரம் பற்றி லவ் யூ சொன்னது இந்த கும்பகோணத்தில்— ஏன், இந்த உலகத்தில் யாருக்கும் தெரியாது. ராஜிக்கு மட்டுமே தெரியும்.

"கார்த்திகைக்கு அவன்கிட்டதான் பட்டாஸ் வாங்கப் போறேன்."

"எதுக்கு?"

"சும்மா ஒரு டாவுதான். ராஜி; அவன் கடை கார்த்திகைக்கு இருக்குமா?"

''தெரியலை.''

''கேட்கறதுதானே?''

''நான் மாட்டேன்.''

''ஏண்டி?''

''எனக்குப் பிடிக்கல்லை.''

''போடி லூஸு! கும்பகோணத்துல பாதி காலேஜ் பசங்க அழுக்கு வேஷ்டி, வெத்திலைபாக்கு. இத்தனை வெள்ளையா பல்லு ரொம்ப ரேர். இந்த வெத்திலை பாக்கு புகையிலை போடறவனைக் கண்டா எனக்கு எரியறது.''

''சரி... உனக்கு வரவன் புகையிலை கட்டைன்னு வச்சுக்கோ, என்ன பண்ணுவ?''

''நானும் அவன் பொட்டிலேர்ந்து கொத்து எடுத்துப் போட்டுண்டு, என்னவோய் கொட்டிக்க வரீறான்னு கேட்பேன்.''

சலங்கை அறுந்தது போல் சிரித்தார்கள்.

''சரி...சிகரெட் புடிச்சா...''

''நானும் புடிப்பேன்.''—பென்சிலை அந்தப் பெண் வாயில் எடுத்து வைத்து வெறும் காற்று ஊதினாள். ''கம் மேன்... யுவர் டின்னர் ஈஸ் ரெடி.''

மறுபடி சிரித்தார்கள்.

''சரி, குடிக்கறவன் வந்துட்டா?''

''நானும் அரை கிளாஸ் போட்டுக்குவேன்.'' தள்ளாடி நின்றாள். ''ஏய் பைய்யா... இதர் ஆவ். கானா ரெடி ஹை... ரெடிக்கு என்னாடி ஹிந்தில?''

மறுபடி சிரித்தார்கள்.

''சரிடி... பொடி போடறவன் வந்துட்டா... என்ன பண்ணுவ?''

''போடா கம்மனாட்டி... மூக்கு சளி. பொடி போட்ட கையால என்னைத் தொடாதே. போ. தூர நில்லு. சோறு வாசலுக்கு வரும். தின்னுட்டு அங்கேயே படு.''

கூரை அதிர்ந்தது.

ராஜி இதில் கலந்து கொள்ளாமல் ராஜசேகர் கனவிலேயே இருந்தாள். மேடம் உள்ளே நுழைய, சிரிப்பு சட்டென்று அடுப்பிலிருந்து இறக்கின பால் பாத்திரமாய் அடங்கிற்று.

''என்னடி... கூச்சல்? எழுந்து பெஞ்சுல நில்லுங்கோ, ராஜியைத் தவிர.''

மொத்த வகுப்பும் பெஞ்சில் நின்று பாடம் கேட்டது. ராஜி பாடம் கேட்கிற போர்வையில் ராஜசேகரனை நினைத்தாள். 'தாங்க் யூ ராஜு, நீதான் காப்பாத்தின' என்று மனசுள் சொல்லிக் கொண்டாள்.

'ஐயப்பன் குதிரை சிலைகிட்ட நிப்பியா... இனிமே நிக்கக்கூடாது. ஏன் அங்க நிக்கணும்... எதுக்கு ஜோக் அடிக்கணும். எதுக்கு கெட்ட பேர் வாங்கணும்.

உன்னை யாராவது தப்பா சொன்னா எனக்கு பொறுக்காது. ராஜூ, உன்னை வர்ணிச்சாலும் பொறுக்காது. ப்ளீஸ், அங்க போகாதேயேன்.'

மணியடித்தது. டீச்சர் போன பிறகு வகுப்புப் பெண்கள் கடுகடுப்புடன் தரைக்கு இறங்கினார்கள்.

''இத்தனை பேர் சிரிச்சமே...நீ ஏண்டி சிரிக்கலை?''—ஒருத்தி ஆங்காரத்துடன் கேட்டாள்.

''எனக்கு சிரிப்பு வரலை...சிரிக்கலை.''

''ரொம்ப இதுன்னு நினைப்போ?''

''யெஸ்!''

''நாம பேசினதெல்லாம் போய் கோள் மூட்டப் போறாடி.''

''நான் எதுக்கு இதைப் போய் கோள் மூட்டணும். நான் ஒன்னும் உங்களை மாதிரி இல்லை.''

''ஏன்...ஏன்... ரொம்ப ஒழுங்கோ நீ?''

''யெஸ்!''

நினைவும் கனவும் கைவிரல் பிடித்து காதல் பேசின. கம்பீரம் கொடுத்தன, நான் உங்களைப் போல் இல்லை என்கிற இறுமாப்பு கொடுத்தன. 'என்னைக் கண்டு இத்தனை பேசுகிறீர்களே... அவர் எனக்கு சொந்தம்' என்று ரகஸ்ய சந்தோஷம் வந்தது. உங்களுக்கு டாவடிக்கத்தான் தெரியும். காதல் தெரியாது. உண்மையிலேயே காதல் வயப்பட்டவர்கள் டாவடிக்க

மாட்டார்கள். யாரைக் காதலிக்கிறோமோ அவர்களுக்கு உண்மையிலேயே விசுவாசமாய்... காதல் எவ்வளவு புனிதம்! இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

இவளும் குடிப்பாளாம். ஏய் பையா... இதர் ஆவ்வாம். டர்ட்டி கேர்ள்ஸ். பின்னல் கன்னத்தில் சுழன்று முன்பக்கம் வந்தது. வந்த பத்து விநாடியில் பின்பக்கம் போயிற்று.

ராஜி தன்னையறியாமல் விரோதம் சம்பாதித்துக் கொண்டாள். தனிமைப்படுத்திக் கொண்டாள். இந்த விரோதம் தன் வாழ்க்கையை எவ்வளவு பாதிக்கும் என்று புரியாமல் நடந்து கொண்டாள்.

ராஜசேகர் ஐயப்பன் குதிரை சிலைக்கு அருகே இல்லை. ராஜி வீட்டு வாசலில் இருந்தான். ராஜி உள்ளே போக, மெல்ல சிரித்தான். ராஜி கை கால் அலம்பிக் கொண்டாள். அம்மா கொடுத்த காப்பியுடன் வெளியே வந்தாள்.

''ஆஹா... இப்பத்தான் ஞாபகமே வருது. சாயந்திரம் காப்பியே சாப்பிடலைடா. போலாமா. போய் காப்பி சாப்பிட்டு வரலாமா?'' —கும்பலாய் நடந்து போனார்கள்.

ராஜி முகம் மாறியது. ஏன் போகிறான்? வேதனை பொங்கிற்று. ராஜசேகர் கவனிப்பது தெரிந்தது. அரை மணி நேரம் கழித்து ராஜசேகர் உள்ளே வந்தான். ராஜி பாடப் புத்தகங்கள் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்தாள்.

''மாமி...''— எட்டிப் பார்த்து குரல் கொடுத்தான். ''ராஜி, அம்மா இருக்காங்களா?''

''என்ன ராஜசேகர்...'' —அம்மா கை துடைத்தபடி சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

''நூறு ரூபாய்க்கு சில்லரை இருக்குமா மாமி?''

''நூறு ரூபாய்க்கா... சில்ரையா... என்கிட்டயே முழுசாதாம்பா இருக்கு. இவளைக் கடைக்குப் போய் காய்கறி வாங்கிண்டு மாத்திண்டு வாடின்னு சொல்ல ணும்னு நினைச்சேன்.''

''அடடா... நான் உங்க வீட்டு வாசல்லேர்ந்துதானே போனேன். ஓட்டல்ல காப்பி சாப்பிட்டோம். சில்லரை இல்லை. அப்புறம் கொடுன்னார். காய்கறி கடைல பட்டுன்னு கிடைக்குமே... என்ன காய் வாங்கணும்?''

''போறும் போ, பண்ணை வீட்டுப் புள்ளைய காய் வாங்க அனுப்பறதா?'' அம்மா நொடித்தாள்.

''பண்ணையாவது... தொண்ணையாவது... பாலத் துக்கிட்ட கொத்தவரங்கா இறங்கியிருக்கு, பச்சுன்னு. ஒரு கிலோ புடிச்சுடட்டுமா.''

''இங்க என்ன கல்யாண விருந்தா... ஒரு கிலோ வுக்கு. எங்களுக்கு அரைக்கிலோ போறும். நீ எதுக்கு சிரமப்படற? ராஜி போவா.''

''எனக்கு இப்ப சில்லரை வேணும். அதுக்கு ஒரு வழி சொல்றதை விட்டுட்டு...''

''சரி, கால் கிலோ தக்காளி, அரைக்கிலோ கொத்த வரங்கா... உருளைக் கிழங்கு... வெங்காயம்.. கால் கிலோ வாங்கிக்கோ. ராஜி,உனக்கு ஏதாவது வேணுமா?''

''மேப் ட்ராயிங் நோட்டு வேணும்மா... நான் போறேன் கடைக்கு. ஏன் மத்தவாளை சிரமப் படுத்தற?''

''மத்தவங்களா? நான் மத்தவங்களா, மாமி? நான் தான் காய் வாங்கிண்டு வருவேன். பை கொடுங்க.'' பையை பறித்துக் கொண்டு போனான். தெருவில் போகிறவன் சைக்கிளை நிறுத்தி வாங்கிக் கொண்டான். பெடல்மீது கால் வைக்காமல் ஒரு துள்ளு துள்ளி வண்டி யேறினான். பறந்தான்.

முக்கால் மணியில் மேப் ட்ராயிங் நோட் அட்டை போட்டு லேபிள் ஒட்டி, தனியே காய்கறி பையோடு வந்தது.

''என்ன இது அட்டையெல்லாம்?''

''செய்வன திருந்தச் செய். இதுக்கு அட்டை போட்டு லேபிள் ஒட்டணும்தான். அதுக்கு நீ கடைக் குப் போகணுமா? நானே அங்க வாங்கி வெட்டி ஒட்டிக் கொண்டு வந்துட்டேன்.''

''தாங்க் யூ!''

குனிந்து இளவரசன் போல் வணங்கினான்.

மறு நாள் வகுப்புக்குள்ளே நுழைந்ததும் கிசுகிசுத் தார்கள்.

''ராஜி, உன் மேப் ட்ராயிங் நோட்டு காட்டு.''— உருவி எடுத்தார்கள்.

"அதே நோட்டு. அம்மா ஒழுங்கு புள்ளை கிழங்கு மாவு, பேசறபோதே நினைச்சேன். பாருடி... அதே லேபிள்தானே. நாங்க எட்டு பேர் மேப் ட்ராயிங் நோட்டு வாங்க ஒன்னா போனோம். அங்க ராஜசேகர் நிக்கறான். அவனும் மேப் ட்ராயிங் நோட்டு வாங்க றான். ஒன்னுமே புரியலை. காலேஜ்ல படிக்கிறவனுக்கு, அதுவும் காமர்ஸ் படிக்கிறவனுக்கு, எதுக்கு மேப் ட்ராயிங். அங்கேயே அட்டை போட்டு லேபிள் ஒட்டி... அப்பவே ஒன்னும் ஒன்னும் ரெண்டுன்னு கணக்குப் போட்டுட்டேன். என் கணக்கு சரி. ஒழுங்கு டீச்சர் எனக்கு பாஸ் மார்க் போடறேளா?"

தள்ளாடி நடித்த சந்தியா முரசறைந்தாள்.

வைரம் வைரத்தை வெட்டிற்று. ராஜி வியர்த்தாள்.

"இப்ப சொல்லு... இது யார் வாங்கினது?"

"ஏன், ராஜசேகர்."

"நீ பேசறதேயில்லைன்னு சொன்ன..."

"ஆமாம்."

"நீ பேசாத... நீ கேட்காத அவனா வாங்கிண்டு வந்தானா? மனதந்தியா, மௌன பாஷையா... கதை விடறியா?"

"எங்கம்மா சொன்னா... வாங்கிண்டு வந்தான். என்ன அதுக்கு இப்ப?"

"அட்டை, லேபிள் ஒட்டினது?"

''அவனா ஒட்டினான்.''

''நீ கேட்கவேயில்லையா?''

''இல்லை.''

''இதுவரை பேசினதேயில்லையா?''

''இல்லை.''

''கும்பேச்வரர் சத்தியமா?''

''கும்பேச்வரரா... ஏன்... ஏன் உன்கிட்ட நான் சத்தியம் பண்ணனும்?''

''ஒத்துக்க மாட்ட இல்லை. ஒத்துக்க வைக்கறேன் பார். இன்னிக்கு நிச்சயம் நிப்பான், குதிரை சிலைகிட்ட. அவனைக் கிராஸ் பண்றப்போ ராஜி அவனை லவ் பண்றாளாம். என்கிட்ட சொன்னா... சும்மா ஒரு வார்த்தை... ஊசி பட்டாஸ் மாதிரி ஒரு வார்த்தை போடறேன். ஆடிடுவான் பார். அந்த ஆட்டம் சொல்லிடும் உன் ஒழுங்கை.''

ராஜி கலங்கினாள்.

''அம்மாக்குட்டி சும்மா சொல்லு ஆசையில்லையோ, என் மேல் ஆசையில்லையோ...'' எட்டு பேர் கூட்டம் பாட்டு பாடிற்று. மேடம் உள்ளே நுழைந்தாள்.

''என்னடி கூச்சல்? ப்ளஸ்-டூ படிக்கற கழுதைங்களா... ஒரு நாளைப்போல கூத்தும்... கூச்சலும்... என்ன பாட்டு. நேத்திக்கு நின்னது போறாதா. சுரணை இல்லை... அத்து வளர்ந்திருக்கு தடித்தடியா.''

"மேடம், இன்னிக்கு நிக்க சொன்னாலும் நிக்கறோம். அதுக்காக அனாவஸ்யமா பேசாதீங்க."

"நில்லுடி...பெஞ்சுல ஏறி நில்லு."

சந்தியா துள்ளிக் குதித்து பெஞ்சில் ஏறினாள்.

"நானும் பாடினேன் மேடம்."

"நில்லு."

"நானும் மேடம்."

"நில்லு."

ராஜியைத் தவிர அத்தனைப் பெண்களும் பெஞ்சில் ஏறின. நீ நில்லுடி நான் நில்லுடி என்று எல்லாரும் ஏறி நின்றனர்.

ராஜி அமைதியாய் இருந்தாள்.

"ராஜி, நீ ஏன் நிக்கல?"—ஒருத்தி உரக்க கேட்க, க்ளாஸ் சிரித்தது.

"நான் தப்பு பண்ணல. அதுனால நிக்கல."— ராஜி முன் பின்னலை பின்னுக்குப் போட்டாள்.

"தட்ஸ் த பாயிண்ட். பாடத்தை கவனிங்கோ"

வகுப்பு பாடத்தோடு ராஜியையும் முறைத்தது. ராஜி இலக்கானாள்.

'இன்று ஐயப்பன் குதிரை சிலை அருகே நிற்பானா... கோவிந்தராஜப் பெருமாளே...நீதான் காப்பாத்தணும்.'

காப்பாற்றினார். ராஜசேகரைக் காணாது பெண்கள் உதடு பிதுக்கினார்கள். ராஜி அவர்களைக் கடந்து விடு விடுவென்று வீட்டுக்கு வந்தாள்.

ராஜசேகர் கடை திறந்து வைத்து மர ஷெல்புக்கு ஆள் வைத்து பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்தான்.

ராஜி புத்தகம் வைத்து விட்டு அம்மாவைத் தேடினாள். அம்மா கேசரி கிளறுவதைப் பார்த்தாள். வேகமாய் கடைக்குப் பின்னால் இருந்த அறைக்குப் போனாள். ஜன்னலை கஷ்டப்பட்டுத் திறந்தாள்.

"உங்களோட பேசணும்." —சொல்லி விட்டு சுவரோடு ஒட்டிக் கொண்டாள்.

"சாமிக்கண்ணு, பெயிண்ட் அடிக்கறதுக்கு முன்ன பட்டிப் பார்க்கறதில்லையா...போய் ஸீலர் வாங்கிட்டு வா."

"பாதி முடிச்சுட்டேன்..."

"போய் வாங்கிட்டு வாய்யான்னா..." துரத்தினான். பெயிண்டர் காசோடு கடை விட்டு இறங்கினான்.

"என்ன ராஜி" என்று ஜன்னலருகில் வந்து நின்றான்.

"எங்க க்ளாஸ்ல எல்லாரும் என்னை சந்தேகப் படறா. எதுக்கு நீங்க மேப்ட்ராயிங் நோட்டு வாங்கினேள் அங்க நின்னு அட்டை போட்டேள்..."

"ஸாரி ராஜி...ரியலி ஸாரி...உங்க கிளாஸ்னு தெரிஞ்சுது. இதுல என்ன தப்புன்னு நினைச்சேன்... ஐயாம் ஸாரி."

“பரவாயில்லை. இனிமே குதிரை சிலைகிட்டே வரவே வராதிங்கோ.”

“ஏன்?”

“உங்களை கேலி பண்ணப் போறாளாம்...என் னோட இணைச்சு...”

“போமாட்டேன். சரியா?”

“தாங்க்யூ!”

“தாங்க்யூதானா?”

“வேற என்ன வேணும்?”

“லவ் யூ சொல்ல மாட்டியா?”

“சொல்லுவேன். ஆனா யார்கிட்டயும் சொல்லக் கூடாது.”

“மாட்டேன்.”

“கும்பேச்வரர் சத்தியமா?”

“கும்பேச்வரர் சத்தியமா!”

“ஐ லவ் யூ ராஜு!”—முகம் பொத்திக் கொண்டு ஹாலுக்கு ஓடினாள். மனசு துள்ளிற்று.

ராஜசேகர் சிரித்தான். குட்டி விரலைப் பிடிச்சு லவ்யூன்னு சொல்லிட்டேம்மா...அவன் எப்போதோ தன் நண்பர்களிடம் சொன்னது இந்த சத்தியத்தில் அடங் காது.

மறுபடி போய் ராஜி லவ் யூ சொன்னதைச் சொன்னாலும் சத்தியத்தில் அடங்காது. நாலு பேர்கிட்ட சொல்லத் தானே லவ் பண்ணுகிறோம். கும்பேச்வரருக்குத் தெரிஞ்சது கும்பகோணத்துக்குத் தெரியட்டுமே...என்ன தப்பு?

'முள் வாழையிலையில் விழுந்தாலும், வாழை இலை முள்மீது விழுந்தாலும்'—பழமொழி பழசுதான். ஆனாலும் தினம் தினம் இந்த தேசத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. வாழை இலை கிழிபட்டு தொங்குகிறது.

காதல் என்பது இந்த தேசத்தில் அரிதான விஷயம். அரிதானது என்பதாலேயே காதல் கர்வம் கொள்ளத் தக்கதாகவும் மாறிவிட்டது. கர்வம் அன்பைக் கெடுக்கும். காதலை நசுக்கும்.

'காதல் செய்வீர் உலகத்தீரே காதல் செய்வீர்,
காதலினால் மானிடர்க்கு கலவி உண்டாம், கவலைபோம்'

என்று கரும்பாய் பாடிய மகாகவி பாட்டை பாடப் புஸ்தகத்தில் நுழைய விடவில்லை. 'அது கவிதை நடைமுறைக்கு வராது'என்று சொல்லிவிட்டார்கள். கவிஞர்கள் அப்படித்தான் பாடுவா. எழுதறவா இதை உசத்தித்தான் எழுதுவா. அன்னப்பட்சி மாதிரி நல்லதை எடுத்துக்கணுமே தவிர, எல்லாத்தையும் தலையில வச்சுண்டு ஆடப்படாது.

இந்த தமிழ் அன்னம் பாடலைத் துப்பி விட்டுத் தண்ணீரை உறிஞ்சியது. சாறை ஒதுக்கி விட்டு சக்கையை விழுங்கி, விக்கவிட்டது. விக்கலுக்கு கவலைப்பட்டது. கலவியைக் காமம் என்றது. இயற்கையை எதிர்த்து நின்றது. இயல்பைப் புரிந்து கொள்ள மறுத்தது.

இந்த தேசத்துப் பெண்கள் காதலெனில் முகம் பொத்திக் கொண்டார்கள். பையன்கள் தொப்பிச் சிறகாய் நினைத்தார்கள். பெண்கள் மனதைப் பிடுங்கி சிறகாய் சூட்டிக் கொண்டார்கள். எண்ணிப் பார்த் துக்கோ என்று கர்வப் பட்டார்கள்.

கர்வம் அன்பைக் குலைக்கும். காதலை நசுக்கும்.

'லவ்வு கிவ்வெல்லாம் நமக்கு வேணாம்மா. அது டேஞ்சர். பெரிய ப்ராப்ளம்–பின்னால அவமானம்! நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நினைத்தார்கள். மிச்சம் பத்து பேர் லவ் பண்ண, மீதி பேர் பொறாமைப்பட்டார் கள். அவளைத் தொட்டிருக்கியா என்று ஆவல் பொங்கக் கேட்பார்கள். 'விரலையாவது தொட்டிருக் கியா? முழங்கை தொட்டிருக்கியா...முதுகு? கன்னம்? கிட்ட நெருங்கி உட்கார்ந்துக்குவீங்களா? கேட்கறேன்னு தப்பா நினைச்சுக்காதே...கிஸ் அடிச்சிருக்கியா?' ஜொள்ளு ஒழுகும். பொட்டை நாய் துரத்திப் போகும் ஆண் நாயை, பல நாய்கள் துரத்தும்.

துரத்துகிறவனுக்குத் தான் துரத்துகிற பெண்ணைவிட தன்னைத் துரத்தும் கூட்டம்தான் சுகம். இன்னும் பெரிய கர்வம்.

'கிஸ் என்னம்மா... அதுக்கு மேலேயே போயிட் டேன்.' கண் சிமிட்டுவான்.

கேட்டவனுக்கு வியப்பில் மூச்சு முட்டும். 'அண்ண லும் நோக்கினான். அவளும் நோக்கினாள். கண்கள் கலந்தன. கருத்தொருமித்தனர்.' கருத்தொருமித்தனர் என்பது கடின பதமாகிவிட்டது. எல்லா நோட்ஸிலும்

சிந்தனையில் ஒன்றுபட்டார்கள் என்றுதான் குறிப் பிட்டிருந்தது. என்ன சிந்தனை என்று கேள்வி வந்தது. பதில் இல்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம் என்று புரியவேயில்லை.

வாத்தி சொல்லித் தரவில்லை. 'இதுக்கு மேலே கேட்ட... எலும்பை உடைச்சுடுவேன். அல்ஜீப்ரால சந்தேகம் கேட்பியாடா நீ? நாறப்பொணமே...கணக்கு கிளாஸ்ல உக்காந்து தூங்கற. முண்டம்...கம்ப ராமாயணம்னா ஈன்னு கேட்கறான். இங்க வாடா, தமிழ் மேல பிடிப்பு வந்துடுச்சா...கிட்ட வா...'

"செய்வினை, செயப்பாட்டு வினை இரண்டுக்கும் அர்த்தம் சொல்லு."

"செய்வினைன்னா மந்திரிச்சு எலுமிச்சம் பழம் வைக்கறது சார்."

"அப்படி சொல்லு நாயே...உனக்கு கருத்தொருமித் தனர்க்கு அர்த்தம் வேணுமா...வா...வா...முட்டி நீட்டு... எலுமிச்சம்பழம் வைக்கறேன்." லொட்... "அம்மா..."

"முட்டில எலுமிச்சம் பழம் வந்துதா..." லொட்...

"அம்மா..." "இன்னொரு எலுமிச்சம் பழம் வந்துதா, இனி வாயத் தொறந்தே...போ, போய் உட்கார்."

பிறகு, காதல் எனில் முட்டிதான் நினைவுக்கு வருமே தவிர, கருத்தொருமித்தனர் என்பது வாழ்வின் கடைசி வரைக்கும் தெரியாது. தமிழர்கள் எல்லோரும் காதல்–காமம்–கல்யாணம் என்பது பற்றி ஒரு அசெப்டிக் உலகத்

திலேயே இருந்தார்கள். செப்டிக் ஆகக் கூடாது என்று மதம், மரபு போன்ற ஆண்ட்டி-செப்டிக் தடவிக் கொண் டார்கள்.

செப்டிக் என்றால் அழுகல் என்று முகம் சுளித்தார் கள். கனிதல் என்று பொருள் கொள்ளவேயில்லை. மாறுதல் என்பது அங்கீகரிக்கப்படவேயில்லை. இயல்பு என்று புரியவேயில்லை.

விதை அழுகித்தான் முளை விடுகிறது. பூ அழுகிக் காய் விடுகிறது. காய் அழுகித்தான் கனியாகிறது. ஒவ்வொரு நாளும் உடம்பு அழுகி விடுகிறது. கிழத்தனம் அழுகலா? கனிதலா? காய் கனிந்து பழம் என்பது போல் இளமை கனிந்து முதுமை என்று சொல்லக்கூடாதா?

எதற்கு அசெப்டிக்? ஏன் ஆண்ட்டி செப்டிக்? இயல் புக்கு எதிரே யார் போர் தொடுக்க முடியும்? இயற்கை உந்துதலை எவர் மாற்ற முடியும்? மாற்ற வெம்பல்தான். காய் கனிய மறுபடி வெம்பல்தான்.

இது வெம்பல் தேசம்.

யாரும் இனித்து விடக்கூடாது. எவர் வாழ்விலும் இனிப்பு வரக்கூடாது. இது சிற்றின்பம். பேரின்பம் என்று உண்டு. சம்சாரம் துக்க மயம். பரமாத்மனே உண்மை சொரூபம். முதல்படி தாண்டாதவனா முப்பது படி ஏறுவான். சம்சாரத்தைப் புரிந்து கொள்ளாதவனா சாமியைப் புரிந்து கொள்வான். தாய்ப்பாலைக் குமட்டு கிற குழந்தையா தயிர்சாதம் சாப்பிடும். இது உண்டு வளரு என்று இருக்கும் தாய்ப்பாலே-மனித இயல்பே, குமட்டியது எனில், எல்லாம் கடந்தவன்-எங்கும் இருப்

பவனை எப்படித் தேட? தயிர் சாதத்தை தமிழ் குழந்தை தலையில் தேய்த்துக் கொண்டது.

தயிர்சாதம் உண்ண வேண்டிய விஷயம். உண்டு ஜீரணிக்க வேண்டிய சமாசாரம். கடவுள் என்கிற தயிர் அன்னத்துக்கு புத்தியே வாய். மனசே குடல். ஆத்மமே இருதயம். சிற்றின்பம் குமட்டின குழந்தை பேரின்பம் எப்படி உண்ணும்? மனைவியை உதறி விட்டு மதத்தைத் திருமணம் செய்து கொள்வது பெருமையாயிற்று. பொய் பெரியதாயிற்று. இயல்பு அறுந்தது.

கட்டிய மனைவியை உதறிவிட்டு கல்லு சாமிக்கு மனைவியானான். தன்னை பெண்ணாய் நினைத்து கடவுளை ஆணாக்கினான். பாடினான். பெற்ற குழந்தை யைப் புறக்கணித்து விட்டு கடவுளைக் குழந்தையாக் கினான்.

மனிதநேயம் வீட்டிலிருந்து துவங்க வேண்டும் என்று தெரியவில்லை. மனைவியைக் காதலிக்க முடியவில்லை. காதலியாய் பெற்ற குழந்தை காமுகனாய் திரிந்தது! காமத்தை காதல் வென்றது. பெண் போகப் பொருளா னாள்.

எத்தனை பேர் பற்றியிழுத்த கொங்கை? எவ்வளவு பேர் சுவைத்த இதழ்? தாசியைத் தமிழ் பாட்டில் திட்டி னார்கள். ஏன் மனைவி முலையைப் பாடேன். நீ மட்டும் சுவைத்த இதழைப் பாராட்டேன். எனக்கு தெய்வம் நீ என்று புகழ்ந்து நில்லேன். பாட்டேயில்லை.

'நீயெனதின்னுயிர் கண்ணம்மா
எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்'

விடிவெள்ளி மாதிரி ஒருவன் தோன்றினான். தன் கரும்பு மனசைப் பிழிந்து கவிதையாக்கினான். மனைவி செல்லம்மாளே மகாகவிக்கு கண்ணம்மாவானாள். அந்தக் கரும்பையும் திருவல்லிக்கேணி யானை தின்று போட்டது. உண்மை சொன்னவனை தூக்கிப்போடும் போது ஆளே இல்லை. காதல் சொன்னவன் கடைசி யாத்திரைக்குக் கூட்டம் வரவில்லை.

காதலா...ச்சீ...மலம் மிதித்த அருவருப்பாய் தமிழ் கூறும் நல்மக்கள் சிந்தித்த போது ராஜராஜேஸ்வரி காதலிக்க ஆரம்பித்தாள்.

காதல் என்பது புனிதமா...பாவமா...என்று யோசிக்கத் துவங்கினாள்.

காதல்னா லெட்டர் எழுதறது...விரல் பிடிச்சுப் பேசறது...சான்ஸ் கிடைச்சா கை போடறது என்று ராஜசேகர் யோசித்தான்.

இதை ராஜசேகரின் மோட்டார் சைக்கிள் நண்பர்கள் சுற்றி நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். இது ராஜசேகர் ஆளு என்று நண்பர்கள் எட்ட நின்று வேடிக்கைப் பார்த்தார்கள்.

ராஜசேகர் பெயிண்டரை தேவையின்றி திட்டினான். "பட்டி பார்த்த வரைக்கும் போதும். உன் வொர்க் சரியில்லை. நானே செஞ்சுக்கறேன்."

வெள்ளைச் சட்டையும், வெள்ளை பேண்ட்டும் போட்டு பெயிண்ட் அடித்தான். பெயிண்ட் அடிப்பது போல் நடித்தான்.

"இன்னிக்கு லீவு போடறியா ராஜி?''—கெஞ்சினான்.

ராஜி வயிறு வலிக்கிறது என்று சொல்லிவிட்டு பிற்பகல் வந்துவிட்டாள். அம்மா தூங்க, எழுப்பாமல், தட்டு ஓசைப்படாமல் சாப்பிட்டாள். குனிந்து கொஞ்சம் கொஞ்சமாய் சப்தமின்றி தட்டலம்பினாள். நுனிக்காலில் நடந்து கடை அறைக்குப் பின்னால் போய் தமிழ் புஸ்தகம் பிரித்து வைத்துக் கொண்டாள். மெல்ல ஜன்னல் கதவு திறந்தாள்.

அது சிலுவை மாதிரி மரச்சட்டம் மட்டுமே உள்ள ஜன்னல். கம்பி வைத்த இடம் குழி குழியாய் இருந்தது. மூடிதானே இருக்கப் போறது...எதுக்குக் கம்பி என்று தூக்கிப் போட்டுவிட்டு ஜன்னலை மூடி விட்டார்கள்.

''தாங்க் யூ ராஜி!''

''ச்சீ...இதுக்கெல்லாம் போய் எதுக்கு தாங்க்ஸ் சொல்லணும். கார்த்திகைக்கு கடை உண்டா?''

''உண்டு. ஏன் ராஜி?''

''என் பிரெண்ட்ஸ் எல்லாம் இங்கதான் வாங்கப் போறதா சொல்றா.''

''வாங்கட்டும்.''

''உங்களையும் என்னையும் இணைச்சு கேலி பண்றா.''

''நீ என்ன சொன்னே?''

''எனக்குத் தெரியவே தெரியாதுன்னுட்டேன்.''

''யார் அது கேலி பண்றது?''—ராஜசேகர் கோபமடைந்தான். அவன் கோபம் ராஜிக்குப் பிடித்திருந்தது.

''சந்தியா...இரட்டைப் பின்னல். எப்பவும் தலைல கிளிப் குத்திண்டு வருவாளே...''

''அந்தக் குரங்கு மூஞ்சியா...'' இதுவும் ராஜிக்குப் பிடித்திருந்தது.

''எட்டு பேரை கூட்டி வச்சு பெரிய என்கொயரி மாதிரி பண்றா.''

''சொல்லு...சைக்கிள்ல போய் இடிச்சுரட்டுமா?''

''ச்சீச்சீ...வேணாம்.''

''க்ராஸ் பண்றபோது மிரட்டி வைக்கட்டுமா?''

''ப்ளீஸ் எதுவும் வேணாம்.''

''என்ன பண்ணணும் சொல்லு?''

''அவ கண்ணுல படற மாதிரி நடமாட வேண்டாம். குதிரை சிலைகிட்ட நிக்க வேண்டாம்.''

''ஏன் ராஜி?''—ராஜசேகர் கனிவோடு கேட்டான்.

''உங்களைப் பத்தி ஒரே கமெண்ட்ஸ்!'' மனசுள் பண்ணை பையன் குறித்துக் கொண்டான். 'ஆக ப்ளஸ்—டூ முழுக்க என்னை டாவடிக்குதா.'

''நிக்க மாட்டேன் ராஜி. குதிரைசிலை பக்கம்கூட போகமாட்டேன்.''

''தாங்க்யூ!''

"ச்சீ...இதுக்கு என்ன தாங்க்ஸ். ஆமா, இந்த கார்த்திகைக்கு என்ன ப்ரஸெண்ட் பண்ணட்டும் உனக்கு?"

"எனக்கு ஒன்றும் வேண்டாம்!"

"நான் பட்டுப் பாவாடை எடுக்கப் போறேன். உனக்கு. செலக்ட் பண்ணிட்டேன்."

"ஐயோ!"

"ஏன், வாங்க மாட்டியா? தீபாவளிக்கு ஒரு ட்ரெஸ்—பாவாடை தாவணி போட்டிருந்தியே...சும்மா கிறங்கிட்டேன் ராஜி."

"நிஜம்மாவா..."

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது ராஜி. ஆனா ஜிமிக்கி வேணாம்."

"ஏன்?"

"பெரிய முகமா காட்டுது."

"ஸ்டட் போட்டுக்கட்டுமா?"

"வளையம் போட்டுக்கயேன். இரட்டைப் பின்னல் —காது வளையம் — பாவாடை தாவணி...ஐய்யோ! தூள் கிளப்பிடும்."

"ச்சீய்!"

"ப்ளீஸ்! ராஜி எனக்காக..."

"வளையம், கும்பகோணத்துல ஃபாஷனாகல. என் பிரெண்ட்ஸ் கூட வாங்க பயப்படறா."

"நான் வாங்கிட்டேன் ராஜி." பாண்ட் பாக்கெட்டிலிருந்து சின்ன அட்டைகள் இரண்டு எடுத்தான். பெரிய வளையங்கள் இரண்டு; முத்து பதித்த வளையங்கள் இரண்டு.

"ஐயோ!"—ராஜி தொட்டுப் பார்த்தாள்.

"வாங்கிக்க ராஜி."

"வேண்டாம்." கையிழுத்துக் கொண்டாள். "அம்மா ஏதுடின்னு கேட்டா என்ன சொல்றது?"

"கீழே கிடந்ததுன்னு."

"யார் நம்புவா?"

"நான் வாங்கி தந்தேன்னு..."

"உதை விழும்."

"ஒரு க்ளவர் ஐடியா! பாத்திமா ஜுவெல்லர்ஸ் லெட்டர்ஹெட் வாங்கி குறுக்கெழுத்துப் போட்டியில் ஆறுதல் பரிசுன்னு நான் பார்ஸல் பண்ணட்டுமா?"

"எப்போ அனுப்பினேன்னு கேட்டா."

"ஏதாவது சொல்லு."

"அனுப்புங்கோ."

"அதுக்கு முன்னாடி ஒரு ஹெல்ப்."

"என்ன?"

"இப்ப ஒரு தரம் போட்டுக்காட்டணும். உன் முகத்துக்கு எப்படி இருக்குன்னு நான் பார்க்கணும்."

வளையத்தோடு முகம் பார்க்கக் கேட்டவன், வாலிபத்தோடு உள்ள உடல் பார்க்கவும் கேட்பான் என்பது புரியவில்லை.

இந்த வளையம் போட்டுண்டு பள்ளிக் கூடம் போனா எட்டு பேரும் செத்துருவாளுங்க... சாகட்டும்.

போட்டுக் காட்டினாள்.

ராஜசேகர் மௌனமாய் குறுகுறுப்பாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன பார்க்கிறேள்... நன்னாயில்லையா எனக்கு?"

மானல்லவோ கண்கள் தந்தது
மயிலல்லவோ சாயல் தந்தது
தேனல்லவோ இதழை தந்தது
சிலையல்லவோ இடையைத் தந்தது

மெல்லப் பாடினான். விழியை-முகத்தை—இதழைத் தொட்டான். இடையை விட்டு விட்டான்.

தேக்கு மரம் உடலைத் தந்தது
சின்ன யானை நடையைத் தந்தது
பூக்களெல்லாம் சிரிப்பைத் தந்தது
பொன்னல்லவோ நிறத்தை தந்தது

ராஜியும் பாடினாள். அவன் விரல் பற்றிக் கொண்டாள். புறங்கையில் நன்றியுடன் முத்தமிட்டாள். அதே பாட்டு இரவில் தேன்கிண்ணத்தில் ஒலித்த போது பெருமாளே என்று கன்னம் பொத்திக் கொண்டாள். 'ராஜு... ராஜு... இந்தப் பாட்டு கேட்கிறாயா... என்னைப் பற்றி யோசிக்கிறாயா?' நேரில் பாடியது ரேடியோவில் கேட்கும்போது கிறக்கம் கூடிற்று.

ராஜி மெல்ல மெல்ல கனவில் மூழ்கினாள். அவன்— அவள் மட்டுமே உலகம் என்று நம்பினாள். நான்கு நாட்கள் கழித்து வளையம் போட்டுக் கொண்டு பள்ளிக் கூடம் போனாள்.

ஆனால் வளர்ப்பு மிருகத்தை பயப்பட விடலாமா? ஆட்டுக்குட்டிக்குப் புல் போடு, முதுகு சொறி...கழுத்தில் சலங்கை கட்டி காது குளிரக் கேள்... கொழுத்த பிறகு வெட்டு.

"பயமாயிருந்தா போயிடு ராஜி..."

"ச்சே...ச்சே... நான் உங்களைச் சொல்லலை. என்கிட்டயே எனக்கு பயம்னு சொன்னேன்."

"எனக்குப் புரியலையே..."

"அது வந்து..." தயங்கினாள்.

"தைரியமா சொல்லு. என்கிட்ட எதாவது குறை இருந்தாலும் சொல்லு. மாத்திக்கறேன்."

"நீங்க ஆம்பளை... மாத்திக்க முடியும். நான் மாத்திக்க முடியாதே!"

அவன் தவித்தான்.

''என்கிட்ட கெட்ட விஷயம் எதாவது இருந்தா மாத்திக்கறேன்னு சொல்றேன் ராஜி!''

''என்கிட்டயும் கெட்டது இருக்கே...''

''என்ன?''

''எப்பவும்... எப்பவும் உங்க நினைப்பாவே இருக்கறது.''

''இது கெட்டதா?''

''பாடம் படிக்கவே முடியலை ராஜூ. பாதி நேரம் கண்ணாடி முன்னால நிக்கறேன். மீதி நேரம்...

''மீதி நேரம்?''

''புஸ்தகத்தைப் பிரிச்சு வச்சுண்டு மனசுக்குள்ளே உன் கூட பேசறேன்.''

ஜுரவேகம் பிடிபட்டு விட்டது...

''என் நிலைமை இதைவிட மோசம் ராஜி! எப்படி... இங்க வரணும்கற பரபரப்புல நான் சரியா ட்ரஸ் பண்றதில்லை. நீ புஸ்தகம் பிரிச்சு வச்சுக்கறபோது பேசற. நான் எப்பவும்... நிக்கறபோது— நடக்கறபோது— ராத்திரி தூங்கறபோது—சாப்பிடறபோது... எனக்கு என் வீடே பிடிக்கலை ராஜி. இந்த மரப்பலகைக்கு நடுவே தூங்கறதுதான் சுகமா இருக்கு. நீ உள்ள வரக்கூட வேணாம். உங்க வீட்லயே இருந்தாக் கூடப் போறும். மல்லாந்து படுத்துகிட்டு நீ நடக்கறது, பேசறது, பாடறது, முகம் அலம்பறது, பாத்திரம் தேய்க்கறது—

எல்லா சத்தமும் கேட்டுக்கிட்டு இருந்தா போறும். தூங்கணும்னு இங்க வந்தேன். தூங்க முடியலை. ஆனா தூங்கின மாதிரியும் இருக்கு. எல்லாம்... உன் அசைவு எல்லாம் கனவுல பார்த்த மாதிரி இருக்கு.''

''ஏய்...''

''நெசமா, ராஜி! சத்தியமா. நான் ஏன் கொலுசு உனக்குப் போடணும்னு நினைச்சேன் தெரியுமா. நீ நடக்கற சத்தம் இன்னும் தெளிவா கேட்கறதுக்கு...''

''என் காலுக்குப் போட்டு அழகு பார்க்கறதுக்கு இல்லையா?''

''அது இப்பதான் தெரிஞ்சுது. வெள்ளை வெளேர்னு இந்த காலுக்கு சலங்கை சலங்கையா கோர்த்து ஒரு பட்டை கொலுசு போட்டா நீ நடக்கக் கூட வேணாம். உட்கார்ந்து பார்த்துக்கிட்டே இருக்கலாம்.''

''பட்டீஸ்வரம் போலாம்னீங்களே எதுக்கு?''

''இங்க வேகுது ராஜி, ரொம்ப புழுக்கமா இருக்கு. பேன் போட்டாகூட குசுகுசுன்னுதான் பேசமுடியுது. பட்டீஸ்வரம் கோயில் பின்னாடி இன்னொரு பெரிய சிவன் கோயில் இருக்கு. மத்தியானத்துல கூட்டமே கிடையாது. துர்க்கை சந்நிதியைச் சுத்திட்டு சிவன் கோயிலுக்குள் வந்துரு. அம்மன் சந்நிதிகிட்ட போயிட்டோம்... குளுகுளுன்னு காத்து... நிறைய பேசலாம். பாடலாம்.''

''வேணாம் ராஜு.''

"சரி, இங்கயாவது வருவியா?"

"இங்கயும் வேணாம்!"

"கல்லணை போயிடலாம். யாருக்கும் தெரியாது!"

"ஐயோ...!"

"வேற எங்கதான் பார்க்கறது—பேசறது"

"மனசுக்குள்ள பேசிப்போம். அப்பப்ப பார்த்துப் போம். இதெல்லாம் டேஞ்சர்!"

"ஏன்?"

"கும்மோணத்துல எல்லாரும் ஒண்ணுன்னா ஒன்பது கதை கட்டுவா. மெட்ராஸ் மாதிரி இல்லை. அங்க லவர்ஸ் போனா கண்டுக்க மாட்டாங்களாம்!"

"நீ மெட்ராஸ் வரமாட்டே, எனக்குத் தெரியும். ஆனா என்னால உன்னைப் பார்க்காம உன்கூட பேசாம ஒருநாள்கூட இருக்க முடியாது ராஜி. அடி மனசுலேர்ந்து ஒரு உண்மையச் சொல்லணும்னா..."

"ம்ம்... சொல்லுங்க!"

"இந்தக் கடை வச்சதே உனக்காக ராஜி. வெட்கம் விட்டு சொல்றேன். எல்லா பசங்க மாதிரி நான் டாவடிக் கறதுக்குத்தான் இங்க கடை வச்சேன். சும்மா சைட் அடிச்சுட்டுப் போயிடலாம்னு நினைச்சேன். முதல் நாளே புரிஞ்சு போச்சு...ராஜி அந்த டைப் இல்லை. இவளை வெறும சைட் அடிக்க முடியாது. சைட் அடிக் கறது தெரிஞ்சுது...ச்சீன்னு ஒதுக்கிடுவேன்னு புரிஞ்சு

போச்சு. கடை போடறது ட்ராப் பண்ணிடலாம்னுகூட நினைச்சேன். இப்படி நினைச்சதுக்கு ஒரு தடவை மன்னிப்பு கேட்கணும்னு...ராஜி, நான் தப்பா இருந்தா... ஸாரி!''

''எதுக்கு ஸாரி? ஆனா என்னை லவ் பண்ணப் பிறகு யாரையும் நீங்க சொன்னேளே அது செய்யப்படாது!''

''ச்சேய்...! கனவுலகூட வரலை. ராஜி ராஜின்னு கிடந்து அடிச்சுக்கறதே தவிர...''

''அப்படி என்ன உசத்தி. நீங்க பணக்காரா... பண்ணைல பொறந்து வளர்ந்தவா— என்னை விட சேப்புத்தோலா எத்தனையோ அழகானவா... கும்மோணத்துல உண்டு.''

''சேப்பு தோல் அழகா ராஜி...இல்லை லேடீஸ்னா குத்துவிளக்கு மாதிரி இருக்கணும். பார்க்கறபோதே மனசுக்கு இதமா...பேசறபோதே உள்ளுக்குள்ள ஒரு மரியாதையா...நான் உன்னை மரியாதைக் குறைவா நடத்தியிருப்பேனோ ராஜி...முடியாது. முடியவே முடியாது! தமயந்தியோ யாரோ சொன்னியே ஒரு ஸ்டைலு...ஃபர்ஸ்ட் லுக்குலியே கேஸ் மாதிரி இருக்கும். நாம முறைச்சா அதுவும் முறைக்கும். என்னிக்காவது மேல தாவணிய ஒழுங்கா போட்டுருக்கா அது...''

''அதெல்லாமா பார்த்தீங்க...!''

''சும்மா ஒரு பேச்சுக்கு சொல்றேன். அது டாவடிக்குது என்னை. தெரியுது. என்னால அதைத் திரும்பிக்கூட பார்க்க முடியாது! எப்பவும் இங்கிலீஷ்ல பேசுது. நாம தமிழங்கதானே. எதுக்கு இங்கிலீஷ்?''

"அவ ஃப்ளுயண்டா இங்கிலீஷ் பேசறா ராஜு."

"அது பள்ளிக்கூடத்தோட...சோடா கடைல கூடவா இங்கிலீஷ்! அல்ட்டி! எங்கயோ அடிபடப்போவுது பாரேன். கடைல வந்து கீச்சு கீச்சுன்னு 'வில் யூ ப்ளீஸ் கிவ் மீ திஸ் ப்ளாண்டன்ஸ்' வச்சான் கடைகாரன். எனக்கு இங்கிலீஷ் பேசத் தெரியாதுன்னுதானே பேசற... நான் உருது பேசுவேன். பேசட்டுமான்னான். சிரிச்சுட் டாங்க கடைல இருந்தவங்கெல்லாம். போயிடுச்சு. அப்புறம் இன்னொரு தடவை...

சைக்கிள் ரிக்ஷால ஏறிட்டு லெஃப்ட்ஸ் இல்லை... ரைட்ல திரும்புன்னு கூவுச்சு. சொய்ங்னு ப்ரேக் போட்டு கீழ இறங்கினான் ரிக்ஷாக்காரன். ரெண்டு கையை முன்னாடி நீட்டி இதுல எது ரைட்டு, எது லெஃப்ட்டுன் னான். கறுப்புக் கயிறு கட்டியிருக்கறது ரைட்டு, மத்தது லெஃப்ட்டுன்னுச்சு. அப்ப ராங் எது...நேர போறதான் னான். முழிச்சுச்சு. ரைட்டு ராங்னு வேற சொல்றாங் களே...அதனால கேட்டேன். உனக்கும் தெரியாதான் னான். சுத்தி பத்து பேரு நின்னுட்டான். இறங்கி துட்டு கொடுத்துட்டு நடந்தே போச்சு."

"எப்ப பார்த்தீங்க?"

"இது நான் பார்க்கலை. என் பிரெண்ட்ஸ் சொன் னாங்க.. அவ ரொம்ப வாலாட்டினான்னு வச்சுக்க... கணபதின்னு சொல்லு. போறும் வாயடைச்சுடுவா!"

"கணபதி யாரு?"

"அவ எதிர்வீடு. யாருக்கும் தெரியாத அவன்கிட்ட ட்யூஷன் கத்துக்கறா. அவ தம்பி முன்னாடி புக்ஸ்

எடுத்துக்கிட்டுப் போவான். இவ இரண்டு பக்கமும் தெரு பாத்துட்டு டக்குன்னு எதிர்வீட்டு உள்ளே ஓடிடுவா.''

''அவங்கப்பாக்குத் தெரியாதா?''

''தெரியும். ட்யூஷனுக்கு ஜெண்ட்ஸ் வாத்தியார் வச்சா எதாவது கும்மோணத்துல பேசுவாங்கன்னு அவரே யார்கிட்டயும் சொல்றதில்லையாம்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எனக்குத் தெரியாத கும்மோணத்துல ஒரு புல் கூட முளைக்காது!''

''உங்க பிரெண்ட்ஸ் சொன்னாங்களா?''

''அவ தம்பியே சொன்னான். இரண்டு கட்டு சீனி வெடிக்கு.''

''நாளைக்குப் போன உடனே முதல் வேலை கணபதிதான்.''

''உன்கிட்ட வம்பு பண்றவங்க யாரா இருந்தாலும் என்கிட்ட சொல். அதுக்குத் தனியா பூட்டு சாவி இருக்கு என்கிட்ட!''

''ப்பா...பெரிய ஆள்!''

''இல்லை ராஜி. நான் வம்புக்குப் போமாட்டேன். வந்தா விடமாட்டேன்.''

''என்னை விடாம இருப்பீங்களா?''

"இப்ப சொல்லு... கெட்டியா புடிச்சுக்கறேன்."—அவள் கைகளை அழுந்தப் பற்றிக் கொண்டான். குனிந்து விரல்களை முத்தமிட்டான்.

"நாளைக்கு பட்டீஸ்வரம் போலாமா?"

"யாரும் பார்த்துட்டா கஷ்டம் ராஜு!"

"யார் கண்லயும் படாத இடம் அங்க ஒண்ணு இருக்கு. நீ வா. சொல்றேன்."

"எப்போ?"

"காலை பத்து மணிக்கு."

"உங்களை எங்க பார்க்கறது?"

"கோயிலைச் சுத்திண்டு வா. நான் அங்க இருப்பேன்."

"இப்ப கிளம்பட்டுமா? நாழியாறது. அம்மா கவலைப் படுவா."

"ராஜி."

"ம்ம்..."

"நாளைக்கு வராம இருக்க மாட்டியே?"

"வரேன்."

"நிச்சயமா?"

"வீட்ல சும்மா நிக்குதே வண்டின்னு கேட்காம இருக்கணும்."

"எதாவது சொல்லிட்டு வருவேயில்லை?"

"வரேன்."

"ராஜி..."

"ம்ம்..."

"ஐ லவ் யூ!" —அவள் முகத்தைக் கைகளால் தேக்கிக் கொண்டான்.

"வேணாம் ராஜு!"

"எனக்குப் போறதுக்கே மனசில்லை ராஜி!"

"எனக்கு போனுமே..." —மெல்ல கோணியிலிருந்து இறங்கி ஜன்னல் பக்கம் போய் உட்கார்ந்தாள். கால்களை சிலுவைக்குள் நுழைத்து அடுத்த அறைக்குள் இறங்கினாள்.

"ராஜி..."

"என்ன?"

"ஒரே ஒரு கிஸ் கொடுத்துட்டுப் போயேன்?" தன் கன்னம் தொட்டுக் காட்டினான்.

"வேணாம். ப்ளீஸ்..."

"சரி..." —பரிதாபமாய் நின்றான்.

ராஜி மெல்ல ஜன்னலுக்கு உள்ளே தலை நீட்டி உதடு குவித்தாள். அவன் கன்னம் கொண்டு வர முத்தமிட்டாள்.

"நான் தர வேண்டாமா?"

"ஐயோ..."

"ப்ளீஸ்...ப்ளீஸ்." —கெஞ்சினான். மெல்ல முகவாய் தூக்கி அவள் இரு கன்னங்களிலும் முத்தமிட்டான்.

ராஜி நகர்ந்து செருப்பு மாட்டிக் கொண்டாள். கதவோரம் நின்று வீட்டினுள் சப்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டாள். விரல்கடை அகலம் கதவு திறந்து கூடம் பார்த்தாள்.

ஜன்னல் பக்கம் நின்றவனுக்கு உள்ளே போயி டுங்கோ என்று சைகை செய்தாள். மறுபடி கதவு சந்தில் கவனித்து விட்டு சடேரென்று கதவு திறந்து செருப்பு சப்தம் செய்ய, உள்ளே நுழைந்தாள். ரேழியில் செருப்பு அவிழ்த்தாள்.

"அம்மா குடிக்க ஜலம் கொடு." உரக்கக் கூவினாள்.

"யாரு...ராஜியா. எடுத்துக்கோயேன் வந்து. என்ன புதுசா ஹால்லேர்ந்து குரல் கொடுக்கற?"

"சரி, எடுத்துக்கறேன்." —போய் ஜலம் மொண்டு குடித்தாள்.

"என்ன போன காரியம் ஆச்சா?"

"ஆச்சு...இன்னிக்கு என்ன சமையல்?"

"ஆஸ்...யூஷ்வல்."

"ஹேய்...இங்கிலீஷ் பேசற?"

"நானும் எஸ்.எஸ்.எல்.சி. படிச்சவதாண்டி."

"எந்த ஸ்கூல்?"

"ஏதோ ஒரு ஸ்கூல். எதுக்கு இப்ப?"

"படிக்கும்போது லவ் பண்ணியிருக்கியா?"

"ச்சீய்! துடப்பக்கட்டை..."

"ஏம்மா, லவ்வுன்னா தப்பா? க்ளாஸ்ல ரெண்டு மூணு பேர் லவ் பண்றா."

"இது கேட்கத்தான் புஸ்தகம் எடுத்துண்டு போனியா?"

"ம்ஹூம்...படிக்கத்தான் போனேன். போன இடத்துல பேச்சு வந்தது. இங்க வருமே என்னைத் தேடிண்டு, சேப்பா ஒரு பொண்ணு, சுருள் தலையா தமயந்தின்னு?"

"ஆமா..."

"அது எதிர்வீட்டு ஆள்கிட்ட ட்யூஷனாம். ட்யூஷன்ல லவ்வாம். கணபதின்னு பேரு!"

"அட கிரகச்சாரமே...பெத்தவாளுக்குத் தெரியாதா?"

"தெரிஞ்சா அதுக்குப் பேரு லவ்வா..."

"ம்ம்...வயசுக் கோளாறு."

"ஏம்மா, ஒரு பர்ட்டிகுலர் ஏஜ்ல லவ் வர்றது?"

அம்மா கவலையுடன் பெண் முகத்தைப் பார்த்தாள். பெண் முகம் என்றுமில்லாத பிரகாசமாய் அவளுக்குப் பட்டது. இது செழிப்பா, ஊதுகாமாலையா? இது வெகுளித்தனத்தின் வெளிச்சமா? இல்லை, விஷமம் பண்ணுகிற குதூகலமா? அந்த விஷயத்துக்கெல்லாம் இது போக தைரியம் வருமா? வராது...இது குழந்தை...சொல்லித் தர ஆளின்றி பெற்றவளிடம் விவரம் கேட்குமா? வெகுளி!

அம்மா அஞ்ஞானமாய் நெற்றியைத் துடைத்துக் கொண்டாள். நறுக்கின கேரட் துண்டுகளை பெண் வாயில் போட்டுக் கொண்டது.

'ஒரு பர்ட்டிகுலர் ஏஜ்ல ஏம்மா லவ் வர்றது?' தெரிந்து கேட்டதா... தெரிந்துகொள்ளக் கேட்டதா?

இது வினாவா? இல்லை, விவாத ஆரம்பமா?

என்ன விதமாய் கேட்கப்பட்டாலும் இதற்கு பதில் கிடைக்காது. 'ச்சீ... போ அந்தண்டை... துக்கிரித்தனமா ஏதாவது பேசிண்டு...'

அம்மா அப்படிச் சொல்லவில்லை, கொஞ்சம் இதம் காட்டினாள்.

"மனசுதான் காரணம் ராஜி. ஆம்பளைங்களை ரொம்ப நல்லவான்னு நினைக்கிற வயசு இது. இந்த வயசுப் பொண்கள் கிட்ட ஆம்பளைகள் நல்லவாளா நடிப்பா. இதான் விசேஷம்"

"ஏன் நடிக்கணும்?"

"ஆம்பளைக்கு எப்பவும் பொம்மனாட்டி யவனம் தேவைப்படறது."

"பொண்ணுக்கு அப்படித் தோணாதா?"

"என்னன்னு?"

"ஆம்பளை யவனம் அது இதுன்னு..."

"தோணக்கூடாது குழந்தை. இதை பாபம்னு பெரியவா சொல்லியிருக்கா."

"ஏன்?"

"பொம்மனாட்டிக்கு ஒண்ணு வேணும்னு தோணித்துன்னா எப்படியும் அடைஞ்சே ஆகணும்னு ஒரு வெறி வந்துடும். என்ன விலை கொடுத்தாவது வாங்கணும்னு தோணும். ஊர்ல காது வளையம் வந்ததுன்னா உன்னால சும்மா இருக்க முடியறதா?"

திக்கென்றது ராஜிக்கு.

"மண்டையை உடைக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கு உட்கார்ந்து எழுதி அனுப்பி வாங்கணும்னு தோணித்தில்லையா... அதுமாதிரி தோணிடும். வாங்கி மாட்டிவிட்ட பிறகுதான் ஐயோ, இதுக்கு இத்தனை சிரமமான்னு தோணும். நம்ம புத்தி அப்படி."

"ஆம்பளை அப்படியா?"

"ச்சீ... ச்சீ... இந்தப் பழம் புளிக்கும்னு போயிடுவான். அலட்டிக்க மாட்டான். வேற மரம் — வேற பழம். ஆம்பளைக்கு இயல்பாகவே தங்கற புத்தி இல்லை. இடம் இடமா அலையற புத்தி."

"லவ் தப்புங்கறயா, ரைட்டுங்கறயா?"

"நல்லபடியா முடிஞ்சுட்டா ரைட்டும்பா. குழப்ப மாயிடுத்தோ... தப்பு, துக்கிரித்தனம், துஷ்டைன்னு பேசுவா."

"லவ் எப்படி முடியணும்?"

"கல்யாணத்துல. கழுத்துல தாலி வாங்கற வரைக் கும்தான் லவ். அப்புறம் குடும்பபாரம் சுமக்கணுமே. லவ் பண்ணினாலும் பண்ணாட்டாலும் வாழ்ந்துதானே ஆகணும்."—அவள் அர்த்தம் இது.

"இது டேஞ்சர்ங்கற..."

"எதுக்கு நொய் நொய்ன்னு கேட்டுண்டு... யாரை யாவது லவ் பண்ணித் தொலையறியா?"

"ச்சீ... ச்சீ!"

"எங்கயாவது இசகுபிசகா நடந்து ஆப்பு அசைச்ச குரங்கா மாட்டிக்காதே... அடக்கமா இரு. உனக்குன்னு ஒருத்தன் தலைல எழுதியிருக்கும். வருவான்... வராத போகமாட்டான். நம்மைவிட ஏழை—பாழை வீட்ல எல்லாம் கல்யாணம் ஆறது. போ... போய் படி. நாலு காசு சம்பாதிக்கற இடத்தில் நில்லு. உன் மேல ஆசைப் படலைன்னாலும் உன் காசுக்கு ஆசைப்பட்டாவது எவனாவது வருவான். போய் படி... போ!"

புத்தகம் எடுத்துப் பிரித்தாள்.

வயிறு கலங்கியது. மனசு குழம்பித் தவித்தது. நாளைக்கு பட்டீஸ்வரம் போகலாமா... வேண்டாமா? ஆப்பு அசைத்த குரங்கா ஆயிடும்னாளே அம்மா. எது

ஆப்பு... நன்னடத்தை? எது மரம்... ஊர், கும்மோணம். நன்னடத்தை அசைய கும்மோணம் கௌவ்விக் கொள்ளும்... கால் நசுக்கும்... வீறிட வைக்கும்.

'வேணம்பா... நான் போக மாட்டேன்.'

'சும்மா கோயிலை சுத்தற மாதிரி வா. அங்க தனியா உட்கார்ந்து பேச இடம் இருக்கு. நாம இருக்கறது யாருக்கும் தெரியாது. ஏதாவது பாடலாம்... பேசலாம் ராஜி. இங்க புழுங்கறது. குசுகுசுன்னு பேசிண்டிரு. அடித் தொண்டைல பாடிண்டு வா'— மனசுள் ராஜசேகர் கெஞ்சினான்.

''போ, போய் படி. நாலு காசு சம்பாதிக்கற அளவுக்காவது படி. உன்மேல ஆசைப்படலைன்னாலும், உன் காசுக்கு ஆசைப்பட்டாவது எவனாவது வருவான். நம்மவிட ஏழைபாழை வீட்ல எல்லாம் கல்யாணம் நடக்கலையா என்ன?''

ராஜி படிக்கத் துவங்கினாள்.

''அழகிய மிதிலை நகரினிலே
யாருக்கு ஜானகி காத்திருந்தாள்...''

எதிர்வீட்டு ரேடியோ விவித்பாரதியைத் துப்பிற்று... படிப்பில் புத்தி பதிய மறுத்தது.

இந்தப் படம் பார்த்திருக்கிறாள். பெரிய காரில் பீச்ரோட் முழுக்க சுற்றி வருவார்கள். சச்சு ஹீரோயின்... ஹீரோ யாரோ புதுசு. மெட்ராஸ்... மெட்ராஸுக்குப் போயிடணும். பீச் முழுக்க லவர்ஸ்ஸாம். ஜோடி ஜோடியா சுத்திண்டிருப்பாளாம். தமயந்தி சொல்லியிருக்

கிறாள். கும்மோணத்தில் லவ் பண்ண இடம் இல்லை. எதுவும் ரகஸ்யமில்லை.

"இங்கே வாடி குழந்தை..."

பள்ளிக்கூடம் போகும்போது ஒரு ஐம்பது வயதுக் கிழவர் விரல் வளைத்துக் கூப்பிட்டார்.

"உனக்குத்தான் போன வாரம் உட்கார்த்தி வச்சுப் புட்டு சுத்தினாளா?" வெற்றிலைச் சாறு மார்பில் விழாது தலை தூக்கிக் கேட்டார்.

"ஆமா!"

"உன் நட்சத்திரம் என்ன?"

"ரேவதி!"

"என்னிக்கு உட்கார்ந்தே?"

"எய்டீன்த்!"

"ராத்திரில்யா, பகல்லயா?"

"பகல்!"

"ம்ம்... ஆயில்யம். சரி போ."

"என்ன மாமா?"

"சரி போ... உங்கப்பாக்கிட்ட பேசிக்கறேன்."

கூப்பிட்டு நிறுத்தி சகலமும் கேட்டு எது கேட் கிறோம் என்கிற விவஸ்தையில்லாமல், எதற்கு கேட்

கிறோம் என்கிற விவரம் சொல்லாமல் விரல் வளைத்துக் கூப்பிட்டு... மகா அலட்சியம். மூக்கு நுழைக்கிற திமிர். பொய் கலந்த நடவடிக்கை.

மெட்ராஸில் பக்கத்துப் போர்ஷன்காரர் பெயர்கூட தெரியாதாம். கேர்ள்ஸுக்கு நடுவே பென்சில் பேனா கடன் கேட்பது பிடிக்காதாம். பென்சில் கேட்டால், 'இந்தா, இதை நீயே வச்சுக்க. அடிக்கடி கடன் கேட்காதே'—பட்டறுத்தது போல பேசி விடுவார்களாம்.

"ஜாலியா இருக்கவே மாட்டாளாடி கேர்ள்ஸ்?"

"இருப்பா. கார்ல போறவ நடந்து போறவளுக்கு லிஃப்ட் தரமாட்டா. நடக்கறவளும் கேட்க மாட்டா, இங்கதான் பென்சில் குடுடி. பேனா குடுடி. உன் பூவுல பாதி குடுடி. ஒருத்தி வச்ச பூவை இன்னொருத்தி வச்சுக்கலாமா... வ்வுவே!"

"பிரெண்ட்ஷிப்தானே?"

"நோ! இப்படித்தான் பிக்னிக் போறபோது கேக் இருக்கா... கேக் இருக்கான்னு ஒரு பொண் அலைஞ்சு, ஆறேழு பேர்கிட்ட கேக் வாங்கி சாப்பிட்டிருக்கு. மறு நாளே ஆளுக்கு கொஞ்சம் கலெக்ட் பண்ணி, பெரிய கேக் வாங்கிண்டு வந்து, ஒரு மெழுகுவர்த்தி ஏற்றி 'ஹேப்பி பர்த் டே'பாடி அவளை அறுக்கச்சொல்லி, இது உன் கேக் நீயே தின்னுனுட்டாளாம். அன்னிலேர்ந்து அந்தப் பொண்ணு யாரையும் எதையும் கேட்கறதில்லை யாம். இங்க ஒருத்தி டிபன் பாக்ஸ்ல இன்னொருத்தி விரல் விட்டு சாதம் எடுக்கறதப் பார்க்கறபோது குமட்டறது."

''திங்கறதையே பேசாதடி, மெட்ராஸ் லவ் பத்தி சொல்லுடி.''

''மெடிக்கல் காலேஜ்ல என் அத்தைப் பொண்ணு படிக்கறா... சொர்ணலதான்னு பேரு, அவ செகண்ட் இயர் படிக்கறபோது சீனியர் ஸ்டூண்ட்கிட்ட பாடத்துல சந்தேகம் கேட்டுருக்கா. அழகா சொல்லிக் கொடுத் தானாம். ரொம்ப கெட்டிக்காரனாம். அடிக்கடி பாடம் நடத்திட்டு ஒரு நாள் லவ் யூன்னானாம். இவளும் சரி, இன்னும் மூணு வருஷம் இருக்கு படிப்பு முடியறதுக்கு. நன்னா சொல்லித் தரான், இருக்கட்டுமேன்னு சரின்னா ளாம்.

''ஆனா அந்த படவா அடிக்கடி ஹாஸ்டலுக்கு வந்து தொந்தரவு பண்ணியிருக்கான். குடிச்சிட்டு வந்து பேத்தியிருக்கான். சினிமாவுக்கு வா... ஓட்டலுக்கு வான்னு தினம் தொந்தரவு. இவ பொறுக்க முடியாம அந்த பையனோட அப்பாவுக்கு 'பையன் சீரியஸ்! ஸ்டார்ட் இம்மீடியட்லி'ன்னு தந்தி கொடுத்துட்டா. அவங்க வீட்ல அலறிஅடிச்சு வந்துட்டாங்க. பையன் முழிக்கிறான். சொர்ணலதான்னு தந்தில பேர் இருக்கு. வந்து விசாரிச்சான் அப்பாவோட...

''அவ தனியா அப்பாவைக் கூட்டிண்டு போய் உங்க பையன் பாடம் நன்னா சொல்லித் தரான்னு பழகினேன். இப்ப ரொம்ப தொந்தரவு பண்றான். அவனும் சரியா படிக்கறதில்லைன்னு சொல்றாங்கன்னா. ...அங்கயே பெல்ட் அடி பையனுக்கு. அந்தப் பொண்ணு பக்கம் போனா புள்ளைன்னு பார்க்காத வெட்டிருவேன்னு அலறல்...

''ஐயோ!''

"அதோட லவ் முடிஞ்சு போச்சு..."

"என்ன தைரியம்டி?"

"இந்த தைரியம் இருந்தாதான் லவ் பண்ணலாம்."

"இது லவ்வேயில்லை. அவனை அவ யூஸ் பண்ணியிருக்கா."

"லுக் ஹியர்! எல்லோரும் எல்லாத்தையும் யூஸ் பண்ணிக்கறோம். யூஸ் இல்லாதவாகிட்ட பேசமாட்டோம்."

"அப்போ தெய்வீகக் காதல்ங்கறது?"

"தெய்வீகக் காதல்னு யாராவது சொன்னா நம்பவே நம்பாதே."

"ராமர்—சீதை லவ் கூடவா?"

"ராமரும் சீதையும் பணக்காரா. கேட்டது வாங்கித் தர அப்பா அம்மா இருக்கா. நிலாவக் கேட்டாலும் வாங்கித் தருவா. உனக்கு ஜாமெட்ரி பாக்ஸ்ஸே வழியில்லை. யாரை லவ் பண்ணுவே?"

"லவ் பண்ண காசு வேணும்கறயா?"

"ஈக்வல் ஸ்டேட்டஸ் வேணும். வில் ஒடிக்கற தைரியம் வேணும். சப்போஸ் ராமர் வில் ஒடைக்கலைன்னு வச்சுக்கோ..."

"எப்படிடீ?"

"ஒடைக்கலை...நழுவி பொத்துன்னு தரைல விழுந்துடுத்து, சீதை லவ் என்ன ஆகும்?"

பெண்கள் பேசாதிருந்தார்கள். யோசிக்க முடியாமல் தவித்தார்கள்.

''நீ சொல்லேன், என்ன ஆகும்?''

''சீதை யாரையாவது கல்யாணம் பண்ணியிருப்பா. ராமரை மறந்து போயிருப்பா. அப்போ சீதையும் ராமரும் பார்த்தது என்ன? அது லவ்வா? இல்லை அட! இவன் நன்னா இருக்கானே'ன்னு ஒரு ஆவல்! 'அட! இந்த பொண் ரொம்ப அழகா இருக்காளே'ன்னு ஒரு ஆவல்! அவ லவ் பண்ணது கல்யாணத்துக்கப்பறம்... ஆகவே, சகோதரிகளே...ஆவலோட பார்க்கறது தப்பில்லை. ஆனா மாட்டிக்காதீங்க. உங்களுக்குன்னு ஒரு சுயம்வரம் உண்டு. சொஜ்ஜி, பஜ்ஜி உண்டு.''

''சினிமால ஏ க்ளாஸ் லவ் காட்டறானேடி.''

''சினிமாலயா? ஏ க்ளாஸா? ஒரு பாட்டு பாடட்டுமா?''

'முத்துச் சிப்பி வாய் திறந்து
மோகம் கொண்டு தவித்திருக்க
கொட்டும் மழை துளி விழுந்து
கொஞ்ச கொஞ்ச என்ன வரும்?'

—தமயந்தி பாடினாள்.

'முத்து ஒன்று பிறந்து வரும்...' பிற பெண்கள் கடைசி வரியில் கலந்து கொண்டார்கள்.

''உங்கள்ல யாராவது ஒருத்தருக்கு இதுக்கு அர்த்தம் தெரியுமா?''

''ஒரு சிப்பி கடல்ல வாய் திறந்து இருக்கு. மழை விழுறது. சிப்பி மூடி மழைத்துளி முத்தா மாறுது...''

''சனியனே! கடலைப் பார்த்தா பாடறான் ஹீரோ?''

''ஹீரோயினைப் பார்த்து...''

''அப்ப...என்ன அர்த்தம்? புரியலையா?''

''புரியறதுடி!''

''செக்ஸ்...சிம்பிள் செக்ஸ்...லவ் இல்லை.''

''குழப்பறாடி.''

''வுட்டுரும்மா. உங்களுக்கு புரியலை ... புரியவும் புரியாது.''

ராஜிக்குப் புரிந்தது. தமயந்தி கர்வி. ஆனால் கெட்டிக்காரி. அப்போது புரிந்ததைவிட இப்போது உட்கார்ந்து யோசிக்கறபோது புரிகிறது.

அம்மா சொன்னதும். தமயந்தி சொன்னதும் ஒன்றே, வேண்டாம்...லவ் வேண்டாம். பட்டீஸ்வரம் போக வேண்டாம். இனி ஜன்னல்கூட தாண்ட வேண்டாம். டேஞ்சர். என்னால் சண்டைக்குப் போக முடியாது. என்னால் தகப்பனிடம் விவரம் சொல்ல முடியாது. ராஜசேகர், ஸாரி, நான் வரமாட்டேன்.

''அப்படி ஒருவேளை அவ வரலைன்னு வச்சுக்க... என்னடா பண்ணுவ?'' — ராஜசேகரின் நண்பர்கள் கேட்க—

ராஜசேகர் யோசித்தான். "அதுக்கு ஒரு ஐடியா வச்சுருக்கேன். இரண்டு பர்கோலக்ஸ் போட்டுண்டு கடைக்குப் போய் படுத்துக்கறேன். நீங்க வந்து என்னை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிடுங்க. கவர்மெண்ட் ஆஸ்பத்திரி வேண்டாம். ப்ரைவேட் நர்ஸிங் ஹோம்..."

"அவ என்ன ஏதுன்னு கேட்டா?"

"நான் சொல்லிக்கறேன்!"

வலை பின்னப்பட்டது. புறா வந்து விழுந்தது.

வீட்டில் இருந்தால் மனசு பட்டீஸ்வரத்துக்கு உந்தித் தள்ளும் என்று தோன்றிற்று. போகலாமா வேண்டாமா என்கிற உள்மன விவாதம் வேதனையாய் இருந்தது. மறக்க சிநேகிதி வீட்டுக்குப் போனாள். சிநேகிதியுடன் டீச்சர் வீட்டுக்குப் போனாள்.

டீச்சருக்கு நாற்பது வயசு. இங்கிலீஷ் மிஸ். வகுப்பில் மட்டும்தான் இங்கிலீஷ் பேசுவாள். மற்ற எல்லா இடங்களிலும் தமிழ்தான். லீவு நாட்களில் தூங்கி எழுந்த முகமும், அள்ளி முடித்த தலையும், கசங்கின புடவையுமாய் அவள் பாலத்துப் பக்கம் வந்து காய்கறி வாங்குகிறபோது அவளுக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும் என்று சொன்னால் நம்ப மாட்டார்கள்.

"என்னடி... குட்டிகளா... திடீர்னு இந்தப் பக்கம்?"

"போரடிச்சுது டீச்சர். வந்தோம்."

"ஆலு மட்டர் பண்ணலாமா குட்டிகளா?"

"என்ன டீச்சர் அது?"

"திங்கறது..."

"நான்-வெஜ்ஜா?"

"இல்லை. உருளைக் கிழங்கு குருமா மாதிரி. சப்பாத்தி, பூரிக்கு தொட்டுக்கறதுக்கு. இதுல போட்டிருக்கு. படி!" —பெண்களுக்கான ஆங்கில வாரப் பத்திரிகை காட்டினாள்

"ராஜி...நீ மெல்லிசு மெல்லிசா பூரி இடு. நானும் இவளும் ஆலுமட்டரை பண்றோம்."

மாவு பிசைந்து அடிக்கும்போது ஏண்டா இங்கே வந்தோம் என்று தோன்றி விட்டது.

"எங்கேயோ பார்த்துண்டிருக்கியே ...அடிச்சுப் பிசை ராஜி. அப்பதான் மெத்து மெத்துன்னு வரும் பூரி."

'பேசாமல் பட்டீஸ்வரம் போயிருக்கலாமோ...'

கண்ணன் ஒரு கைக்குழந்தை
கண்கள் சொல்லும் பூங்கவிதை...

சிலோன் பாடிற்று. தோள்பட்டை வலிக்க சலவைக் கல்லில் ஓங்கி ஓங்கி ராஜி மாவு அடித்துப் பிசைந்தாள்.

"டீச்சர், நான் ஒண்ணு கேட்கறேன், தப்பா நினைச்சுக்க மாட்டேளே..." சிநேகிதி பேசத் துவங்கினாள்.

"கேளு...என்ன கேட்கப் போறேன்னு தெரியும்."

"என்ன, சொல்லுங்கோ..."

"ஏன் நீங்க கல்யாணம் பண்ணிக்கலை?"

"......"

"கேட்டது தப்பா டீச்சர்..."

"தாராளமா கேட்கலாம். ப்ளீஸ் டு ஸ்டுடன்ட்ஸ்... உங்களுக்குன்னு சில ஐடியாஸ் இருக்கும். கல்யாணம் பத்தி ..செக்ஸ் பத்தி...இது டிஸ்கஸ் பண்றது நல்லது. வெளிநாட்ல இதெல்லாம் பாடமாவே வைக்கிறாளாம். நம்மூர்ல பேசினா கர்மம் கர்மம்ன்னு பொம்மனாட்டியே தலைல அடிச்சுண்டு போயிடறா. நீ என்ன காரணம் இருக்கும்னு நினைக்கிற..."

"லவ் ஃபெயிலியர்..."

"நோ!"

"வீட்ல கஷ்டம். பெரியவா சிரத்தை எடுத்துக்கலை."

"எம்.ஏ. படிக்க வச்சவாளுக்கு கல்யாணம் கஷ்டமா..."

"பிறகு?"

"எனக்குப் பிடிக்கலை."

"ஏன் டீச்சர்?"

"ஆம்பளை டாமினேஷன் எனக்குப் பிடிக்கலை. எங்கம்மா ரொம்ப கஷ்டப்பட்டா, எங்கப்பாக்கிட்ட

நாங்கள்ளாமும் பட்டோம். அதுலேர்ந்தே வெறுப்பு. உத்தியோகத்துக்குப் போறதுன்னு முடிவு பண்ண உடனே தீர்மானம் பண்ணிட்டேன் நமக்குக் கல்யாணம் வேண்டாம்னு. இன்னிக்கு ,லீவு. பார்...உட்கார்ந்து புக்கைப் பார்த்து ஏதாவது புதுசா சமையல் குறிப்பு படிச்சு பண்ணிப் பார்க்க முடியறது. பொழுதும் போறது. தீனிக்குத் தீனி."

"போரடிக்கலையா?"

"ஏன் போர்? நாமா ஏதாவது இழுத்துப் போட்டுண்டு செய்யணும். எம்.ஏ. தமிழ் படிக்கிறேன். முடிச்சா ஏதாவது தீஸிஸ் சப்மிட் பண்ணி டாக்டர் பட்டம் வாங்கு வேன். சைட் பை சைட் காலேஜுக்கு ட்ரை பண்றேன். டெல்லியில ஒரு காலேஜ்ல கூப்பிட்டா. வேண்டாம்ன் னுட்டேன்..."

"ஏன் டீச்சர்?"

"தினம் ஆலுமட்டர், சப்பாத்தின்னு திங்கணும். நாலு மாசம் குளிர் கொன்னுடும். எனக்கு மெட்ராஸே பிடிக் கலை."

"ஏன் மெட்ராஸ் பிடிக்கலை?"

"ரொம்ப சோஷியல்னு சொல்லிண்டு ஆம்பளைகள் பேச வந்துடறா. பேசலைன்னா பட்டிக்காடுங்கறா. கும்மோணம் தவுஸன் டைம்ஸ் பெட்டர், லேடீஸுக்கு சவுத் ஸைடில மரியாதை இருக்கு. டீச்சர்னா கூடவே மரியாதை இருக்கு. பள்ளிக்கூடம் விட்டா வீடு. வீடு விட்டா பள்ளிக்கூடம். ஏகத்துக்கு கோயில். பொழுது போயிடும்."

''கடைசி காலத்துல கஷ்டம் வந்தா?''

''யாராவது எடுத்துப் போவாடி....அறுவது வயசு வரைக்கும் தெம்பு இருக்கும். அப்புறம் கஷ்டப்படும். ஒரு அஞ்சு வருஷம். அதுக்கு மேலயா உசிரோட இருக்கப் போறோம்? சமைக்க முடியலைன்னா ரெண்டு இட்லி வாங்கி தின்னுடலாம். அதுக்கு காசு இருக்கும். கடைசி காலம் காப்பாத்தணும்ன்னு ஆயுஸு முழுக்க ஜெயில்ல இருப்பாளா, கொள்ளி போட புள்ளை வேணும்னு உழைச்சு ஓடா தேய்வாளா?''

''ஒரு ஆண் துணை வேண்டாமா?''

''அதெல்லாம் சீவி சிங்காரிச்சு உடுத்திண்டு போறவளுக்கு வேணும். ஏன் இங்கிலீஷ் டீச்சர்... இப்படி பங்கரையா இருக்கான்னு என் காது படவே பேசறா. எனக்குத் தெரியாதா அது. என்னால உடுத்திக்க முடியாதா? வேண்டாம்னுதான்...''

''நான் கேட்கறது அது இல்லை டீச்சர்...''

''செக்ஸுக்கு என்னான்னு கேட்கறயா?''

''நோ...அது இல்லை.''

''கேளேன்...அதெல்லாம் இருபத்தஞ்சு வயது வரைக்கும்தாண்டி. இரண்டு வேளை பச்சைத்தண்ணில குளிச்சு நரசிம்மர் படத்துக்கு முன்னாடி உட்கார்ந்து ஸ்ரீராம ஜெயம் கார்த்தால நூறு,சாயங்காலம் நூறு எழுது. ஓடியே போயிடும்.''

''அப்ப கல்யாணம் பண்ணிண்டவா...''

"நூத்துல் எண்பது பெண்கள் கம்பல்ஷன்ல கல்யாணம் பண்ணிக்கறா. பத்து பேர் இது ஒரு ஸ்டேட்டஸ்னு நினைச்சுக்கறா. பத்து பேர் என்னை மாதிரி வம்பே வேண்டாம்னு நகர்ந்துடறா..."

"நாங்க கல்யாணம் பண்ணிக்கறது நல்லதா, கெட்டதா?"

"உங்க தலையெழுத்து... உன் இஷ்டம்மா அது."

"அப்ப லவ்..."

"ப்ளீஸ் டோன்ட் டூ. எவனா உன்னை லவ் பண்றேன்னா செருப்பைக் கழட்டி எடுத்துக்கோ. ஆம்பளை லவ் எதுக்குன்னு தெரியாதா...தொடணும். தொடாம ஒரு கம்மனாட்டிய லவ் பண்ணச் சொல்லு பார்ப்போம். அதுக்கு என்ன பொய் வேணா சொல்லுவான். இந்தா இதை அப்படியே ஆட்டுக்கல்ல ஒரு சுத்து சுத்தி எடுத்திடு. மாவு பிசையலையாடி....என்ன அப்படியே உட்கார்ந்திருக்க?"

"எனக்கு ஒரு கேள்வி..."

"என்ன?"

"தொடாம இருக்கறதுதான் லவ்வுன்னா நம்ம உடம்புல சில உணர்ச்சிகள் இருக்கே... அது எதுக்கு?"

டீச்சர் உறுத்துப் பார்த்தாள்.

"கொழுப்பு. மனசு கொழுப்பு. உடம்புக் கொழுப்பு. உனக்கு உணர்ச்சி மட்டுமா கொடுத்திருக்கார்

கடவுள்? புத்தி தரலையா? உனக்கு தாகம் எடுக்கறது. போய் ஸ்கூல் பானைல தம்ளர் விடறே. அடி வண்டலா இருக்கு. எடுத்து குடிச்சுடுவியா? தாகத்தை அடக்கிப்பியோன்னோ...அதே மாதிரிதான் தாகத்தைக் கூட அடக்கிக்க முடியாதவா வேறு எதை அடக்கிக்க முடியும்?''

''உலகத்துல நல்ல ஆம்பளையே இல்லேங்கறேளா, டீச்சர்?'' —சிநேகிதி கேட்டாள்.

''இருக்கலாம். நான் மறுக்கல. ஆனா சல்லடை எடுத்துண்டு போய் சலிச்சு நல்ல ஆம்பளையா பொறுக்கிண்டு வர வாய்ப்பு உனக்கோ, எனக்கோ, இவளுக்கோ இருக்கா? இதுக்கு உரைகல்லு இருக்கா? தராசு உண்டா? இருந்தாலும், எடைபோட உனக்கு அனுமதி உண்டா? இல்லையே...காளான்ல புரோட்டீன் ஜாஸ்தின்னு இதுல போட்டிருக்கு. எப்படி அரை வேக்காடா வதக்கி, உப்பு மிளகா போட்டு கறி பண்ணலாம்னு போட்டிருக்கு. எந்தக் காளான் சாப்பிடலாம்? அது அனுபவத்துல தெரியுமாம். சிலது சாப்பிட்டா, சாப்பிட்டு இரண்டு நிமிஷத்துல மரணமாம். அதுவும் போட்டிருக்கு: சாப்பிடத் தோணுமா? சமைக்க மனது வருமா? எதுக்கு இழவு காளானும் கறியும்? ஹை புரோட்டீனா இருந்தாலும் எனக்கு வேண்டாம்னுதான தோணும்? அத்தனை ஆம்பளையும் காளான். நல்ல காளான்,கெட்ட காளான், விஷக்காளான்-யார் கண்டுபிடிக்கறது? தின்னதுக்கப்புறமா...''

''எல்லா கல்யாணமுமா ஃபெயிலியர்? எங்கப்பா—அம்மா சந்தோஷமாதான் இருக்கா டீச்சர்.''

"நன்னா இருக்கட்டும். பாட்டு டீச்சர் வீட்டுக்காரர் துணி தோய்ச்சுப் போடறாராம். பக்கெட் பக்கெட்டா ஜலம் இறைப்பாராம். மாசத்துல மூணு நாள் சமைப் பாராம். இன்னிக்கு எங்காத்துக்காரர் பண்ண குழம்பு டேஸ்ட் பாருங்கோன்னு பெருமையா பீத்திப்பா அவ. கொடுப்பினை போனஜென்மத்துப் புண்ணியம். அது இல்லைன்னு வச்சுக்கோ. என்ன ஆகும் ஒருத்தி கதி?"

"பயம்மா இருக்கு, நீங்க பேசறது கேட்டா..."

"ச்சே...ச்சே...நல்லபடி கல்யாணம் ஆகி, அவளா பெத்து செளக்கியமா இருக்கணும். என் மனசு இதுக்கு ஒப்பலை. அவ்வளவுதான். இது இப்படி இருக்கறது ஒரு சந்தோஷம்."

"ஆலுமட்டர் கொதிக்கறது டீச்சர், வாசனை வர்றது..."

"நான் இறக்கிக்கறேன். போங்கடி குட்டிகளா. போய் படிங்கோ, கனா காணாம..." கிட்டத்தட்ட துரத்தினாள்.

ராஜி தெருவில் ஸ்நேகிதியுடன் இறங்கி நடந்தாள்.

"இரண்டு பூரி கொடுக்க மனசு ஆகலை. இந்தப் பேச்சு பேசறா..."

"ஏன் பூரி...பசிச்சுதா..."—ராஜி கேட்டாள்.

"பசியெல்லாம் இல்லை. சும்மா தின்னு பார்க்கலா மேன்னு தோணித்து. போங்கடி போங்கடீன்னு துரத் திடுத்து. இது எப்படி குடித்தனம் பண்ணும்? யாரைக் கல்யாணம் பண்ணும்?"

"ஏன், இதுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்குடி, லவ் பண்ண ஒரு மனசு வேணும். ஐயோ என் பூரில இரண்டு குறைஞ்சிடுமேங்கறது சுயநலம். நான் காப்பி தம்ளரை எடுக்கறபோது நீ வந்துட்ட. உனக்கு ஒரு வாய் கொடுக்காம எனக்கு உள்ள போகாது. இயல்பா உடனே சாப்பிடுடின்னு ஒரு உபசரிப்பு வரும். உனக்கு தோணுமா, தோணாதா?"

"தோணும்."

"இவளுக்குத் தோணலை."

"டீச்சர் சொல்றது தப்பா?"

"தப்புத்தான்."

"லவ் உண்டா?"

"நிச்சயம் உண்டு."

"உனக்கு லவ் பண்ண ஆசை இருக்கா?"

"நிச்சயம் இருக்கு."

"யாரையாவது பண்றயா?"

"இல்லை."

"ஏன் பண்ணலை?"

"எனக்கு வேற வேலை இருக்கு ராஜி. நான் படிக்கணும்—நிறைய படிக்கணும். எங்கப்பா கல்யாணம்னு சொல்லி ஆள் பார்த்து நிறுத்தறப்போ நிச்சயம் அவனை நான் லவ் பண்ணுவேன்."

''நல்ல காளான்...கெட்ட காளான்...''

''காளான் சாப்பிட்டுதான் செத்துப் போவாளா? கத்திரிக்கா சாப்பிட்டும் செத்துப் போலாம். சோறு விக்கி செத்துப் போலாம்.''

''ஆலுமட்டர் என்ன அமிர்தமா? சட்டி நிறைய பண்ணி தானே திங்கறாளே. வயத்தால போகாதா... அதுல மரணம் வராதா கிடக்கா...''

''தாகம் அடக்கணும்கறாளே...''

''ஏன் அடக்கணும் ராஜி? தாகம் இயல்பு. தாகம் எடுத்தா தண்ணி குடிக்கறது இயல்பு. பானையிலிருக் கிறது அடிமண்டல்னா வேற பானை, வேற இடம் தேடிப்போய் குடிப்போம். எத்தனை நாள் அடக்குவே?''

''குழப்பமா இருக்குடி.''

''ராஜி, இதையெல்லாம் போய் கேள்வியா கேட்கக் கூடாது, கேட்டா வேதமா எடுத்துக்கக் கூடாது. யாருமே எப்பவுமே கெட்டவா இல்லை. எங்கப்பா எங்கம்மாவைத் திட்டுவார். அவர்தான் பட்டுப்புட வையும் வாங்கித் தருவார். கணக்குல நான் பெயிலான துக்கு வெளிய போடின்னு கத்தினார். ஜுரம் வந்து படுத்தபோது ஆஸ்பத்திரி, ஆஸ்பத்திரியா தூக்கிண்டு போனார்.''

''லவ் பண்றது சரிங்கறயா?''

''எங்க அக்கா லவ் பண்ணா. ஆ... ஊன்னு முதல்ல குதிச்சார். வீட்டை விட்டு ஓடிப் போயிடு

வாளோன்னு பயம். போய் பேசினார். சிம்பிளா கல்யாணம் நடந்தது. இன்னிக்கு எங்க அத்திம்பேர் தான் சகலத்துக்கும். அப்படி எங்கக்கா அவரை தன் பிடில வச்சிண்டிருக்கா. பிளான் பண்ணி ஜெயிச்சா.''

''லக்கும் வேணுமே...''

''லக் எப்ப வரும்? குலுக்கி சோழி போட்டாதானே தாயமா இல்லையான்னு தெரியும்?''

''காம்ப்ளிங்...''

''எல்லாம் காம்ப்ளிங்தான். டீச்சர் மாதிரி கதவு சாத்தி ஆலுமட்டரும், பூரியும் திங்கறது பைத்தியக்காரத்தனம். வரட்டுமா...''

தோழிகள் பிரிந்தார்கள்.

ராஜி யோசனையுடன் வீடு நோக்கி நடந்தாள். தெரு திரும்ப, வீட்டு வாசலில் கூட்டம் தெரிந்தது. நடையை விரைவாக்கினாள். அவனை ரேழியில் போட்டிருந்தாள், அம்மா அவன் தலையை மடியில் போட்டு உட்கார்ந்திருந்தாள். சைக்கிள் ரிக்ஷா ப்ரேக் ஓலத்துடன் நின்றது.

''என்ன ஆச்சும்மா?''

''வயித்த வலிக்கறதுன்னு துடிக்கறாண்டி. டாக்டருக்கு ஆள் போச்சு. கூட்டிண்டு வா பார்க்கறேன்னுட்டாராம்.''

''பிடிப்பா கொஞ்சம்.'' அவன் நண்பர்கள் அவனைத் தூக்கி ரிக்ஷாவில் படுக்க வைத்தார்கள்.

''என்ன ஆச்சு திடீர்னு...'' ராஜி கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை. அரைக் கண் செருகி சாய்ந்து கிடந்தான். ராஜியின் அம்மா போர்வை எடுத்து வர உள்ளே ஓடினாள். ஒரு பையன் அருகே வந்து மடித்த கடிதத்தை கதவிடுக்கில் சொருகினான். ''அவன் எழுதின லெட்டர். என்னமோ தப்பா சாப்பிட்டிருக் கான், ப்ளீஸ், வெளியே சொல்லாதீங்கோ...'' சைக்கிள் ரிக்ஷா நகர, கூடவே ஓடினான். அவள் சட்டென்று கதவிடுக்கிலிருந்து எடுத்து ஜாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டாள். அம்மா போர்வையுடன் வந்து, ''எங்கடி—'' என்று கேட்டாள்.

''கொடு...நான் கொண்டு போய் கொடுத்துட றேன்.''

டீச்சர் வீட்டுக்கு நடந்து போய் நடந்து வந்தது; ரொட்டி மாவு பிசைந்தது எல்லாம் அயர்ச்சியாய் இருந்தது. தாகம் தொண்டை வறட்டிற்று. ராஜி அடக்கிக் கொண்டாள். ரிக்ஷாவுக்குப் பின்னே நடந்தாள்.

''என்னப்பா ஆச்சு உனக்கு?'' உள்ளே டாக்டர் குரல் கேட்டது.

தணிந்த குரலில் ராஜசேகரன் ஏதோ பதில் சொன்னான்.

''எத்தினி நாளா...நாக்கு நீட்டு. போதும். போதும். என்ன சாப்பிட்டே...எப்போ... எவ்வளவு? சேர்ந்துக்கறியா...அன்வர், பேஷண்ட்ட உள்ள கூட்டிட்டு போய் சலைன் தொங்க வுடு. நான் வரேன்.''

தள்ளுக் கதவு திறந்து ராஜசேகர் அன்வர் தோளில் சாய்ந்து மெல்ல நடந்து வந்தான். வராந்தாவின் எதிர்முனையில் ராஜி நிற்பதை கவனித்தான். அன்வரிட மிருந்து நண்பர்கள் ராஜசேகரை வாங்கிக் கொண் டார்கள்.

''ஆறாம் நம்பர் பெட்.''

''பெட்டா? ரூமில்லையா?''

''ரூமுக்கு கூட இருவது ரூபா ஆவும்.''

''அங்க கூட்டிட்டு போ.''

''ஒரு நாளைக்கு இருபது ரூபா. மொத்தமான்னு நினைச்சுக்கப் போற...பின்னால தகராறாயிடும்.''

''யோவ்...உத படுவ நீ.''—நண்பர்களை விலக்கிக் கொண்டு அன்வரிடம் போன ராஜசேகர் 'அம்மா' என்று வயிறு பிடித்து உட்கார்ந்து கொண்டான்.

''ரூம் காட்டு பாய்.''

''மாடில முதல் ரூம். இந்தாங்க சாவி. பேஷண்ட் இங்கனயே இருக்கட்டும். நீங்க போய் திறங்க. நான் பெட்ஷீட், உறை எடுத்தாந்துடறேன். கூட்டியிருக் குதா தெரியலை.''

''நல்லா கூட்டி சுத்தம் பண்ணிட்டு கூப்பிடு. கண்ணாமணி, நீ அவரோட போ. நல்ல உறையா வாங்கு. கிழிசலைப் போட்டுருவான். நீ ரூம் திறந் துருடா. நீ எங்கப்பாக்கிட்ட போய் நான் மாயவரம் போயிருக்கிறதா சொல்லிடு. என் வண்டி எங்கடா?''

''ராஜி வீட்டு வாசல்ல...''

''ராஜி நீ போய்...''

ராஜி அருகே வந்து நின்றாள்.

''வேணாம்...டேய் நீ போய்...''

''என்கிட்ட சொல்லு, ராஜசேகர்...''

''வேணாம் ராஜி, உன்னால வண்டி எடுக்க முடியாது. டேய் நீ வண்டிய தள்ளிட்டே ஆஸ்பத்திரிக்கு வந்துரு.'' நாலு பேரும் நாலு திக்கில் பறக்க, ராஜசேகர் தலையைப் பின்னுக்குத் தள்ளி சுவரில் சாய்ந்து கண் மூடிக் கொண்டான்.

''ராஜு...''

''சொல்லு.''

''என்ன சாப்பிட்டே?''

''ப்ச்சு.''

''சொல்லு ராஜு.''

''என்னை ஒண்ணும் கேட்காத ராஜி.''

''என் மேல வருத்தமா?''

''இல்லை''

''எனக்கு பயமா இருந்தது ராஜு.''

''எனக்குப் புரியுது.''

''அப்ப ஏன் கண்டது சாப்பிட்டு...இப்படி...''

''என்னை எனக்குப் புரியலை ராஜி. நான் ஏன் உன் மேல இத்தனை பைத்தியமாயிட்டேன்னு புரியலை. நீ வரமாட்டேன்னு நல்லா தெரிஞ்சும் ஏன் எதிர்பார்க்கறேன்னு புரியலை.''

ராஜி மௌனமாய் இருந்தாள்.

''ராஜி, ப்ளீஸ் நீ போயிடு. என் பிரெண்ட்ஸ் என்னை கவனிச்சுப்பா. நீ போ.''

"ரூம்ல சேர்த்துட்டுப் போறேனே.''

''ரூம்ல சேரப்போறேனா, இல்லை மேலோகத்துக்குப் போப்போறேனா தெரியலை. கண்ணு இருட்டறது. அம்மா...'' வயிறு பிடித்து குனிந்து கொண்டான்.

''நீ பண்றது தப்பு ராஜு. நான் வரலைன்னு கண்டது சாப்பிடறதும், இப்படி வலில துடிக்கறதும்...''

''ராஜி, ப்ளீஸ், நீ போயிடு. என்னை உனக்குப் புரியலை. நான் ஏதோ கெட்ட எண்ணத்தோட கூட்டிடறேன்னு நினைச்சு நீ பயப்படற. கொலுசு வாங்கினேன், ராஜி. நானே உன் கால்ல போட்டு விடணும்னு நினைச்சேன். மெட்டி போடற மாதிரி என் தொடையையே அம்மிக்கல்லா நினைச்சு நானே உனக்கு...வேண்டாம். நான் தனியா மாடிக்குப் போய்க்கிறேன். நீ போ.''

எழுந்தான்; தள்ளாடினான்; சுவர் பிடித்து நின்றான். ரேழியில் நடந்து படியேறி நின்றான். ஒவ்வொரு

படியாய் வயிறு பிடித்துக் கொண்டு நகர்ந்தான். ஆறாவது படியில் நின்று வயிறு அழுத்திக் குனிந்து அவள் பின்னால் நிற்பதை கவனித்தான். மறுபடி தள்ளாடி இரண்டு படி இறங்கினான்.

ராஜி தாவி படியேறினாள். தோள் பிடித்துக் கொண்டாள்.

''முடியலை ராஜி. தலை சுத்து. இரண்டு இரண்டா தெரியுது. நான் செத்துருவேன்னு நினைக்கறேன். ப்ளீஸ், என்னை மாடிக்கு கொண்டு போய்விடு.'' அவள் தோளில் சாய்ந்தான். அவன் புறம் சுற்றி தோளில் போட்டு இடுப்பு பிடித்து தாங்கினாள். மெல்ல தூக்கி படியேறினாள். பிடரி வியர்வை மூக்கில் தாக்கிற்று. கனத்தோடு மேலே சரிந்தவனை இறுக்கிக் கொள்ளும் படி நேர்ந்தது. கிட்டத்தட்ட அவனை சுமந்து கொண்டு ஒவ்வொரு படியாய் ஏறினாள்.

மேல் படியில் கண்ணாமணி வாங்கிக்கொண்டான். பச்சை பெட்டில் சரித்தார்கள். ஒருவன் உறை எடுத்து வர மறுபடி அவனைத் தூக்கினார்கள். ''கொஞ்சம் பிடிங்க, விரிப்பு போட்டுடறோம்.'' ராஜி அவன் புஜங்களைப் பிடித்துக் கொண்டு தாங்க, அவன் தலை தொங்க நின்று கொண்டிருந்தான். படுக்கையில் சரிக்க கண் மூடினான். சலைன் வந்தது. டாக்டர் நரம்பு தேடி கையில் குத்தினார். வலியில் முகம் சுளித்தான். ''ஒண்ணு மில்ல. சரியாயிடும். ஏதோ ஃபுட் பாய்ஸன். சரிச்சாப்பல உட்கார வைங்க. இந்த மாத்திரை இரண்டு வாங்கி குடுத்துடுங்க.''

''உசிருக்கு ஆபத்தில்லையே டாக்டர்?''—கண்ணா மணி கவலையுடன் கேட்டான்.

''நீ யாரு?''

''அவன் சிநேகிதன்.''

''தூங்கறப்ப கழுத்த நெரிச்சு கொன்னுட மாட்டியே?''

''மாட்டேன்.''

''அப்ப உசிருக்கு ஒரு ஆபத்தும் இல்லை. அட போங்கப்பா, கும்பல் கூடிக்கிட்டு. நாளைக்கு நடந்து வீட்டுக்குப் போயிடு. இது யாரு?''—ஓரமாய் நின்ற ராஜேஸ்வரியைப் பார்த்துக் கேட்டார்.

''எங்க சிஸ்டர்.''

''அது சரி. ரெஸ்ட் எடுக்கட்டும். யாராவது ஒருத்தர் மட்டும் இருங்க.''

''ராத்திரி சாப்பிட என்ன கொடுக்கலாம் டாக்டர்?''

''மோர் சோறு கொடு. போதும்.'' டாக்டர் வெளியேறினார்.

நண்பர்கள் குசுகுசுவென்று பேசினார்கள்.

''என்ன வேணும்?''—ராஜி கேட்டாள்.

''எல்லாருக்கும் வேலை இருக்கு. இவனுக்கு மோர் சாதம் தரணும். சரி, நான் வீட்லேர்ந்து தந்துட்டு போறேன்.''

''ஏன், நான் தரேனே.''

“எட்டு மணிக்கு வரட்டுமா? உங்க அப்பா இருப்பாளா?”

“தெரியலை. வந்து கேளுங்கோ. ரெடியா எடுத்து வச்சுருக்கேன்.”

“ரைட்... அப்ப கண்ணாமணி மட்டும் இருக்கட்டும்.”—வெளியேறினார்கள்.

ராஜி தனியே ஆஸ்பத்திரி விட்டு வந்தாள். விருவிரு வென்று வீட்டுக்கு நடந்து போனாள்.

உள்ளே கலவரம் பொங்கியது. என்ன சாப்பிட்டான் என்று சொல்ல மறுக்கிறார்கள். ஏதோ சாப்பிட்டு விட்டான் என்கிறார்கள். சாப்பிட்டது நிஜமா... பொய்யா? பொய்யெனில் டாக்டர் ஏன் சலைன் ஏற்று கிறார்? சாப்பிட்டது பற்றி டாக்டரிடமும் மறைத்து விட்டார்களா? போலீஸ் கேஸ் ஆகிவிடும் என்று பயப்படுகிறார்களா? ஏதாவது நடந்திருந்தால் எவ்வளவு கஷ்டம்? எத்தனை விசாரணை? ச்சே... நான் பேசி யிருக்கவே கூடாது. டீச்சர் சொன்னது சரி. விலகியே இருக்க வேண்டும். மோர் சாதம் பிசைந்து அடைத்துக் கொடுத்து விட்டு உன் திசைக்கே ஒரு கும்பிடு என்று நகர்ந்து விட வேண்டும். இது டேஞ்சர். மகா டேஞ்சர். படியேறி பின் பக்கம் போய் கால் கை கழுவி சமைய லறைக்குப் போனாள்.

“என்னடி...” அம்மா திரும்பி குரல் உயர்த் தினாள்.

“சலைன் கொடுக்கறா.”

“ஐயோ!”

''பயப்படறதுக்கு ஒண்ணுமில்லை. நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடுவா.''

''என்ன ஆச்சாம்?''

''ஏதோ ஃபுட்பாய்ஸனாம்.''

''வீடு வாசலுக்குப் போகாம கண்ட ஓட்டல்ல தின்னு வியாபாரம் வியாபாரம்னு சுத்தறான் பாவம்.''

''மோர் சாதம் பிசைஞ்சுக் கொடும்மா. கண்ணாமணி எட்டுமணிக்கு வந்து வாங்கிண்டு போவான்.''

''தொட்டுக்க?''

''ஏதாவது கொடு.''

''கொளுஞ்சிக்கா ஊறுகா அனுப்பலாமா?''

''உப்பு கொளுஞ்சிக்காதான். கொடு.'' புத்தகம் பிரித்துப் படிக்க உட்கார்ந்தாள். இப்போது என்ன செய்து கொண்டிருப்பான் என்று யோசித்தாள். மனசு குவித்து ஒரு பாடம் உரக்கப் படித்தாள். பாதியில் நிறுத்தினாள். பட்டீஸ்வரம் போயிருக்கலாமோ... போயிருந்தால் இத்தனை சிக்கல் வந்திருக்காதோ... பட்டீஸ்வரம் போனது அப்பாவுக்குத் தெரிஞ்சா என்ன ஆகும்? செருப்படி விழும். வேண்டாம். மோர் சாதத் தோடு ஒரு கும்பிடு. போதும், இந்த வேதனை. எனக்குப் படிக்கணும். நிறையப் படிக்கணும். படிச்சு வேலைல சேர்ந்த பிறகு பார்த்துக்கலாம். இப்ப என்ன அவசரம்?

ஏழரை மணிக்கு எழுந்து சாதம் மோர் விட்டுப் பிசைந்தாள். டிபன் பாக்ஸ் தேடி எடுத்து தனியே உப்பு ஊறுகாய் பொட்டலம் கட்டி காத்திருந்தாள்.

"என்னடி மணி எட்டாகப்போறது. இன்னும் வரலையே."

"தெரியலையேம்மா."

"ஏதாவது கஷ்டமா?"

"தெரியலையேம்மா."

"உங்கண்ணா வருவான், ஒன்பது மணிக்கு. அனுப்பலாமா?"

"அவன் போ'மாட்டான். தூக்கம் வருது, நீ போன்னுடுவான்."

"யாராவது பசங்க கண்ணுல தென்படறதா?"

"இல்லை."

"எட்டு இருபதுடி."

"அப்பா வருவாளாம்மா?"

"இனிமே எங்க வரப்போறா."

"நான் ஒரு நடை போய் கொடுத்துட்டு வந்துடட்டுமா?"

"போயிட்டு சட்டுன்னு வா."

டிபன் பாக்ஸ் எடுத்து படியிறங்கினாள்.

அரை நிமிடத்தில் ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்தாள். படியேறினாள். கண்ணாமணி பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

''ஏன் வரலை?''

''வாந்தி எடுத்தான். கொஞ்சநேரம் பொறுத்து வரலாம்னு இருந்தேன். போன பசங்க யாரையும் காணோம். மோர் சாதம் கொண்டு வந்துருக்கேளா?''

''இதுல இருக்கு.''

''கொஞ்சம் சிரமம் பார்க்காத நீங்களே சாப்பிடக் கொடுத்து வாங்கிண்டு போயிடுங்கோ. நான் ஒரு வாய் போட்டுண்டு வரேன்.''

''இல்லை. எனக்கு...''

''இரண்டே நிமிஷத்துல வரேன். இல்லை யாரை யாவது அனுப்பறேன். மத்தியானம் சாப்பிட்டது...பசி குடலைப் பிடுங்கறது.''

உள்ளே கட்டிலில் ஆள் அசையும் சப்தம் கேட்டது. ராஜி டிபன்பாக்ஸுடன் உள்ளே நுழைந்தாள்.

புது சலைன் பாட்டில் மாற்றியிருந்தார்கள்.

அவன் மெல்ல கண் திறந்தாள்.

''சாதமா...எனக்கு வேணாம், ராஜி.''

"ஏன்?"

"எப்படி சாப்பிடறது? வலது கைல ஊசி சொருகி இருக்கே."

"யார்கிட்டயாவது ஸ்பூன் கேட்டு வாங்கிண்டு வரட்டுமா? இடது கையால..."

"வேணாம்."

"பசிக்குமே?"

"இல்லை."

"கரைச்சுதானே கொண்டு வந்திருக்கேன். அப்படியே கொஞ்சம் கொஞ்சமா டிபன் பாக்ஸோட வாய்ல விட்டுக்கலாமே?"

"கொண்டா."

ஒரு முழுங்கில் உதடெல்லாம் வழிந்தது. மறு முழுங்கில் புரைக்கேறிற்று.

ராஜி தலை தட்டினாள். டவல் எடுத்து முகம் துடைத்தாள்.

"போறும் ராஜி."

"இன்னும் கொஞ்சம் சாப்பிடலாமே."

அடுத்த முழுங்குக்கு டிபன் பாக்ஸோடு வாயில் கவிழ்த்துக் கொள்ள, மோர் வழிந்து சட்டைக் காலர் வழியே நெஞ்சில் வழிந்தது.

''இப்படி சாப்பிட முடியலை ராஜி.''

''நான் முடில ஊத்தித் தரேன். கொஞ்சம் கொஞ்சமா சாப்பிடலாம்...''

படுக்கை அருகே உட்கார்ந்து முடியில் ஊற்றி நீட்டினாள்.

''ராஜி...''

''என்ன?''

''தாங்க் யூ.''

''எதுக்கு இதெல்லாம்?''

''என் படுக்கை கீழ கொலுசு இருக்கு. எடேன் அதை ப்ளீஸ்.''

''எனக்கு கொலுசு வேண்டாம்.''

''சரி, ஒண்ணு செய். எடுத்து பார்த்துட்டு வச்சுடு. என்னிக்கு என் மேல நம்பிக்கை வருதோ அன்னிக்கு வாங்கிக்க.''

ராஜி தலையணையோடு அவனை நிமிர்த்தி துழாவினாள். கொலுசு தென்பட்டது. உருவி எடுத்தாள். கொலுசோடு சில அரளிக் கொட்டை வெளியே வந்து விழுந்தது.

''என்ன இது?''

''அரளி விதை. சாப்பிட்டது போக மிச்சம்.''

"ராஜு!"

"கொலுசு என்கிட்ட கொடு ராஜி. அதுல உன் கை பட்டாச்சு. அது போறும் எனக்கு. நீ பார்த்தாச்சு. அதுபோதும் எனக்கு."

"இதான் சாப்பிட்டியா? இன்னும் எத்தனை இருக்கு? எழுந்திரு."

"வேணாம் ராஜி."

"ப்ளீஸ்! எழுந்திரு ராஜு"

அவன் முதுகு அழுத்த, அவள் தலையணை இழுத்து அவள் பலம் கொண்ட மட்டும் அவனைத் தூக்கி கீழே உள்ள அரை டஜன் அரளி விதைகளை அள்ளினாள். அவன் இடக் கையால் அவளை இழுத்து இறுக்கிக் கொண்டான்.

"ராஜு, ப்ளீஸ் விடு."

விதைகள் சிதறின. வாசலில் மூன்று நண்பர்கள் ஜன்னல் வழியே சகலமும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவளின் இரண்டு மணிக்கட்டுகளையும் ராஜ சேகரன் இறுகப் பிடித்துக் கொண்டு தனக்காய் இழுத்தான். கட்டிலின் விளிம்பு முழங்கால் சில்லில் மோத, வலியில் கால் மடக்கியவள் அவன் நெஞ்சின் மீது விழுந்தாள்.

அவன் அவள் மணிக்கட்டை விட்டு விட்டு நெஞ்சில் சரிந்தவளை இடக் கையால்

இறுக்கிக் கொண்டான். வலக்கையில் சலைன் ஊசி குத்தின இடத்திலிருந்து ரத்தம் கசிந்தது.

ராஜியின் கவனம் முழுவதும் தலையணையில் இருந்தது. மறுபடி எதாவது சாப்பிட்டுவிடப் போகிறானே என்கிற பயம் வந்தது. ஒருவேளை இவன் எதாவது சாப்பிட்டுவிட்டு செத்தால் ஊர் முழுக்க தன்னைப் பேசுமே என்கிற கவலை இருந்தது. அவன் தொடுகிறான் என்பது புரிய சில வினாடிகள் ஆயின. இடது கையால் வளைத்துக் கொண்டிருக்கிறான் என்பது உணர, தலையணை இழுப்பதை நிறுத்தினாள். அவனை வெறித்துப் பார்த்தாள்.

"ராஜி, என்னை விட்டுப் போகாதே ராஜி, என்னை விட்டு போயிடாத. இந்த ரத்தத்து மேல சத்தியமா சொல்றேன். நான் உன்னை லவ் பண்றேன். நீ இல்லாம எனக்கு வாழ்க்கையில்லை ராஜி."

ராஜி அவன் வலக்கை பார்த்தாள். ஊசி புரண்டு குத்தின இடத்திலிருந்து ரத்தம் வழிந்து முழங்கையில் ஒடி படுக்கையில் கொட்டிற்று. மேலும் கொப்புளித்துக் கொண்டு வெளிவந்தது.

"ஐயோ ரத்தம் வர்றது!"

"வரட்டும் ராஜி. உனக்காக எத்தனை ரத்தம் வேணாலும் இழக்கத் தயார். என் உயிரே போனாலும் உன்னை லவ் பண்றதை நிறுத்தமாட்டேன்!"

ராஜி தாவணி தலைப்பால் அவன் வலக்கை மடிப்பை பொத்தினாள். துணி வைத்து அழுத்த, ரத்தம்

நிற்கும் என்று நினைத்தாள். அவன் ஒருக்களித்து அவள் மார்பில் முகம் புதைத்துக்கொண்டான். இடக் கையால் இடுப்பு இறுக்கினான்.

"ப்ளீஸ் ராஜூ, சரியா படு. யாராவது பார்த்தா எனக்குக் கஷ்டம்."

"என்னை நேசிக்கறியா, இல்லையா ராஜி?"

"நேசிக்கறேன், கையை எடு. ப்ளீஸ்..." தாவணி தலைப்பு மீறி ரத்தம் பொங்க, எக்கி அவன் தலைக்குப் பின்னாடி இருந்த மேஜையிலிருந்து தண்ணீர் தம்ளர் எடுத்தாள். தாவணி விலக்கி காயத்தில் ஊற்றினாள். தாவணியை நீரால் நனைத்து மறுபடி அழுத்தினாள்.

"ஏய், சொல்லேன். என்னைப் பிடிக்கலையா..." இப்போது முதுகைக் கட்டில் விளிம்பில் சாய்த்துக் கொண்டு அவள் தோளில் கை வைத்தான்.

"இவ்வளவு பணக்காரன் என்னை லவ் பண்ணுவானான்னு தோணுதா? எனக்கு காசு முக்கியம் இல்லை ராஜி, நீ முக்கியம். நீ சரின்னு சொல்லு. உடனே எங்கப்பாக்கிட்ட போய்... ராஜி..."

"ப்ச்சு."

"சில ஆங்கிள்ல நீ எவ்வளவு அழகா இருக்க தெரியுமா? நீ வரலைன்ன உடனே நான் கோபுரத்துலேர்ந்து குதிச்சு செத்துடலாம்னு நினைச்சேன். உடம்பு சிதறிடும். மூட்டையா கட்டி புதைச்சுடுவாங்க. முகம் கூட பார்க்க முடியாது. நான் செத்த பிறகாவது நீ என்னைக் காதலோடு பார்க்கணும். அதுக்காகத்தான்

அரளி விதை சாப்பிட்டேன். வயிறு அறுப்பாங்களே தவிர, முகம் பாழாகாது.''

''ராஜூ!''

''நீ சரின்னு சொல்லு ராஜி. இந்த நிமிஷம் நான் சரியாயிடுவேன். நீ முடியாதுன்னா எனக்கு சாவைத் தவிர வேறு வழியில்லை. அரளி விதை கும்மோணத்துல எங்க வேணா கிடைக்கும்.''

''நான்தான் லவ் யூன்னு சொல்லிவிட்டேனே.''

''அப்ப ஏன் பட்டீஸ்வரத்துக்கு வரலை? நான் உன்னைக் கெடுத்துருவேன்னு நினைச்சியா?''

''ச்சே...ச்சே...''

''ராஜி, நீ எனக்கே எனக்கு. எனக்கு மட்டுமே வேணும்...''

''லவ் யூன்னா அதானே அர்த்தம்.''

''அப்ப ஏன்...''

''ஊர் வாய்ல விழுணுமா? கண்ட இடத்துல சுத்தி நாலுபேர் சிரிக்கும்படியா நடக்கணுமா... மனசுல லவ் இருந்தா போறாதா?''

''அங்க வர பயமா இருக்கா?''

''ஆமா.''

"எனக்குப் புரியறது. நீ வர வேண்டாம். ஆனா இங்க யாரும் இல்லை. இன்னும் ஒரு நாலு நாள் இங்கியே இருக்கேன். தினம் பார்க்க வரியா?"

"எதுக்கு அனாவசியமா செலவு?"

"காசு முக்கியமில்லை ராஜி, நீ முக்கியம்!"

"என்னைக் கைவிடமாட்டியே..."

"ஒரு நாளும் இல்லை."

"எங்க அப்பா கேட்டா?"

"ஆமா லவ்ன்னு சொல்லிடுவேன்."

"உங்கப்பா வழிமறிச்சா?"

"மீறி உன்கிட்ட வருவேன்."

"ப்ராமிஸா?"

"ப்ராமிஸ்!"

"ரத்தம் நிறைய போயிருக்கு. இப்ப தூங்கு ராஜு."

"கிட்ட வாயேன்."

"ஐயோ யாராவது வருவா..."

"கதவு தாப்பா போட்டுரு."

"வேற வினையே வேண்டாம்."

"வெறுமன சாத்தி வச்சுரு."

"சாத்திதானே இருக்கு!"

"என்னைக் கொஞ்ச மாட்டியா?"

அவன் அவள் பிடரியில் கைவைத்து வருடினான். காது விளிம்பைத் தடவினான். தோள்பட்டையை நீவினான்.

அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. வயிறு குழைந்தது. இடுப்பு தசைகள் சூடேறி அழுந்தியது. அவன் தொடத் தொட மனசு இறங்கிற்று. உதட்டை மடித்துக் கடித்த படி அவன் முழங்கையை ஈரத்துணியால் அழுத்தினாள்.

"ஊசியை எடுத்துரு ராஜி."

"வலிக்குமே."

அவன் இடக்கையால் வலதுகை ஊசியைப் பிடுங்கிப் போட்டான். சின்ன பொட்டாய் ரத்தம் மீண்டும் வந்து நின்றது.

சரிந்து உட்கார்ந்து அவளை இறுக்கிக் கொண்டு கன்னங்களில் முத்தமிட்டான். தன் கன்னம் காட்டி னான்.

ராஜி மறுப்பும் விருப்புமாய் தள்ளாடினாள். பிடித்த தும் பிடிக்காததுமாய் அவஸ்தைப்பட்டாள். முதுகு முழுக்க அவன் கைகள் தடவ, கண் கிறங்கினாள். அவன் உடம்பு காந்தியது. மூச்சு உஷ்ணம் கன்னம் சுட்டது. அவன் தலை கோத, சுகம் உடம்பு முழுவதும் பரவியது.

"என்னை வுட்டுற மாட்டியே?" உள்ளே கேவல் எழுந்தது. இது சரியா... சரியா என்று ஈடுபடும் போதே ஆயிரம் சந்தேகங்கள் தோன்றின. டீச்சர் பயமுறுத்தியது நினைவுக்கு வந்தது. 'என் வேலை இப்ப படிக்கறது. அத முடிச்சுட்டு லவ் பண்ணுவேன்...'— சிநேகிதி குரல் மண்டைக்குள் ஒலித்தது.

''எனக்குப் படிக்க நிறைய இருக்கு, ராஜூ.''

''நீ எதுக்குப் படிக்கணும், ராஜி? என் பேர்லியே மூணு வேலி நிலம் இருக்கு. கும்மோணத்துல கடை இருக்கு. பட்டாஸ் பிஸினஸ் பார்த்தேல்ல...அவனே நெருப்புப்பெட்டி பிஸினஸ் கேக்கறான். தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் முழுக்க நெருப்புப் பெட்டி ஏஜென்ஸி எடுக்கப் போறேன். ஒரு பிடி பிடிச்சா வருஷத்துக்கு லட்ச ரூபா லாபம் கிடைக்கும். ராணி மாதிரி வச்சுப் பேன்.''

''நீ வேற ஜாதி. நாங்க வேற ஜாதி.''

''எனக்கு ஜாதில நம்பிக்கை இல்லை. நல்ல மனைவி தான் முக்கியம்.''

''என் படிப்பு முடியட்டும், ராஜி.''

''முடியட்டும். ப்ளஸ் டு முடி. வேண்டாங்கலையே. ஆனா வாரம் ஒரு தடவையாவது உன்னைப் பார்க்க ணும். உன்கூட பேசணும்.''

''இப்ப தூங்கு ராஜூ.''

''என்னைப் பார்க்க வருவியா?''

''வரேன். தூங்கு.''

''ராஜி, என்னைப் பிடிச்சிருக்கா?''

''பயம்மா இருக்கு ராஜூ. என்னை விட்டுட்டா அரளி விதை எங்கன்னு நான் தேடணும்.''

''அரளி விதையா? என் ராஜிக்கா...ஒரு நாளும் விட மாட்டேன்.''

"நான் கிளம்பட்டுமா?"

"ஒரு கிஸ் குடுத்துட்டுப் போயேன்..."

"வேணாம்."

"ராஜி, ப்ளீஸ்..." அவன் இறுக்கினான். கன்னம் முழுக்க உதடு பதித்தான். ராஜி செய்வதறியாது அவன் தோள் பிடித்துக் கொண்டு நின்றாள். சுகமும் பயமும் தாக்க, தவித்தாள்.

"ப்ளீஸ் ராஜி..." கன்னம் திருப்பினான்.

அவள் உதடு பதித்தாள்.

மறு கன்னம் காட்டினான்.

மெல்ல பின்னடைந்தாள். அவன் தளர விட்டான்.

"இப்ப நிம்மதியா தூங்குவேன். ராஜி, நீ டிபன் பாக்ஸ் வச்சுட்டு போயிடு."

ராஜி கீழே இறங்கினாள்.

மாடியில் பாதம் பதிக்க முடியாமல் கால்கள் நடுங்கின. பின்னிப் பின்னி இழுத்தன. தெருவில் கால் வைக்க 'சில்'லென்று காற்று முகம் மோதியது. உடம்பு கசகசப்பு கொஞ்சம் குறைந்தது. ராஜி கன்னங்களை தாவணி தலைப்பால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

கன்னத்தில் இன்னும் உதட்டுத்தடங்கள் தெரிவது போல் ஒரு பிரமை தோன்றியது. அங்கே துடைக்கத் துடைக்கப் போகவே போகாது என்று தோன்றியது.

படியேற உள்ளே அப்பாவின் குரல் கேட்டது.

"என்னடி இத்தனை நாழி?" —அம்மா ரேழியில் வந்து கிசுகிசுத்தாள். "அப்பா உனக்கு ஏதோ நகை வாங்கிண்டு வந்திருக்கா. போ, போய் நமஸ்காரம் பண்ணி வாங்கிக்கோ."

உள்ளே நுழைய, வேட்டியும் துண்டுமாய் ட்யூப் லைட் அடியில் நின்று ஏதோ பத்திரம் வாசித்துக் கொண் டிருப்பது தெரிந்தது.

"அப்பா..." செல்லமாய் கூவினாள்.

"எங்க போயிருந்த இந்த ரா வேளைல?"

"ராஜசேகருக்கு எதோ ஃபுட் பாய்ஸன்னு அட்மிட் பண்ணியிருக்கா. ராத்திரி மோர் சாதம் கேட்டா. கொடுத் துட்டு வந்தேன்."

"புட் பாய்ஸனா? சரி, நீ போவானேன்? யாரையா வது அனுப்பறது...வெங்கடேசன் எங்க?"

"வரலை, காலேஜ்லேர்ந்து."

"இந்தா...இந்த நெக்லஸ் பாரு..."

மாங்காய் மொக்காய் கழுத்து ஒட்டின நெக்லஸ் இருந்தது.

"ஏதுப்பா?"

"தென்னந்தோப்பு வித்துட்டேன். ராஜூ அப்பாக் குத்தான். கேஷா கொடுத்ததுல இது வாங்கினேன். மிச்சத்தை உன் பேர்ல பாங்குல போட்டுருக்கு. இந்தா

பாங்க் பாஸ் புக். ப்ளஸ்–டூ முடி. பளிச்சுன்னு கல்யாணம் பண்ணி உன் சுமையை இறக்கிட்டா நிம்மதியா கண் மூடலாம்...''

''என்ன பேச்சு இது?'' —அம்மா நொடித்தாள்.

''நெஜம்தாண்டி. இப்பமே செய்யலாம். இந்த வருஷம் படிப்பு முடியட்டும். ரிசல்ட்டு வரபடி வரட்டும். இவளைக் கரையேத்திடலாம். அக்கம் பக்கம் விசாரி. கவர்மென்ட் கிளார்க்கு, பாங்கு குமாஸ்தான்னு பாரு. த்தோ பார்...ஒழுங்கா படி ராஜி. இப்படி கண்ட நேரத்துல வெளியே போகாத. கெட்ட ஊர் இது. ஒரு நேரம் மாதிரி ஒரு நேரம் அமையாது. உதவி செய்த வரைக்கும் ரைட். ஆனா உபத்திரவம் வேண்டாம். கடைய காலி பண்ண சொல்லிடு, கார்த்திகைக்குப் பிறகு பசங்க கூட்டம் அதிகமாயிடுத்து...''

ராஜி மிரண்டாள். நெக்லஸ் தோளில் உறுத்தியது.

அங்கே ஹாஸ்பிடல் வாசலில் நண்பர்களோடு கை குலுக்கி விட்டு ஆளுக்கு பதினைந்து ரூபாய் ராஜசேகர் வழங்கினான். கட்டிலுக்குக் கீழ் உள்ள சப்பை பாட்டிலை எடுத்து சியர்ஸ் காட்டி அப்படியே கவிழ்த்துக்கொண்டான்.

''கண்ணாமணி, நான் ஜெயிச்சிட்டேன்.'' என்று கூவினான். கண்ணாமணிக்கு ஆத்திரமாய் இருந்தது.

கண்ணாமணிக்கும், ராஜசேகரனுக்கும் பந்தயம் வந்த காரணமே ஜாதிப் பிரச்சினைதான்.

ஆனால், இது நேரிடையாய் ஏற்படவில்லை; பல சந்துபொந்துகள் புகுந்து வந்தது. படித்தவர்கள் நேரிடையாய் சண்டையிட்டுக்கொள்வதில்லை. அதுவும் ஜாதி பற்றி பேசிக்கொள்வ

தில்லை. அது நெஞ்சோரம் ஜாக்கிரதையாய் இருக்கும். வேண்டும் என்கிறபோது வேறு உருக்கொண்டு விஷமாய் கக்கும். இப்போதும் அப்படித்தான் நேர்ந்தது.

கண்ணாமணி வீடு அவன் பிறக்கும் போது சிரம தசையில் இருந்தது. அவனுக்கு இருபது வயது ஆன போதும் அப்படியே இருந்தது. எத்தனை படிச்சாலும் நம்மாளுக்கு வேலை கிடைக்காது என்று அவனுக்குப் பதினாறு வயசில் சொல்லப்பட்டது. அதனாலேயே படிப்பில் அவனுக்கு அக்கறை போயிற்று. 'படிச்சு வேலைக்கு சிங்கி அடிக்கப்போறேன்...படிக்காதயே அடிக்கறேன்' என்று கண்ணாமணி முடிவு கட்டி விட்டான். கண்ணாமணி அப்பாவுக்கு விவசாயத் தொழில். ஆனால், நிலத்தில் நேரே இறங்குவதில்லை— இறங்கக்கூடாது. இருக்கிற நிலத்தை குத்தகைக்கு விட்டு உழும்போதும், நாத்து நடும்போதும் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அறுவதுக்கு நாப்பது என்று குத்தகைக்காரனோடு சண்டை போட்டார்கள். ஒவ்வொரு அறுப்பின்போதும் வாய் நிறைய வைதார்கள்.

இது தவிர, நல்லது கெட்டதுக்கு நாள் பார்ப்பதும், ஜோஸியம் சொல்வதும் அவருக்குத் தொழிலாயிற்று. விற்கிற, வாங்குகிற பத்திரம் எழுதினார்கள். 'இந்த ஜென்மாவுல எனக்கு கைகட்டற சேவகம் கிடையாது' என்று அப்பா அடிக்கடி சொல்வார். முதாதையர்களின் விரிந்த சொத்து மெல்ல மெல்ல அழிந்து சோற்றுக்கு மட்டும் குறைவில்லை என்கிற நிலைக்கு வந்தது.

ஆனால் சோறு மட்டுமா உலகம்? சட்டை, பேண்ட், கர்சீப், காலணி என்று வேண்டியிருக்கிறதே...ராஜசேகர் தலைக்கு பிரில்க்ரீம் தடவிக் கொள்வான். கண்ணாமணி

தண்ணீர் குழைத்த தேங்காய் எண்ணெய்தான். ராஜசேகர் அம்பாஸிடர் ஷூ போட்டுத் திரிவான். கண்ணாமணி ஏரோப்ளேன் டயர் செருப்புதான். ராஜசேகர் எம்பிராய்டரி கர்சீப் வைத்துக் கொள்வான். கண்ணாமணிக்கு வேஷ்டி கிழிசல்தான் கர்சீப். ராஜசேகர் பட்டை பெல்ட் போட்டுக் கொள்வான். கண்ணாமணிக்கு சணல் கயிறுதான். ஒரு தடவை பழைய பாவாடை நாடாவை பெல்ட் மாதிரி இறுக்கிக் கட்டிக் கொண்டு மேலே சட்டை போட்டு மறைத்திருந்ததைப் பார்த்து விட்டார்கள். வாரி வாயில் போட்டுக் கொண்டார்கள்.

"அப்போத பிடிச்சு ஒரு பொம்பளை வாசனை வீசுதே எங்க எங்கன்னு பாத்தேன். பாவாடை நாடா! இப்ப புரிஞ்சு போச்சு கண்ணாமணி, இது யார் பாவாடை? யாருடைய நாடா?" கண்ணாமணி கொஞ்ச நேரம் செத்துப் போனான்.

'ஒருநாள் நீ அழியப் போறடா... அப்ப சொல்றேன், யார் பாவாடைன்னு!' உள்ளே ஒரு வன்மம் தோன்றி உயிர் கொடுத்தது. வாழ்க்கை சிலருக்கு காதலால் வளர்கிறது; சிலருக்கு லட்சியத்தால் வளருகிறது; சிலருக்கு அதிர்ஷ்டத்தால் மலர்கிறது. கண்ணாமணி போன்றவர்களுக்கு வன்மத்தால் நடந்து கொண்டிருந்தது. 'எனக்கு ஒரு நேரம் வரும்' என்கிற வன்மம்—வாழ வைத்துக் கொண்டிருந்தது; அவ்வப்போது உயிர் கொடுத்துக் கொண்டிருந்தது.

தன் வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது என்று இந்த இருபத்தியேழு வயதில் கண்ணாமணி யோசித்ததுண்டு. பலரிடம் கேட்டதுண்டு. அப்பா இதற்குக் காரணம்

கலிகாலம் என்று சொன்னார்! அம்மா தலையெழுத்து என்றாள். பிரிட்டீஷ்காரன் போனதோட நமக்கு மதிப்பும் போயிடுத்து என்று மாமா சொன்னார். இது ஒரு சைக்கிள். உயர்ந்தவர் தாழ்வதும், தாழ்ந்தவர் உயர்வதும் இயல்பு என்று எதிர் வீட்டு வாத்தியார் சொன்னார். கண்ணாமணி எல்லாவற்றையும் உண்மை என்று நம்பினான்—குழம்பினான்.

ஆசைகளை மட்டும் வளர்த்துக் கொண்டிருந்த இளைஞன், ஆசைக்கு ஒப்பான யோக்கியதை பெற மறந்தான். இதைக் கற்றுக்கொடுக்க ஆள் இல்லாமல் அலைந்தான். படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. வேலை இல்லை. ஏதோ ஒரு வேலை என்று செல்ல மனசு ஒப்பவில்லை.

பட்டணத்துக்கு ஒரு முறை வேலை தேடிப் போனான். ஓட்டலில் இலையில் வைத்து இரண்டு இட்லி-வடை என்று கேட்டான். அதெல்லாம் முடியாது. ப்ளேட்தான் என்றார்கள். எல்லாரும் தின்ன ப்ளேட்ல என்னைத் திங்கச் சொல்றயா என்று சண்டை போட, 'வெளியே போ' என்று துரத்தி விட்டார்கள். நேரே ஊருக்கு வந்துவிட்டான். 'பட்டணம் கெட்ட பய ஊர்!' என்று சொன்னான்.

கண்ணாமணி கேக் சாப்பிடுவதில்லை. கேக்கில் முட்டை இருக்கிறது. ஓட்டலுக்கு முன்னால் தலை உயர்த்தி யார் ஓட்டல் என்று பார்த்து விட்டுதான் நுழைவான். எல்லாருக்கும் டீ சொல்லுப்பா என்று ராஜசேகர் சொல்ல, கண்ணாமணி தனக்கு வேண்டாம் என்று மறுக்க, அப்போதுதான் ஜாதிப் பிரச்சினை வந்தது.

''ஏன் வேணாங்கற? நீயும் நம்ம தோஸ்த்துதானே?''

''பிரெண்ட்ஷிப் வேற...டீ வேற.''

''புரியலை.''

''உன்னோட சிநேகமா இருக்கலாம். அதுக்காக நீ சாப்பிடறதெல்லாம் நான் சாப்பிட முடியுமா?''

''டீயில முட்டை போட மாட்டான் தோஸ்த்.''

''தெரியும்.''

''பிறகு ஏன் வேணாங்கற?''

கண்ணாமணி மௌனமாய் இருக்க..

''டீயில முட்டை போடறது பிரச்சினை இல்லைப்பா. டீ யார் போடறதுன்னுதான் கண்ணாமணி பிரச்சினை.'' கூட இருப்பவன் கேலி பேசினான்.

''ஓ... அப்படி ஒண்ணு இருக்கோ?''

''இருக்கு. இன்னும் இருக்கு. இப்போதைக்கு அவங்கக்கிட்டேர்ந்து போவாது!''

ராஜசேகருக்கு வலித்தது போலும். கண்ணா மணியை 'ஐயரே!' என்று கூப்பிட ஆரம்பித்தான். ஐயர்களின் குணங்களை வியந்தான்.

கூட்டத்தில் தனித்த முகம் காட்டப்போய்...கண்ணா மணியின் தனித்த முகமே கேலியாயிற்று. ஒன்றுபடாதது உறுத்தியது. உறுத்தல் அவ்வப்போது உபத்திரவம் கொடுத்தது: ஒதுங்கிப் போயிருக்கலாம். எங்கே போக...

பள்ளி முழுக்க—ஊர் முழுக்க எல்லா ஜனங்களும் இருந்தார்கள். எங்கே ஒதுங்க...அது தவிர, ராயர் ஒட்டல் ஸ்பெஷல் ரவா—கெட்டிச் சட்டினி எட்டு பேருக்கு ஆர்டர் பண்ண ராஜசேகரால்தான் முடிகிறது. மோட்டார் சைக்கிளில் பிடரி பறக்கப் போகிற சுகம் அவன்தான் தரமுடிந்தது.

கண்ணாமணிக்கு அப்பாவிடமிருந்து ஒரே ஒரு கெட்டபழக்கம் தொற்றிக் கொண்டது. குடி பாவம், சிகரெட் அனாச்சாரம். வெற்றிலைப் பாக்கு விசேஷம். கும்மோண கார வெற்றிலையும், களிப்பாக்கும் நல்ல அம்சம். அதில் சுண்ணாம்பு ருசி. புகையிலை சுகம்.

''ஐயர், எனக்கு ஒரு பாக்கெட் ரெட் வில்ஸ் வாங்கிட்டு வா...''

''ப்ச்சு...''

''மிச்சத்துல உனக்குப் புகையிலை வாங்கிக்கோ, ஐயரே.'' —கண்ணாமணி போவான். பெரிய பொட்டல மாய் வாங்கிக் கொள்வான். பதினெட்டு வயசில் துவங்கி இருபத்தி ஒன்றில் பல்லெல்லாம் கரையாயிற்று. புகையிலை இல்லையெனில் பைத்தியம் புடித்தது. புகை யிலைக்கு ராஜசேகர் தேவைப்பட்டான்.

''ஐயர்! பண்டில் எண்ணு. பட்டாசு வகை வகையா பிரி. வாங்கின ரேட்டுக்கு வகைக்கு அம்பது பர்ஸண்ட் போல போட்டு இப்போ ஒரு டோட்டல் சொல்லு. இதுல டிரான்ஸ்போர்ட் கழி, வாடகை கழி...''

கண்ணாமணியின் பெரிய ப்ளஸ்பாய்ண்ட் கணக்கு. இருபத்தியாறு இண்ட்டு நூத்திப் பதினேழு. பேப்பர்

பென்சில் வேண்டாம். பளிச்சென்று விடை கிடைக்கும். பட்டியல் போட்டு லாபம் காட்டத் தெரியும். பதினாறு பதினாறு என்பதற்கு நண்பர்கள் பத்து பேர் பத்து விடை சொல்ல, இருபத்தி மூன்றாம் வாய்ப்பாடு சொல்லும் கண்ணாமணிக்கு ஒரு கிரீடம் இருக்கத்தான் செய்தது. கண்ணாமணி கெட்டிக்காரன்தான். குடும்பமும் கும்பகோணமும் அதற்கு உறுதுணையாய் இல்லை.

''வாப்பா ஐயர்...பட்டாசுக்கடை போட மனு தரணுமாம் போலீஸுக்கு...பயர் ஆபீஸருக்கு. ஒரு மனு எழுதேன்.''

''இங்கிலீஷ்லயா? தமிழிலயா?''

''ம்...இந்தில!''

''சரி...'' இங்க் உதறி இந்தியில் கிடுகிடுவென எழுத ஆரம்பித்தான். நண்பர்கள் அசந்து போனார்கள். ''எழுதறாண்டா, நிசம்மாவே. எங்க படிச்சே?''

''ஸ்கூல்ல...''

''நாங்க தேர்ட் ஃபார்ம் படிக்கறப்பவே எரிச்சுட்டோமே. இந்தி புக்கை ஸ்கூல் வாசல்ல...நீ எரிக்கலை?''

''இல்லை. எடுத்துண்டு வீட்டுக்குப் போயிட்டேன். இந்தி படிச்சாதான் உருப்புடுவேன்னு எங்கப்பா அடிச்சார், படிச்சேன். அப்பவும் உருப்படலை. சரி, சொல்லு...இங்கிலீஷ்ல எழுதட்டுமா?''

பத்து தலைமுறையாய் பத்திரம் எழுதுகிற, மனு எழுதுகிற, லெட்டர்ஸ் டு எடிட்டர் எழுதுகிற ஜீன் அது. எழுதிற்று. கிரீடத்தில் கல் பதிக்கப்பட்டது.

"பட்டாசு கணக்கை ஐயர்கிட்ட வுடு. என்னைக் குழப்பாத. காலைல ஒரு ரவா, சாயங்காலம் ஒரு ரவா சப்ளை பண்ணிடு."

பட்டாசு கடையின்போதுதான் பந்தயம் வந்தது.

"ஐயோ...இந்த வீட்ல ஒரு குட்டி இருக்கு...என்ன சைஸ்..." ராஜசேகர் வியக்க, சில நண்பர்கள் ஆமோதித்து ரசித்தார்கள். கண்ணாமணி வேதனைப் பட்டான்.

"நம்ம வேலை பட்டாசுக்கடை. எதுக்கு வீண் வம்பு..." என்றான்.

"உன் வேலை கணக்கு. அது பார். என் கணக்குல நுழையாதே!"—ராஜசேகர் கட்டளையிட்டான். நாளாக நாளாக பட்டாசுக் கடைக்குள் நட்பு புகைந்தது. ஒரு நாள் வெடித்தது.

"அந்த லேடீஸ் மட்டும் ஏம்பா இத்தினி அழகு?"

"த்தோ பார்...எங்க லேடீஸைப்பத்தி தப்பா பேசாதே!"

"என்னப்பா பேசினாங்க?"

"உன் தங்கச்சிக் கூடதான் அழகு. நீ சரியா பார்த்ததில்லை."

"நீ பார்த்திருக்கேன்றியா..."—யாரோ தூண்டி விட்டார்கள்.

ராஜசேகர் கொத்தாய் சட்டையைப் பிடித்தான். "ஐயர். ஒரு சேலஞ்ச். நீ என் தங்கச்சியை ட்ரை பண்ணு. நான் இந்தப் பொண்ண ட்ரை பண்றேன். யார் ஜெயிக்கறோம்...பார்க்கறியா?"

"வுடுப்பா...அவரு ஏதோ அபிமானத்துல பேசறாரு. அவராவது உன் தங்கச்சியப் பார்க்கறதாவது? கண்ணா மணி, இதுக்கெல்லாம் முறைக்கறது தப்பு. அந்த ஃபீலிங் கூடாது. இருவரும் லவ் பண்ணி அந்தப் பொண்ணும் லவ் பண்ணா யார் தடுக்க முடியும்? இதெல்லாம் ஸ்மால் மேட்டர். சட்டமே இதுக்கு இடங் கொடுக்குது. இப்பப்போய் இந்த ஃபீலிங்கோட பேசறீங்களே..."

கண்ணாமணி, ராஜசேகர் தங்கைக்கு முயற்சிக்க வில்லை. முடியாது என்று தெரியும். ராஜசேகரால் முடியும் என்பதும் தெரியும். மௌனமாய் கறுவினான். முடியட்டும். அப்ப பேசிக்கறேன். ஆனால் இவ்வளவு சீக்கிரம் முடிந்தது பார்த்தபோதுதான் ஆச்சரியம் வந்தது.

'இந்தத் தேவடியா சிறுக்கிய வெட்டணும்!' என்று பொங்கிற்று.

ராஜசேகர் கையிலிருந்த காது வளையம் அவள் அணியப் பார்த்ததுமே பாதி கௌரவம் போய்விட்டது. 'சரி... நம்ம மாதிரி வக்கில்லாதது...அப்புறம் 'பெப்பெ' காட்டிவிடும், என்று நினைத்தான். ஆனால் இப்படி கட்டி முத்தம் கொடுப்பாளா ஒருத்தி? இதை நான் கேட்டா தருவாளா? காவிப்பல்லு...புகையிலைக்கட் டைம்பா. அப்பா சொல்றது சரி. இது கலிகாலம். உயர்ந்தவா தாழறதும், தாழ்ந்தவா உயர்றதும் சைக்கிள்ங்கறார் வாத்தியார். ஏன் தாழணும்? இப்பேர்ப் பட்ட சிறுக்கிகளால தானே? வைக்கிறேன். ரெண்டுக் கும் சேர்த்து வெடி வைக்கிறேன்...'

ஒள்ளார ஒழி... காசு இருக்கக் கொண்டு ஆடறான். அப்பன் காசுலதான் உடுத்தறான். பட்டாசுக்கடை வைக்கறான். உன் காசு காது வளையமா, கொலுசா பாழாகுதுன்னு அவன் அப்பனுக்கு எழுதறேன்.

யாருக்கு எழுதலாம்? எப்படி எழுதலாம்? இங்கிலீஷ்ல எழுதலாமா? தமிழ்லயே இடதுகைல எழுதலாமா? எழுதினா என்ன ஆகும்? ராஜசேகர் உதைப்பான். ரவாதோசை போய் உதைதான் மிஞ்சும். மாட்டிக்காத எழுதணும்.

எப்படி எழுத...பண்ணை வரைக்கும் சேதி போகணும், கும்மோணத்தெருவுல இவனை நடமாட விடாத பண்ணணும். அதே சமயம் அவனைப் பார்த்து என்ன இப்படி ஆயிடுத்தேன்னு சமாதானம் சொல்ல ணும். அவன் அழறபோது தோள்ல தட்டிக் கொடுத்து காப்பி சாப்பிடலாம் வான்னு ராயர் ஒட்டலுக்குக் கூட்டிண்டு போகணும். அவன் கணக்குல சாப்பிட ணும். என்ன செய்யலாம்?

இடுப்பிலிருந்து ஒரு கொத்துப் புகையிலை எடுத்து வாயில் அடக்கிக் கொண்டபோது காரம் வாயில் ஊறி, ஈறுகள் வழியே மண்டையைத் தாக்கி, கண் செருக வைத்தது. அந்த கிறக்கத்தில் மனசு குவித்து யோசித் தான். கண் திறந்தான். எதிரே கோயில் வாசலில் டைமண்ட் பீடி என்று தாரில் எழுதப்பட்டிருந்தது. பளீ ரென்று உள்ளே விளக்கெரிந்தது.

நாலு பேர் நடமாடற எடத்துல எழுதி வச்சுட்டா... எது நடமாடற இடம்? கோயில்! என்ன எழுதறது? 'பண்ணை ராஜசேகர் வலை வீச்சு—ராஜேஸ்வரி என்கிற பெண்ணுக்கு!' இல்லை...இல்லை. சரியில்லை.

'ராஜசேகர் ஜல்சா—ராஜியுடன்!' இதும் தப்பு. யாரோ வேணும்னு பண்றான்னு தப்பிச்சுடுவான். இல்லவே இல்லைன்னு சாதிப்பான். லவ்வுக்காக பேதிக்கு சாப்பிடறவனாச்சே, இந்தக் கடங்காரன்...!

யோசி... கண்ணாமணி யோசி.

ராஜசேகரே எழுதின மாதிரி பண்ணிட்டா?

'ராஜி, உன்னை நேசிக்கிறேன். எனக்கு பதில் சொல். ராஜசேகர்னு, எழுதிட்டா? நம்ம மேல சந்தேகம் வராது. ஏன் ராஜசேகர் இப்படி எழுதினேன்னு நாமே கேட்போம். இது தப்புடான்னு நியாயம் சொல்வோம். ஊருக்கும் தெரியும். நம்ம மேலயும் டவுட் வராது.

அடங்கட்டும். கோயில் கூட்டம் அடங்கட்டும். அர்த்த சாம பூஜைக்கு மணி அடிக்க, இருளில் கோயிலுக்குப் போனான். வெளிப் பிரகாரச் சுவரில் இரண்டு கல் தூண்களுக்கு நடுவே வழியில் பொறுக்கிக் கொண்டு வந்த கரிக்கட்டியால் இடது கையால் எழுதினான்.

'ராஜேஸ்வரி நான் உன்னைக் காதலிக்கிறேன். உனக்காகவே உயிர் வாழ்கிறேன். எனக்கு பதில் சொல், இப்படிக்கு, பண்ணை ராஜசேகர்.'

கையை பேப்பரில் துடைத்துக் கொண்டு பிரகாரம் சுற்றினான், வந்து நின்று அன்னியன் போல படித்தான். வீட்டுக்குப் போனான்.

மரம் வெட்ட, அதில் படர்ந்த கொடியும் அறும் என்று அவனுக்குத் தெரியவில்லை.

கண்ணாமணி, கெட்டிக்காரன்தான். ஆனால் அவன் குடும்பமும், கும்பகோணமும் அதற்கு உறுதுணையாய் இல்லை.

கும்பகோணம் ரொம்ப சந்தோஷமான ஊர். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை. தஞ்சையின் நெற்களஞ்சியமாய் கும்பகோணம் இருந்தது. காவிரியும் முடி கொண்டானும் உரசிப் போகிற பூமி அது. வண்டல் மண் இரண்டு மணிநேரம் நீர் பாய சேறாகும். மூன்று நாளில் புல் தலையெடுக்கும். ஒரு முறை கீறிப் புரட்ட அதுவே உரமாகும். கண்ணுக்கெட்டின வரை பச்சை பார்க்க முடியும். எது போட்டாலும் வளரும்.

ஜனங்கள் அங்கே சந்தோஷமாய் இருந்தார்கள். எதையும் ரசித்தார்கள். காவிரி நீர் வரவால் சோற்றுக் குக் கவலை இல்லை. சுள்ளென்று வெயில் அடிப்பதால் சுறுசுறுப்புக்குக் குறைவில்லை. ஆடலும் பாடலும், கோயிலும் பூஜையும் அங்கே மதிக்கப்பட்டன. விமரிசிக்கப்பட்டன.

ஆனால், பாராட்டு போலவே விமரிசனமும் துள்ளலாய்தான் வரும். நகைச்சுவை கலந்து ஆளை நோகடிக்கும். குத்தி நெஞ்சைக் கிழிக்கும். கூனி குறுக வைக்கும்... வதைக்கும்.

அந்த சுவர் கிறுக்கலை நாலுபேர் நின்று படித்தார் கள். உதடு கோணி சிரித்தார்கள். எந்த ராஜேஸ்வரி என்று கேட்டுக் கொண்டார்கள். ‘பண்ணை ராஜ சேகர்... கேட்ட பெயரா இருக்கே...’ என்று யோசித்தார்கள். ‘வேற இடமா கிடைக்கலை? மோசமா போயிடுத்து ஊர்’ என்று அலுத்துக்கொண்டார்கள்.

“இதப்போய் என்ன பார்வை? வா...” —ஒருவனை மற்றொருவன் இழுத்துக் கொண்டு போனான். மூணு முறை கோயிலைச் சுற்றுவதற்குள் ஒரு முடி வுக்கு வந்தான். மூன்றாம் முறை சுற்றும்போது கரித்துண்டு கீழே இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.

மூன்று சுற்று முடிந்தவுடன் கூடவந்தவனை, "நீ போ... எனக்கு நேத்தி சுத்து இரண்டு பாக்கி இருக்கு. சுத்திட்டு வரேன்..." என்று விரட்டினான். தனியான வுடன் நிதானமாய் சுவர் அருகே வந்து நின்றான். கரி நுனியை தரையில் தேய்த்து தயார்படுத்திக் கொண் டான். சுற்றும் முற்றும் பார்த்து, யாரும் இல்லை என்று உறுதியானவுடன் நிதானமாய் எழுதினான்.

'மகா பாபி! இப்படி கோயில் சுவரில் காதல் வசனம் எழுதுகிறாயே... உன்னை பாம்பு கொத்த!' என்று சாபம் எழுதினான்.

'ஒக்காளி... நாண்டுகிட்டு சாகட்டும்!' என்று சந்தோஷமாய் வந்த வழியே கோயிலைவிட்டு வெளியேறினான்.

பகல் பத்து மணிக்கு நேற்று எழுதியது அழியாமல் இருக்கிறதா என்று பார்க்க வந்த கண்ணாமணி கண்ணில் அடுத்த வாசகம் பட்டது.

'அடி சக்கை! எவனோ பார்த்துட்டான். பத்திண் டுடுத்து... குட்! ஊதுவம், ஊதி ஊதிப் புகைய வைப்போம். நாமும் சாபம் கொடுப்பமா? வேணாம். சாபத்துக்கு பதில் கொடுப்போம்.'— இடது கைக்குக் கரிச்சட்டி மாறிற்று.

'என் ராஜி... எந்த சண்டாளன் எனக்கு சாபம் கொடுத்தாலும் உன் மீதுள்ள காதல் சாகாது! ப்ளீஸ், எனக்கு பதில் சொல். பண்ணை ராஜசேகர்' என்று எழுதினான்.

வெயில் பரவிற்று. வெளிச்சம் சுவர் மீது விழுந்து எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது. கோயில் காவல் ஆளுக்கு சுட்டிக்காட்டி பொதுமக்கள் திட்டினார்கள். "தண்ணி ஊத்தி அழி, எல்லாக் கருமத்தையும்" என்றார்கள்.

'தண்ணி ஊத்தி அழிச்சா மறுபடி எழுதுவான். சுவத்துல கை வைக்காதபடி உறைக்கிற மாதிரி இன்னொன்னும் எழுதணும்.'—கோயில் ஆள் தீர்மானித் தான். நீள சுவரின் அடுத்த தூண் பகுதியில் நாலாவது ஐந்தாவது தூணுக்கு நடுவே, 'கோயில் சுவரில் எழுதுகிறவன் அயோக்கியன்! அதற்கு பதில் எழுது கிறவன் முட்டாள்! இங்கு கடவுளை வழிபடு. காட்டு மிராண்டி ஆகாதே.— பொதுமக்கள்' என்று எழுதி முடித்தான்.

'இரண்டு சுத்து கூட சுத்தறேன்னு சுத்தாம வந்துட்டமே...' காலையில் போனவனுக்கு கடவுள் பக்தி குத்தி துன்புறுத்திற்று. சுத்திடலாம் என்று வந்த போது அடுத்த இரண்டு வாசகங்களும் கண்ணில் பட்டன. கோபம் கொடுத்தன.

'யார் முட்டாள்... கோயில் சுவரில் காதல் வசனம் எழுதுகிறவனா? அதைக் கண்டிக்கிறவனா? குடந்தை பொதுமக்களே... நீதி வழங்குவீர்!' வசனத்தை தெளி வாய் எழுதிவிட்டு கீழே கையெழுத்தை கிறுக்கலாய்ப் போட்டான்.

பிற்பகல் திருமஞ்சனக் குடத்துக்கு தீவட்டி பிடித்துக் கொண்டு போன காவல்காரனுக்கு எரிச்சல் வந்தது. 'பட்டப் பகலிலேயே பதில் எழுதறியா? பொட்ட

நாயே, தைரியம் இருந்தா பேர் விலாசம் எழுத வேண்டியதுதானே?'

திருமஞ்சனம் சந்நிதிக்குப் போயிற்று. கோயில் ஆள் தளிகை அறையில் போய் நல்ல கரித்துண்டாய் எடுத்து வந்தான்.

'மானங்கெட்டவனே! கோயில் சுவரைப் பாழாக்குப வனே! தைரியமிருந்தால் உன் முழு விலாசம் எழுது. பை ஆர்டர் கோயில் நிர்வாகம்' என்று எழுதினான்.

அந்தி சாய்வதற்குள் அந்த இடத்தில் ஆறு, ஏழு முழு விலாசங்கள் பெயருடன் இருந்தன. தனக்கு வேண்டாதவர்கள் பெயரை, முழு விலாசத்தை ஊரில் உள்ளவர்கள் எழுதி இருந்தார்கள்.

கும்பகோணம் ரொம்ப சந்தோஷமான ஊர். அந்த ஊர் மக்கள் நல்ல ரசிகர்கள். ஆனால், எது நல்ல ரசனை என்பதில் சிக்கல் இருந்தது.

கிட்டத்தட்ட கடைவீதி வரையில் அந்த சுவர் வாசகங்கள். பேசப்பட்டன... அ வ தி ப ட் ட ன. அடுத்து எவன் என்ன எழுதுவான் என்று ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டன, ஹேஷ்யம் கூறப்பட்டன.

இந்த கும்பலில் நான் இல்லை என்று காட்டிக் கொள்ள யாருக்கோ ஆசை வந்தது. 'பாவம், அந்தப் பெண்' என்று வேதனை வந்தது. இதை எப்படி தெரிவிப்பது? அவனும் எழுதினான்.

'மிஸ் ராஜேஸ்வரி, இப்படி சுவரில் எழுதி காதலிக் கும் ஆளை ஏறெடுத்தும் பார்க்காதீர்கள். காதல்

புனிதமானது. கும்பகோணத்துக்கு இது தெரியாது. கோயில் முண்டங்களுக்குப் புரியாது.''

நாலு வாசல் உள்ள அகண்ட கோயில் இது: இரண்டு காவற்காரர்கள்தான் அரசு அனுமதி கொடுத்தது. யார் எழுதுகிறார்கள் என்று கோயிலுக்கு கண்காணிக்க முடியாது போயிற்று.

'கும்பகோணத்தை குறை சொல்லும் பேடியே! ராஜேஸ்வரிக்கு நீ மாமனா? இல்லை மச்சானா? சுவரில் எழுதுவதற்குப் பெயர் காதல் இல்லையடா... காமம், காமம் தீர்க்க பஸ் ஸ்டாண்டுக்குப் போ. சாமி கும்பிட மட்டும் கோயிலுக்கு வா!' பொதுமக்கள் சார்பில் யாரோ பதில் சொன்னார்கள்.

'ப்ளீஸ், ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்!'

அடுத்த தூண்களுக்கு நடுவே ஆங்கில வாசகமும் எழுதப்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட ஊர் முழுவதும் இதுபற்றி பேசத் துவங்கியது.

கண்ணாமணி சந்தோஷமாய் இரவு கோயிலுக்குப் போனான். தூண் தூணாய் நகர்ந்து சுவர் வாசகங்களைப் படித்தான்.

''ராஜி! என் காதலை ஏற்றுக் கொண்டது பற்றி சந்தோஷம். இங்கே எதிராய் எழுதியவர்கள் அத்தனை பேரும் வாய் அடைத்துப் போகும்படி வரும் புதன் காலை உனக்கும் எனக்கும் திருமணம். இது சத்தியம்— பண்ணை ராஜசேகர்,பட்டீஸ்வரம்.''

எழுதிவிட்டுத் திரும்பியபோது, "டேய், பொறுக்கி நாயே!" என்று பின்னால் குரல் கேட்டது. இரண்டு கோயில் ஆட்கள் ஓடிவர, கண்ணாமணி திடுதிடுவென்று ஓடினான். வடக்கே போனான். "மடக்கு, மடக்கு அப்படி போய் மடக்கு."—நிறைய காலடி சப்தங்கள் கேட்டன.

சண்டிகேஸ்வரருக்கு என்று தனி சந்நிதி பாதை நடுவே சிறிய கட்டடமாய் இருக்க, கண்ணாமணி உள்ளே புகுந்து சண்டிகேஸ்வரர் பின்னால் ஒளிந்து கொண்டான். எரிந்த விளக்கை வாயால் ஊதி அணைத் தான். இருட்டோடு இருட்டாய்ப் பதுங்கிக் கொண்டான்.

சுற்றி ஆட்கள் ஓடுகிற சப்தம் கேட்டது. பேச்சுக் குரல் கேட்டது. கண்ணாமணி அசையாது சண்டி கேஸ்வரர் பின்னால் உட்கார்ந்திருந்தான்.

ஒரு வயதான மாமி புடவை நூல் போட்டுவிட்டுப் போனாள். ஒரு பாட்டி குனிந்து கன்னத்தில் போட்டுக் கொண்டாள். ஒரு பத்து வயதுப் பெண் சின்ன வில்லை கற்பூரத்தை இரண்டாய் ஒடித்து, எதிரே வைத்து, நெருப்புக் குச்சி கிழித்தாள். கண்ணாமணி பயந்தான்.

அடித்தொண்டையில் 'ஹ...ஹ்...ஹ...ஹா...என்று' சிரித்தான். கிழித்த குச்சியை கையில் வைத்துக்கொண்டு அந்தப் பெண் சுற்றும் முற்றும் பார்த்தது. குச்சி கையைச் சுட, உதறிவிட்டு வேறு குச்சி எடுத்து உரசிற்று.

கண்ணாமணி சிலைக்குப் பின்னே உடம்பை குறுக்கிக் கொண்டு 'பாப்பா' என்று அடித் தொண்டை யில் கூப்பிட்டான்.

அந்தப் பெண் பயந்து பின் வாங்கிற்று. மெல்ல குனிந்து உள்ளே ஊடுருவிப் பார்த்தது. ''ஹ...ஹ்...ஹா ...என்னைத் தொட்டுதான் நமஸ்கரிக்க வேண்டும். அருகே வா''—கரகரப்பாய் குரல் கொடுத்தான்.

அந்தப் பெண் எண்ணெய்க் கிண்ணம் உருள வாசல் நோக்கி ஓடிற்று. ''திருடன், திருடன்'' என்று கூவிற்று. வலது பக்கம் திரும்பி மறைந்தது.

கண்ணாமணி இறங்கி எதிர்பக்கம் வேகமாய் நடந்தான். எதிர்மூலைக்குப் போனான். கோயில் பின் பக்கம் உள்ள லட்சுமி சிலை பாதத்திலிருந்து குங்குமம் எடுத்து இட்டுக் கொண்டான். கொஞ்சம் அள்ளி எடுத்து கையில் வைத்துக் கொண்டான். சிலை உச்சி யில் உள்ள பூவெடுத்து காதில் சொருகிக் கொண்டான். முணுமுணுத்தபடி நிதானமாய் சண்டிகேஸ்வரர் சிலை நோக்கி நடந்தான்.

எதிரே கோயில் ஆட்கள் அந்தப் பெண்ணோடு வந்தார்கள். சண்டிகேஸ்வரர் சந்நிதியில் குனிந்து பார்த்தார்கள்.

''என்ன சார்?''

''யாரோ போக்கிரிப்பய உள்ள உட்கார்ந்து பயமுறுத்தறானாம்!''

''உள்ளயா?''

''உள்ள குரல் கேட்டது. ஆள் அசைஞ்சதுகூட தெரிஞ்சுது.''—பெண் கத்திற்று.

"டேய், வெளியே வாடா!"—கோயில் ஆள் பயத்தோடு குரல் கொடுக்க...

"ஏம்ப்பா பயப்படற. இந்தாம்மா...இந்த குங்குமம் வாங்கிக்கோ. நான் பார்க்கறேன்." கீழே கிடந்த நெருப்புப்பெட்டி எடுத்து கொளுத்தி வெளிச்சத்தில் சண்டிகேஸ்வரரை உற்றுப் பார்த்தான். கோயில் ஆட்களும் பார்த்தார்கள்.

"யாரும் இல்லையே குழந்தே."

"தொட்டு நமஸ்காரம் பண்ணுன்னு குரல் கேட்டதே..."

"தப்பில்லை. சண்டிகேஸ்வரரை தொட்டு நமஸ்காரம் பண்ணலாம். ஆனா அவர் சொல்ல மாட்டாரே... ஏதோ பயந்திருக்கு பொண்ணு..."

உதறி குச்சியை அணைத்துவிட்டு பயபக்தியாய் அவளிடமிருந்து குங்குமம் மறுபடி வாங்கி சிலைக்கு முன் இரண்டு சிமிட்டு சிமிட்டுவிட்டு வாசல் நோக்கிப் போனான்.

பின்னால் யாரும் தொடரவில்லை என்று தெரிந்ததும் கையை உதறிவிட்டு வெளியே நடந்தான். கோயில் வாசலில் எட்டணா வெற்றிலை, சீவல், புகையிலை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

"கெட்ட பய ஊரு இது. சண்டிகேஸ்வரர் பின்னால ஒளிஞ்சுண்டு போறவா வரவாளை பயமுறுத்தறானாம் யாரோ."

"கோயில்லயா? எப்ப?"

"இப்பதான்...தேடிண்டுருக்கா ஆளை."

"சுவத்துல எழுதறவனா இருப்பானா?"

"சுவத்துல எழுதறதா? எந்த சுவத்துல?"

"உங்களுக்குத் தெரியாதா? தெற்குச் சுவர் முழுக்க காதல் வசனம்தான்!"

"ஐயய்யோ..."

"யாரோ ராஜேஸ்வரியாம்...பண்ணை ராஜசேகராம் ...லவ்வாம்...எழுதறான்; ஏண்டா, இங்க எழுதறேன்னு இன்னொருத்தன் எழுதறான். ரெண்டுமே தப்புன்னு இன்னொருத்தன் எழுதறான்...நன்னாவா இருக்கு?"

"ப்ச்சு...யார் ராஜேஸ்வரி?"

"தெரியலை. பண்ணை ராஜசேகர் தெரியும். பொறுக்கிப் பயதான். சுவத்துல எழுதற அளவுக்கு பொறுக்கியா தெரியலை. எந்த புத்துல எந்த பாம்பு இருக்குமோ?"

"பண்ணை ராஜசேகரா? எனக்குத் தெரியும் சார். வெகண்டையா பேசுவான். இப்படி சுவத்துல எழுது வானா...எந்த சுவத்துல சொன்னேள்?"

"எதற்கு? இருங்கோ...இருங்கோ...அந்தப் பய கோயிலுக்குப் போறான்" மோட்டார் சைக்கிள் சப்தம் கேட்டது. ராஜசேகர் பின்னால் சந்திரசேகரனோடு கோயில் வாசலில் இறங்கி, தெற்கு நோக்கிப் போக, கண்ணாமணி பின் தொடர்ந்தான்.

புகையிலை காரம் ஈறு வழியே மண்டையில் ஏறிற்று. போதை கண் சொருக வைத்தது. வன்மம் கூட போதைதான். வஞ்சிக்கப்பட்டவன் துடிப்பது, பார்ப்பது கூட சுகம்தான். ராஜசேகர் கோபத்தில் துடிப்பது கண்ணாமணி கற்பனையில் தெரிந்தது.

ராஜசேகர் அப்பாவுக்கு இரண்டு விஷயங்கள் பிடிக்காது. ஒன்று—பொய் சொல்வது. இன்னொன்று—பெண்கள் பின்னால் சுற்றுவது. பொய் சொல்பவன் கோழை; பெண் பின்னால் சுற்றுபவன் சோம்பேறி.

"அவனை அடிச்சிட்டியாடா?"

ராஜசேகர் அவர் கேள்விக்கு பேசாது இருந்தான்.

"சொல்லு... கீழத் தெரு புள்ளைய அடிச்சியா?"

"ஆமாம்!"

"ஏன்?"

"என் எதிர்க்க வந்து தொடை தட்டினான்... ரெண்டு போட்டேன்."

"எதுல அடிச்ச?"

"கைலதான்!"

"இனிமே அடிக்காத போ. இந்தா ஐநூறு ரூபா. எடுத்துகிட்டுப் போய் அவன் ஆத்தா கிட்ட கொடுத்து வைத்தியச் செலவுக்கு வச்சுக் கச் சொல்லு..."

ராஜசேகர் கொண்டுபோய் முன்னூறு கொடுத்தான். அந்தக் கிழவி வாயெல்லாம் பல்லாகி அவனைக் கும்பிட்டது. 'இனிமே அவன் எதனா முறைச்சா என்கிட்ட சொல்லு. நானே போடறேன்' என்று சத்தம் போட்டது. மீதி இருநூறு ரூபாயை ராஜசேகர் ஒண்டிக்கு ஒண்டி சண்டையில் ஜெயித்ததுக்கு விருந்து வைத்தான். எட்டு ரூபாய்க்கு ஒரு பீர் பாட்டில் வீதம் இருபது பாட்டில் வாங்கினான். இரவு வீடு வந்து பீர் போதையில் அயர்ந்து தூங்க, அப்பா முகத்தில் தண்ணீர் கொட்டி எழுப்பினார்.

''கிழவிக்கு எத்தினி கொடுத்தே?''

''ஐநூறு!''

''ஏன் நாறுது வாய்?''

''தூக்கம் வரலை... உடம்பு வலி... பீர் குடிச்சேன்.''

''காசு ஏது?''

''அம்மாக்கிட்ட வாங்கினேன்.''

''எவ்வளோ?''

''இருநூறு.''

பெல்ட் இடுப்பிலிருந்து உருவப்பட்டது.

''மறுபடி சொல்லு... கிழவிக்கு எவ்வளோ கொடுத்த?''

''ஐநூறு!.''

'சொடேர்' என்று நடு மார்பில் பெல்ட் அடி விழுந்தது.

"சொல்லு... கிழவிக்கு எவ்வளோ கொடுத்த?"

"ஐநூறு."

'பளீா', 'பளீர்', என்று பெல்ட் அடி விழுந்தது.

"என்னைக் கேளுடா... குடிக்கணும் காசு குடுன்னு. சப்போர்ட் பண்ணின சிநேகிதக்காரன்களுக்கு ஊத்திக் கொடுக்கணும்னு காசு கேளு... தரேன். பீத்த இருநூறு ரூபாய்க்கு பொய் சொல்றியே, பெத்த அப்பன்கிட்டயே, என்ன திமிர் உனக்கு? சொல்லு... கிழவிக்கு எவ்வளோ கொடுத்த?"

"மூன்னூறுப்பா!"

"இன்னொரு தடவை பொய் சொன்னா கொன்னு வெட்டி பொதைச்சிடுவேன். கணக்குகிட்ட காசு வாங்கி மறுபடி பீர் குடி... போ. மறந்துகூட என்கிட்ட பொய் சொல்லாத."

பள்ளி படிக்கும்போது எவளுக்கோ காதல் கடிதாசு எழுத, அவள் தன் தகப்பனிடம் அதைத் தர, அவர் பண்ணைக்கு அதை போஸ்டில் அனுப்பி, 'நாங்கள் மானமாய் வாழ்கிற குடும்பம். உங்கள் பிள்ளைக்கு புத்தி சொல்லுங்கள்' என்று இன்னொரு கடிதம் அனுப்ப—

"ராஜு, இங்க வா."

"யப்பா!"

"லவ் லெட்டர் எழுதினியா கூடப்படிக்கிற பொண்ணுக்கு."

"ஆமாப்பா!" —பெல்ட் நினைவில் உண்மை சொன்னான்.

"ஏன் ராஜு?"

"பொண்ணு நல்லா இருந்ததுப்பா."

"அழகா?"

"ஆமா... கொஞ்சம்..."

"ராஜு..."

"யப்பா!"

"இது தப்பு. அவரு எஸ்.ஆர்.வி.எஸ். கிளார்க். சிரமப்படற குடும்பம், கைக்கும் வாய்க்கும் வருமானம். நாம அவங்களை தொந்தரவு பண்ணக்கூடாது. நாம ஒண்ணு கிடக்க, ஒண்ணு பண்ணி அவங்க எதுனா குடிச்சு செத்துட்டா அது நம்மை அழிக்கும்."

"சரிப்பா."

"வுட்டுறு."

"சரிப்பா."

"அவரு குடும்பத்தோட வருவாரு. நீ என்ன பண்ற... அங்க வூட்ல எல்லார் கால்லயும் விழுந்து... சின்னப் பையனா இருந்தாலும் பரவாயில்லை—எல்லார் கால்லயும் விழுந்து தப்பு பண்ணிட்டேன்னு மன்னிப்பு கேட்கணும்."

"அப்பா..."

"அப்படி உன் தலை அவங்க கால்ல படலை... அரிவாளால ஒரு கொத்து கொத்தி உன் தலைய மட்டும் எடுத்து அவங்க காலடில வைப்பேன். என்ன சொல்ற?"

"மன்னிப்பு கேட்டுர்றேம்பா!"

"உடம்போடயா... தலை மட்டுமா?"

"உடம்போட!"

அவளுடைய நாலு வயசு தம்பி காலிலேயும் விழுந்தான். சுவரோரம் கைகட்டி நின்றான். அந்தக் குடும்பம் சங்கடப்பட்டு பின்வாங்கி வெளியேறிற்று.

"கும்பகோணம் மகாமகம் குளத்தாண்ட வரதன்னு ஒருத்தன் இருப்பான். அவன் கிட்டபோய் பண்ணை லேர்ந்து வரேன்னு சொல்லு... நூறு ரூபா கொடு. நாலு ஜாதி காட்டுவான். பத்தினி, சித்தினின்னு... போயிட்டு வா... தப்பில்லை. யாருக்கும் கெடுதலில்லை. நீ போய் ஊர் பொண்ணை மடக்கறது தப்பு. பொண்ணு உன்னை மடக்கணும்... புரியுதா?"

"புரியுதுப்பா!"

"மாயவரத்துல மோட்டார் சைக்கிளுக்கு சொல்லி யிருக்கேன். போய் டெலிவரி எடுத்துக்க."

அவமானத்துக்குக் கிடைத்த பரிசு இந்த மோட்டார் சைக்கிள். அவன் காலில் விழுந்தது மறந்து போய், அவன் மோட்டார் சைக்கிள் சவாரியே எல்லார் கண்ணிலும் நின்றது.

இரண்டு வாரத்தில் என்னால் ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னித்துக்கொள் என்று அந்தப் பெண் கடிதம் எழுத, அதை ராஜசேகர் கிழித்துப்போட்டான். மகாமக குளத்துக்கு எதிரே கம்பி ஜன்னல் வீட்டில் சமையலறை பின்பக்கம் உள்ள படுக்கையறையில் துணியில்லாமல் தூங்கினான். ஆனால், ஓட்டல் தோசை புளித்தது. ஏப்பம் வந்தது. எத்தனை முறுகலாய் இருந்தாலும் இரண்டு விள்ளலுக்குப் பிறகு திகட்டிப் போயிற்று. மெத்து மெத்தென்ற வீட்டு தோசைக்கு ஏக்கம் வந்தது. ரசனையோடு உண்ண முடிந்தது.

அப்பாவிடம் காசு இருக்கிறதே தவிர, ரசனை இல்லை. இந்த ரசனையெல்லாம் வேணாம் என்று பெல்ட் பயமுறுத்திற்று. ராஜி காலில் விழுவது முடியாத காரியம். மகா பெரிய அவமானம். எந்தக் கொள்ளைல போறவனோ கிறுக்கி வைத்து விட்டான். ரகசியமாய் நகரலாம் என்று நினைத்தது தெருவுக்கு வந்துவிட்டது. கும்பகோணத்தில் நிறைய பேருக்குத் தெரிந்துவிட்டது. பண்ணைக்குத் தெரிய நாளாகாது.

'இது நானில்லை' என்று நிரூபிக்க வேண்டும். வேறு யாரையாவது மாட்டிவிட வேண்டும். சந்திர சேகரை கேட்கலாமா? முடியாது. அவன் அப்பா பாங்க் ஆபீஸர். எதிர்ப்பார். 'என்னது... எம்புள்ளையா? சுவர்ல எழுதறதா... இருக்கவே இருக்காது' என்று எகிறுவார். எவனாவது இளிச்சவாயன் மாட்டணும். எத்தனை செலவானாலும் பரவாயில்லை.'

"என்ன ராஜசேகர், என்னவோ வெத்தலை—பாக்கு கடைல சொன்னாங்க போய் பாருன்னு. வந்து பார்த்தா நீ நிக்கற. ஏன் இது... கோயில்ல போய். உனக்கு

இடமா கிடைக்கலே?'' கண்ணாமணி பெரிய மனிதன் போல் தோளில் கைவைத்தான்.

''கண்ணாமணி, என் கூட வா!''

ராஜசேகர் விறுவிறுவென்று கோயில் பின்பக்கம் போனான்.

''என்ன ராஜு?''

''உனக்கு ஆயிரம் ரூபா தரேன்...மெட்ராஸ் போயிடு.''

''என்ன, ஆயிரமா? எதுக்கு...மெட்ராஸ் எதுக்கு?'' கண்ணாமணி வியந்தான்.

''இதை நீதான் எழுதினேன்னு ஒத்துக்க!''

''நான் எழுதறதா? இப்படியா...ச்சே! நீ என் பெஸ்ட் பிரெண்டு!''

''அதான் சொல்றேன். எவனோ எழுதிப் போட்டு ருக்கான்னா என் வீட்ல பெல்ட் பிஞ்சிடும். நீ எழுதினதா ஒத்துக்க. உனக்கும் எனக்கும் சண்டைன்னு சொல்லி என்னை மட்டம் தட்ட எழுதினதா சொல்லிடு.''

''சொன்னா?''

''ஆயிரம் ரூபா!''

''கேஷாவா?''—கோயில் ஆட்கள் வேகமாய் வருவது பார்த்து சட்டென்று கண்ணாமணியின் சட்டையை இறுக்கினான். ''சொல்லு...சொல்லுடா, நீதானே என் பேர்ல சுவர்ல எழுதினே?''

"ஐயோ... நான் இல்லை..."

"ஆயிரம் ரூவா..."—அடிக்குரலில் முணுமுணுத்தான். சட்டையை உலுக்கினான். "வெட்டிக் கொன்னுரு வேன். யார்கிட்ட கதை வுடற?"

"என்ன...என்ன தம்பி?"

"எம் பேரைக் கெடுக்க சுவத்துல எழுதறான்."

"இவனா!"

"எட்டு மாச விரோதம். அதை சுவத்துல காட்டறியா?"—அவனை மொத்து மொத்தென்று அடித்தான்.

புரட்டி அழுத்தினான்.

"ஐயோ... ஐயோ" என்று கண்ணாமணி உளற முகத்தை அழுத்தி பேசவிடாமல் செய்தான். "சொல்லு... சொல்லு. இப்பவாவது சொல்லு..."

"இந்த ஆள் அடிக்கடி கோயில் சுத்த வந்தானே?"

"அந்த சின்னப் பொண்ணு சண்டிகேஸ்வரர் சந்நிதில பயந்ததே... அப்ப இவனும் இருந்தான்."

"இவனே ஒளிஞ்சிட்டு, இவனே தேடறாப்பல செய்துருக்கான்."

"ஒத்துக்கப் போறியா, இல்லை... குத்தி கொன்னுறட்டுமா?"—ராஜசேகர் பேண்ட் பையிலிருந்து மடக்கு கத்தி எடுத்து விரிக்க, கண்ணாமணி பயத்தில் உறைந்து

போனான். "வாடா...போலீஸுக்கு வா. உன் ரேகை வச்சு நிரூபிக்கிறேன் வா...என்ணெய் பிசுக்கில ரேகை இருக்கும் வா."

'சொரேர்' என்றது கண்ணாமணிக்கு.

"நான்தான் எழுதினேன் ராஜசேகர்...நான்தான் எழுதினேன்." கதறினான்.

ராஜசேகர் நின்றான்.

"உண்மையாவா?"

"சத்தியமா!"

"இந்தக் கடவுள் மேல ஆணையா?"

"கும்பேஸ்வரர் சத்தியமா நான்தான் எழுதி னேன்."

"கேடு கெட்ட நாயே..." மொத்து மொத்தென்று அடித்தான்.

"தாங்க்யூ பிரெண்ட்" என்று காதருகில் முணு முணுத்தான். கோயில் ஆட்கள் பாய்ந்து விலக்கி விட்டார்கள்.

"ஐயர் புள்ளை புத்திய பாத்தியா! கோயில்ல கிறுக்குது. கலிகாலம்...தாழ்ந்தது உசந்து போச்சு... உசந்தது தாழ்ந்து போச்சு. என்ன பண்றது இவனை இப்ப?"

"பழகின தோஷத்துக்கு உன்னை விடறேன். இல்ல.. ஒரே குத்தா குத்தி இந்த கோயில்லயே..."

பாய்ந்தவனை அழுத்தி, கத்தியைப் பிடுங்கிக் கொண்டார்கள்.

''அமைதி, அமைதி'' என்றார்கள்.

கொஞ்சநேரம் அமைதியாய் இருந்தார்கள்.

''பேடியே விலாசம் எழுதுன்னா, ஆறு விலாசம் எழுதியிருக்கு. அவனவனுக்குப் புடிக்காதவா விலாசம் எழுதியிருக்கானுங்க. நேத்தி ஒருவன் பிரஸிடெண்ட், நியூ டெல்லின்னு எழுதியிருக்கான்யா! கோயில்ல காதல் வசனம் எழுதியது பிரஸிடெண்டாம்! கும்ப கோணம் ஜனங்க மூளையப் பாத்தியா.''

''சரி, இப்ப என்ன மேற்கொண்டு?''

''என் செலவுல வெள்ளை அடிச்சுடறேன். இவனை போலீஸ்ல ஹேண்ட்—ஓவர் பண்ணிடலாம்.''

''வேண்டாம் தம்பி...பொழைச்சுப் போவட்டும்... வுட்டுரு. அதான் கை கொண்டது அடிச்சுட்டியே!''

''போடா, போடா வெளியே!''—ராஜசேகர் கண்ணா மணியைத் தள்ளிக் கொண்டு போனான். கடைவீதியில் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பண்ணைக்குப் போனான். தகப்பனிடம் பேசினான்.

''எழுதினது யாரு?''

''தெரியலைப்பா!''

''ராஜி யாரு?''

''பட்டாஸ் கடை வீட்டுப்பொண்ணு!''

"கடைய மூடு. நீ ஒண்ணும் பண்ணலையே அந்தப் பொண்ணை..."

"சத்தியமா...அது பேர்கூட எனக்குத் தெரியா துப்பா."

"இவனுக்கு துட்டு கொடுத்து அனுப்பு." ஆயிரம் ரூபாய் சலவைத் தாளாய் கண்ணாமணிக்கு கவரில் வைத்து கொடுக்கப்பட்டது.

கண்ணாமணி இரவு மெட்ராஸுக்கு பஸ் ஏறினான். கடை இரவோடு இரவாக காலி செய்யப்பட்டு மீதி பட்டாஸுகள் நாடாருக்குப் பாதி விலைக்குத் தரப்பட்டது.

மூடின கடைப்பலகையில் யாரோ ஆங்கிலத்தில் சாக்பீஸில் எழுதியிருந்தார்கள். 'வேகண்ட்—ராஜி.' கொட்டை எழுத்தில் எழுதியிருந்தார்கள். அதற்கு இரண்டு அர்த்தம் வந்தது. எல்லோர் உதட்டிலும் புன்னகை வந்தது.

ராஜி அழுதாள்.

ராஜசேகரின் மற்ற நண்பர்கள் தங்கள் நண்பர்களிடம் அந்தக் காதல் கதை எப்படி சமாளிக்கப்பட்டது என்று விரிவாய் பேசினார்கள்; வியந்தார்கள்.

பதினெட்டு வயசு ராஜி, திசை தெரியாது இலக்கு தப்பி விழுந்த தன் காதல், எல்லார் காலிலும் மிதிபடுவது கண்டு தவித்தாள். முட்டாள்தனமாய் ராஜசேகருக்குக் கடைசிக் கடிதம் எழுதி வைத்துவிட்டு அரளி விதை அரைத்தாள். ராஜி கேவலமானதற்கு கண்ணாமணி காரணமில்லை. ராஜசேகர் காரணமில்லை, கும்ப கோணம் காரணமில்லை, ராஜிதான் காரணம்.

உலகத்தின் ஒவ்வொரு ஜீவராசியும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்கிற பலம் கொண்டிருக்கிறது. பெண் நாய் கடிக்காமல் வாலைக் குழைத்து ஓடுவதில்லை. பெண் தேளுக்கு விஷமில்லை, ஆண் தேள் தான் விஷம் என்கிற பாகுபாடு இல்லை. தனக்கு தீங்கு நேர, தானே அதை எதிர்க்கும் திறன் எல்லா உயிருக்கும் இருக்க, மானுடப் பெண் மட்டும் தன்னை ஆண் தீயதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று விரும்புகிறாள்.

பெண் பொக்கிஷமாய் தன்னை நினைத்துக் கொள்ள ஆண் காவல் ஆளாய் மாறுகிறான். இன்னொரு ஆண் தன் வீட்டுப் பெண்ணைத் திருட முடியாமல் காபந்து செய்கிறான். காவல் காக்கிற அதே ஆணே வேறு வீட்டில் திருடுகிறான். எனக்கு வெறும் காவல் வேண்டாம் என்று பெண் எழுந்து, சூலத்தை கையில் எடுக்கும் வரை இந்தக் கற்புத் திருட்டு-பெண்மை இழிதல் நடக்கத்தான் செய்யும்.

அப்பாவுக்குத்தான் அதிர்ச்சியாய் இருந்தது. யார் அது பண்ணை ராஜசேகர் என்று ஆத்திரப்பட்டபோது உடனே அவர் பேச்சு அதட்டப்பட்டது. 'நீ பண்ணலையா உன் இருபத்தி நாலு வயசுல? கட்டின பொண்டாட்டிய வுட்டுட்டு அக்ரஹாரத்திலேயே நீ இன்னொரு குடி வைக்கலையா? என்ன தைரியத்துல செஞ்ச? அஞ்சு வேலி நிலம் இருக்குன்னு திமிர்தானே? அவனுக்கு அம்பது வேலி!'

'அடேய்...ஆம்பளை ராத்திரிலதான் வரான்னா பொட்டச்சிக்கே குளிர் விட்டுப் போயிடும். பெத்தவன் உள்ளே இருக்கான்னா போறவன் தலை குனிஞ்சு போவான். ராத்திரி—ராத்திரிதான் வருவார்னா பகல்ல விளையாடலாமேன்னு கடை போட்டான்.'

'நீ உன் பொண்ணை அடக்கி வை. காது வளையம் வாங்கிண்டாளாமே...ரோல்டு கோல்டுல...' அரளி விதை விழுது வழிக்கும்போது அப்பா வாசலுக்கு வந்து பளீரென்று அம்மாவை அறைந்தார். அம்மாவின் அலறல் சத்தம் கேட்டு ராஜி எழுந்து நிற்கும் போது கொல்லைக் கதவை எட்டித் திறந்தார்.

''என்னடி இது...என்ன இது?''

அப்பா கேட்டது காதலை! ராஜி சொன்னது அரளி விதையை!

இரண்டாவதாய் ஒரு அதிர்ச்சி. இவ செத்துப் போய் வாசல் முழுக்க ஊர் கூட்டப் பார்க்கிறாளே என்கிற பயம்...பதட்டம். சுள்ளி சவுக்கை உருவி 'சொடேர்... சொடேர்' என்று உச்சியிலிருந்து கால்வரை அடித்தார். அண்ணாவும் அம்மாவும் அவரை வேட்டி நழுவ இழுத்துப் போனார்கள்.

பட்டைப் பட்டையாய் அடி விழுந்து கிணற்றுத் தரையில் சரிந்து கிடந்தவளை தம்பி நிமிர்த்தினான். விழுது அம்மியில் அப்படியே இருந்தது. அள்ளி விழுங்கி விடலாமா? ஒரே எகிறு எகிறி கிணற்றில் விழுந்து விடலாமா?

வேண்டாம். காது வளையத்தைப் பற்றி யார் சொன்னது என்று தெரிய வேண்டும். ராஜசேகர் இதை சொல்லி இருந்தால் அந்தக் கடங்காரன் முகத்தில் நெஞ்சு காறித் துப்ப வேண்டும். 'உனக்கு நல்ல சாவு வராதுடா' என்று தெருவில் நின்று கத்த வேண்டும்...

'ஏதுன்னு கேட்காம அடிச்சு நொறுக்கின அப்பா தளர்ந்து நிற்கும்போது சோற்றுத்தட்டை இழுத்து தலை

யில் கவிழ்த்துவிட வேண்டும். ஆம்பளை இல்லாத இரண்டாம் வீடா எங்களுத வச்சுட்டு என்னை அடிக்கிறியா? போறும் படிப்பு...அம்மா வா. போறும் குடித்தனம். இந்த கும்மோணத்தை விட்டு வெளியே போவோம். எவன்கூட எவ பேசறான்னு வேவு பார்க்கறா. ஊரை விட்டு ஒழிவோம். அண்ணா வா... மெட்ராஸ் போலாம்...சம்பாதிக்கலாம். நானூறு ரூபா காசுல மானமா வாழலாம். நமக்குப் பிடிச்சதை நாமே வாங்கிக்கலாம். அப்பா எங்கன்னு கேட்டா, தள்ளி வச்சுட்டோம்னு சொல்லலாம். இரண்டாம் கல்யாணம் பண்ணி எங்களை விட்டுட்டார்னு சொல்லலாம்...

'ச்சே...லவ் யூன்னு நானா சொன்னேன். உன் சிநேகிதன் தானே சுவர்ல எழுதியிருக்கானா,நீசொல்லாத அவனுக்குத் தெரிஞ்சுருக்குமா? காது வளையம் அவனுக்குக் காட்டித்தான் எனக்கு மாட்டினியா? லவ் தெரியலைடா உங்களுக்கு...கிஸ் அடிக்கறத லவ்வுன்னு நினைச்சுக்கறீங்க...

'அந்த டீச்சர் ரைட்! ஆம்பளை அயோக்கியன், தொடை நடுங்கி; ஓடுகாலி... பொறுக்கி... போக்கிரி. நான் செத்துட்டா கெட்டுப் போயிட்டாள்னு எனக்குப் பேர் வரும். கெடாமலேயே பலமுறை கெடுத்தா பேச்சு வரும். என் கிட்டயும் தப்பு இருக்கு. ஜன்னல் தாண்டினது முட்டாள் தனம். வளையம் வாங்கிண்டது அசிங்கம். வளையம் மட்டும்தான் வாங்கினேன். வேற ஒண்ணும் கிடைக்கலைன்னா யார் நம்புவா?

'எடுத்தவுடனே அவுட்! வந்து நின்னதும் போல்ட்!' சரி வா...அடுத்த இன்னிங்ஸா? இப்படியே எதுக்கு சாகணும்?

எனக்கு இன்னிக்கு விழுந்த அடியைப் பிரிச்சு எல்லாருக்கும் தரேனா இல்லையா பார்.'

ராஜி நள்ளிரவு வரை கிணற்று மேட்டில் உட்கார்ந் திருந்தாள்.

"அப்பா போயிட்டா...சாப்பிட வாடி." —கூப்பிட்ட தம்பியை கொத்தாய் பிடித்தாள். "வாடி போடின்ன... பல்லை உடைப்பேன். உன் வேலையை பார்த்துண்டு போ மரியாதையா."

எழுந்து கிணற்று ஜலம் இறைத்து முகம் கழுவிக் கொண்டாள். இரண்டு சொம்பு ஜலம் குடித்தாள்.

'இன்னும் மூணு மாசம். ப்ளஸ்...டூ முடிப்போம். பள்ளிக்கூடம் போனா என்ன ஆகும்? சிரிப்பா... பின்னால பேசுவா! பேசட்டும்...சிரிக்கட்டும்! இந்த அடி நல்லது. இனி மனசு அலையாது. இத்தனை வெறியை யும் படிப்புல காட்டுவோம். போறும்...ப்ளஸ்—டூ போறும். போய் எங்கயாவது வேலை செய்து பொழைச் சுக்க முடியும்...

"ச்சே...ஏமாந்துட்டோம். சாதாரணமா ஏமாந்துட் டோம். வெள்ளைச் சட்டை, வெள்ளை பேண்ட் இன் பண்ணி மோட்டார் சைக்கிள்ள வந்தது பார்த்து ஏமாந் துட்டோம். சினிமா பாட்டுக்கு மயங்கிட்டோம். அவமானம்தான்...பரவாயில்லை. எந்தப் பொண்ணும் பேசமாட்டா. எந்த டீச்சரும் மதிக்கமாட்டா. நல்லது. படிக்கறதுக்கு இது சௌகர்யம். மனசு ஒன்றி படிப்பே கதியாய் ஈடுபட முடியும்...

'இனிமே சினிமா பாட்டு கிடையாது. வீண் பேச்சு கிடையாது. தாவணி மடிச்சு மடிச்சு உடுத்திக்கறது

கிடையாது. எதோ உடுப்பு...எதோ உணவு. நிச்சயமா காது வளையம் கிடையாது; பித்தல் ஸ்டட் போதும்.' ராஜி காது வளையம் அவிழ்த்து கிணற்றில் எறிந்தாள்.

விடிய-பல் தேய்த்தாள். அங்கேயே நின்று தலையில் நீர் ஊற்றிக் கொண்டாள். உடம்பில் ஈரம்பட்டு காயம் எரிந்தது. ரணம் ஜிவ்வென்று இழுத்தது.

'லவ் யூன்னா ஒரு படபடப்பு வர்றது இல்லே... அடங்கு. பாட்டு கேட்டா வயிறு இழையறது இல்லே... கல்லாகு. ஆம்பளை பார்த்தா கிறங்கறது இல்லே... மரமா போ. தண்ணி பட்டா ரணம் எரியறது இல்லே... எரியட்டும். உடம்பு கொழுப்பு முழுக்க எரியட்டும். நெருப்பு எரியட்டும். அத்தனையும் வெந்து சாம்பலா கட்டும்.

உள்ளே போய் ஊதுபத்தி கொளுத்தி சுவாமி படத்தின் முன்பு காட்டிவிட்டு, ஈரத்தோடு உட்கார்ந்தாள். 'ராம...ராம' என்று முணுமுணுத்தாள்.

காற்று வீச மகரந்தம் பிரப்பிய பூப்போல சாதாரணமாய் இயல்பாய் இயற்கையோடு ஒட்டியவளாய் இருந்த அந்தக் குழந்தை இனிமையான இதழ்களை உதிர்ந்துவிட்டு தூர்ந்து போய் துவர்ப்பான காய் ஆனாள். மகரந்தங்கள் உள்ளுக்குள் போய் இறுகி முடிக் கொண்டது...கெட்டிப்பட்டது.

பின்னால் நின்று இதைப் பார்த்த அம்மாவுக்கு அழுகை வந்தது.

''என்னடி இது?'' —நாலு நிமிடம் லேட்டாய் வகுப்புக்குள் நுழைய, டீச்சர் வியப்போடு கேட்டாள். அருகே வந்து உள்ளங்கை பற்றி இடது புஜம் பார்த்தாள்.

"என்ன காயம் இது?"

"எங்கப்பா அடிச்சா டீச்சர்!"

"ஐயோ!"

வகுப்பு குசுகுசுவென சப்தம் போட்டது.

"ஸைலென்ஸ்!"

"சொன்னேனேடீ... கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சொன்னேனேடி..."

"தப்பு என்னதுதான் டீச்சர்!"

"இல்லை. நீ தப்பே பண்ணாட்டாலும் அவங்க நீ தப்புன்னு கல்லெறிவா. போ... உள்ளே போ. அவளுக்கு சொன்னதுதான் உங்களுக்கும் சொல்றேன். ஆம்பளை மாதிரி அயோக்கியன் யாரும் இல்லை. நம்பவே நம்பாதீங்கடீ. மனசால கூட மதிக்க வேண்டாம். யாராவது ராஜிக்கிட்ட இது பத்தி பேசினது தெரிஞ்சது விளாசிடுவேன்."

பேய் கோவம் கொண்ட பெண்ணுக்கு பூதகி காவல்.

எவளும் எது பற்றியும் கேட்கவில்லை. மேலும் எல்லோருக்கும் தலைக்கு மேல் பேய் படிப்பு இருந்தது.

ஜனவரி முடிவில் அப்பா வீட்டில் திருமணம் நடந்தது. முதல் மனைவியின் இரண்டு பெண்களுக்கும் ஊர் மறைக்க பந்தல் போட்டு விசாலமாய் பந்தி நடந்தது. இவர்கள் போகவில்லை. அப்பாவும் வற்புறுத்தவில்லை. பத்திரிகை மட்டும் கண்ணாடிக்குப் பின்னால் சொருகிவிட்டு அப்பா போய் விட்டார்.

அந்தக் கல்யாண விமரிசிகைதான் அண்ணாவுக்கு வலி கொடுத்தது.

"அப்ப நாங்க யாரு? அப்பாவுக்கு என்ன உறவு? ஏன் நமக்கு மரியாதை இல்லாத போயிடுத்து? இப்படி ஓரமா வச்சுட்டு ராஜியைப் போட்டு அடிச்சதுல என்ன நியாயம்?"

அம்மாவை அதட்டினான்.

"போலாம் அண்ணா...இந்த இடத்தை விட்டுப் போலாம். அப்பா வரட்டும்...வராத போகட்டும்...நாம போலாம்."

பி.ஏ. பரிட்சை முடிந்தவுடன் அண்ணா பட்டணம் போய் விட்டான். அம்மாவின் வளையல் விற்று பாதி காசு வீட்டுக்குக் கொடுத்து, மீதி எடுத்து மெட்றாஸ் போனான்.

'இங்கு ஒரு நண்பர் உதவியால் வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது' என்று எழுதினான். 'பட்டணத்துல யாருமே யாரைப் பற்றியுமே கவலைப்படுவதில்லை' என்று இன்னொரு கடிதம் எழுதினான்.

'வேலை கிடைத்து விட்டது. கெமிஸ்ட் ட்ரெயினி. ஓட்டல் சாப்பாடு வயிற்றுப்போக்கு தருகிறது. ராஜியை அனுப்பிவை' என்று எழுதினான்.

அம்மா அப்பாவிடம் கடிதம் காட்டினாள்.

அப்பா வெகுநேரம் ஹாலில் கூரையைப் பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தார்.

"என்ன போலாமா...பட்டணத்துக்கு. நானும் ராஜியும்..." அம்மா மறுபடியும் கேட்டாள்.

"போலாம். நானும் வரேன்."

"எப்படி?"

"வேற வழியில்லை. அவ சொத்தை பொண்களுக்குப் பிரிச்சுக் கொடுத்துட்டா. மாப்பிள்ளைகள் விற்க ஆள் தேடறா."

"உங்களுக்கு?"

"ஏதோ இருக்கு!"

"எத்தனை?"

"அஞ்சு மா நிலம், ஒரு மாந்தோப்பு, ஒரு வெத்தலை கொடிக்கால்..."

"யார் கவனிப்பா அதை?"

"வித்துற வேண்டியதுதான்!"

"வித்துட்டு?"

"பட்டணத்துல எதாவது பிஸினஸ் பண்ணலாம்!"

குடிபெயர்ந்து போகிறபோது உடை ஈரம் உலர்ந்து லேசாகி மொர மொரப்பாய் ஒரு சுகம் பரவிற்று. ராஜி பட்டணம் வந்தாள். அண்ணா ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். அப்பாவைப் பார்த்தான்.

"ஏம்மா, இதைக் கூட்டி வந்தே..."

வெயில் தாங்காமல் ஓடுகிற நதியில் குதித்து முங்கி ஆற்றோட்டத்தோடேயே நீந்தி, நீருக்குள்ளேயே கண் திறந்து வேறு உலகம் பார்ப்பது போல் இருந்தது ராஜிக்கு.

ட்ரெயின் விட்டு இறங்கின அத்தனைக் கூட்டமும் இரண்டு நிமிடத்தில் எப்படி காணாமல் போயிற்று என்று ஆச்சரியம் வந்தது.

அப்பா காப்பி சாப்பிட்டுட்டுப் போலாம் என்றதும் ஒரு சுவரோரம் பெட்டிப் படுக்கையோடு காத்திருந்தார்கள். இன்னொரு ட்ரெயின் வந்தது. அதிலிருந்து இதைவிட கூட்டம் இறங்கியது. அந்தக் கூட்டமும் இரண்டு நிமிடத்தில் காணாமல் போயிற்று.

"பட்டணம் கெட்ட பய ஊர். அசந்தா கொத்திண்டு போயிடுவான், எவனையும் மருந்துக்கும் நம்பக்கூடாது. எவன் நல்லவன், எவன் கெட்டவன்னு கண்டே பிடிக்க முடியாது!" —அப்பா வழியெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தார்.

ராஜி தன் பிளாஸ்டிக் கழுத்து மணியை ஒருமுறை பார்த்துவிட்டு இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

"நான் உன் கழுத்து மணியைச் சொல்லலை... புரியறதா?"—அப்பா தேவையில்லாமல் அதட்டினார். இரண்டு சைக்கிள் ரிக்ஷா பிடித்து பத்து நிமிஷத்தில் வீடு வந்து சேர்ந்தார்கள்.

பெரிய வீட்டுக்குப் பக்கத்தில் அது போயிற்று. வீட்டுக்கு பின்பக்க கொல்லையில் முடிந்தது—ஒரு காலத்தில் மாட்டுத் தொழுவமாய் இருந்திருக்க வேண்டும். இல்லை...

வேலையாட்கள் தங்குமிடமாய் இருந்திருக்க வேண்டும். முன் பக்க வீட்டுக்கும், பின்பக்க போர்ஷனுக்கும் சம்பந்தமே இல்லாது இருந்தது.

கதவு திறந்ததும் முற்றம். 'ப' மாதிரி வராண்டா. இடப்புறம் ஓர் அறை. வலப்புறம் மற்றோர் அறை. நேர் எதிரே சமையலறை. முற்றத்தில் குழாய், துவைக்கும் கல். ஹால் கோடி கதவு திறக்க பின்பக்கக் கொல்லை. கிணறு. தகரம் போட்டு மறைத்த கக்கூஸ். சுற்றி குப்பைமேனிப் புதர். சுவர் ஒட்டி எருக்கு, செவ்வரளி, சுவர் தாண்டி ரயில் பாதை. இரண்டு நிமிஷத்துக்கொருதரம் பச்சையும் மஞ்சளுமாய் கலந்த எலெக்ட்ரிக் ட்ரெயின் போயிற்று. எக்மோர் பாலம் தாண்டி வளைந்து பாதை திரும்பும் போலிருக்கிறது. போகும் ட்ரெயின் திடீரென்று முதுகு காட்டும். அது முதுகா, முகமா என்று கேள்வி வரும். ட்ரெயின் சப்தம் தவிர வேறு தொந்தரவு இல்லை.

"இந்த இடம் டெம்பரரி. என் சிநேகிதன் இடம். அவர் சொல்லித்தான் வேலை கிடைச்சுது எனக்கு."

"எங்க அவர்?" அப்பா கேட்டார்.

"ஆபீஸ் போயிருக்கான். சாயந்திரம் வருவான்."

"மாம்பலம்... மயிலாப்பூர்னு வீடு பார்க்கக்கூடாதா? எக்மோர்ல போய் வீடா?" அப்பா நொடித்தார்.

"போ... போய் பாரு... சும்மாதானே இருக்க, சோத்தை வடிச்சுப் போட்ட உடனே துண்டை தலைக்குப் போட்டுண்டு போய் தேடு. நூறு ரூவா. நூத்தி இருபது ரூபா வாடகை தர முடியும்."

அப்பா திரும்பி உறுத்துப் பார்த்தார். "இது ஒரு உதவியா கிடைச்ச இடம். இது போறும்ங்கறது என் அபிப்பிராயம்."

"போறும்... போறும். எதேஷ்டம்." அம்மா பாத்திர முட்டையைப் பிரிக்க ஆரம்பித்தாள்.

அப்பாவுக்குப் பிள்ளையின் குத்தல் புரிந்திருக்க வேண்டும். 'அடங்கி இருப்பதென்றால் இரு... இல்லை, நகரு' என்கிற அர்த்தம் புலப்பட்டிருக்க வேண்டும். சாப்பிட்டுவிட்டு துண்டும், புது செருப்புமாய் வெளியே கிளம்பினார். அம்மாவிடம் சமையல் சாமான் லிஸ்ட் கேட்டு வெங்கடேசன் வெளியே போனான்.

வெங்கடேசன் அப்பாவை எதிர்த்ததில்லை. எதிர்க்கும்படி அவன் அவரிடம் நின்றதில்லை. ப்ளஸ்-டூ படிக்கிறபோதே வீட்டு நிலைமை தெரிந்துவிட்டது.

"என்ன பண்ணப்போற மேல?"

"பி.எஸ்.ஸி. படிக்கப் போறேன்."

"ஏன்? பி.காம் படியேன்?"

"ஸ்கோப் இல்லை!"

"ஏன்?"

"பி.காம். தாண்டி சி.ஏ. படிக்கணும். சி.ஏ. படிச்சா தான் வால்யூ."

"படி."

"வேண்டாம்."

"ஏன்! இது ஒரு மூணு வருஷம். சி.ஏ நாலு வருஷம்."

"என்னால முடியாது."

"படிப்பு ஏறாதுங்கறியா?"

"ஏதாவது ஒரு டிகிரி படிச்சு அம்மாவை நல்லபடியா வச்சுக்கணும். அதுக்கு பி:எஸ்ஸி. கெமிஸ்ட்ரி பெட்டர்!"

"ஏன், இப்ப என்ன கேடு உங்கம்மாவுக்கு?"

பதில் சொல்லவில்லை, வெளியேறி விட்டான். பதில் சொல்லியிருந்தால் சண்டை வந்திருக்கும். வாதம் நடந்திருக்கும். பதில் சொல்லாது வெளியே போனது பலதும் புரிய வைத்தது.

"ராங்கி காட்டறானா உம்புள்ளை. வரட்டும்... ஃபீஸுக்கு வந்து நிக்கணுமோன்னோ... அப்ப செருப்பு துடைக்கச் செய்றேன்."

ஃபீஸ் கேட்க வரவேயில்லை. கும்பகோணம் பஸ் ஓனரிடம் போய் விண்ணப்பித்திருப்பான் போலிருக்கிறது. வீடு விவரம் சொல்லி உதவி கேட்டிருப்பான் போலிருக்கிறது. 'வீடு இதுதானா' என்று ஒரு நாள் பஸ் கம்பெனி ஆள் வந்து விசாரித்தது. மறுநாள் பி. எஸ்ஸி, கெமிஸ்ட்ரிக்குப் பணம் கட்டிவிட்டது. ஆறு மாதம் வீட்டில் சொல்லவில்லை. நாலுமணிக்கு காலேஜ் விட்டவுடன் பஸ் கம்பெனி வீட்டுக்குப்போய் கார் துடைப்பானாம்... தரை துடைப்பானாம்.

பஸ் கம்பெனி ஐயருக்கு சோழர் காலம் பற்றி— சரித்திர சின்னங்கள் பற்றி மோகம். அவர் சொல்லச்

சொல்ல இவன் கட்டுரைகள் எழுதுவானாம். இரண்டாம் வருடம் வரைக்கும் அவன் வேட்டி சட்டையோட தான் காலேஜ் போனான். மூன்றாம் வருடம் அப்பா வீட்டுக்குக் கொடுத்த காசில் பேண்ட் வாங்கிக் கொண்டான்.

"சார்... கும்பகோணம் சேதுராமன் வீட்டில பீன்ஸ் நறுக்கறேளாமே?"—அப்பா கேட்டார்.

"ஆமா..."

"எச்சிலிலை எடுக்கறேளாமே?"

"இல்லை. எடுக்கச் சொன்னா எடுக்கலாம்!"

"காசுன்னா நீங்க அலம்பிக்கூட விடுவேள்னு தெரியும். எனக்கு ஒரு மதிப்பு இருக்கே ஊர்ல... அது ஞாபகம் இருக்கா?"

"தெரியும். அந்த மதிப்புலதான் எனக்கு உபகாரச் சம்பளம் கிடைச்சுது."

"என்ன... என்ன சொல்றே?"

"நீ இரண்டாங் குடித்தனமா உங்க ஊர்லேருந்து இருவது கிலோமீட்டர் தள்ளி குடித்தனம் வச்சுருக்கறதாலதான்..."

"பொறுக்கி நாயே... அப்ப இங்கே ஏண்டா சோறு திங்கற?"

"எங்க அம்மா இருக்கா... திங்கறேன். அவ உழைச்சு சோறு போடறா... சாப்பிடறேன்."

"என்னடா உழைக்கறா?"

"ஏன், உனக்கு உழைக்கறாளே இரண்டாந் தாரமா... அந்த ரைட்ல திங்கறேன். அம்மா கோஸு போடு இன்னும்."

என்ன சொல்ல முடியும் இந்தப் பிள்ளையை. அப்பாதான் வெட்கம் கெட்டு மறுபடி பேசினார். வெங்கடேசன் பதில் சொல்லிவிட்டுப் போய் விட்டான். ராஜசேகரையும் அவன் மதித்ததில்லை.

"காலேஜுக்குத்தானே ப்ரதர். வாங்க, விட்டுர் றேன்" என்று ராஜசேகர் மோட்டார்-பைக் முறுக்கிய போது மெல்ல சிரித்தான்.

"தினம் காத்தால எட்டரை மணிக்கு வந்து பிக்கப் பண்ணிக்க முடியுமா?"

"அதெப்படீங்க?"

"அப்ப நான் நடக்கறதுதான் பெட்டர்!" மோட் டார்—பைக்கை வலமாய் சுற்றிக்கொண்டு வேட்டி தடுக்கி இழுக்க நடந்தான். சுயம்பு என்பதற்கு அர்த்தம்—ஏதுமின்றி உருவாவது இல்லை. ஏதோ ஒன்றினால் உருவாவது. தானாய் உருவாவது. வீடு சேறாய் இருந்தது. அவன் சுயம்புவாய் இருந்தான். செதுக்கச் சொல்லி குனிந்தால் பிள்ளையார் வராது. குரங்காய் முடியும் என்று தெரிந்து தானே தன்னை உருவாக்கிக் கொண்டான்.

ராஜசேகர் செய்த கலாட்டாவுக்கு அவன் அதிரவே யில்லை.

அரளி விதைக்குக் குழம்பினான். அப்பா அடித்த போது வந்து தடுத்தான். ஊருக்குக் கிளம்பும்போது ஒரு வார்த்தை சொன்னான்.

"அரளி விதைல சாகறது கஷ்டம் ராஜி. செத்துதான் போகணும்னா நான் இரண்டு மாத்திரை பேர் எழுதித் தரேன். வெறும் வயித்துல பத்து மாத்திரை சாப்பிட்ட யானா இரண்டு நாள் கண் முழிக்காமல் பிராணன் போயிடும். எழுதித் தரட்டுமா?"

ராஜி பேசாமல் இருந்தாள்.

"ஊர்ல பல பொண்கள் இருக்கா. உன்னை ஏன் வந்து பிடிச்சான்? யோசனை பண்ணு. உன்னைக் கவுக்க முடியும்னு அவனுக்கு ஏன் தோணித்து? எனக்கு பதில் சொல்லாதே. எனக்குத் தெரியும். உனக்குத் தெரியணும். நீயா தெரிஞ்சுக்கணும். நான் சொல்லலாம். நான் சொல்றபோது அப்படி இல்லைன்னு மறுக்கத் தோணும். அதான் நீயா யோசின்னு சொல்றேன். உன்னை நீ புரிஞ்சுக்க... நான் எதுக்கு?"

இது மிதப்பா? மெச்சூரிடியா? அவமானப்பட்டுப் பட்டு தழும்பேறிய அனுபவமா? உள்ளே புழுங்கிப் புழுங்கி கனிந்து போன ஞானமா? ராஜிக்கு ஆச்சரிய மாய் இருந்தது. சென்னையில் அது தெளிவானது.

"இவன் பேர் தேவேந்திரன். என் கம்பெனி கெமிக்கல் இஞ்சினீயர். இது என் அம்மா. இது என் தங்கை. இவன் தம்பி. எங்கப்பா வெளிய போயி ருக்கார்."

"போனவரைக் காணமேடா!"

"ஒண்ணு பஸ் பிடிச்சு கும்பகோணம் போயிருக் கணும். இல்லை...இங்க யார் எல்லாம் கும்பகோணம்னு விசாரிச்சு அங்கயே சாப்பிட்டுட்டு தூங்க வரணும். இரண்டுல ஒண்ணு நடக்கும்...ஏன் அலட்டிக்கற?"

இரண்டாவது நடந்தது.

"கோபாலன் இங்கதான் இருக்கான். கிச்சாமி, சீனு இரண்டு பேரையும் பார்த்தேன். நம்மூர் ஜனம். சப்ஜாடா நங்கநல்லூர்ல இறங்கி இருக்கு. நங்கநல்லூர்ல நூறு ரூபாய்க்கு ஏ க்ளாஸ் போர்ஷன். ஸ்படிகமா ஜலம்... கொசு கொஞ்சம் இருக்கு. மத்தபடி நல்ல அட்மாஸ் ஃபியர்...போலாமா?"

"போங்களேன்!"

"போங்களேன்னா?"

"போய் இடம் பாருங்கோ...குடித்தனம் போடுங்கோ!"

"ஏன், நீ வரலையா?"

"எனக்கு பெரம்பூர்ல வேலை. நங்கநல்லூர் சரிப்படாது."

"ட்ரெயின் இருக்கே!"

"நங்கநல்லூர் டு பெரம்பூர் ட்ரெயின் இல்லை."

"அப்ப இந்த சந்துதானா?"

"எனக்கு போறும். மத்தது உங்க சௌகர்யம்."

"நான் கடை போடலாம்னு இருக்கேன். ஹார்ட் வேர்ஸ்! பாம்பேலேர்ந்து டைரக்டா வரவழைச்சு கை பம்புலேர்ந்து கட்டடம் கட்டற சாமான் வரைக்கும்... நங்கநல்லூர் ஏ க்ளாஸ் ஏரியா!"

வெங்கடேசன் பதிலே சொல்லவில்லை.

"இது யாரு?"

"நான் தேவேந்திரனுங்க ... உங்க பையன் சிநேகிதம்."

"இங்க தங்கியிருக்கேளா?"

"இல்லை. இவர் வீட்லதான் நாம தங்கியிருக் கோம்."

"ஓஹோ!"

"நான் ஒரு வாரத்துல காலி பண்ணிடுவேங்க. பெரம்பூர் மேன்ஷன்ல இடம் கிடைச்சுடும்.. சொல்லி வச்சுருக்கு."

"அடட! பார்த்துண்டு போலாம் அவசரம் என்ன? ஒரு வாரம்...ஒரு மாசம்...எப்ப வேணாலும் சரி. எனக்கு ஆட்சேபணை இல்லை."

"எனக்கு உண்டு. பெரம்பூர்ல சாப்பாட்டுக்கு கஷ்டம். இவருக்கு அல்சர் தொந்தரவு. இவரால் அங்க போக முடியாது. நாம வந்துட்டம்னு நகர ட்ரை பண்றாரு. தேவா, நீ போக வேண்டாம். எங்க வீட்ல சாப்பிட்டு எங்களோட இரு."

"அது நல்லா இருக்காது, வெங்கு."

"லேடிஸ் இருக்காளேன்னு பார்க்கறார்."—அப்பா இடைமறித்தார்.

"லேடீஸ் எங்க இல்லை. எல்லா இடத்துலேயும் லேடீஸ் இருக்காங்க. லேடீஸை லேடீஸா நினைக்கற வங்கதான் கம்மி..."

"இல்லை வெங்கு!"

"அம்மா இந்த ஆளை, லேடீஸை கையைப் பிடிச்சு இழுன்னு சொன்னாலும் செய்ய மாட்டான். நான் நம்ம வீடு பத்தி சகலமும் சொல்லிட்டேன். அப்பாவப்பத்தி... உன்னைப்பத்தி...ராஜிக்கு நடந்தது பத்தி...எல்லாம் சொன்னேன். அழுதான்ம்மா. பொங்கிப் பொங்கி அழுதான். அந்த இடமே வேண்டாம்...கூட்டியாந்துருன் னான். எனக்கு இவர் பேர்ல நம்பிக்கை இருக்கு. உனக்கு இருக்கா பார். இல்லைன்னு பட்டுதா, என் காதோட சொல்...அனுப்பிடறேன். இல்லை, அப்பா சொல்ற மாதிரி நங்கநல்லூரரோ, குரோம்பேட்டோ போயிடலாம்."

அவன்—தேவேந்திரன் தலைகுனிந்து உட்கார்ந் திருந்தான். ராஜி அவனை வியப்புடன் பார்த்தாள். பெண்ணுக்கு அட்டகாசமான ஆண்—கவர்ச்சிகரமான வன். அதேபோல் மிக அடக்கமான ஆணும்—கவர்ச்சி யானவன். தேவேந்திரனிடம் ஒரு கவர்ச்சி இருந்ததாய் ராஜிக்குப் பட்டது.

அந்தக் காசுக்கு நங்கநல்லூரில் ஒரு வீடு வாங்கி இருக்கலாம். பிள்ளை சம்பாதிக்கிறது; பொண்ணுக்கு வேலை கிடைத்தால் இரண்டு வருவாய். போதும் என்று இருந்திருக்கலாம்.

வெங்கடேஷ் அதைத்தான் பலமுறை பலவிதமாய் சொன்னான்.

"எங்கயாவது ஒரு சின்ன செகண்ட்ரி பள்ளிக்கூடத்துல டீச்சரா, இல்லை கிளார்க்கா போகட்டும். அவ பவுடர் துணிமணிக்குப் பார்த்துக்கட்டும். டைப்ரைட்டிங்—ஷார்ட் ஹேண்ட் படிக்கட்டும். நமக்குன்னு ஒரு நிழல்—பாதி கட்டடம், மீதி கூரைன்னு—ஒரு நிழல் வாங்கிப்போடு" என்று சொன்னான்.

"அந்தக் காச வியாபாரத்துல போட்டா மூணு வருஷத்துல இரண்டு வீடு வாங்கலாம். என்னால் சும்மா இருக்க முடியாது."

"சும்மா இருப்பானேன், எங்கயாவது கணக்கு எழுதேன்."

"என்னால கைகட்டி சேவகம் பண்ண முடியாது."

ஆறாயிரம் பகடி கொடுத்து ஒரு முடி திருத்தும் நிலையம் காலி செய்து ஒன்றரை லட்சத்துக்கு போல்ட்—நட், சிமெண்ட் பைப், இரும்புக் குழாய், தகரத் தகடு, பித்தளை வாஷர் என்று போட்டு எக்மோரில் வீடும், நங்கநல்லூரில் கடையுமாய் அலைந்தார்.

இந்தியாவில் பயிர் தொழில் மட்டுமல்ல, எல்லா தொழிலும் சூதாட்டம்தான். சூதாட்டம் ஆடினாலும் அதில் பொறுமையும் கவனமும் வேண்டும். பத்து மணிக்கு திறந்து, ஆறு மணிக்கு அடைக்க அது அரசாங்க ஆபீஸா? ஏழு மணிக்கு கடை திறந்து கோலம் போட்டால் எட்டு மணிக்கு மேஸ்திரி, சித்தாள் என்று வாசலில் நிற்பார்கள். இரண்டு போல்ட் காசு;

இரண்டு போல்ட் கடன் என்று வியாபாரம் ஆகும். அப்பா கும்பகோணத்து ராசாவாகவே கடை நடத்தி னார். கடையிலும் தூங்கினார். யோக்கியதை இல்லாத வனுக்குக் கடனும், தேவையில்லாதவனுக்கு தானமும் தந்தார்.

ராஜி டைப்பிங், ஷார்ட்ஹேண்ட் போய்விட்டு வந்தாள். மீதி நேரங்களில் கொல்லையில் நின்று ட்ரெயின் வேடிக்கை பார்த்தாள்.

தேவேந்திரன் அந்த கெமிக்கல் தொழிற்சாலையில் உதவி மானேஜர். வெங்கடேசன் லேப்-அஸிஸ்டென்ட். யூனியன் கேடர். வெங்கடேசனுக்கு ஓவர்—டைம் உண்டு. தேவேந்திரனுக்குக் கிடையாது. சனியும் ஞாயிறும் விடுமுறையான அந்த தொழிற்சாலை இளை ஞர்களையே அதிகம் கொண்டிருந்தது. நல்ல உற்பத்தி காட்டியது. ஓவர்—டைம், இன்ஸெண்டிவ் என்று இரண் டாயிரம் சுலபமாய் வந்தது.

காலை ஏழு மணிக்கு கிளம்ப வேண்டும். மாலை ஆறுமணிக்குதான் வீடு திரும்ப முடியும். வந்தவுடன் முடியும். வந்தவுடன் குளித்து சாப்பிட்டு விட்டு சாய்ந்து விடுவார்கள். தேவேந்திரன் சின்னதாய் ரேடியோ கேட்டபடி படுத்திருப்பான். சனி, ஞாயிறு தவிர இரவு ஒரு வேளை உணவு மட்டும் அந்த வீட்டில் சாப்பிட்டான். சனி, ஞாயிறு மூன்று வேளையும் சாப்பாட்டுச் செலவுக்கு முன்னூறு கொடுத்தான்.

அவ்வளவு ஆகாதே என்கிற போது, "அம்மா கைசோறுக்கு ஆயிரமாயிரமா கொடுக்கணும். நாக்கு செத்துப் போன எனக்கு வெந்தயக் குழம்பும், எலுமிச்சை

ரசமும் பெரிய வரம். நேத்து மூளகு, முருங்கைக்காய் போட்டு என்னவோ செய்தாங்களே...அதுபேர் என்ன?"

"பொரிச்ச குழம்பு!"

"ஆங்...அது மட்டும் மாசம் ஒரு தபா செய்துடுங்க."

குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு விட்டுப் போவான். சனிக்கிழமை எட்டுமணிக்கு எழுந்திருந்து இடுப்பு லுங்கியோடு கொல்லைப்புறம் போய் எல்லா துணிகளும் துவைத்து உலர்த்தி, எண்ணெய் முழுக்காடி சாப்பிட உட்காரும்போது மட்டும் பகாசுரன்...

"சனிக்கிழமை ஒரு பொழுதா?"

"இல்லீங்கம்மா!"

"சாயந்தரம் டிபனான்னு கேட்டேன்!"

"இல்லீங்க...அன்னிக்குத்தான் நல்லா சாப்பிடறது. தினமும் காலை டிபன்; மத்தியானம் டிபன்; ராத்திரி சாப்பாடு. அன்னிக்கு மட்டும் இரண்டு சாப்பாடு. நோ டிபன்!"

"ஏன் மத்தியானம் சாப்பாடு இருக்காதா?"

"இருக்கு. வாய்ல வைக்க வழங்காது. டிபன்தான்..."

"நான் அடைச்சுக் கொடுக்கட்டுமா டிபன்பாக்ஸ்ல."

"மத்தியானத்துல ஆறிடுமே..."

"ஆள் ஏற்பாடு பண்ணினா இரண்டு பேருக்கும் ஒரே டிபன்-பாக்ஸ்ல அனுப்பறேன்."

''நல்லா இருக்கு...எதுக்கு சிரமம்?''

''ஒரு சிரமமும் இல்லை. ஏழு மணிக்கு நீங்க போன பிறகு ஒரு வேலையும் இல்லை.''

''காலைல அஞ்சு மணிக்கு எழுந்துக்கறீங்க, பகல்ல யும் படுத்தினா எப்படி?''

''வெங்கடேசா, ஆள் வருமா மத்தியான சாப்பாடு எடுத்து போக?'' அம்மா தேவுவை புறக்கணித்து விட்டுக் கேட்டாள்.

''வரும்...தேவு சரின்னா ஏற்பாடு பண்ணலாம்.''

''அப்ப கூட நூறு ரூபா வாங்கணும்.''

''காசு கிடக்கு.''

பகல் பதினோரு மணிக்கு ஆள் வரும்...டிபன் கேரியர் கொத்திக் கொண்டு போகும். நாலடுக்கில் இரண்டு இரண்டாய் சாம்பார் சாதமும், தயிர்சாதமும் போகும்.

''பருப்புருண்டைக் குழம்பு நல்லா இருந்ததுங்க... டிபன்பாக்ஸ் பிரிச்சதும் லேப் முழுக்க வாசனை தூக்கிடுச்சு. இப்படி சாப்பிட்டதே இல்லீங்க. தூக்க மான தூக்கம் லேப்ல...''

''நாளைக்கு மொச்சக்கொட்டை குழம்பு பண்ணவா?''

அம்மாவுக்குப் பாராட்டு கேட்க சந்தோஷமான சந்தோஷம். தேவுக்கோ நாக்கு முழுக்க நன்றி!

''வெங்கடேசு, வந்து ஒரு மாசமாகப் போவுது. அம்மா எக்மோர் தாண்டி எங்கயும் போகலை. எனக்கு சமைச்சு போடறதே பெரிய வேலையாயிடுச்சு. இன்னிக்கு வெளில எங்கயாவது கூட்டிட்டு போ. ஓவர் டைம் வேணாம்.''

''எங்க போலாம்?''

''கபாலீஸ்வரர் கோயில் போ!''

''நீ வாயேன்!''

''லேடீஸ் இருக்கறச்சே நான் எதுக்கு?''

''வா தேவு!''

''வாயேம்பா...'' எல்லாரும் வற்புறுத்த நாலு மணிக்கு பீச் போனார்கள்.

''ஐய்யோ...!'' ராஜி அதிசயித்தாள். 'ஹா' என்கிற வெளி பார்த்து திகைத்தாள். காற்று புடவை பிடுங்க, கால் மணலில் புதைய கொடி மாதிரி தள்ளாடினாள். முழங்கால் அலையில் நின்று அலை வளைத்துக் கொண்டதும் தோள் குறுகக் கூசினாள். இன்னும் முன்னேறி தொடை நனைய நின்றாள். அலை இழுக்க 'வீல்' என்று சந்தோஷமாய் கத்தினாள்,

''காலை சேர்த்து வச்சா சாய்க்கும். கொஞ்சம் உறுதியா கால் அகட்டி நிக்கச் சொல்லு வெங்கடேஷ்.'' —தேவு கவலையுடன் பேசினான்.

கால்களை அகட்டி இன்னொரு அலைக்காக காத்திருந்தாள். அது பொல்லாத அலை. தரையில் அடித்து

இடுப்புக்குத் தாவிற்று. ஜோபளேர் என்று வெண்மையான நுரையுடன் அடிவயிறு முட்டிற்று. சரசரவென்று பிருஷ்டமெல்லாம் நனைந்து கால்களூடே நகர்ந்தது. வாரி இழுத்தது. சட்டென்று கலவரமும், வெட்கமும், சந்தோஷமும் தாக்கின.

'சனியனே' என்று திட்டினாள். திட்டி விட்டு சுற்றிலும் பார்த்தாள். கடற்கரை முழுக்க நிறைய பெண்கள் இப்படித்தான். அலையோடு மல்லுக்கு நிற்கிறார்கள். எல்லா பெண்களும் இப்படி பயமும் சந்தோஷமுமாய் கூவுகிறார்கள். ஆண் செய்கிற வம்பெல்லாம் அலை செய்தது. கால் விரல் இடுக்கில் பாதங்களில் முகம் தேய்த்தது. குறுகுறுத்தது. முழங்காலைக் கட்டிக் கொண்டது. தொடைகளைத் தட்டிப்போனது. பின் பக்கம் தடவிச் சென்றது...

''போதும்!'' ராஜி தனக்குள் பேசியபடி கரையேறினாள்.

''ஏங்க வந்துட்டீங்க?'' —இதுதான் தேவு பேசின முதல் பேச்சு.

''பயம்மாயிருக்கு.'' —இதுதான் ராஜி பேசின முதல் வார்த்தை.

''வெங்கடேஷ், சிஸ்டர் பயப்படறாங்க. கை பிடிச்சு நில்லு.''

''வேணாம்...போறும்.'' —ராஜி மறுத்து விட்டு மணலில் நடந்தாள்.

கடற்கரை ஓட்டலில் தோசை—காப்பி சாப்பிட்டார்கள். தேவு காசு கொடுத்தான்.

மயிலாப்பூர் இன்னும் இதமாய் இருந்தது. ஏதோ இனம் புரியாத அழகு கோயிலில் இருந்தது. கூட்டம் அதிகமில்லை. அம்மா இரண்டு முறை கற்பூரம் காட்டச் சொல்லி கண் குளிர கற்பகாம்பிகையை பார்த்தாள். தேவு தட்சணை கொடுத்தான். வசந்த மண்டபத்தில் உட்கார்ந்து தேவாரம் கேட்டார்கள். தேடித்தேடி காய்கறி வாங்கிக் கொண்டார்கள். காப்பிப்பொடி, ஆப்பிள், மல்லிப்பூ என்று விலை கேட்டு வாங்கி னார்கள்.

"விலை கொஞ்சம் கூட, ஆனா பச்சுன்னு இருக்கு, காய்கறி கீரையெல்லாம்..." அம்மா பை கொள்ளாமல் வாங்கினாள். தேவு காசு கொடுத்தான்.

"சிஸ்டருக்கு ஒன்றும் வாங்கலையா?" தேவு நினைவுபடுத்தினான்.

"என்ன வாங்கறது?"

"என்னவா? அதுக்கோசரமே ஆயிரம் கடைங்க இருக்கு மெட்ராஸ்ல. வா போலாம்."

லஸ் கார்னர் கூட்டிப் போனான். அம்மா காய்கறிப் பையுடன் வாசலில் உட்கார்ந்து விட்டாள். திடுமென்று ஏக அலைச்சல். அவளுக்கு முடியவில்லை.

கடைக்குள் நெற்றிப் பொட்டு வகையே நூறு இருந் தது. காது—மூக்கு—தலைப்பின்னல் என்று ஏகப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் இருந்தன.

"அண்ணா, எத்தனை வாங்க?"

"பத்துப் பதினைஞ்சு ருபாய்க்கு வாங்கிக்கோ."

"போப்பா... பத்துப் பதினைஞ்சுக்கு என்ன கிடைக் கும்? நீ வாங்கும்மா... உனக்குப் பிடிச்சது எல்லாம் வாங்கு." இதுதான் தேவுவின் இரண்டாவது பேச்சு.

ராஜி தயங்கினாள். கடைக்காரர் பரப்பினவற்றை ஆவலுடன் பார்த்தாள்.

தேவு கடைக்குள் வந்தான்.

"இது ஆறு ஜோடி எடுத்துக்க. அதுல ஆறு ஜோடி எடுத்துக்க. இது என்னா... தலையில வைக்கறதா? இதுல ஆறு எடு."

"ஐயோ... நிறைய ஆகுமே!"-இது ராஜி பேசின இரண்டாவது வாக்கியம்.

"எதுக்கு இத்தினி தேவு?"—வெங்கடேஷ் அலுப்பில் பேசினான்.

"என்னடா ஆயிடும்? ஜோடி மூணு ரூபா, நாலு ரூபா தானே?"

"எல்லாத்துக்கும் செலவு நீயே பண்ணினா எப்படி?"

"சரி, இதுக்கு நீ பண்ணு."

தோசை, காப்பி, தட்சணை, காய்கறி, காப்பி பொடி, ஆப்பிள் என்று அவன் செலவு செய்ய இதுக்கு மறுத் தால் நியாயமாகாது. வெங்டேஷ் பர்ஸ் திறந்து ஐம்பத்தி நாலு ரூபாய் கொடுக்க, இது என் செலவு என்று கல் பதித்த பதக்கத்துடன் ஒரு செயின் தேவு எடுத்து வைத்தான். எண்பத்தி இரண்டு ரூபாய் விலை போட்டி ருந்தது.

"எதுக்குடா இது வேஸ்ட்!"

"மத்தியானம் தின்கிற சோத்துக்கு நன்றி. ராஜிதான் கேரியர்ல அனுப்புதுன்னு எனக்குத் தெரியும். தப்பு இல்லைன்னா வாங்கிக்கட்டும். தப்புன்னா வேணாம். அம்மாகிட்ட கேட்டுக்க, பிளீஸ்!"

"அம்மா, தேவு, ராஜிக்கு இது ப்ரஸண்ட் பண்றான்."

"விலை ஜாஸ்தியில்லையோ... என்னடி வேணுமா?"

ராஜி பேசாது இருந்தாள்.

"சரி வாங்கிக்கோ... ஏற்கெனவே ஏகத்துக்கு செலவு."

ஆட்டோவில் முன்பக்கம் டிரைவர் அருகே தேவு உட்கார்ந்துகொள்ள, பின்பக்கம் ராஜி, அம்மா, வெங்கடேஷ் இருந்தார்கள். வீடு வந்து சேர்ந்தார்கள்.

தேவு ரேடியோவை அப்பா மடியில் வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவனைப் பார்த்ததும் பரபரத்து அவன் அறைக்கு எடுத்துப் போனார்.

"இருக்கட்டும்... பாதி கேட்டுட்டுருக்கும் போது ஏன் தர்றீங்க? அது ஹால்ல இருக்கட்டும்:"

"எல்லாரும் ஒன்னா உட்காருங்கோ. எனக்கு சாப்பிட்டுட்டு தலை சாய்க்கணும்,உடம்பே முடியலை."

"நீ உட்காரம்மா, நான் பரிமாறறேன்."

அப்பா, வெங்கடேஷ், தேவு, அம்மா உட்கார ராஜி பரிமாறினாள். சகலருக்கும் சாதம் போட்டு உருக்கின நெய்யூற்றி கிண்ணத்தை கடைசியில் தேவுக்குக் கவிழ்த்தாள். குனிந்து ரசம் வார்த்தாள். நெஞ்சில் பதக்கம் ஊசலாடிற்று. கும்பகோணத்து அவமானம் மறந்தே போயிற்று.

உலகிலேயே மிக அதிசயமான விஷயம் எது என்று தர்மதேவன் கேட்க, அதற்கு பஞ்ச பாண்டவர்களில் மூத்தவரான தருமபுத்திரர் சொன்னாராம்:

'தினம் தினம் மரணம் பற்றி நேரே கேட்டும், சில சமயம் நெருக்கமாய் நேரே அனுபவித்தும் உள்ள இந்த மனிதன் தான் மட்டும் நெடுங்காலம் உயிரோடு இருக்கப் போவதாக எப்போதும் எண்ணும் நிலை அதிசயம்' என்றாராம்.

எப்படி ஏற்பட்டது மனிதனுக்கு மறதி? சௌக்கியமான மறதி. இந்த மறதி மனிதனை இலேசாக்குகிறது. வளர வைக்கிறது. ராஜேஸ்வரி சுத்தமாய் கும்பகோணம் மறந்து போனாள். பண்ணை ராஜசேகரனை மறந்து போனாள். பட்ட அவமானங்களை மறந்து போனாள். வெகுநாள் சென்னையில் வசிக்கும் பெண்போல மாறிப் போனாள்.

ராஜியின் ஒவ்வொரு அசைவிலும் தனி கவனிப்பு தேவேந்திரனுக்குத் தெரிந்தது. குழம்பு, ரஸம், மோர் என்று மூன்று சாதத்திலும் ஒவ்வொரு பிடி கூட இருந்தது. சாதம் இலையில் தள்ளுவதிலும், ரஸம் வார்ப்பதிலும் கனிந்த பெருந்துண்டு ஊறுகாய் கட்டை விரல் வழியே விழுவதிலும் அன்பு இருந்தது. நன்றி தெரிந்தது. சந்தோஷம் காட்டிற்று.

அடுத்தாள் இலை எதிரிலிருந்து இரண்டு பாதங்கள் முன்னேறி வரும். இவன் இலைக்கு எதிரே அதன் கால் கட்டைவிரல்கள் வந்து நின்று கொள்ளும். பத்து விரல் களும் மெல்ல சுருங்கும். கை நீளும். பின், முழங்கையில் இறுக்கின வளையோடு ஏதோ கலக்கும். கரண்டி வந்து மெல்ல நிற்கும். புரளும். உணவு கவிழ்க்கும். போதுமா என்று காத்திருக்கும். போதும் என்பதாய் சைகை செய்ய கால் விரல்கள் மெல்ல நீளும். அரை வட்டமாய் இடது பாதம் திரும்பும். பிறகு வலதுபாதம் திரும்பும். கால் நகங்கள் ரோஜா இதழ் போல இருக்கும். கட்டை விரலுக்கும் நடுவிரலுக்கும் உள்ள இடைவெளி அதிக மிருக்கும். புறம்பாதம் மாநிறமாயும் அடிப்பாதம் வெள்ளை வெளேரென்றும் இரண்டு நிறங்கள் காட்டும்.

'பாதங்கள் பாவாடை நிழலுக்குள் பதுங்கும் முயல் கள்.' எங்கோ படித்த கவிதை தேவேந்திரன், நினைவுக்கு வந்தது.

'தேவு...வேணாம்...இது ஊரான் வூட்டுப்பொண்ணு. சும்மா கிட.' மனசு அதட்டினான். அடக்கி, சாப்பிட்டு விட்டு தட்டோடு எழுந்திருந்தான்.

''சாப்பிட்டுட்டு தண்ணி குடிக்க மாட்டேன்றீங் களே...''

ராஜி மெல்ல கூறினாள்.

''என்னங்க?''

''தண்ணி குடிக்கச் சொல்றா.''

''சரிங்க...'' அரை தம்ளர் தண்ணீரைக் குடித்து விட்டு சப்தமெழாமல் தம்ளர் வைத்துவிட்டு எழுந்தான்.

நடை தள்ளாடிற்று. அதிகம் சாப்பிட்டது தெளிவாய் தெரிந்தது. குனிந்து கையலம்ப முடியாமல் நின்ற வாக்கில்தான் வாய் கொப்புளிக்க முடிந்தது. பல் சுத்தம் செய்து விட்டு படுக்க, கண் கிறங்கி தூக்கம் வந்தது. தூக்கத்தில் கனவு வந்தது. கனவில் கோயில் வந்தது. கோயிலில் ராஜி கடந்து போனாள். எதிரே வந்தாள். பின்னால் தொடர்ந்தாள். முன்பக்கம் நடந்தாள். தேவு ஆவலுடன் பார்த்தான். 'ச்சீ...தப்பு' என்று தலை குனிந்து கொண்டான். 'முருகா...முருகா' என்று சொல்லியபடி நடந்தான். நிறைய பாதங்கள் அவனைக் கடந்தன. எல்லா பாதங்களும் லேஸ் வைத்த பாவாடை போட்டுக் கொண்டிருந்தன. கட்டை விரலுக்கும் நடு விரலுக்கும் இடைவெளியோடு இருந்தன. பாத விரல்கள் சுருங்கி நீண்டன. கை நிறைய பிளாஸ்டிக் பூக்கள் எடுத்து பாதத்தில் தேவு கொட்ட, கனவு முடிந்துவிட்டது. புரண்டு படுக்க, அடிவயிறு கனத்தது. எழுந்து விளக்கு போட்டான். கதவு திறந்தான். ஹாலில் ராஜி உட்கார்ந்திருந்தாள். இவனுக்கு முதுகு காட்டி தரையெங்கும் வளையல்களும், தோடுகளும், பூக்களும் பரப்பி, எதிரே சின்ன நிலைக் கண்ணாடி சாய்த்து வைத்து ஒவ்வொன்றாய் காதிலும் கையிலும் கழட்டி மாட்டிக் கொண்டிருந்தாள்.

இரவு நேரம் எல்லோரும் தூங்குகிறார்கள், நாம் மட்டும் விழித்திருக்கிறோம் என்கிற நினைப்பில் அலட்சியமாக உட்கார்ந்திருந்தாள். அந்த அலட்சியம் அழகாய் இருந்தது. பிறர் பொருட்டு தன் நடவடிக்கைகளில் கவனமாய் இருக்கிற பெண்ணை விட யாருமில்லை என்கிற நினைப்பில் லேசான கலைதலோடு இருக்கிற பெண்ணைப் பார்க்கப் பார்க்க சுகமாய் இருந்தது. காதில் மாட்டி, தலையைக் குலுக்கி, நாலு வித

மாய் முகம்திருப்பி,கண்ணாடி பார்த்து மறுபடி அவிழ்த்து, வேறு மாட்டி தானே தன்னைப் பார்த்து, சிரித்து, கர்வப் பட்டு, 'ஹலோ' என்று விளித்து புன்னகை பூத்து— ஆச்சரியமாய் இருந்தது.

தான் இப்படி பார்ப்பது ராஜிக்குத் தெரிந்தால் நன்றாகவா இருக்கும். கதவு மூடினான். விளக்கு அணைத்தான். வேண்டுமென்றே தம்ளர் உருட்டினான். கதவு தாழ் அசைத்து அசைத்து திறந்தான். விளக்கு பொருத்தினான். தோளில் துண்டு போர்த்தி அறையை விட்டு வெளியே வந்தான். அத்தனை பிளாஸ்டிக் பொருட்களையும் சட்டென்று எங்கோ தம்ளர் சப்தம் கேட்டதும் பதுக்கி விட்டாள் போலிருக்கிறது. ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருப்பது போல் பாவனையில் இருந்தாள். உடைகள் சீராக இருந்தன. புத்தகம் மடித்து என்ன என்பது போல் பார்த்தாள். பக்கெட் எடுத்து பின்பக்கம் தேவு போக, மறுபடி ஆழமாய் புத்தகத்தில் ஊன்றினாள்.

இந்த நாடகமும் நன்றாகவே இருந்தது. இரண்டு மணிநேரம் இடைவிடாது புத்தகம் படித்தவள் போல் சின்ன களைப்புடன் புத்தகம் மூடுவதும், பிறகு திறந்து படிப்பதும்... எல்லா பெண்களுமே நல்ல நடிகைகள். இதில் என்ன சோகமெனில் இந்த நடிப்பு ஒரு கவசம். யாரும் தன்னைப் புரிந்து கொள்ளக் கூடாது என்று போட்டுக் கொள்ளும் கவசம். பாவம், கவசமில்லாத பெண் யார்? வயிறு லேசாக்கி மறுபடி முற்றத்திற்கு வந்தான். குழாய் திறந்து கைகால் கழுவிக் கொண்டான்.

''தூக்கம் வரலையா?'' -பின்னால் குரல் கேட்டது. ராஜி எழுந்து நின்றிருந்தாள். ஹால் சுத்தமாய் துடைத்து வைத்திருந்தது. நிலைக் கண்ணாடிகூட காணோம்.

‘‘நல்லா தூங்கிட்டேங்க. வயிறு புரட்டிச்சு... அதான்...’’

‘‘ஐயோ...! ஏதும் ஒத்துக்கலையா?’’

‘‘கூட சாப்பிட்டேனில்ல... அதான்!’’

‘‘என்ன சாப்பிட்டேள்... இத்துணூண்டு... இத்துணூண்டு.’’

‘‘எனக்கு அதிகம்.’’

‘‘நல்லா இருந்துதா?’’

‘‘எதுங்க?’’

‘‘எல்லாம்...’’

‘‘வார்த்தையே இல்லீங்க.’’

‘‘தாங்க்ஸ்!’’

‘‘எதுக்குங்க?’’

‘‘செயினுக்கு!’’

‘‘அது ஒண்ணுமேயில்லீங்க... நீங்களும், அம்மாவும் செய்யிற உதவிக்கு...’’

‘‘எனக்கு ஒரு உதவி செய்யறீங்களா?’’

‘‘என்ன?’’

‘‘லாங்கிளாத் துணி, குரோஷா ஊசி, எங்க விக்கும்னு தெரியலை... வாங்கித் தரீங்களா?’’

''குரோஷா ஊசி எதுக்கு.''

''உங்களுக்கு ஒரு தலையணை உறை தச்சுத் தரேன். குட்மார்னிங் எழுதி பூப்போட்டு... உங்க உறை எண்ணெய் பிசுக்கா கிடக்கு.''

''ஐயோ! அதெல்லாம் வேணாங்க.''

''ஏன், தலையணை எண்ணெய்ப் பிசுக்காகவே இருக்கணும்னு ஏதாவது வேண்டுதலா?''

''இல்லீங்க... சோறு போடற சிரமம் போறும். இதெல்லாம் எதுக்கு?''

''சொன்னா கேட்கமாட்டீங்க.'' ராஜி முற்றம் தாண்டி அவன் அறைக்குப் போய் தலையணை எடுத்து உறை பிரித்து எடுத்துப் போனாள்.

''வேணாங்க...அதுல பூப் போடாதீங்க.''

''இதுல போட முடியுமா? புது உறைலதான் போட முடியும். இத அட்லீஸ்ட் துவைச்சு பார்க் கலாம்.''

மறுக்க முடியவில்லை. வந்து படுத்து கால் நீட்டிய படி தலைக்குகீழே அந்த தலையணை—அதிர்ஷ்டத் தலை யணை நெளிந்தது. எப்போது பார்த்திருப்பாள் இந்த அழுக்கை. தினம் பிற்பகல் வந்து சுத்தம் செய்வது ராஜிதானா... மறுநாள் தானே அறையை ஒழித்தான். புத்தகங்களை அடுக்கி, படுக்கைகளைத் தட்டி சரி யாகப்போட்டு, துணிமணிகளை மடித்து இயன்றவரை சுத்தம் செய்தான். கடைக்குப் போய் வெள்ளை லாங் கிளாத்தும், குரோஷா ஊசி இரண்டும் நாலுவகை நூலும்

வளையமும் வாங்கி வந்தான். 'இந்தா' என்று கொடுக்க வெட்கமாய் இருந்தது. தன் அறை நாற்காலியில் வைத்துவிட்டுப் போனான்.

அன்றே எம்ப்ராய்டரி வேலை துவங்கியது. எந்த இடைஞ்சலும் இல்லாமல் பின்பக்க சுவர் நிழலில் உட்கார்ந்து கார்பன் வைத்துப் பூக்கள் படம் வரைந் தாள். காலை வணக்கம் எழுதினாள். நூல் எடுத்து தைக்க ஆரம்பித்தாள். இதழ், இதழாக பூ மலர்ந்தது. பிறகு இலை, காம்பு என்று பரவிற்று.

அடுத்த காம்பவுண்டில் ஆட்கள் நடமாட்டம் கேட்டது. எழுந்து நிற்க வெள்ளைக் கதர்சட்டையும், வெள்ளை வேட்டியுமாய் ஒரு இளைஞன் இஞ்ச் டேப் புடன் நகர்ந்து ரயில்வே லைன் சுவர் முனைக்குப் போனான். ஏறி சுவர் நெடுக வந்து ராஜி வீட்டுக் கொல்லையில் வந்து குதித்தான்.

''ஐயோ!'' என்று ராஜி எழுந்திருந்தாள்.

அவன் பயந்து அப்படியே நின்றான்.

''யாரு...யாரு? என்ன வேணும்?''

''ஸாரி மேடம்! நீங்க இருந்ததைக் கவனிக்கலை.''

''ஆள் இல்லேன்னா குதிச்சது ரைட் ஆயிடுமா?''

''நான் பர்மிஷன் கேட்டுத்தான் வரேன்.''

''எதுக்கு பர்மிஷன்?''

''இந்த சுவர் இடிக்கறதுக்கு...ரிமூவ் பண்றதுக்கு.''

"யாரும் பர்மிஷன் கேட்கலையே?"

"வீட்டு ஓனர்கிட்ட வாங்கிட்டோம்."

"எதுக்கு இடிக்கணும்?"

"பக்கத்துல உள்ள வீட்டில் இடிச்சு கட்டப் போறோம். இந்த சுவர் இடிச்சு உசத்தப் போறோம்."

"எங்க வீட்ல யாரும் ஜெண்ட்ஸ் இல்லை."

"நீங்க டெனென்ட்தானே!"

"அதனால குதிக்கலாமா?"

"தப்புதான். லேடீஸ் இருக்காங்கன்னு ஹவுஸ் ஓனர் சொல்லலை. யாரோ தேவேந்திரன்னு இஞ்சினியர்..."

"இந்த வீடுதான். ஆனா அவருக்கும் தெரியாதே!"

"வீட்ல வேற யாரும் இல்லையா?"

"எங்க அம்மா இருக்கா."

"ப்ளீஸ்! கூப்பிடுங்க. எனக்கு சுவர் இடிக்கணும்."

சகலமும் ராஜி வாரிக் கொண்டு உள்ளே போனாள். அம்மாவுடன் திரும்பி வந்தாள்.

"அட...மாமியா...இங்கயா இருக்கேள்...நான் மணிகண்டன். சீர்காழி வரது மாமா பிள்ளை." சுவர் ஏறி குதித்தவன் வியப்பில் மலர்ந்தான்.

"புரியலையே!"

"உங்க ஒன்றுவிட்ட தம்பி புள்ளை...சீர்காழில டெபுடி தாசில்தாரா..."

"ஆமா!"

"லட்சுமி மாமி...வரதுன்னு..."

"ஆமா...வா வா... உள்ள வா."

"நான் சுத்தி வாசல் வழியா வரேன் மாமி."

"பரவாயில்லை. உள்ள வா."

புழக்கடை வழியே வந்த அந்த இளைஞன் உள்ளே நுழைந்து வீடு சுற்றிப் பார்த்தான்.

"இந்தப் பக்கம் ஓடா...முன்னால் தளம் போட்டு பின்னாடி ஓடு வுட்டுட்டானா?"

"என்ன?"

"காரை சுவரு. இதுக்கா எட்டு லட்சம் கேட்கறான். அநியாயம்!"

அவன் பேசுவது புரியவில்லை. அதனாலேயே அம்மாவுக்கும், பெண்ணுக்கும் ஆர்வம் அதிகமாயிற்று.

மணிகண்டன் காண்ட்ராக்டர். கீழே பத்து ஆட்களை வைத்துக் கொண்டு எங்கு எந்த கட்டிட வேலை கொடுத்தாலும் செய்கிற காண்ட்ராக்டர்.

“சிவில் டிப்ளமா வேஸ்ட். அந்த மூணு வருஷத்தை கொலுத்து மேஸ்திரியோட செலவழிச்சா பத்து டிப்ளமா பசங்களை வேலை வாங்கலாம். நான் எஸ்.எஸ்.எல்.சி பெயில். பத்து வருஷமா இந்தத் தொழில்ல இருக்கேன். மெட்ராஸ்ல நான் நின்னு கட்டின கட்டடம் எண்பது இருக்கும். ஒரு வேலை கை வச்சு ஆரம்பிக்கறபோதே இன்னொரு வேலை வந்து நச்சரிக்கும். நான் ஒத்துக்கற தில்லை. வாங்கற காசுக்கு வஞ்சனை யில்லாம உழைப்பேன். மாமா உங்களோட இருக்கிறாரோ, இந்த ஓட்டு வீட்டிலேயே. அடடா! பத்தரை அடி துங்கணும், சலவைக்கல் தாவாரமும், கலர் கண்ணாடி போட்ட முற்றமும்...முத முதல்ல மாமா தானே முற்றத்து கூண்டுக்கு கலர் கண்ணாடி போட்டா. ஹால் அப்படியே மஞ்சளா நீலமா சேப்பா மின்னும். மின்றத பார்க்கறதுக்கே ஆட்கள் வருமே. கடை வச்சிருக்காரா! ஹார்ட்வேர் கடையா! நல்கநல்லூர்லயா...என்கிட்ட பேசச் சொல்லுங்கோ. நான் ஆள் காமிச்சு விடறேன். நான் கட்டினது தான் பாதி வீடு. அந்தப்பக்கம் எல்லா காண்ட்ராக்டர் மேஸ்திரிகளையும் எனக்குத் தெரியும்...

“வெங்கடேசு இஞ்சினியரா! ராஜி படிக்கப் படாதோ! கும்மோணம் போக்கத்த ஊர். வெத்தலை எச்சில், சாக்கடை மாறவேயில்லை. மாறவும் மாறாது. பட்டணத்தைப் பாருங்கோ. நேத்து பொட்டல்காடா இருந்தது. இன்னிக்கு காலனியாறது. ராஜி, நீ சிவில் இஞ்சினீயரிங் படிக்கறேன்னு சொல்லு, பட்டுன்னு சேர்த்து வுட்டுர்றேன்...

“காப்பியா...எனக்கா? ஸாரி, டீ-காப்பி எதுவும் குடிக்கறதில்லை. மோர்-பால்...சில சமயம் ஹார்லிக்ஸ்! எங்கம்மா நான் பட்டினத்துக்கு கிளம்பினதுக்கு ரொம்ப கவலைப்பட்டா. கெட்டுப் போயிடுவேன்னு சொன்னா.

அவ நின்ன பூமியில சத்தியம் பண்ணினேன்...ஒரு லாகிரி வஸ்துகூட எடுத்துக்க மாட்டேன்னு. இன்னிவரைக்கும் தொட்டதில்லை. மனசு சஞ்சலமா இருந்தா மாலை போட்டுருவேன். நாப்பத்தஞ்சு நாள் தரைல படுக்கை. ஒரு வேளை சாப்பாடு. விடிகாலை பச்சைத் தண்ணி குளியல். இன்னிக்கு கைல நாலு லகரம் இருக்குன்னா அந்த சாஸ்தாதான் காரணம்...

"என்ன சஞ்சலம்னு தோண்றதா? சித்தாள்—பெரியாளை நம்பி செய்யற வேலை. லேபர் ஓரியண்டட்! இரண்டு நாள் வருவான், இரண்டு நாள் மட்டம் போட்டுருவான். என் கஷ்டம் காசு கொடுக்கறவனுக்குத் தெரியாது. திட்டுவான். காசை தாராளமா வீசினா தான் காரியம் நடக்கும். செங்கல், நேத்திக்கு ஒரு விலை; இன்னிக்கு ஒரு விலை. சிமெண்ட் கிடைக்கறதேயில்லை. கஷ்டம் மாமா...இந்தத் தொழில்...

"ராஜி வளர்ந்துட்டா. பாவாடை சட்டையோட பார்த்தது. எப்ப கல்யாணம்...சொல்லு...நான் வரன் பார்க்கட்டுமா?"

பேசவே விடவில்லை. ஒரு வார்த்தைக்கு நாலு வாக்கியம் பதில். அந்த ஒரு வார்த்தை சொல்லாது போனாலும் பதில். கொல்லை வழியாக உள்ளே புகுந்து கொல்லை வழியாகவே வெளியேறினான்.

மழை அடித்து ஓய்ந்தது போல் இருந்தது. ராஜி ஹாலில் உட்கார்ந்து தையல் வேலை துவங்கினாள். தேவு மாலையில் வந்ததும் பாதி இடிக்கப்பட்ட சுவர் பார்த்து நின்றான்.

"என்னங்க ராஜி, இது..." — கூப்பிட்டு கேட்டான்.

"பக்கத்து வீட்டை இடிச்சு அடுக்கு ஃப்ளாட் கட்டப் போறாளாம்..."

"இது நம்ம சுவரு. இதை ஏன் இடிக்கணும்?" வீட்டுக்காரரிடம் போய் கேட்டான். செங்கல் லாரி கடைசி வரை வருவதற்காக இடது பக்க சுவர் முழுக்க இடிக்க அனுமதி கொடுத்திருக்கிறாராம். கட்டடம் கட்டியதும் அந்த சுவரை அவர்களே கட்டிக் கொடுத்து விடுவார்களாம்.

"முட்டாள்தனமா இருக்கே... ரெண்டு லேடீஸ் இருக்கற இடம். சுவர் இடிச்சுட்டா பாதுகாப்பு எப்படி?" சப்தம் போட்டிருக்கிறான்.

"இஷ்டமிருந்தா இரு. இல்லேன்னா போ..." என்று பதில் கிடைக்க, தேவுக்கும் வீட்டுக்காரருக்கும் பெரிய வாக்குவாதம் வந்துவிட்டது.

"நானா காலி பண்றதா...உன்னால முடிஞ்சதைப் பாரு..." தேவு தெருவில் நின்று இரைய, அப்பாவும், வெங்கடேசும் சமாதானம் பண்ணினார்கள்.

வீட்டுக்குள் வந்து ஆலோசனை செய்தார்கள். "அவன் சுவர்—அவன் இடிக்கிறான். இதுக்கெல்லாம் கத்த முடியுமா?"—அப்பா கேட்டார்.

"நம்மள கேட்காம...குடியிருக்கறவங்களை கேட்க வேண்டாமா? சட்டமே இருக்கு."

"அந்த காண்ட்ராக்டர் பையன் தெரிஞ்சவன்தான். பயம் ஒண்ணுமில்லை."

அம்மா பதில் சொல்ல, தேவு விவரம் கேட்டான். 'அப்பன்னா சரி...' என்று தணிந்து போனான். பெண்கள் பொருட்டு சண்டையிட்டு பெண்கள் அமை திப்படுத்தியவுடன் விட்டுக் கொடுக்கிற அந்த சூழ்நிலை தேவுக்கு வந்தது.

''யாரோ சண்டை போட்டானாமே? சுவர் இடிக்கற துக்கு சட்டம் பேசினானாமே? யார் அது தேவேந்திரன்? சட்டம் முன்ன பின்ன இருக்கும். நம்ம சௌகர்யத் துக்கு அதை என்ன வேண்ணா பண்ண முடியும்னு சொல்லுங்கோ. இந்த பில்டிங் ஓனர் அடுக்கு ஃப்ளாட் கட்டறவர். பெரிய பணக்காரர். கவர்மென்ட்ல செல் வாக்கு உள்ளவர். நிதானமா பேசச் சொல்லுங்கோ. அப்புறம் ஏடாகூடமா ஆயிடப் போறது. நான் இருக் கேன். உங்களுக்கு என்ன பயம்? அஸ்திவாரம் போட்டவுடன் இங்கயே கூரை போட்டு உட்கார்ந் துடுவேன். அவன் இஞ்சினீயரா இருக்கலாம். பணக் காரன்கிட்ட மோத முடியுமா? ஒண்ணுமே புரியலை. தேவேந்திரன் என்ன பேரு...ஏன் உங்களோட?''

அம்மா விவரம் சொல்ல தலையாட்டினான்.

''எனக்கு ஆறு பாண்டு வேணுமே. சார் கிட்ட இருக்குமா?'' பாண்டு, கடப்பாரை, ஹாக்ஸா ப்ளேடு என்று அப்பாவும் அவனும் சிநேகமானார்கள். மணல் காண்ட்ராக்ட் எடுக்கறேளா? லாரி புடிச்சு தரேன். யாருக்கு மணல் வேணும்னு கேட்டு ஒரு போன்...இந்த நம்பருக்கு அடிங்கோ. நூறு ரூவா மணல் நூத்தி இருவதுக்குப் போகும். மேற் கொண்டு விற்கலாம். உங்க சாமர்த்தியம்...''

எட்டு லாரி மணல் விற்று, இருநூறு லாபம் கிடைத்த போது அப்பா அவனுக்கு பகல் சாப்பாடு போட்டார்.

சாப்பாட்டு இலை முன்னே கண்மூடி அமர்ந்து தியானம் பண்ணிவிட்டு இலை சுற்றி நீர் வார்த்து பருக்கை பருக்கையாய் மந்திரம் சொல்லி சாப்பிட்டு இடபக்க இலைக்கு நீர்வார்க்க கை நீட்ட, அப்பா இரண்டு கவளம் விழுங்கி விட்டிருந்தார்.

''நீங்க இதெல்லாம் பண்றதில்லையா? செய்யணும் சார்! நம்ம சிஸ்டம் நாமளே பண்ணலைன்னா எப்படி? சரி, எல்லாரோடயும் கலந்து வேலை பண்ற நிலைமை. வசிக்க வேண்டிய நிர்ப்பந்தம். நம்ம ஆச்சாரம் நமக்கே விட்டுப் போச்சு. நமக்கே நம்பிக்கை இல்லாம போச்சு. உதாரணத்துக்கு ஒண்ணு சொல்றேன்...என் கிட்ட ஒரு பழைய புஸ்தகம் இருக்கு. கோல புஸ்தகம். அதுல குறிப்பிட்ட ஏழு கோலம்...தினம் நாளைக்கு ஒண்ணா போட்டா...போடற கன்னிப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகும். இதை நான் நடைமுறைல பார்த் திருக்கேன். நான் கொண்டுவந்து தரேன். ராஜியைப் போடச் சொல்லுங்கோ.''

ராஜிக்கு அவன் குரல், தலையை ஆட்டி ஆட்டி பேசுகிற விதம்—ஏதாவது பேசிக்கொண்டேயிருக்கிற தன்மை—நான் இப்படி அப்படி என்று சொல்லிக் கொள்ளும் பாவனை எல்லாம் வியப்பாய் இருந்தது. தினம் காலையில் 'என்ன செளக்கியமா?' என்கிற விசாரிப்பு வினோதமாய் இருந்தது.

ஒரு மேல்தளம், பக்க சுவர் என்று மெல்ல கட்டடம் இடிக்க அவன் குரல், அவன் தோற்றம் பழக்கமாகிப் போயிற்று. ஏழே முக்காலுக்கு உள்ளே வந்து தினமணி பேப்பர் படிக்க கொடுத்துவிட்டு இடிக்கிற கட்டடம் மேற்பார்வை பார்க்கப் போய்விடுவான். எல்லா வாரப்

பத்திரிகைகளும் வாங்குவான். படித்துவிட்டு ராஜிக்காக கொல்லைப்புறப் படியில் வைத்துவிடுவான். கோலப் புஸ்தகம் புதுசாய் வாங்கி அம்மாவிடம் கொடுத்தான். ராஜி கோலம் போட 'அடடா!' என்று கோலம் பார்த்து கை கூப்பினான்.

ஒரு சனிக்கிழமை. அவனும், தேவேந்திரனும் எதிரும் புதிருமாய் சந்தித்துக் கொண்டார்கள்.

"நான் மணிகண்டன்!"

"ம்ம்...!"

"பக்கத்து பில்டிங் காண்ட்ராக்டர்."

"அதான் எழுதி ஒட்டியிருக்கே...சொல்லணுமா..."—தேவு எடுத்தவுடன் கடித்தது.

"அப்படியா! சார் சொன்னாதான் தெரியும்."

"என்னது?"

"நீங்க இஞ்சீனியர்னு சொன்னாதான் தெரியும். அப்பவும்..."

"அப்பவும்..."

"நம்பறது கஷ்டம்!"

"நான் எம். எஸ்ஸி. ஃபர்ஸ்ட் கிளாஸ்!"

"ஸ்காலர்ஷிப்ல படிச்சேளா? உங்களவாளுக்கு சலுகை நிறைய தரா கவர்மென்ட்ல. முட்டி மோதி

வந்துடறேள். இந்த காண்ட்ராக்டர் உத்தியோகம் கிடைக்கப் பட்ட பாடு சிவனறிஞ்சு போச்சு. நுழைஞ்ச பிறகு பீட் பண்ண ஆள் இல்லை, அது வேற விஷயம். மாமி, இந்த காஸெட் கேட்டுருக்கேளா...குத்துவிளக்கு ஸ்தோத்திரம்... ஏன்... டேப்ரெக்கார்டர் இல்லையா? நானூறு ரூபாய்க்குக் கிடைக்கறதே...ஏன்...வெங்கடேஷ் வாங்கலையா? வீட்டுல எப்படிதான் கொட்டு கொட்டுன்னு உட்கார முடியறதோ? என்கிட்ட இருக்கறது தரட்டுமா?''

''வேண்டாம். எங்கனா கீழே போட்டு உடைச் சிட்டா...புதுசு வாங்கித் தரும்படி ஆவும், வேண்டாம்...'' —தேவு இடையில் புகுந்து மறுத்தது.

''சார், இஞ்சினியர் சார் மறிக்கறது பார்த்தா உடனே புதுசு வாங்கிட்டுதான் மறு வேலை பார்ப்பார் போல இருக்கு. கம்பெனி சம்பளம். டேப்—ரெக்கார் டர் என்ன டி.வி.யே வாங்கலாம். காஸெட் இருக்கட் டும். டேப்—ரெக்கார்டரை சார் வாங்கின உடனே போட்டு கேளுங்கோ. கேட்கற போது என்னை நினைச்சுக்கணும்...''

இரண்டு நாளைக்குப் பிறகு தேவு டேப்ரெக்கார்டர் புதுசா வாங்கி வர 'முத முத நல்ல பாட்டா போடு' என்று அம்மா கேட்க, குத்துவிளக்கு ஸ்தோத்திரம் போடப் பட்டது. மணிகண்டன் நினைவு எல்லோருக்கும் வந்தது.

எல்லோரும் அமைதியாய் கேட்டுக் கொண்டிருக்க ராஜி, தேவு அருகே போய், ''அந்த ஆள் ரொம்ப பேசறார் இல்லை'' என்று கேட்டாள்.

''ஒத்த காசுக்கு நம்பக் கூடாத ஆளு. உங்கப்பாக்குப் புரியலை. என்னிக்கோ உதைபடப் போறான் என்கிட்ட.''—தேவு ஆத்திரத்தோடு பேசினான்.

மறுநாள் காலை தினமணி பேப்பர் வாங்கும்போது டேப்-ரெக்கார்டர் புதுசு வாங்கியாச்சு என்று மணியிடம் தகவல் சொன்னான்.

''லோக்கல் மேக்கா... டேப்-ரெக்கார்டர் லோக்கல் மேக் வாங்கவே கூடாது. இந்த ஆள் எப்படி எம்.எஸ்.ஸி பாஸ் பண்ணான். சரியான த்வஜஸ்தம்பம். ஒண்ணு சொல்றேன்... படிப்பு வேற... புத்திசாலித்தனம் வேற. அந்தாளுக்குப் போறலை.''

இரண்டு சேவல்களும் எகிறி எகிறி கொத்திக் கொண்டன. நகத்தால் கீறிக்கொண்டன, அலகால் கொத்திக் கிழித்தன. விலகின. மறுபடி மறுபடி மோதின.

ராஜி சந்தோஷமாய் வேடிக்கை பார்த்தாள். சண்டைக்கு காரணமே அவள்தான் என்று தெரியாமல் பார்த்தாள்.

அந்த வயசுப் பெண்ணுக்கு ஆண்கள் குணாதிசயமே அதிசயமாய் இருந்தன. அவர்கள் சீற்றம் வேடிக்கையாய் இருந்தது. அவர்கள் வெட்டிக் கொள்வதும் குத்திக் கொள்வதும் பார்க்கப் பிடித்திருந்தது. இதுல யார் ஜெயிப்பா என்கிற பந்தய ஆசை உண்டாயிற்று.

சரி சரிங்கற ஒருவன்; சாதுவாய் ஒருவன். அலட்டலாய் ஒருவன்; அமைதியாய் ஒருவன். வேகமாய்

ஒருவன்; மிருதுவாய் ஒருவன். அப்பாவுக்கு மணி கண்டனைப் பிடித்திருந்தது. அம்மாவுக்கு தேவு உயிராய் இருந்தான். அப்பாவை மாமா என்று அழைத்தான் மணி. அம்மாவை மம்மி என்று கூப்பிட்டான் தேவு.

இதுல யார் உசத்தி என்று ராஜி யோசித்தாள். சோதனை செய்ய ஆசைப்பட்டாள். அவளுக்கு கும்பகோணத்தில் வாங்கின அடி மறந்துபோய் அதன் தழும்பும் மறைந்து விட்டது.

மறுபடி ஒரு விளையாட்டுக்குத் தயாரானாள். இந்த முறை எழுந்திருக்க முடியாமல் அடி விழும் என்று கணிக்கத் தெரியாது போயிற்று.

எல்லா துன்பங்களையும் நினைவில் வைத்திருப்பின் மனிதன் சோகம் தாங்காது வாழ்க்கை ஆரம்பத்திலேயே சரிந்து விடுவான் என்பதாலேயே மறதி அவனுக்கு இயல்பாயிற்று. ஆனால் மறுபடி அடி வாங்கவே மறதி உபயோகமாயிற்று.

கும்பகோணம் பற்றி ராஜிக்கு மட்டுமில்லை; வீட்டில் எல்லோருக்கும் மறந்து போயிற்று. வீட்டுப் பெண்களின் அச்சம் போக்கி அவர்கள் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிக்கும் சுதந்திரம் கொடுத்து, நல்லதோ கெட்டதோ அவளின் தார்மீகத் துணையாய் ஆண்கள் வாழத் தயாராய் இல்லாத தேசம் இது. உன் தேவைகள் அனைத்தும் உரிய நேரத்தில் என்னால் பூர்த்தி செய்யப்படும். சகல தீயதிலிருந்தும் உன்னைக் காப்பாற்றவே நானிருக்கிறேன் என்கிற வாக்கையும் மறந்து போன இடம் இது.

முருங்கை மரத்தை வளர வளரத் தறிப்பது போல பெண்ணை உருக்க வைத்து அலங்கோலப்படுத்தினார்கள். இதில் எல்லா உறவுகளும் சமபங்கு ஏற்றார்கள்.

மரமும்— வெட்டுப்பட்ட பிறகும் வெட்கமின்றி தழைத்தது.

ஒரு பண்டிகை நாளில் ராஜியின் மீது அக்கறைப்பட்ட இரண்டு ஆண்களும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

''மணிகண்டா, சாப்பிட வா'' என்று மாமி அவனை பின்னால் போய் ஒரு குரல் கொடுத்து விட்டு வந்தாள்.

''அவன் வரபோது வரட்டும். எனக்குப் பசிக்குது. சாப்பாடு போடுங்க மாமி.'' தேவு முணுமுணுத்தான். ''ஒரே நிமிஷம். ராஜி அப்பளம் பொரிக்கறா. ஆனதும் இலை போட்டுர்றேன்.''

அப்பளம் பொரித்து கூடத்தில் வைத்து விட்டு ராஜி எண்ணெய் புகைப்பட்ட முகம் அலம்ப கொல்லைப்புறம் போனாள்.

''தடபுடலா இன்னிக்கு...?'' —சாரத்தின் உச்சியிலிருந்து மணிகண்டன் கேட்டான்.

ராஜி சிரித்தாள். ''ஒண்ணுமில்லை. சிம்பிள் சமையல்தான். வாங்களேன்... நாழியாறது.''

''நான் சமையலைச் சொல்லலை. வழக்கமா தாவணில இருப்பே. இன்னிக்கு ஸாரில இருக்கே. அதைச் சொல்றேன்!''

ராஜி வெட்கப்பட்டாள். சோப்பு டப்பாவுடன் உள்ளே நுழைந்து, ''இலை போட்டாச்சு...வரலையா?''

என்று கேட்டாள். "கடைசி சுவர் பூசறான். இதோ வந்துட்டேன்." கூடத்தில் எல்லோரும் கூட, அவன் ஐந்து நிமிட தாமதமாய் இறங்கி வந்தான். எல்லோரும் இலையில் உட்கார, அவன் கை-கால் கழுவி, சட்டை அவிழ்த்து உடம்பு முழுவதும் ஜலம் ஊற்றிக் கொண்டான். பாயசம் பரிமாற கூடத்திலிருந்து விபூதி எடுத்துக் குழைத்துப் பூசிக் கொண்டு முற்றத்தில் குத்திட்டு உட்கார்ந்து மத்தியான ஜபம் செய்ய ஆரம்பித்தான்.

"இதோ பார்டா... எல்லாரும் இலைல உட்கார்ற போதுதான் இவரு மூக்கப் புடிச்சிக்கிட்டு முற்றத்துல உட்கார்றாரு. எப்ப வருவீங்க?"—தேவு இரைய,

"ஒரு நிமிஷம்" என்று அவன் மௌனமாய் கை காட்டினான்.

"இதை அங்கனயே செய்துட்டு வரக்கூடாதா? ஆளுங்க இலை முன்னாடி உட்கார்றதப் பார்த்துட்டு இல்லாத பொல்லாத வேஷமெல்லாம் போடறாரு."

அவன் தலையைச் சுற்றி தண்ணீர் தெளித்து விட்டு சூரியனை கோர்த்துக் கொண்ட விரல்களூடே பார்த்தான்.

"யோவ், வாய்யா... சாப்பாட்டுக்கு. சாரத்துல ஏறி நின்னு சூரியனைப் பார்த்துக்க. நல்லா படுத்தறான் சோறு தின்னுற நேரத்துக்கு."

அவன் நெஞ்சில் கை கூப்பி நின்று கண்மூடி மந்திரங்கள் சொன்னான். நீர் வார்த்தான். தன்னைச்

சுற்றினான். மறுபடி ஜலம் எடுத்து உள்ளங்கையில் விட்டு துளித் துளியாய் பருகியபின் உள்ளே வந்தான்.

அப்பா, தேவு அண்ணா, அம்மா, ராஜி எல்லோரும் அவனுக்காகக் காத்திருந்தார்கள்.

''அப்பா... முடிச்சுட்டியா... சோத்துக்கு வான்னு கூப்பிட்டா சொந்த வூடு மாதிரி ஊர்ப்பட்ட பூசை பண்ணிட்டு வர்றதா. ஒரு தன்மை வேணாம்? தினம் பண்றியோ என்னவோ... இன்னிக்கு இங்க படம் காமிக்கற.'' கடுகடுப்பாய் தேவு பேசினான். இலையில் போட்ட பாயாசம் எடுத்து ருசி பார்த்தான்.

''எங்க தன்மை இப்படித்தான். சோத்துக்குக் கூப்பிட்டா உடனே வேஷ்டி வழிச்சுண்டு இலைக்கு முன்னாடி உட்கார்ந்துட மாட்டோம். பாயாசத்தை நக்கியாச்சாக்கும். நெய் விடற வரைக்கும், நெய் விட்டு புரோக்ஷணம் பண்ற வரைக்கும் சோத்துல கை வைக்கக்கூடாது. பசி இருக்கலாம். மனசு கட்டுப் படுத்தணும். இந்த சோறு, இலைல இருக்கற பண்டம் எனக்கு முக்கியமில்லைன்னு அந்நியமா இருக்கணும். கொண்டா கொண்டான்னு அலையப்படாது.

''மாமி பரிமாறலாம். முதல்ல இவருக்கு போட்ருங்க- எல்லாத்தையும், அவரு சாப்பிட ஆரம்பிக்கறாரு. பிறகு நான், அம்பி, மாமா புரோக்ஷணம் செய்துட்டு சாப்பிடறோம்.''

சட்டென்று தன்னைப் பிரித்து ஒதுக்கி வைத்ததை தேவு உணர்ந்தான். தேவு முகம் சுண்டுவது மாமி பார்த்தாள்.

"எங்க வீட்டில யாரும் இதெல்லாம் பண்றதில்லை. அதெல்லாம் போன தலைமுறையோட விட்டுப் போயிடுத்து."

"விடப்படாது. நம்ம சிஸ்டம் நம்ம சிஸ்டம்தான். விட்டே கொடுக்கப்படாது. பாபம் அது."

"என்னய்யா சிஸ்டம்... காண்ட்ராக்ட் எடுத்து சிமெண்ட் கமிஷன் அடிக்கலாம். சித்தாளோட சிரிச்சுப் பேசலாம். நூறு ரூபாய்க்கு மண் வாங்கி நூத்தி இருபதுக்கு கணக்கு எழுதலாம். இது கூட சிஸ்டம் தானா? இப்படி தண்ணி ஊத்தி பூஜை பண்றவங்க பட்டை அடிச்சிக்கிட்டு கோவில்ல இருக்கணும். வெள்ளைச் சட்டையும், ஜவ்வாது பவுடருமா மைனர் மாதிரி வரீங்க. கேட்டா சிஸ்டம்கறீங்க."

"வேறு வழி... பொழைக்க வேண்டி இருக்கே. அந்த காலத்துலே வாசல்ல வந்து நின்னா சோறு போடுவாங்க. ராஜா வீட்ல விருந்து தருவாங்க. மரியாதை செய்வாங்க. இப்ப யார் யாரோ ராஜாவாயிட்டான். நாங்க கல்லு உடைக்கற இடத்துக்கு வந்துட்டோம்."

"அதான்... உன்னைத் தவிர வேற யாரும் நல்லா இருந்திடக் கூடாது. உன்னை எல்லாரும் கும்புடணும். உனக்குக் காத்திருக்கணும். காத்திருக்காங்கன்னு தெரிஞ்சவுடன் பந்தா வந்துடும். இதெல்லாம் ஒரு பொழப்பு!"

"சரி... பேசாத சாப்பிடுங்கோ!" மாமி அதட்டினாள்.

"அப்பளம் சிவந்திடுத்து மாமி. சுட்ட எண்ணெய்யா? காரலா இருக்கே." அவன் பேச்சு மாற்றினான்.

தேவுக்கு எரிச்சல் உச்சமடைந்தது.

''யோவ்! போட்டது சாப்பிட்டுப் போவியா, என்னமோ பொம்பளை மாதிரி பதம் சொல்றியே. கேட்டா போஜனப் பிரியாள்னு ஏதாவது சொல்லுவ. மூடிக்கிட்டு சாப்பிடு'' சாபபிடும்போது பேசுவது தேவுக்குப் பிடிக்காது.

''தின்னே அழிஞ்சவனுங்க.''

''பின்னே, உங்களை மாதிரி குடிச்சி குட்டிச்சுவரா போகச் சொல்றியா''

''யாரைப் பார்த்து சொல்ற குடிக்கறேன்னு?''

''உன்னையா... உன் மாதிரி ஆளைச் சொல்றேன்.''

''போறும். சாப்பிடு தேவு.'' —வெங்கடேஷ் அடக்கினான்.

''இவன்கூட எனக்கு சோறு போடாத வெங்கடேஷ். சாப்பாட்டுல மரியாதை இல்லாத ஆளு இவன்.''

''நானும் இதைச் சொல்லணும்னு நினைச்சேன். இவருக்கு தனிப்பந்தி போட்டுருங்கோ. முந்தியோ... பிந்தியோ... போடறது பெட்டர்.''

தேவேந்திரனுக்கு உடம்பு பதறியது. ''எழுந்திருடா.'' தேவு கை சொடுக்கினான். ''எழுந்திரு முதல்ல.''

அவன் சகலரையும் பார்க்க, தேவு தன் வலது கையால் அவனைப் பிடித்துத் தூக்கினான்.

"ஐயோ... இலைல உட்கார்ந்தவனை எழுப்பறது பாபம்!"—மாமி கூவினாள்.

"தேவு... சும்மா இரு." வெங்கடேஷ் அதட்டினான்.

"நீ எதுக்குப்பா அவரை எழுப்பற?" அப்பா உரத்த குரலில் அதட்டினார்.

ஒரு நிமிடத்தில் அந்த இடம் குழப்பமாகியது.

"இந்த வீட்டு மனுஷாளோட மனுஷாளா வளைய வர்றேன். எனக்கு வேற பந்தி போடச் சொல்ல இவன் யார்?"

"சார்... மணிகண்டன், நீங்க பிஹேவ் பண்றது சரியில்லை. நல்லநாள், பல வருஷமா உங்க ஃபேமிலி யைத் தெரியும்னு ஒரு நட்பா கூப்பிட்டா...தேவையில் லாம பேசி ஏன் சண்டை உண்டாக்கறேள்?" வெங்கடேஷ் அதட்டினான்.

"சண்டை அவரா உண்டாக்கினார். இலைல உட்கார்ந்துண்டு வாய்யா வாய்யான்னு தேவுதான் கூவினான். மாத்யானம் பண்றத கேலி பண்ணினான்." அப்பா இடை மறித்தார்.

"இல்லீங்க, நான் அதை கேலி பண்ணலை. சபை மரியாதை, பந்தி அனுசரனை தெரியாத, நாலு பேரைக் காக்க வைக்கறோம்னு எண்ணமில்லாத..."

"சார் நீங்க விடுங்கோ... கழுதைக்குத் தெரியுமா..."

"அடி செருப்பால...!" தேவு கோபமா கை ஓங்கி னான். வெங்கடேஷ் தடுத்தான்.

''தேவு, உட்கார். சார், மணிகண்டன் உட்காருங்கோ. இது சாப்பிடற நேரம். உங்களை இப்ப குத்தம் சொல்றது தப்பு. விருந்தாளியை கூப்பிட்டுட்டு நாங்களே தவறா பேசக் கூடாது. இது என் ஆர்டர். ப்ளீஸ் தேவு உட்கார். அப்பா, வாயை மூடிண்டு சாப்பிடு.''

ராஜிக்கு கால்கள் நடுங்கின. ஆத்திரமான தேவுவைப்-பார்க்கும்போது உடம்பு உதறிப் போட்டது. ஒருவன் கை ஓங்கியும் கவலைப்படாது உட்கார்ந்திருந்த மணிகண்டனைப் பார்க்க ஆச்சரியமாய் இருந்தது.

ஐந்து நிமிடத்தில் விருந்து முடிந்து வெங்கடேஷ் முதலில் எழுந்திருந்தான்.

தேவேந்திரனுக்கும் மணிகண்டனுக்கும் கை கழுவ ஜலம் கொடுத்தான். வெற்றிலைப் பாக்கு பரப்பினான்.

''மணிகண்டன், வெத்தலை போடுங்கோ.''

''வேண்டாம் சார். எனக்கு வழக்கமில்லை. நான் கிளம்பறேன். மாமி ரசம் ஏ-ஒன். இரண்டு அறை எனக்கு விழுந்திருந்தாகூட அந்த ரசம் குடிச்சுட்டுத்தான் வெளிய போயிருப்பேன். சுகமான வாசனை. வரேன்''-வெளியேறினான்.

அவன் வெளியேறிய இரண்டாவது நிமிடம் வெங்கடேஷ் எழுந்து சமையலறைக்குப் போனான். ''அம்மா, அந்தப் பையனை இனிமே சாப்பிடக் கூப்பிடாதே. அவன் சரியில்லை.''

"ஏன்...ஏன்... என்ன சரியில்லை." அப்பா எகிறினார்.

"நீயும் சரியில்லை. நம்ம குடும்பத்தோட குடும்பமா இருக்கறவனை நேத்து வந்தவன் கேலி பண்ணா நாம உட்கார்ந்து கேட்கறது தப்பு. அவனைக் கொண்டாடணும்னா தெருவுல வச்சுக்கோ."

"மாத்தியானம் பண்றது தப்பா?"

"யெஸ். மனுஷா சௌகரியம்தான் முக்கியம். இலைல ஆள் உட்கார்றது தெரிஞ்சும் பெரிய மயிர் புடுங்கி மாதிரி பிஹேவ் பண்றான். எப்படி சாப்பிடறதுன்னு சொல்லித் தரான். இது நம்ம வீடு. நம்ம இஷ்டப்படி, சாப்பாடு. தெரிஞ்சவனாச்சேன்னு ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூப்பிட்டா நொட்டை சொல்றது கெட்டபழக்கம். சுட்ட எண்ணெயாம். ஒரு தடவை அப்பளம் பொரிச்சிட்டு சாக்கடைல ஊத்தறதுக்கு இங்க என்ன கொட்டியா கிடக்கு. மட ராஸ்கல்! இவன் என்ன மாப்பிள்ளையா, இந்த வீட்டுக்கு. சோறு தின்ன கூப்பிட்டுட்டு அவமானப் படுத்தக் கூடாதுன்னு பொறுமையா இருந்தேன்."

"கொஞ்சம் ஆசாரமா இருக்கான். நம்ம கல்ச்சரோட..." அப்பா மறுத்துப் பேசினார்.

"போறும், உம்ம ஆசாரம், உம்ம கல்ச்சர். எனக்குத் தெரியும். வாயை மூடிக்கிட்டு இரும்!"

"என்னடா மரியாதை இல்லாத பேசற?"

"அடா புடான்னே கெட்ட கோபம் வரும். அப்பான்னு பலதும் பொறுத்துண்டிருக்கேன். கிளறாதேயும்!"

"என்ன...என்ன பண்ணுவடா?"

"வெளிய போய்யா... போ வெளியே!"

அப்பா எகிறி வெங்கடேஷை அறைய முற்பட, வெங்கடேஷ் பின்னால் நகர்ந்து துண்டோடு தகப்பனை இறுக்கி தடதடவென்று இழுத்து வெளியே தள்ளினான்.

வீடு உறைந்து போயிற்று. தேவேந்திரன் இதைத் தடுக்க அவசரப்பட்டாலும் உள்ளே ஏனோ சந்தோஷமும் நன்றியும் பொங்கின. வெங்கடேசனை, அவன் நட்பை எந்த நேரத்திலும் கைவிடக்கூடாது என்று உறுதி தோன்றியது.

மனிதனுடைய உறுதி அவனைப் புடம் போட வைக்கும் அமிலம். சில சமயம் அந்த அமிலம் அவனை முற்றிலும் கரைத்து காணாமல் போகவும் செய்கின்றது.

"என்னையா வெளிய தள்றே... என்னையா வெளிய தள்றே..."—அப்பா வாசலில் நின்று கத்த, அம்மா ஓடிப்போய் அவர் கையைப் பிடித்து உள்ளே இழுத்தாள்.

அவள் கையை அப்பா வெடுக்கென்று உதறினார். தெருவில் நடந்து போனவர்கள் நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். அடுத்த வீட்டில் வேலை செய்கிறவர்கள் அப்படியே நின்று கூச்சலைக் கவனித்தார்கள்.

மணிகண்டன் பதறியபடி ஓடி வந்தான். "என்ன சார்...என்ன சார்?" கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறவரைப் பிடித்து நிறுத்தினான்.

''அடிக்க வராண்டா எம்புள்ளை—எவன் பேச்சையோ கேட்டுண்டு.''

''ச்சு...ச்சு...பேசப்படாது. இதெல்லாம் தெருவுல பேசப்படாது. மாமி, நீங்க உள்ள போங்கோ. தெரு வேடிக்கை பார்க்கறது. ப்ளீஸ், உள்ள போங்கோ. வாங்க சார்...இப்படி வாங்கோ...''—தன்னிடத்துக்கு அழைத்துப் போனான்.

அப்பாவின் கூச்சல் வெகுநேரம் கேட்டுக் கொண்டிருந்தது. அம்மா சாப்பிட மாட்டேன் என்று சொல்லி விட்டாள். ராஜி ரசம் மட்டும் கரைத்துக் குடித்தாள்.

மாலை நேரத்தில் மணிகண்டன் உள்ளே வந்தான். ''வெங்கடேஷ், நீ பண்ணது ரொம்ப தப்பு. நான் வர்றது உனக்கோ, தேவேந்திரனுக்கோ பிடிக்கலேன்னா ஒரு கோடி காட்டியிருந்தா பேசாம போயிருப்பேன். அதுக்காக உங்கப்பாவை இப்படி பண்ணியிருக்கக் கூடாது. இனி எந்தக் காரணம் கொண்டும் உங்க வீட்டுக்குள்ள நான் நுழைய மாட்டேன். இது சத்தியம். ப்ளீஸ், வந்து உங்கப்பாவை கூப்பிடு. வெயில் வெளிய ஜாஸ்தியா இருக்கு...ப்ளீஸ்!''

''யோவ், உன் வேலையப் பார்த்துக்கிட்டு போ. நீயா ஏதாவது காரணம்காட்டி எல்லா இடத்துலேயும் ஹீரோ வேஷம் போடாதே. உனக்கு சோறு போட்டதால அவரைத் துரத்திட்டமா? என்ன இங்க நடந்தது தெரியுமா?''

''சாருக்கு நான் சாப்பிட வந்தது பிடிக்கலை. அது பெரிசாயிடுத்து. நான் ஏதோ போட்டிக்கு வந்துட்டேன்னு நினைச்சுட்டார்.''

“கூறுகெட்ட முண்டம்! கல்லு அடுக்கற உனக்கும் எனக்கும் போட்டியா? போட்டிக்கு வந்தா தாங்கு வியா?” தேவு எழுந்து அவனருகே வந்தான். “இந்த ஆள் அராத்தா இருக்கான் வெங்கடேசு...இல்லாதது இருக்கறதா பேசி கலர் மாத்தறான். எதுக்குய்யா போட்டி? என்ன போட்டி?”

“சொல்லிடுவேன்...எனக்குக் கஷ்டமில்லை. ஆனா இவா நல்லவா. இவா வாழ்க்கை பாதிக்கும்னு சைலண்டா இருக்கேன்.”

“ப்ரதர்...நீங்க போங்க. எங்கப்பாவை வெளிய துரத்தினோம். அவர் தானா வருவார். உங்க வேலையப் போய் பாருங்க.”

“வெங்கடேஷ், உனக்கு ஒரு விஷயம் புரியலை.”

“போ...வெளியே...” — வெங்கடேஷ் வாசலைக் காட்ட, அவன் வெளியேறினான்.

“ராஜி, நீ அப்பாவை சமாதானப்படுத்தி அழைச்சுண்டு வா. இந்த சனியன் புடிச்சவன் அந்த இரண்டுங் கெட்டானை எதாவது சொல்லி உசுப்பி விட்டுருவான். நம்மூர் கும்பலுக்கே மூட்டிவிடறது பொழுதுபோக்கு. போய் கூட்டிண்டு வா அவரை.”

ராஜி இடித்த சுவர்கள் தாண்டி அடுத்த வீட்டுக் கொல்லைப்புறத்தில் போடப்பட்டிருந்த சிறிய குடிசைக்கு அருகே போனாள். பெரிய வேப்ப மரம். கீழே நாடாக் கட்டில். அப்பா நிம்மதியாய் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தார். பகல் வெப்பத்தில்

முகம் சிவந்து கிடந்தது. நெற்றியிலும் மார்பிலும் வியர்வை பூத்துக் கிடந்தது.

''அவரை எழுப்ப வேண்டாம் ராஜி. தூங்கறவாளை தட்டி எழுப்பப்படாது. அதுவும் வயசானவாளை எழுப்பவே கூடாது. அவர் தானா எழுந்து உங்க வீட்டுக்கு வருவார். வேற எங்க போக முடியும். இனிமே? சொல்லு...''—பின்னால் மணிகண்டன் இடிந்த சுவர் மீது நின்றபடி பேசினான்.

ராஜி அவன் பேச்சுக்குக் கட்டுப்பட்டு திரும்ப யத்தனித்தாள். அவன் நின்ற சுவர் மீது ஏறினாள். அவன் ஒதுங்கிக் கொள்ள அவனைக் கடந்து நடந்தாள்.

''ஒரு நிமிஷம் ராஜிம்மா. அந்தப் பையன் தேவேந்திரன்கூட ஜாக்கிரதையா இரு. ஒரு வயசுப்பெண் இருக்கற இடத்துல இப்படி வேற குடி வைப்பாளா? அதுவும் கட்டை பிரம்மச்சாரியா...ஏதோ சித்தப்பா பையன், பெரியப்பா பையன் இருக்கலாம். உங்கண்ணா முட்டாள். கண்ணே தெரியலை அவனுக்கு. ப்ளீஸ், நீயாவது விழிப்போட இரு. போ...வெயில் கொளுத்தறது.'' ராஜிக்கு அவன் அழைப்பும், பேச்சும், குழைவும் இனம் புரியாத கர்வம் கொடுத்தன.

அப்பா ஆறுமணிக்கு வந்து முகம் அலம்பி விபூதி இட்டு, முற்றத்தில் உட்கார்ந்து ஜபம் செய்யத் துவங்கினார். வெங்கடேஷும், தேவுவும் வெளியே கிளம்பினார்கள்.

ராஜி காய்கறி அலம்பிய தண்ணீரைக் கொல்லையில் கொட்டப் போனபோது பக்கத்து வீட்டுக் கிணற்றடியில்

அவன் நீர் இறைத்துக் கொண்டிருந்தான். தண்ணீர் வீசி ஊற்றுகிற சப்தம் கேட்டு திரும்பினான். ''ராஜி, ஒரு நிமிஷம்'' என்றான். ஈரம் சொட்டச் சொட்ட குடிசைக்குள் ஓடிப் போய் ஒரு காகிதப் பொட்டலம் கொண்டு வந்தான். ''இதுல ஐயப்பமாலை இருக்கு. இதை உங்கம்மாக்கிட்ட கொடுத்து ஸ்வாமி படத்துல வச்சு கற்பூர ஆரத்தி காட்டி என்கிட்ட கொண்டு வந்து தரச் சொல்றயா?''

''எதுக்கு?''

''என்னமோ மனசு சரியில்லை. என்னால உங்க வீட்ல அனாவஸ்யக் குழப்பம் வந்தாச்சு. நான் நாப்பத்தஞ்சு நாள் விரதம் இருக்கப் போறேன். ப்ளீஸ், அம்மாக்கிட்ட பூஜை பண்ணி கொடுக்கச் சொல்லு.''

அம்மா ஆச்சரியப்பட்டாள், வேதனைப் பட்டாள். கைகால் அலம்பி படத்தில் மாலை வைத்துவிட்டு கொண்டு போய் அவனிடம் கொடுத்தாள். குடிசை வாசலுக்கு நேரே ஐயப்பன் படம் மாட்டி விளக்கெரிந்து கொண்டிருந்தது. அம்மா கொடுத்த மாலையை வாங்கிக் கழுத்தில் போட்டுக் கொண்டு மணிகண்டன் உரக்க சரணம் சொன்னான். அம்மாவும் பெண்ணும் கைகூப்பி கேட்டுக் கொண்டிருந்தார்கள். பூஜை செய்தான். கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

''விரதத்துக்கு மாலை போட்டுண்டு ஓட்டல்ல சாப்பிடப்போறியா மணி...''

''இல்லை மாமி.''

''பிறகு...''

"நானே சமைச்சுப்பேன்...இங்கியே ஒரு மூலைல..."

"எதுக்குப்பா...நான் மடியா சமைச்சுப் போட றேன்!"—அம்மா கவலையோடு பேசினாள்.

"வேண்டாம் மாமி. என்னால உங்களுக்கு வந்த சிரமம் போறும். கார்த்தால ஒரு வேளை சமைச்சா... ராத்திரி பழம் போறும். இந்தா ராஜி" வாழைப்பழச் சீப்பி லிருந்து இரண்டு பழங்கள் பிய்த்து அவள் கைகளில் போட்டான்.

"என்ன திடீர்னு விரதம்?"

"என்னவோ மனசு சரியில்லை. நீங்க போங்கோ. மாமா தேடப் போறார்." இடுப்புத் துண்டை அவிழ்த்து தோளில் போர்த்திக் கொண்டு கட்டிலில் அமர்ந்து கண் மூடிக் கொண்டான்.

ராஜிக்கு வேதனையாய் இருந்தது. எளிமையான ஒரு மனிதனை தேவு தேவையில்லாது நோகடித்து விட்டானோ என்று தோன்றியது.

'நம்ம வீட்டுக்கு சாப்பிட வந்தவாளை வாடா போடான்னு பேசறதும், இலையை விட்டு எழுந்திரு கறதும்...திமிர்தானே இது. சந்தி பண்ணிட்டு சாப்பிட உட்கார்றது நம்ம சம்பிரதாயம். சீக்கிரம் முடி...உடனே சாப்பிட உட்காருன்னு என்ன அதட்டல்.' உள்ளே கோபம் பொங்கியது.

"வெறும் பழம் சாப்பிட்டுட்டு உட்கார்ந் திருக்காரேம்மா. பால் காய்ச்சிருந்தா கொண்டு போய் கொடேன்." அம்மாவிடம் பேசியபடி அடுக்களைக்கு

உள்ளே போய் பால் பாத்திரம் திறந்து பார்த்தாள். அரைக் கிண்ணம் பால் இருந்தது. வெந்நீருக்கு நடுவே வைத்து சூடு செய்தாள். ஒரு ஸ்பூன் சர்க்கரைப் போட்டாள். ஊற்றி பின்பக்கம் எடுத்துப் போனாள்.

அவன் அமைதியாய் கண்மூடி உட்கார்ந்திருந்தான். உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

இடிந்த சுவர் தாண்டி அவன் அருகே போய் கால் மாட்டில் தம்ளர் வைத்தாள். 'பால் வெச்சிருக்கேன், என்று மெல்லிய குரலில் சொன்னாள். அவன் கண்களை விழித்துப் பார்த்து தலையசைத்து விட்டு மறுபடி கண் களை மூடிக் கொண்டான்.

ராஜி ஒரு வாரப் பத்திரிகை எடுத்து பால் தம்ளரை மூடினாள். பூனை ஏதாவது கொட்டிக் குடித்து விடுமோ என்று கவலைப் பட்டாள். தன் வீட்டுக்கொல்லை வாசற்படியில் போய் உட்கார்ந்து கொண்டாள். கண் விழிக்கட்டும் போகலாம் என்று காத்திருந்தாள். அவன் மெல்லியக் கீறலாய் கண் திறந்து, விளக்கு வெச்சத்தில் அவள் உட்கார்ந்திருப்பதையே பார்த்துக் கொண்டிருந் தான்

எத்தனை நாளைக்கு ஓட்டல்ல சாப்பிட்டுண்டு இருக்கறது. இப்படி ஒரு பொண் கிடைச்சா நிம்மதியா கல்யாணம் பண்ணிக்கலாம். விதவிதமா சமைக்கச் சொல்லி வண்ணமா சாப்பிடலாம். வயசு வித்தியாசம் அதிகம் தான். ஆம்பளைக்கு வயசு என்ன... காசுதான் கௌரவம். இந்த காண்ட்ராக்ட்ல முன்ன பின்ன ஏதா வது பண்ணி காசு சேர்த்துடணும். மகா அழகின்னு சொல்ல முடியாது. வயசு, வஞ்சனையில்லாத உடம்பு. பார்த்துண்டே இருக்கலாம்னு தோன்றது.

''பால் ஆறிப் போறதே!'' ராஜி அருகே போய் குரல் கொடுத்தாள். குடித்து தம்ளர் கொடுத்து விட்டால் உள்ளே போகலாம். இத்தனை பூஜை பண்றவாளுக்கு ஒரு தம்டர் பால் கொடுத்தா நமக்கும் புண்ணியம்.

கண் திறந்தான். 'கொடு' என்று அமைதியாய் சொன்னான். அவள் குனிந்து பால் தம்ளர் எடுத்து கொடுத்தாள். அவனெதிரே நீட்டினாள்.

அவன் விரல்கள் நடுங்க, பால் தம்ளர் வாங்கிக் கொண்டான். ''இந்த அன்பை மறக்கவே மாட்டேன் ராஜி. உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் நான் இருக்கேன். என்கிட்ட சொல்லு. ராஜி, இந்த விரதம் யாருக்குத் தெரியுமா? உனக்கு... உனக்கு... ராஜி.'' அவன் குரல் கம்மிற்று. பால் தம்ளரை சிரசில் வைத்துக் கொண்டான். பிரசாதம் போல் பாலை வாயில் ஊற்றிக் கொண்டான். ராஜி தம்ளருக்குக் கை நீட்டினாள். தம்ளரை தரையில் வைத்து விட்டு மணிகண்டன் தன் இரண்டு கைகளாலும் அவள் வலது கையைப் பற்றினான். பின்னே மின்சார ரயில் தடதடத்து ஓடிற்று.

மணிகண்டன் மெல்ல தன் கை பற்றியதும் ராஜி பயந்து போனாள். ஆனால், பிடித்த கையை கண்களில் ஒற்றிக்கொண்டு அவன் விட்டு விட்டதும் வியந்து போனாள். இப்படியெல்லாம் ஆண்கள் நடந்து கொள்வார்களா என்ன என்று ஆச்சரியப்பட்டாள்!

துணிச்சல் உள்ளவனை பெண்ணுக்கு அதிகம் பிடிக்கும். அது மாடு பிடிப்பதோ, மற்போரோ, வெறும் ரௌவுடித்தனமோ எதுவாயினும் சரி, தைரியமுள்ளவனை பெண்ணுக்குப் பிடிக்கும். அந்த தைரியம் சேலையைப் பிடித்து இழுத்தாலும் பிடிக்கும். பளீரென்று கலவரம் அவளுக்கு

வரும். 'பயந்துட்டீங்களா? நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை. ரோட்ல இப்படி யாராவது நடந்துகிட்டா என்ன செய்வீங்க? பயப்படறீங்க இல்லே? அதான் பின்னாடியே வந்தேன். போங்க... வூடு வரைக்கும் நான் துணைக்கு வரேன். பயப்படாதீங்க. நான் அப்படிப் பட்டவனில்லை.' அந்தப் பெண் கலவரமும், சந்தோஷமும் கலந்து போகும். ஆயுசு முழுக்க சொன்னவனை மறக்காமல் இருக்கும்.

மணிகண்டன் மறுபடி கண்களை மூடிக்கொண்டான். சுவாசம் இழுத்துவிட்டு நேராய் உட்கார்ந்தான். ராஜி மெல்ல அப்பால் போய் அவனை வியப்புடன் பார்த்தாள். எவ்வளவு நல்லவனா இருக்கான் என்று நினைத்துக் கொண்டாள். இருக்கான்னு நினைக்கலாமா? தப்பு, இருக்கார்ன்னு சொல்லணும் என்று நினைத்துக் கொண்டாள். இவரைக் கல்யாணம் பண்ணிக்கறவள் கொடுத்து வைச்சவ. கைல தொழில் இருக்கு. அமைதியான குணம் இருக்கு. ஒழுக்கம் இருக்கு. சட்டைய உலுக்கினாலும் கோவமே படறதில்லை. ரசத்துல உப்பு இல்லேன்னாலும் கத்தமாட்டார். பட்டுப் புடவை வாங்கித்தரேளா...ஆயிரரூவா விலைன்னு கேட்டா, 'பார்க்கலாம் கண்ணம்மா! காசுக்கு ட்ரை பண்றேன்.' நிதானமா சொல்வார். சட்டுன்னு பட்டுப்புடவை வாங்கித் தரத விட, ட்ரைபண்ணி கஷ்டப்பட்டு மாசம் கழிஞ்சு வாங்கித் தரதுதான் சந்தோஷமாயிருக்கும். பாவம்! பட்டுப் புடவைக்கு நாயா உழைக்கறதுன்னு பரிதாபப்பட முடியும்.

ஆனா கொஞ்சம் செக்ஸீ இதுவா இருக்குமா? கொஞ்சம் அலையலா பார்க்கறாரே! யார் பார்க்கலை? தேவுகூடத்தான் பார்க்கறது. பார்வையில் தப்பு இருக்

குன்னு பார்க்கிற போதே தெரியறது. எல்லா ஆம்பளைங்களுக்கும் அதுல ஒரு இதுதான். அதனால தான் பொம்மனாட்டிக்கு அடங்கி இருக்கா. அது அடங்கின பிறகு மாறிப் போய்டறா. சட்டுனு நாமளும் நுழைஞ்சுட கூடாது. துரத்தத் துரத்த ஓடிண்டுருக்கணும். சுத்தச் சுத்த நகர்ந்துண்டுருக்கணும். விட்டுக்கொடுத்துட்டோம்...ச்சி போடிதான் கேட்க வேண்டியிருக்கும். தொட்டதுக்கெல்லாம் கோவம் வரும்.

யம்மா! தேவுவுக்கு என்னா கோவம் வந்தது? எழுந்திருடா... இலைய விட்டு எழுந்திருடா, ஏன் அப்படி கோவம்? தேவுவுக்கு என் மேல் மட்டும் அக்கறை இல்லை. மொத்தமா வீட்டு மேலே அக்கறை. வெங்கடேஷ் மேல...அம்மா மேல...தேவுக்கு அம்மான்னா உசிரு. தன்னோட தாயார் மாதிரி பேசறதும் உபசரிக்கறதும்...

தேவுவ கல்யாணம் பண்ணிக்கறவ கொஞ்சம் கஷ்டப்படணும். ஜாஸ்தி பேசாது, சட்டுனு கோபம் வந்துடும். ஆனா அழுதா...பதறிப்போய்டும். தேவுகிட்ட ஒரு கம்பீரம் இருக்கு. பெரிய உத்தியோகமா, அதுக்கேத்த தோரணை இருக்கு. 'எனக்கு பட்டுப்புடவை வாங்கித் தரேளா, ஆயிரம் ரூபாய்க்கு...'ன்னு பொண்டாட்டி கேட்டா, 'எதுக்கு உனக்கு இப்ப பட்டுப் புடவை...துட்டு இல்லாத நேரத்துல?' சீறும். இரண்டு நாள் கழிச்சா அட்டைப்பெட்டிய தூக்கிப்போட்டு, 'இந்தா நீ கேட்டது...புடிச்சுருக்கா பார். இல்லேன்னா வேற வாங்கிக்கலாம்' முகத்தில் ஜலம் அடித்து கரகர வென்று கால் தேய்த்துக் கொண்டிருக்கும் புருஷனை வியப்போடும் ஆசையோடும்தான் பெண்டாட்டியால் பார்க்க முடியும்.

•

தேவு நல்ல புருஷனா? மணிகண்டன் நல்ல புருஷனா? கெமிஸ்டா, காண்ட்ராக்டரா? என்னம்மா என்று கொஞ்சுகிறவனா? ஏய்! காப்பி கொண்டா என்கிறவனா?

தான் இல்லாமலும் தன்னை வைத்தும் ராஜி கனவு கண்டாள். மனம்தான் செயல். செயலின் தன்மைக்கு அடிப்படை மனசுதான். யோசிப்பதில் தெளிவாய் இரு. கனவு காணாதே. நிஜம் வேறு; நினைப்பு வேறு. நிஜத்தை உன் விருப்பத்திற்கு நினைவில் மாற்றி அதுவே நிஜமென்று நினைக்காதே. காலம் காலமாய் தத்துவ வாதிகளும், மத குருமார்களும் கதறியிருக்கிறார்கள். சுத்தமான மனசு என்று சொல்லியிருக்கிறார்கள். செவிடன் காதில் ஊதிய சங்காய் தத்துவம் இந்த தேசத்தில் இருக்கிறதே ஒழிய, செயலையும் மனசையும் யாரும் புரிந்து கொள்வதில்லை—அடிபட்டு துவளும் வரை.

கற்பு என்பது உடலோடு சம்பந்தப்பட்ட விஷயம் என்று பெண் நினைக்கிறாள். ஆணும் அப்படியே. இல்லையெனில் சுயம்வரம் என்பதை ஆண் அனுமதித்திருப்பானா? கையில் மாலையுடன் ஒரு ராஜ சபையில் ஒவ்வொரு ஆணாய்ப் பார்த்து போகும் பெண் மனசுக்குள் என்னவெல்லாம் நினைத்திருப்பாள்... எத்தனை பாடுபட்டிருப்பாள்? இவன் அழகா—அவன் அழகா? இவன் புருஷனாயின் எப்படி? அவன் புருஷனாயின் எப்படி? இருபது புருஷனைக் கடந்து உள்ளே இருபது முறை திருமணமாகி...அது சரி மனசுதானே யாருக்குத் தெரியப் போகிறது அப்படியெல்லாம் நானில்லை என்று சொல்லி விட்டால் எவர் கேள்வி கேட்க முடியும்?

ராஜேஸ்வரி அவளையும் அறியாமல் சுயம்வரத்தில் ஈடுபட்டாள். தேவுவும் நல்லது; மணிகண்டனும் நல்லது என்று அஃறிணையில் யோசித்தாள். பெண் மனசு ஆணை அவன் என்று முதலில் குறிப்பிடும். அன்பு வளர அது என்று ஆகும். தொடர்பு வர அவர் என்று நினைக்கும்.

வீட்ல வந்து சாப்பிட்டாதானே சண்டை வருது. கொண்டு போய் மணிகண்டன் இருக்கற இடத்துக்கே காப்பி கொடுத்துட்டா?

பாவம்! ராத்திரி பழம் சாப்பிட்டது தான். கார்த்தாலே பேயா பசிக்காதா? மணிகண்டன் கிணற்று நீர் இறைத்து குளித்துக் கொண்டிருந்தான். ராஜி இடிபட்ட கற்கள் தாண்டி காப்பி எடுத்துக்கொண்டு போனாள்.

''தேங்க்யூ!'' சிரித்துக் கொண்டே சொன்னான். ''அதெல்லாம் பரவாயில்லை'' என்று சொல்லிவிட்டு ராஜி உள்ளே வந்து விட்டாள்.

''மத்யானம் எனக்கு சாப்பாடு வேணாம். வெங்கடேஷுக்கு மட்டும் அனுப்புங்க''—தேவு சட்டை மாட்டிக் கொண்டபடி பேசினான்.

''ஏன்?''

''நான் வெளியே போறேன்...மெட்டீரியல் இன்ஸ்பெக்ஷனுக்கு. வர லேட்டாகும்.''

''ராத்திரி சாப்பாடு?''—அம்மா கேட்டாள்.

''லேட்டாச்சுன்னா வெளியே சாப்பிட்டு வந்துடறேன்.''

“ஏன் தேவு...எத்தினி நேரமானாலும் வீட்ல சாப்பாடு, இருக்குமே?” — வெங்கடேஷ் மறித்துப் பேசினான்.

“ஒரு வீட்ல எத்தினி பேருக்குடா சோறு பொங்கிப் போடுவீங்க? நான் வெளிய பார்த்துக்கறேன்” குரலில் கோபம் இருந்தது- என்ன சொல்கிறான் என்று புரியாமல் போயிற்று. வெளியே வெங்கடேஷுடன் போகிறவனை நிறுத்த முடியவில்லை.

ராஜி குழம்பினாள்.

வெங்கடேஷுக்கு மட்டும் சாதம் பிசைந்து அனுப்பினாள்.

“அவன் மத்தியானம் வெளியவும் போகலை. என்னோடயும் சாப்பிடலை. காண்டீன்ல சாப்பிட்டான்” வெங்கடேஷ் மாலையில் குறை சொன்னான்.

“என்ன கோவம்?”

“யாருக்குத் தெரியும்!”

“ஏன், உன் கூட வரலை?”

“ஒன் அவர் பர்மிஷன் போட்டுட்டு வண்டி எடுத்துண்டு முன்னாடி போய்ட்டான்.”

“பக்கத்து ஸீட்காரனைக் கேட்டேன். இன்ஸ்பெக் ஷன்னு சொன்னான். நெஜமோ பொய்யோ...”

வீடு கவலைப்பட்டது. ராஜி குழம்பினாள். பதினொரு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்து குழாய் ஜலத் தில் குளித்துவிட்டு பிரட்—ஜாம் சாப்பிடுகிறவனைப்

பார்க்க கோபம் வந்தது. இது என்ன அட்டூழியம் என்கிற ஆத்திரம் வந்தது.

"என்ன தேவு? என்ன கோபம் உனக்கு?"

"கோபம் இல்லை மாமி...வயிறு சரியில்லை!"

"சரியில்லாதது வயிறா, மனசா?"

"இரண்டும்தான்!"

"என்ன...என்ன கஷ்டம்?"

"நீங்க யாரையோ சாப்பிடக் கூப்பிட்டேள். நான் அவனை விரட்டறது சரியா? அதனால அப்பாவுக்கும் புள்ளைக்கும் சண்டை வர அளவுக்கு கொண்டு போனது நியாயமா? சட்டமா ருசிச்சுத் தின்ன கொழுப்புதானே இப்படி என்னை பண்ண வெச்சது."

"அதான் முடிஞ்சு போச்சே."

"என் வரைக்கும் முடியலை. என் மனசு சமாதான மாகலை!"

"ஒரு தம்ளர் பாலாவது எடுத்துக்கோ. வறட்டு ரொட்டி எப்படி போதும்?"

"வேண்டாம்."

"அவன் கிடக்கான். நீ கொண்டு வந்து கொடும்மா."

ராஜி உள்ளே ஓடினாள். பால் சூடு பண்ணினாள். சர்க்கரைப் போட்டுக் கலந்தாள். வாயில் விட்டுப்

பார்த்தாள். எடுத்து அவன் அறைக்கு ஓடிவந்தாள். தம்ளரை அவன் எதிரே வைத்தாள்.

அம்மா நகர்ந்து ஹாலில் வர,வெங்கடேஷ் படுக்கையைத் தட்டிப் போட்டு கொண்டிருந்தான்.

ராஜி மெல்லிய குரலில், ''என்ன கோவம்'' என்று கேட்டாள்.

அவன் பதில் சொல்லாது சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''கேட்டேனில்ல, என்ன கோவம்?''

''நான் பண்ணினது தப்பு, அந்த கோவம் தான்.''

''பொய். இது ரெண்டு நா கழிச்சு பொங்குவானேன்.''

''என் யோக்கியதை எனக்கு மறந்து போச்சு. எனக்கு இந்த வீடு, உங்க சமையல் உபசரிப்பு எல்லாம் அதிகம். என் நிலைமைக்கு ரொம்ப அதிகம். இப்ப தான் தெரிஞ்சுது.''

''ஏன் பிரிச்சுப் பேசறீங்க?''

''பிரிவு இருக்கு!''

''என்ன பிரிவு?''

''நான் பூணூல் போடலை. திருநீறு பூசலை. மூக்கு பிடிச்சு மந்திரம் சொல்லலை. இலை சுத்தி தண்ணிவிட்டு ஏதேதோ சிவஹோம்ன்னு சொல்லி சாப்பிடலை.

கண்மூடி பூஜை பண்ணலை. நான் மல்லாக்கொட்டை பயிறு அறுக்கறவன். விவசாயி. ஏதோ கம்பெனில கெமிஸ்ட்டா வந்துட்டேனே தவிர, உங்களுக்கு இணையாயிட முடியுமா?"

"ச்சி! என்ன பேச்சு இது?"

"இனம் இனத்தைதான் சேரும்."

"ஏய்!"

"நான் ஐயரா இருந்தா எனக்கும் என் இடம் தேடி காப்பி வரும். நான் அப்படி இல்லையே!"

பகீரென்றது ராஜிக்கு. அதுதான் கோபமா? உண்ணாவிரதமா?

"நான்... காப்பி..."

"பார்த்தேன். உள்ளங்கைல தம்ளர். துணிசுத்தி பிடிச்சுகிட்டு அமிர்தகலசமா எடுத்துகிட்டுப் போறதப் பார்த்தேன். அதுக்கெல்லாம் நீ ஆசை படாதடா முண்டம்! உன் ஜாதி வேற, அவங்க ஜாதி வேறன்னு தப்பு போட்டுகிட்டேன்."

"இதுக்கெல்லாம்னா?"

"எல்லாம்தான். போகலைன்னா சொல்ல முடியுமா? உங்க வீட்டு காப்பி...உங்க இஷ்டம்."

ரொட்டித்துண்டை தம்ளர் அடிவரையில் தோய்த்து வாயில் போட்டுக் கொண்டான்.

"ரொம்ப நன்றிங்க!" கைகுவித்தான். தம்ளரை எடுத்து அலம்பப் போனவனிடமிருந்து ராஜி பறித்துக் கொண்டாள். அவன் கதவைச் சாத்திக் கொண்டான். ஹாலில் வந்து பாய் விரித்து தலையணை போட்டு விளக்கணைத்தாள். படுத்தாள்.

ஏன் பொறாமை என்று யோசித்தாள். அன்புதான் பொறாமை என்று தீர்மானித்தாள். உன் அன்பு என்ன அன்பு. வெங்கடேஷ் ஸிஸ்டர் என்றா? அம்மா மீது அன்பில் பாதியா? சோறு பொதிந்து அனுப்புகிற நன்றியா? எதற்கு ரொட்டித்துண்டு உபவாசம்?

நாளைக்கு காலை மறுபடி காப்பியை மணிகண்டனுக்கு எடுத்துப் போனால் என்ன செய்வான்? இனி வீடே வேண்டாம் என்று காலி செய்து விடுவானோ?

ஏன், ஏன், ஏன் இப்படி? எனக்கு மட்டும் தான் செய்ய வேண்டும் என்கிற உரிமையா? இந்த உரிமைக்கு என்ன காரணம்? அன்பா? என்ன அன்பு? என்ன விதமான அன்பு?

மறுநாள் காலை பல் தேய்த்துக்கொண்டே அவன் அறை வாசற்கதவு பார்த்தாள். இரவு சாத்திய வண்ணமே இருந்தது. இவனும் எழுந்திருக்கவில்லை போலிருக்கிறது. கொல்லைப்புறம் போய் வந்தாள். குடிசைக்குள் மணிகண்டன் சரணம் சொல்வது காதில் கேட்டது.

அடுப்புப் பற்ற வைத்து காப்பி போட்டாள். அடுப்பு எதிரே உட்கார்ந்தபடி தன் தம்ளர் காப்பியை நிதானமாய் குடித்தாள். இன்னொரு தம்ளர் பின்பக்கம் மணிகண்டனுக்கு எடுத்துப் போனாள்.

முற்றம் கடக்கையில் பளீரென்று அவன் அறைக் கதவு திறந்தது. அவன் அவளை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். முகத்தில் குரோதம் பொங்கியது.

இது ஏன் கோவப்படறது, அதுக்கு காபி கொடுத்தா? படட்டுமே! என் இஷ்டம், நான் கொடுப்பேன்.

அவன் இறங்கி துண்டு உதறி நாலு எட்டில் அவளைக் கடந்து கொல்லைப்புறம் போனான்.

ராஜி தயங்கியபடி பின்னே போனாள், கொல்லைப் புறம் போகும் முன் சிறிய ரேழி, சற்று இருட்டாய் இருக்கும் இடத்தில் நின்று கொண்டான். சுவரோரம் சாய்ந்து கொண்டான். அவள் கடக்க நினைத்தாள். அவன் திரும்ப முறைத்தான்.

''நானும் ராத்திரி சாப்பிடல, எனக்கும் பசிக்குது.''

''இதோ தரேன்.''

''இது யாருக்கு?''

''இது... இது...''

''இனம் இனத்தோட சேரும்... சரிதானே?''

''ஐயோ!''

''நான் சூத்திரன்!''

''ச்சீ... என்ன பேச்சு இது?''

''எனக்கு பூஜை தெரியாது. மந்திரம் தெரியாது. எனக்குக் கடவுள் கிடையாது. ஆனா காதல் உண்டு. ராஜி... ராஜின்னு இருபத்தி நாலு மணி நேரமும் நினைக்கிற மனசு உண்டு. வெங்டேஷ், உன் சிஸ்டரை எனக்கு கட்டிக் கொடுன்னு கேட்டுற முடியும். உங்க அம்மா காலில் விழுந்து கேட்க முடியும். ஆனா, நீ அவரு – நான் ப்ராமின்னு சொல்லிடுவியோன்னு பயம். நீ ரிஜெக்ட் பண்ணிட்டா உடைஞ்சு தூள் தூளா போய்டுவேங்கற அச்சம்...

''ராஜி உன்னை நான் நேசிக்கிறேன். என்னால வண்ணமா பேச முடியாது. பேசத் தெரியாது எனக்கு. ஆனா ஒரு பெண்ணை மதிச்சு கல்யாணம் பண்ணி குடித்தனம் பண்ணத் தெரியும். நான் ஐயர் இல்லை. ஆனா எல்லா ஐயரைவிட நான் உசத்தி. எங்கிட்ட ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. இந்த வீட்ல நான் சேர்ந்துட்ட பிறகு மறந்தும் மாமிசம் சாப்பிட்டது கிடையாது. என் மேல உனக்கு இஷ்டம் இருந்து நம்பிக்கை இருந்தா இந்த காப்பியை எனக்குக் கொடு. இல்லைன்னா தாராளமா அந்த ஐயரிடம் எடுத்துண்டு போ. நானும் பட்டை அடிச்சுக்கிட்டு காலைல எழுந்து படத்து முன்னாடி சுத்தலாம். எனக்கு இதுல நம்பிக்கை இல்லை. நான் மனுஷாளை நம்பறேன், மனுஷாளை மதிக்கிறேன். பிறகு உன் இஷ்டம்...''

ராஜி தவித்தாள். கொல்லைக்கதவு பார்த்தாள். திரும்பி முற்றம் நோக்கினாள். வயிறு குழைந்தது. தொடை தசைகள் அசைந்தன. கால் கணுவின் வழியே நிற்கும் வலிவு கீழறிங்கியது. குப்பென்று வியர்வை பொங்கியது. இருதயம் வேகமாயிற்று.

"என் மேல இஷ்டம் இல்லையா ராஜி?"

"எனக்குத் தெரியலை."

"மணிகண்டனை லவ் பண்ணறியா?"

"ஐயோ, அப்படியெல்லாம் இல்லை."

"சரி ராஜி, இப்ப வேணா இந்த காப்பிய அவன் கிட்ட கொண்டு போய் கொடு. நான் தடுக்கலை. அது உன் இஷ்டம். ஆனா, எனக்கு ஒரு பதில் சொல்லு ராஜி, யோசிச்சு சொல்லு. போ... போய் காப்பி கொடு." -வழிவிட்டான்.

ராஜி காப்பியோடு வீட்டுக்குள் ஓடினாள். உடம்பு படபடக்க தரையில் வைத்தாள். சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள். கால் நீட்டினாள்.

காப்பி தம்ளர் விளிம்பில் கால் கட்டை விரல் பட்டு 'ணங்' என்று தம்ளர் சாய்ந்தது. காப்பி தரையில் கொட்டியது.

இது நடக்குமா... அம்மா சரியென்று சொல்வாளா... வெங்கடேஷ் ஏற்றுக் கொள்வானா.. அப்பா என்ன செய்வார்? தேவுக்கு என்ன கோபம்? மணிகண்டனுக்கு காப்பி கொடுப்பதா இல்லை, தான் போய் நிற்பதா? தான் அவனுக்கு அருகே போய் விடக்கூடாது என்கிற பயத்தில்தான் சாப்பாட்டு நேரத்தில் அத்தனை சண்டையா? மனசு நெகிழ்ந்து காதல் வளர்ந்தது தான் மணிமாலையும், காது தோடும், பின்னல் ப்ரோச்சுமா? ஊமையன் காதலா? இன்றைக்கு பே... பே... பே என்று அலறி விட்டதா?

தொட வில்லை, கிட்ட நெருங்கக்கூட இல்லை. வழியை மறித்துக் கொண்டு விட்டது. 'போகாதே என்னைத் தாண்டி!' என்று மடக்கி விட்டது.

இதை யாரிடம் சொல்வது? இப்படி தேவு கேட்டதை யாரிடம் பரிமாறிக் கொள்வது? தேவுவோடு மறுபடியும் போக வேண்டுமா? லவ் யூன்னா என்ன? எனக்குத் தாலி கட்டி என்னோட இதே வீட்டில் குடித்தனம் பண்றதா? இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கற கெமிஸ்ட். அமைதியான ஆள். பெரியவர்களிடம் மரியாதையான ஆள். கோவம் வருமா? 'எழுந்துக்கடா இலைய விட்டு' என்று கத்தின போது வேறு முகம் இருந்ததே... அது மறுபடி வருமோ?

'ஐயரு பையனுக்கு காப்பி எடுத்து குலுக்கிக்கிட்டுப் போனவதான நீ!' —பேசுமோ? இதைவிட மணிகண்டன் சரியாய் வராதா? காண்ட்ராக்ட் வேலை. ஒரு மாசம் நாலாயிரம் வரும். மறுமாசம் ஒண்ணுமில்லாத போகும். அதிர்ஷ்டமிருந்தால் சொந்தமாகவே காண்ட்ராக்ட் ஆரம்பித்து விடும். அதுவும் சௌஜன்யம். நிமிர்ந்து பார்க்காது சாப்பிடும் குணம். ஆனால், இந்த புருஷர்கள் கல்யாணமானால் எப்படி இருப்பார்கள்? தெரியவில்லை. மாறலாம். எப்படியும் மாறலாம். 'கும்மோணத்துல ஒருத்தனோட சுத்தினியாமே...என்னோட ஒண்ணு விட்ட மாமா கதை கதையா சொன்னார். 'யார் அது? பேர் என்ன? என்ன பண்ணினான்? சொல்லு...சொல்லு?'

மறுபடி காதலா? திரும்பியும் திருட்டுத்தனமா? இதான் விஷயம் என்று சொல்லி விட்டு ஒதுங்கி விட லாமா? இன்றில்லை எனினும், நாளை தெரியாது போகுமா? கும்மோணம் விஷயம் மூடி மறைத்துவிட

முடியுமா? வேணாம் சாமி. ஒரு வம்பும் வேணாம். 'நான் சரின்னு படறதா. வா. உட்கார். இதான் விஷயம். என்ன சொல்ற?' முகத்துக்கு நேரே கேட்டு விடலாம், லவ்வு லவ்வுன்னு ரகசியமாய் சுற்றிவிட்டு பிறகு கூடாது, கூடவே கூடாது என்று வேறு இடம் ஓட முடியாது. வேதனை தாங்க முடியாது.

தேவு மடக்கினதை யாரிடம் சொல்வது? அம்மா விடமா, வெங்கடேஷிடமா? அம்மாவிடம் ஆரம்பிப் போம். ராஜி அம்மாவை சமையலறைக்கு அழைத்து வந்து பேசினாள்.

"அவன் என்ன ஜாதின்னே கேட்டுக்கலையடி... பக்கத்து போர்ஷன்காரன். என்னவா இருந்தா என் னன்னு கேட்காத இருந்துட்டேன். கேட்கறது தப்புன்னு விட்டுட்டேன். பையன் நல்லவன். யாரா இருந்தா என்னன்னு யோசிச்சேன். இப்படி உன்னைப் பிடிச்சிருக்குன்னா கேட்க வேண்டி வருமே."

"ஜாதி கேட்கறதுக்கு உன்னைக் கூப்புடலை. எதுவும் தெரியாம உன்னைப் புடிச்சிருக்குன்னார். இதுக்கு முன்ன நடந்ததைச் சொல்ல வேண்டாமா?"

"போடி...என்னத்தைச் சொல்றது? புடிச்சிருக்குன்ற வன்கிட்ட போய் தேவையில்லாதது சொல்லணுமா? கும்பகோணம் விஷயம் கும்பகோணத்தோட போச்சு. அதையேண்டி கிளறணும்?"

"எனக்குத் தெரியாது."

"நீ சும்மா இரு, நான் பேசறேன். என்ன சொன் னான்... மறுபடி சொல்லு..."

பிற்பகலில் அப்பாவிடம் பேசப்பட்டது, மாலையில் ஹாலுக்கு வந்து விட்டது.

வெங்கடேஷ் மௌனமாக இருந்தான் "எனக்கு ஆட்க்ஷேபணையில்லைம்மா. தேவேந்திரன் நல்லவன். அப்பா என்ன சொல்றா?"

"மோட்டு வளைய பார்த்துண்டு உட்கார்ந்திருக்கா. அவன்கிட்ட நீ பேசுடா. யாரு...என்ன...எப்படி குடும்பம்...யார் வருவா... வரமாட்டா பேசு. அவன் வீட்டுக்குக் கண்டிப்பா சொல்லணும்னு சொல்லு."

வெங்கடேஷ் போய் பேசினான்.

தேவு இரவு ஊருக்குக் கிளம்பிப் போனான்.

"தெருக்கோடில இருக்கற கடைல பால் வாங்கி னேன். என்னமோ லேசா புளிக்கற மாதிரி இருக்கு. இந்த பால் கெட்டுப் போயிருக்கா பாருங்கோ மாமி..."

ஒரு செம்பு பால் மணிகண்டன் தூக்கி வர, அம்மா முகர்ந்து பார்த்து விட்டு "தெரியலை, மசாலா வாசனை வர்றது."

"இதைக் குடிக்கலாமா வேணாமா?"

"காச்சினதுதானே...குடி. ஒண்ணும் பண்ணாது."

"இரண்டு ஸ்பூன் சக்கரை தரேளா... அந்த தித்திப்புல குடிச்சுடறேன்."

"சர்க்கரை இருக்கா பாருடி. இல்லேன்னா வெங்க டேஷுவை கடைக்கு அனுப்பி வாங்கிவரச் சொல்."

"வேண்டாம்...வேண்டாம். எனக்காக கடைக்கு அனுப்ப வேண்டாம்." —மணிகண்டன் வெளியேறினான்.

உள்ளே பாட்டில் நிறைய சர்க்கரை இருந்தது.

நாலு நாட்கள் ஆயிற்று—தேவு திரும்பி வர முகம் வாடியிருந்தது.

"என்ன தேவு?" —பெட்டி வைத்தவனிடம் அம்மா கவலையுடன் கேட்டாள்.

"இன்னிக்கு வராங்க...சாயந்தர வண்டில."

"யாரு?"

"எங்க அண்ணன், அப்பா, அம்மா எல்லாரும்."

"என்ன சொல்றாங்க?"

"யாரு, என்னன்னு பார்க்கணுமாம். நாங்க பேசிக்கறோம். சும்மா இருன்னுட்டாங்க."

"நிறைய எதிர்பார்ப்பாளா?"—

"என்னன்னு தெரியாது. குடும்பம் பத்தி யாரு என்னன்னு கேட்டாங்க. சொன்னேன். என் தங்கச்சிக்கிட்ட இருக்க அம்மாவைக் கூட்டிக்கிட்டு நேர இங்கே வரேன்னு சொன்னாங்க."

வீடு ஒழுங்குபடுத்தப்பட்டது.

''நான் என்ன கேட்கணும் சொல்லு?'' —அம்மா கேட்டாள்.

''தேவு விருப்பப்படறான். என் பொண்ணுக்கு சம்மதம். இது இரண்டும்தான் எனக்கு முக்கியம்னு பேசுங்க.''

''மாட்டேனுட்டா?''

''சரி, போயிட்டு வாங்கன்னு அனுப்பிடுங்க. அவங்க போன அடுத்த முகூர்த்தம் கல்யாணம்.''

''அது நல்லதில்லையே...''

''முதல்ல பேசுவோம்.''

பதினாலு பேர் வந்தார்கள். வெள்ளைச் சட்டை, வெள்ளை, வேட்டி, சிகப்பு, பச்சை, கருநீலத் துண்டுகள். பெரிய மீசைகள், காவிப்பல். கனத்த செருப்பு, கருப்பு உடம்பு, எல்லோரும் விவசாயிகள் என்று எழுதி வைக்கப்பட்டிருந்தது.

நாற்காலி போதாமல் எல்லாருக்கும் பாய் விரிக்கப் பட்டது.

''அப்பா, அண்ணன், அம்மா வாங்கன்னா இப்படி படை திரண்டு வரீங்களே...'' தேவு கோபப்பட்டான்.

''இது கல்யாணம்டா. நாலு பேர் விசாரிச்சு, விசாரிக்க நாலு பேர்கூட இட்டாந்து பேசறது வழக்கம். யாரு பொண்ணு?''

ராஜேஸ்வரி கூடத்துக்கு வந்து பொதுவாய் நமஸ்காரம் செய்தாள்.

''கும்பகோணத்துல இருந்தீங்களா இதுக்கு முன்னாடி?''

சொரேர் என்றது.

''ஆமாம்.''

''அங்கன விசாரிச்சதுல உங்க வீடு பத்தி தப்பா சொன்னாங்களே...''

வீடு மௌனமாய் இருந்தது. ''இவரு தேவு அண்ணனுக்கு சகலை, கும்பகோணத்துலதான் வீடு. வெத்தலை கொடிக்கால். மொத்த வியாபாரம், கடைத் தெருவுல...''

''என்ன சொல்றாங்க?'' —வெங்கடேஷ் கோபத்துடன் எழுந்தான்.

''ஏன் எழுந்து நிக்கிற? உட்காரு. கல்யாணம்னு வந்தா கடக்கு மடக்குன்னு முடிச்சுட முடியுமா? குடும்பத்துக்கேத்த பொண்ணா? யோக்கிதையான இடமான்னு பார்த்துட்டுத்தான் முடிவு பண்ண முடியும்? எங்க பழக்கம் நாலு இடம் விசாரிச்சு முடிவு சொல்றது தான்.'' —அம்மா இடைமறித்தாள்.

''தேவேந்திரன் கேட்கலாம்-பேசலாம். ஆசைப் படலாம். அதுக்கோசரம் விசாரிக்காத விட்டுருவமா? உங்க வீட்டாண்ட இருக்கற ஐயர் குடும்பங்களே உங்களை நல்லா சொல்லலியே?''

''அதனால...''

''இது சரிப்படாதுன்னு நேர்லயே சொல்லிப்புட்டுப் போயிடலாம்னு வந்தோம்.''

''சரி'' —அம்மா எழுந்து நின்றாள். எழுந்த எல்லோரையும் தேவு மடக்கினான். ''ப்ளீஸ், உக்காருங் கண்ணே. என்ன குறைன்னு சொல்லுங்க. அது குறையில்லைன்னு நான் சொல்றேன்.''

''கும்பகோணத்துல...'' ஒரு பெரியவர் நீட்டி முழக்க ராஜி இடையே பாய்ந்தாள்.

''நான் லவ் பண்ண விஷயம்தானே? கோவில் சுவத்தல கரிக்கட்டைல எழுதியிருந்ததுதானே? பண்ணை ராஜசேகரனோட சுத்தியதுதானே?''

தடே்ரென்று ஹால் இடி விழுந்த அமைதியாயிற்று.

''சொல்லுங்க... அதுதானே?''

''அது தெரியலை... இது ஏதோ புதுசா இருக்கேடா. நான் உங்கப்பாரு உங்கம்மாளை இரண்டாவது குடித்தனமா வச்சுக்கிட்டதுதான் கேள்விப்பட்டேன். மூத்த சம்சாரம் வுட்டாச்சுன்னாங்க... இல்லைன்னாங்க. அது என்னான்னு கேட்டுப் போலாம்னு வந்தோம். இங்கன அப்பாரு இருக்காறா? எப்பவுமே இருப்பாறான்னு கேட்க நினைச்சேன். நீ வேறென்னமோ சொல்ற... இது அத விட பயங்கரமா இருக்கு.''

வீசிய பந்து சுவரில் தாக்கி மறுபடி முகத்துக்கு வந்து தாக்குமுன் பற்களில் பட்டு விட்டது.

ராஜி ரத்தம் வழிய நின்றாள். அம்மா திணறினாள். வெங்கடேஷ் தலையில் அடித்துக் கொண்டான். தேவு

நிதானமாய் திரும்பிப் பார்த்தான். 'என்ன ராஜி இது?' என்பதாய்ப் பார்த்தான்.

"என்னடா...அதுவே என்னமோ சொல்லுது என்ன?"

"அது ஒண்ணுமில்லை..." தேவு அமைதியாய் பேசினான்.

"ஒண்ணுமில்லையா...வேற யாரோ ஒருத்தனை லவ் பண்ணுச்சாமே. எத்தினி கை மாறி...சரி, நீ மறுபடி வீட்டுக்குவா. அப்ப நாங்க வரோம்." எழுந்து கூட்டம் வெளியே போயிற்று. வாசலில் நிறைய கூச்சல் கேட்டது. ராஜி யோசிக்கக்கூட முடியாமல் திகைத்து நின்றாள்.

"நான் சரிபண்றேம்மா அவங்களை. சரியாகலைன்னாலும் பயப்பட வேண்டாம் வெங்கடேஷு. நான் இருக்கேன் கடைசி வரைக்கும்."

"செருப்பால அடிக்கணும் இந்த மூதேவியை!"—வெங்கடேஷ் கத்திக் கொண்டிருந்தான். "இவளை யார் நடுவுல பேசச் சொன்னா? எதுக்குப் பேசணும், இத்தனை பேர் உட்கார்ந்திருக்கும்போது? திமிர் ..அதிகப் பிரசங்கி."

"விடு, வெங்கடேஷ்..."

"இந்த முண்டத்துக்கு விடியாதுடா. இது சீப்படவே பொறந்துருக்கற ஜென்மம். நாசமத்துப் போறவ. இவ தேவிடியாத்தனத்தை இவளே தம்பட்டம் அடிச்சுக்கறா..."

"போறும் நிறுத்துடா!" அம்மா சீறினாள்.

"ஏன்? ஏன் நிறுத்தணும்? நிமிஷ நேரத்துல சிரிக்கடிச்சுட்டாளே... இந்த முண்டைக்கு வெளிய போய் நான் மாப்பிள்ளை தேடவா?"

"வாய்லயே போடுவேன், பொண் குழந்தைய அப்படி பேசினா..." அம்மா சீறுவது கேட்டது.

"போடு...என் தலைலதானே போடுவ, இந்த வீட்ல வந்து பொறந்ததுக்கு போடு. பொண் குழந்தையாம்! பொண்குழந்தைய இந்த மாதிரி நாலு போட்டு வளர்த்திருந்தா இப்படி சிரிப்பா சிரிச்சிருக்காது."

ராஜி தன் தவறு உணர்ந்தாள். தேவையில்லாது பதட்டத்தில் பேசியது உணர்ந்தாள். இது வெங்கடேஷுக்கு அவமானம். தேவுக்கு கௌரவக்குறைவு. இரண்டாந்தாரத்துப் பொண்ணுதான். "ஆனா அப்பா இப்ப எங்க கூடத்தான் இருக்காரு- இனிமேயும் இங்கதான் இருப்பாரு. சரி, கூடவே நாலு பவுனு போடறேன்னா" சரின்னுட்டுப் போயிருப்பாங்களே... கேவலமாகி விட்டது...

'இது அப்படியாமே' என்று கும்பகோணத்தில் கேட்பார்கள். ராஜி ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து கிளறுவார்கள். அப்ப அவன்கிட்டயும் ஏதோ சங்காத்தம் இருந்துருக்கு. இன்னும் அழியலியே கோவில் சுவத்துல. கூடவே கூடாதுன்னு சொல்வார்கள். இது பற்றி கேள்வி பட்டும், முன் வந்த தேவுவைக் கேலி செய்வார்கள். போயிற்று... போயிற்று சகலமும் போயிற்று. தன்னால் தன் வாழ்க்கை நாசமாயிற்று.

வெங்கடேஷ் சொல்வது சரி. எந்த முகம் வைத்து எனக்கு மாப்பிள்ளை தேடுவான்? வாசலில் நின்று கூட்டம் பேசியதை அக்கம் பக்கம் விசாரிக்காமல் இருக்குமா?

ராஜி சமையலறையில் சுருண்டு படுத்தாள். ஏன் இப்படி... ஏன் இப்படி எனக்கு மட்டும். ஏன் இப்படி சறுக்குகிறேன்...

தேவு உள்ளே நுழைந்தான்.

"பரவாயில்லை. எழுந்திரு ராஜி. முகம் துடைச்சுக்க. அவங்க மாட்டேன்னாலும் மீறி நின்னு உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவேன். எழுந்து முகம் துடைச்சுக்க."

ராஜி பக்கெட் எடுத்து கொல்லைப் புறம் போனாள். ஈரக்கால்களுடன் திரும்பி வந்தாள்.

"என்ன ராஜி... என்ன கலாட்டா?"–இடிந்த சுவர் தாண்டி மணிகண்டன் இடுப்பில் கை வைத்தபடி கேட்டான்.

"ஒண்ணுமில்லை."–தலை குனிந்து பதில் சொன்னாள்.

"அழுதியா, ராஜி."–அவன் அருகே ஓடிவந்தான். "சொல்லு. அழுதியா? என்ன ஆச்சு? ஏன் இவ்ளோ கும்பல்? தேவேந்திரன் ஆட்களா? சம்பந்தம் பேச வந்தாளா? என்கிட்ட பயப்படாம சொல்லு. நாட்டுப்புறத்து ஜனங்க. அவங்களைப் பத்தி உனக்குத் தெரியாது. ஏன் என்னமோ பேசிண்டுப் போறான்? லவ்வுன்னா அவங்க

ளுக்கு சேஸ்டிடி கொஸ்டின் வந்துரும். எதுக்கு விஷப் பரீட்சை? அங்க போய் அவங்களோட உன்னால இருக்க முடியுமா? ஏன் புரியலை உங்களுக்கு? அவனை வீட்ல வச்சுருக்கறதே தப்பு. இதுல ஊரைக் கூட்டி சம்பந்தம் பேசினா அழாத இருக்க முடியுமா? ராஜி, நான் அப்பா அம்மாகிட்ட பேசறேன். நீ சரின்னு சொல்லு. உங்க அப்பாகிட்ட முறைப்படி பேசறேன். ஜாதி ஒழியாது ராஜி. ஏன் ஒழியணும்? நமக்குள்ள நாமன்னு இருக்கறதுல என்ன தப்பு? கண்டபடி பேசிண்டு போனாளே... நானா இருந்தா விடுவேனா? வெட்டிருப்பேன். இன்னும் அரைமணில இதுக்கு முடிவு கட்டறேன் பாரு. நான் பார்க்க பைத்தியக்காரன் மாதிரி தான் இருப்பேன். என் முடிவு பாரு..."

ஒரு வேளை இவன் சரியோ? இவன் தான் சரியோ? இவன் வீட்டு ஆட்கள் யாருக்கும் பெரிய மீசை, கருத்த உடம்பு கலர் துண்டு காவிப்பல் இருக்காதே...

ஆனால் இவனுக்கு கும்பகோணம் பத்தி தெரியாதே. இப்ப சொல்லாமா? வேண்டாம்! ஒரு முறை சொல்லி பட்டது போதும். எதுவும் சொல்ல வேண்டாம்.

"ஏன் ராஜி, நான் உங்கப்பாகிட்ட கேட்கட்டுமா."

சரி என்று தலையசைத்தாள்.

குழப்பத்தில் தெளிவாய் இருப்பது இந்த தேசத்து ஆண்களுக்கே கை வராத கலை. பெண் தாங்குவாளா? குழப்பம் உதறி உறுதியாகி நிமிர்ந்து நாளை பற்றிப் பேச அவளுக்குப் பழக்கம் உண்டா? பயிற்சி உண்டா?

கடவுள் குத்தம் என்றுதான் அவளால் குழப்பத்தில் பேச முடியும். அப்படித்தான் அவள் வீட்டுப் பெரியவர்களுக்குகூடப் பழக்கம்.

மணிகண்டன் வாசலுக்கு வந்து ராஜியின் தகப்பனாரைப் பெயர் சொல்லி அழைத்தான். "கொஞ்சம் பேசணும் வாங்கோ" என்றான்.

வெங்கடேஷும் தேவுவும் முறைக்க, அவன் அலட்சியமாய் முதுகு காட்டி, ராஜியின் தகப்பனாரோடு வெளியே போனான்.

"மணிகண்டன் கல்யாணம் செய்துக்கறேன்றான் ராஜியை" என்று தகப்பனார் வந்து பேசியபோது தேவு இடிந்து போனான். அதைவிட பெரிய இடி இரவில் வந்தது. தேவுவின் அண்ணன் படியேறினார். "தேவு கிளம்புடா. இனிமே இங்க நீ இருக்கக் கூடாது. இது சரியில்லை" என்றார். தேவு மறுக்க வேஷ்டி வரிந்து கட்டி அவன் சட்டை பிடித்து இழுத்தார்.

"நான் வரேன் அண்ணே... நீங்க போங்க."

"எங்கடா போறது? ஆறடி உசரத்துக்கு உன்னை ஆளாக்கி விட்டுட்டு அரும்பாடு பட்டு உன்ன பெரும் படிப்பு படிக்க வச்சுட்டு... எங்க போறது?"

"ஊருக்குப் போங்க. நான் நாளைக்கு வரேன். எனக்கு இங்கன கொஞ்சம் வேலை இருக்கு."

"என்ன வேலைடா? பாப்பாத்தியோட கொஞ்சறதா? உன்னைய என்ன வூடு-வாசல் இல்லாத அனாதைன்னு நினைச்சுட்டாங்களா?"

"அசிங்கமா ஜாதி பேசாதீங்க அண்ணே. அந்தப் பொண்ணு சொக்கத் தங்கம். அம்மாவை நான் சொந்தத் தாயாரா நினைச்சுகிட்டு இருக்கேன்."

"அப்போ அந்தப் பெண்ணை உடம்பொறந்தாளா நினைக்க வேண்டியது தானே! அம்மாவ தாயாரா நினைக்க வேண்டியது, பொண்ணோட கோர்த்துக்க வேண்டியதா. நல்லா இருக்குடா நியாயம். நீ கிளம்பு."

அவன் அறைக்குப் போய் பெட்டிகளை வாசலில் அடுக்கினார். தேவு பெட்டிகளை உள்ளே எடுத்துப் போய் வைத்தான்.

"டேய்! நீ வருவியா மாட்டியா?" நடுக் கூடத்தில் நின்று உரக்கக் கத்தினார்.

"வரேன்... அந்தப் பொண்ணை கூட்டிக்கிட்டு வரேன். எனக்கு கல்யாணம்னா அந்தப் பொண்ணோ டத்தான்."

"அந்த தேவுடியா சிறுக்கிய வெட்டி போட்டுறு வேன். என் வீட்டுப்படிய அவ தொட்டா கொலை வுழும்."

"ஏன், என்னா குறைச்சலு இந்தப் பொண்ணுக்கு? உங்க ஊட்டு பொண்ணுங்கள விட எந்த விதத்தில குறைஞ்சு போச்சு?"

"அதே சொல்லிச்சுடா கும்போணத்துல இன் னொருத்தரோடு லவ்வுன்னு... இங்கன உன்னோட லவ்வு... கல்யாணம் கட்டி குடித்தனம் வந்தப்புறம் இன்னும் யார் யாரோட லவ்வு வருமோ?"

"யோவ் நிறுத்துய்யா!" வெங்கடேஷ் சீறினான். "தேவு அண்ணான்னு பொறுத்துகிட்டு இருந்தேன். எங்க வீட்ல உட்கார்ந்து எங்கப் பொண்ணை தப்பா

பேசினா நடக்கறதே வேற...'' அண்ணன் விருட்டென்று எழுந்தார்.

''போடா...'' தேவு அவர் வாயைப் பொத்தினான். அவர் உதறி விடுவிக்க, தோளை அழுத்திப் பிடித்து வாசலுக்கு தள்ளிக் கொண்டு போனான்.

''சும்மா இங்கே வந்து கூச்சல் போடாதே. அந்தப் பொண்ணுக்கும் எனக்கும் முடிவாயிடுச்சு. இஷ்டமிருந்தா வா...இல்லையா, ஊரப் பார்த்துகிட்டு போ.''

''அத்தினி ஆய்போச்சா?''

''ஆமா, அத்தினி ஆய்போச்சி!''

''அவுத்துக் காட்டிட்டாளா?''

அம்மா சட்டென்று திரும்பி ராஜியைப் பார்த்தாள். யாருக்குமே சொல்லாமல் வைத்திருந்த விஷயம் அவள் கண்ணில் மின்னியது.

குளிக்கிற அறையில் தேவு காத்திருந்து இவள் பாவாடையை மேலே எடுத்துக் கட்டிக் கொண்டதும் மெல்ல 'ராஜி' என்று குரல் கொடுத்தான்.

ராஜி பயத்தில் உடம்பு முழுவதும் பொத்திக் கொள்ள எதிரே வந்து நின்றாள்.

''ராஜி, உங்கப்பா மணிகண்டனோட பேசறா. நீயும் அவனுக்கு காப்பி, பால் எல்லாம் கொண்டு போய் கொடுக்கற. உன் மனசு என்ன ராஜி... ப்ளீஸ் சொல்லு. வீட்ல பேச முடியலை. இப்ப சொல்லு.''

''நான்தான் சொல்லிட்டேனே... உங்களைப் பிடிச்சிருக்குன்னு...''

''சரியா சொல்லு ராஜி... அப்பறம் மணிகண்டனுக்கு ஏன்...''

''இனிமே செய்யலை!''

''ராஜி, இப்படி வந்ததுக்கு கோவமா?''

''இல்லை. ஆனா போய்டுங்க ... யாராவது பார்த்தா?''

அரையிருட்டில் முற்றிலுமாய் அவளைப் பார்த்துவிட்டு கன்னத்தில் முத்தமிட, கதவு தள்ளி அம்மா மஞ்சள் பவுடருடன் வந்தாள்.

''தேவு, தப்பு...மகாதப்பு!''—அவன் சத்தியம் செய்த பிறகுதான் திடமானாள்.

''இதையும் யார்கிட்டயாவது சொல்லி தொலைக்காதடி பெண்ணே!'' —அம்மா கண்ணில் சீற்றம் மின்னிற்று.

''அவுத்துக் காட்டிட்டாளா?'' அவர் கூச்சலுக்கு எகிற, வெங்கடேஷ் அவர் வாயில் ஒரு குத்துவிட, கட்டிப் புரண்டார்கள். வெங்கடேஷ் அதிகம் அடிவாங்கினான். தேவு அண்ணனை இறுக்கிக் கொண்டு கீழே கிடந்த வெங்கடேசனைத் தாண்டிக்கொண்டு தெருவோடு போனான். வெங்கடேசன் எழுந்தான். வராந்தாவில் நின்ற ராஜியைத் தாண்டும் போது பளீரென்று அவளை அறைந்தான்.

"உன்னாலதாண்டி நாயே...நடு சபைல உன் திருவாயத்தொறந்து நாறப் பண்ணிட்டியேடி எல்லாத்தையும்..." இன்னொரு அறை விட்டான்.

"ச்சி.. பொம்மனாட்டிப் பொண்ணை கை நீட்டி அடிக்கிறீயே வெட்கமாயில்லை..." அம்மா தாவி வந்து ராஜேஸ்வரியை அணைத்துக் கொண்டாள்.

"எங்கயோ எவன்கிட்டயோ தெருவுல அடி வாங்கிட்டு இங்க வந்து பொம்மனாட்டியை சித்ரவதைப் பண்றது...மானங் கெட்டவனே! போடா...போய் அந்த வேளாளனை அடி...உன் தங்கையைத் தேவிடியான்னு சொன்னவன் நாக்கை அறு. குத்திக் கொலை பண்ணு."

ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒவ்வொரு இயல்புண்டு. ஒரே உயிரினத்தில் பல்வேறு இயல்புகள் உண்டு. மாமரம் என்பது பொதுப்பெயரானாலும் நூறு வகைப் பழங்கள். ஒவ்வொரு பழமும் ஒவ்வொரு ருசி... ஒவ்வொரு குணம்...

வெங்கடேசனால் ஆளை அடித்து வீழ்த்த முடியாது. கண்மூடித்தனமாய் கை சுழற்றி முழுவலிவும் கொண்டு தாக்க முடியாது. அடிதடிக்கு மனசு பலம் வேண்டும். அடிக்கடி சண்டைபோட்டு அடிவாங்கிய பழக்கம் வேண்டும்.

வெங்கடேசனுக்கு ஜாதிப் பெயரால் தங்கையை இழிவுபடுத்தியது ரணமாய் வலித்தது. பதிலுக்கு வன்மம் காட்ட ஆசை வந்தது. வந்த காட்டானை துடிக்கவைக்க வேண்டும் என்று ஆத்திரம் பொங்கியது. அவனை மட்டுமில்லை, அந்த கூட்டத்தையே துடிக்க

வைக்க வேண்டும். அதோடு தேவுவின் திடம் பற்றியும் கேள்வி வந்தது. தன்னை அடித்து அண்ணன் வீழ்த்திய போது தேவு தன்னை தாங்கவில்லை. தரையில் கிடந்த தன்னைத் தூக்கவில்லை. அண்ணனை அணைத்துக் கொண்டு போகிறான். நம்பகமான ஆளா இவன்? உண்மையான நண்பனா இவன்? தேவு பிடியைத் தளர்த்தியிருந்தாலும் மேலும் நாலு உதை வெங்கடேசனுக்கு கிடைத்திருக்கும் என்பது மறந்து போயிற்று.

என்ன செய்யலாம்...என்ன செய்யலாம்...மனசு பரபரத்தது. எப்படித் துடிக்க வைக்கலாம்? மூளை வலை பின்னிற்று. தன் தங்கை அவள், வாழ்க்கை, முள் மேல் துணி எல்லாம் மறந்து அடிபட்ட ஆத்திரம் பொங்கிப் பொங்கி எழுந்தது.

சட்டையை மாட்டிக் கொண்டான். தந்தி ஆபீஸ் போனான். 'பெரியண்ணன் விபத்தில் சிக்கிக் கொண்டார். உடனே வரவும்' தேவு கிராமத்துக்கு தந்தி கொடுத்தான். துடிக்கட்டும்...நிதானமில்லாத ஜனங்கள். வாயில்—வயிற்றில் அடித்துக்கொண்டு வரும். அடித்து கதவு சார்த்திவிட வேண்டும். 'யாரு பெரியண்ணன்... தெரியாதே!' என்று சொல்லிவிட வேண்டும். 'வேட்டி தடுக்கி விழுந்திருப்பாரு ... மெட்ராஸ்ல பாதி ஆக்ஸிடென்ட் விவரம் தெரியாத ஆளுங்களாலத்தான்.' சிரித்துக் கொண்டே பேச வேண்டும். ஜி. எச். மார்ச் சுவரில பாருங்க. அப்புறம் உள்ள போய் தேடுங்க. மார்ச்சுவரின்னா தெரியுமா என்னன்னு! என்னையா அடிக்கறே...உன் ஊரையே அடிக்கறோம் பாரு.

உலகில் பலவீனமான உயிரினங்கள் என்று எதுவும் இல்லை. உடம்பு பலகீனமானதற்கு மூளை அதிகம்

இருந்தது. யோசிப்பில் குறைந்த உயிரினத்துக்கு உடம்பில் வலுவிருந்தது. உலகத்தில் சிலநேரம் புத்திக்கும் உடம்புக்கும் சண்டை நடந்தது.

அண்ணனை பஸ் ஏற்றி விட்டு வந்த தேவு பிற்பகலுக்கு மேல் ஆபிஸுக்குக் கிளம்பினான். 'உர்' என்று உட்கார்ந்திருந்த வெங்கடேசனை 'வருகிறாயா' என்று கூப்பிட்டான். அவன் பதில் சொல்லாது போகவே தான் மட்டும் வெளியேறினான்.

நாலு மணிக்கு பெண்டுகளும் குழந்தைகளும் பெரியவர்களுமாய் பதினேழு பேர் வீட்டு வாசலுக்கு வந்தார்கள். பெண்கள் வாய்விட்டு அலறினார்கள். உள்ளே நுழைந்தவர்களை வாசலில் நிறுத்தினான்.

''தேவு வீட்ல இல்லை, என்ன விஷயம்?'' என்றான்.

''அப்படி ஒன்றும் தெரியலையே! நல்லா தானே போனாரு. மெட்ராஸ் பழக்கமுண்டா அவருக்கு? ரோட் கிராஸ் பண்ணத் தெரிஞ்சவருதானே? என்னிய மொத்து மொத்துன்னு அடிச்சுட்டுப் போனாரு. இங்க பாருங்க ... வீங்கிக் கிடக்குங்க. எங்க, வீட்டுப் பெண்ணை அசிங்கமா பேசிட்டுப் போனாரு. என்ன ஆச்சோ? மெட்ராஸ்ல இப்பவெல்லாம் துட்டு அடிச்சி புடுங்கிட்டு லாரில தள்ளிவுட்டு போயிடறாங்க, வாசல்ல இருங்க...''

கதவு சார்த்திக் கொண்டு வந்தான். உள்ளுக்குள்ளே அம்மாவிடம் 'கடவுள்னு ஒருத்தன் இருக்கான். இல்லாத போகலை' என்று வாசலுக்குக் கேட்கும்படி உரத்துப் பேசினான்.

அந்தக் கூட்டம் தனக்குத் தானே பேசியபடி வீட்டு வாசலை விட்டு வெளியே போயிற்று. எங்கிருந்தோ தேவு ஆபீஸுக்கு . யாரையோ விட்டு போன் பண்ணியது.

மறுபடியும் தேவு வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டது.

"நான் பஸ் ஏத்தி அனுப்பினேனே! யாரு டெலிகிராம் கொடுத்தது? எப்ப கொடுத்தது? காட்டு பார்க்கலாம்...?"

மொத்த பேரும் குழம்பினார்கள்.

"குஞ்சும் குளுவானுமா பஸ் ஏறி வந்திருக்கிற ஆளுங்க. ஏதாவது உள்ள கூப்புட்டு கொடுக்கக் கூடாதா வேங்கடேசு?"

"கொடுக்கலாம் தேவு. சாப்பிட்டுட்டு அடிப்பாங்க ளோன்னு ஒரு பயம்...என் தங்கையை பேசிடுவாங்க ளோன்னு ஒரு அச்சம்!"

'சுகமாய் வந்து சேர்ந்தேன். சகலரையும் ஊருக்கு அனுப்பவும்' டெலிகிராம் அண்ணன்'டமிருந்து வந்தது.

கூட்டம் ஓட்டலில் சாப்பிட்டு விட்டு பஸ் ஏறிப் போயிற்று. "அண்ணாதான் டெலிகிராம் கொடுத்திருக் கணும் தேவு. இரண்டு நாப்பதுக்கு சட்டை போட்டுண்டு அவன்தான் வெளியே போனான்." ராஜி ரகசியமாய் தேவுவின் காதில் கிசுகிசுத்தாள். பிறந்த வீட்டைவிட புகுந்த வீடே பெரிது என்கிற இலக்கணப்படி நடந்து

கொண்டாள். பிறந்த வீட்டு வக்கரிப்பை புகுந்த வீடு அவளிடமே குற்றம் சொல்லி ஹிம்சிக்கும் என்று தெரியாது போயிற்று அவளுக்கு.

தேவு, வெங்கடேசனோடு பேசுவது நிறுத்திக் கொண்டான். அம்மாவிடம் பத்தாயிரம் ரூபாய் காசு கொடுத்தான். "வர முகூர்த்தத்திலியே கல்யாணம் கட்டிடறேம்மா. நான் வெங்கடேசனை நம்பமாட்டேன். உங்களை நம்பறேன். ராஜியை நம்பறேன்...என்ன நகையோ, என்ன புடவையோ சொல்லுங்க, நான் எடுக்கறேன்."

அம்மாவும் பெண்ணும் கலந்து பேசினார்கள். அப்பா சரியாய் ஒத்துழைக்க மாட்டார். வெங்கடேசன் அடிவாங்கின கோபத்தில் இருக்கிறான். செய்ய வேண்டியவற்றை தாமே செய்வோம் என்று தீர்மானித்தார்கள். எதுக்கும் ஒரு வார்த்தை சொல்லிவிடுவோம் என்று வீட்டு ஆண்களிடம் சாதம் போடும் போது பேசினார்கள்.

"உனக்கு அவன் பேர்ல நம்பிக்கை இருந்தா நடத்து. எனக்கு இல்லை. இப்ப சொல்லு மணிகண்டனை கொண்டு வந்து நிறுத்தி தாலி கட்டச் சொல்றேன். அப்பழுக்கு இல்லாத பையன். எனக்கு இவனைப் பிடிச்சுது...அவனைப் பிடிக்கலைன்னு பேச்செல்லாம் வரப்படாது." —அப்பா எச்சரித்தார்.

"நடக்கற காரியமா பேசுங்களேன்."

"இது நடக்கும்னு எனக்கு தோணலை. நல்ல முரட்டுக் கூட்டம். கல்யாணத்துக்கப்புறமும் பிரிச்சு தூக்கிப் போட்டுருவா."

''நடக்காத எங்க போய்டுவான்? நேர போய் போலீஸ் கேஸ் கொடுத்துட மாட்டேனா?''

வெங்கடேஷ் விரல் ஆட்டினான்.

''என்னன்னு?''

''என் தங்கைய கெடுத்துட்டான்னு எழுதித் தர வேண்டியதுதான். போலீஸ்னு போயாச்சுன்னா மான-அவமானம் பார்க்கக் கூடாது.''

''உன் மான-அவமானம் யார் பார்த்தா...இவ பொண்ணுடா!''

''கும்மோணத்துல சுத்தினது நெஜம். ஆனா, அது பழசுன்னாளே உன் பொண்ணு...அப்ப மான-அவமானம் போகலையா உனக்கு?''

''அதையே சொல்லிண்டுருக்காதே. ஏதோ பதட்டத்துல பேசிட்டா. உங்கப்பாவ மனைல உட்கார வைக்க வேண்டியது உன் பொறுப்பு.''

''என்ன உட்கார்ந்து...நிக்கறது? சாஸ்திரிகளை கூப்பிட்டு கல்யாணமா? சாமி படத்துக்கு முன்னாடி தாலிகட்டச் சொல்லி அட்சதை போட்டுட வேண்டியது. வாங்கோ வாங்கோ-போங்கோ.. போங்கோன்னு வந்த பத்து பேரையும் ஜூஸ் கொடுத்து அனுப்ப வேண்டியது.''

''எனக்கு அது போதும்!''—ராஜி நொடித்தாள்.

''போதும் என்ன! கொடுப்பனை அதுதான். இதே மணிகண்டன் வைத்தீஸ்வரன் கோயில்ல கல்யாணம்

வச்சுக்கலாம்னான். இவளுக்கு விவசாயம் பண்றவனைப் பிடிச்சுருக்கு. அப்பவே சொன்னேன், 'இந்த இடம் வேண்டாம், நங்கநல்லூரில் நம்ம மனுஷா இருக்கிற இடமா போவோம்னு.' தேவு தேவு தேவுன்னு கத்தினேள்...அனுபவியுங்கோ.''

''இப்ப என்ன சொல்றேள். இந்த காச கொடுத்துடலாமா? வேற இடத்துல வரன் பார்க்கறோம்னு சொல்லலாமா?''

''ஏன், மணிகண்டனுக்கு என்ன...''

''எனக்குப் புடிக்கலை!'' —ராஜி மறித்தாள்.

''உடுப்ப கண்டு மயங்கறேள்டி. எல்லாரும் பேண்ட் சட்டை பார்த்துட்டு பர்ஸனாலிடிங்கறேள். இவனெல்லாம் நேத்து பேண்ட் போட்டவன்.''

''கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணட்டுமா வேண்டாமா?''

''உன் இஷ்டம்!''

''நீ சொல்லுடா வெங்கடேசு.''

''நீ பண்ணு...காதும் காதும் வச்சா மாதிரி முடிச்சுடலாம். எங்க ஆபீஸ்ல ஒருத்தர் அண்ணா போலீஸ்ல டி.ஐ.ஜியா இருக்கார். ஒரு வார்த்தை சொல்லிட்டு வரேன்.''

''எதுக்கு?''

''அரிவாளோட அந்த கும்பல் வந்தா, உன்னையும் உம் பொண்ணையும் வெட்டினா?''

''அப்படி யாரும் செய்யமாட்டா வெங்கடேசு. கோவமிருக்கும்...''

''உனக்குத் தெரியாதும்மா!''

"என்ன சொல்ற?''

''நடத்து.''

நாள் பார்க்கப்பட்டது. ஒரு வாரம் இடைவெளி இருந்தது. அம்மாவும் பெண்ணும் சமையலறைச் சாமான் களுக்கு ஓடினார்கள். அம்மா ஒரு வயதான மாமியோடு பட்சணம் பண்ண உட்கார, ராஜி புடவை வேட்டிக்கு போனாள். தானே போய் தாலிக்கு ஆர்டர் கொடுத்தாள். தன் சங்கிலியை அழித்து புதிய டிஸைனைக் காட்டி அதில் ஒரு திருமாங்கல்யம் கோர்த்தாள். தங்கள் பக்கத்துத் தாலிக் கயிறு வாங்கினாள். இன்னொரு தாலி அதில் கோர்த்துக் கொண்டாள்.

அப்பா தனக்கு புது வேட்டி வேண்டாமென்று சொல்லி விட்டார். ''வாங்கறத வாங்கி வை. கடைசி நேரம் மனசு மாறி கூடிண்டு நிக்கும். வாங்கு.''

தினம் வாசலில் ராஜி இழைகோலம் போட்டாள்.

நகர் விளிம்பில் சின்ன ஹாலும் ஒரே ஒரு அறையும் கொண்ட கல்யாண சத்திரம், வெங்கடேசன் பார்த்து விட்டு அட்வான்ஸ் கொடுத்தான். பத்திரிகை அடித்துக் கொண்டு வந்து நீட்டினான்.

முதல் பத்திரிகை சம்பந்தி வீட்டுக்கு அவனே ஒட்டி அனுப்பினான்.

''புறங்கையால் அடிச்சான். அங்க முட்டிண்டு சாகட்டும்.''

'இஷ்டமித்ர பந்துக்களுடன் வரவும்' என்று அச்சிடப்பட்ட இடத்தை அடிக்கோடிட்டான். மகா... ஸ்ரீ...ஸ்ரீ அவர்களுக்கு என்று அண்ணன் பெயர் எழுதினான்.

கோபமே வராதவருக்குக்கூட கோபம் வரும்படி கடிதம் எழுதினான்.

'உங்கள் தம்பி ஸ்ரீ தேவேந்திரன் விருப்பப்பட்டு என் தங்கை செள. ராஜேஸ்வரியை கன்னிகாதானம் கேட்டதால்...'

விவசாயக் குடும்பம் பொங்கிற்று. கல்யாணத்திற்கு முதல் நாள் சத்திரத்து வாசலில் வந்து உட்கார்ந்து கொண்டது.

தேவேந்திரன் உள்ளே வர வற்புறுத்தினான். தகப்பனாரும் தாயும் வாசல் விட்டு நகராமல் அழுது கொண்டிருந்தார்கள். தேவுவின் அண்ணி உள்ளே வந்து அசிங்கமாய்க் கத்தினாள்.

வெங்கடேசு ஓடிப்போய் ஆபீஸுக்கு போன்செய்ய, அவர் தன் அண்ணன் டி.ஐ.ஜியுடன் வந்து இறங்கினார்.

''இரண்டு பேரும் மேஜர். உங்க வீட்டுப் பையன் விருப்பப்பட்டு கல்யாணம் செய்துக்கறாரு. இப்ப இப்படி நடக்கறதுதான். ஏன் கூச்சல்...யாருடைய கையும் ஓங்கறதா தெரிஞ்சுது, ஆம்பளை பொம்பளை எல்லாத்தையும் உள்ள போட்டுறுவேன். என்ன சொல்றீங்க?''

கூட்டம் அமைதியாக இருந்தது.

“வெங்கடேசன், எதுவும் செய்யமாட்டாங்க. நீங்க கல்யாணம் நடத்துங்க. எதா பிரச்சனைன்னா ஹண்ட் ரடுக்கு போன் போடுங்க. நான் சொல்லி வைக்கறேன்.”

அவர் கிளம்புகிறவரை கைகட்டி நின்ற அண்ணன், உள்ளே வந்து ‘நான் போறேண்டா தேவு.’ என்று கட்டிக் கொண்டு அழுதார். ‘ஒரு கப் மோர் கொடுங்க’ என்று கேட்டு வாங்கி வாசலுக்கு எடுத்துப் போனார்.

“ஐயோ” என்று கூச்சல் கேட்டது. எதையோ கலந்து குடித்து விட்டாராம். கூட்டம் அவரைப் பிடித்து உலுக்கிற்று. டாக்டர்... ஆஸ்பத்திரி என்று ஓடிற்று. தேவு ஓடி வந்தான். வெங்கடேசன் ஆட்டோ கூட்டிவரச் சொன்னான்.

ஆட்டோ வரும்போது கண் சொருகி விட்டது. உடம்பில் நீலம் பாய ஆரம்பித்தே விட்டது.

அம்மாவை கூட்டம் வாய்க்கு வந்தபடி திட்ட, அம்மாவை அப்பா கொல்லை வழியாக பின் தெருவுக்கு கூட்டிப் போனார். இரவு தனியார் ஆஸ்பத்திரியில் ஆக்ஸிஜன் கொடுத்தார்கள். எனிமா கொடுத்தார்கள். புரண்டு புரண்டு தவிப்பது பார்த்து தேவு வாய்விட்டு அழுதான்.

‘என்னைக் கொண்டு போய் ஊரில புதைச்சுட்டு யாரை வேணா கட்டிக்க தேவு’ என்று அண்ணன் முணு முணுக்க, தலையில் அடித்துக்கொண்டான்.

உயிருக்கு ஆபத்தில்லை. போலீஸ் கேஸ் ஆகாது. டாக்டருக்கு ஆறாயிரம் ரூபாய் பேரம் பேசிக் கொடுத்தார்கள்.

"அது சரி! மறுபடி விஷம் குடிக்கமாட்டார் என்று என்ன நிச்சயம்? அவரை வீட்ல கொண்டு போய் விட்டுட்டு சமாதானமா பேசிட்டு போய்டு" உறவுகள் நச்சரித்தன.

"ஒரு சமாதானமும் இல்லை. தேவு கல்யாணம் என் சாவுலதான் நடக்கும். இது சாமி சத்தியம், வயல் சத்தியம், கலப்பை சத்தியம், மண் சத்தியம். கெட்டுப் போன பொண்ணு என் குடும்பத்துக்கு வரக்கூடாது. அது பல கைகள் மாறின பொண்ணு. நான் விசாரிச்சிட் டேன் தீர...இவனுக்கு விவரம் தெரியல..."

அண்ணன் மூச்சிரைக்கப் பேச, தேவு குழம்பினான். உறவுகள் வெளியேறின. "எனக்கு மூணு பொண்ணுங் கடா. தாலி அறுத்துட்டு மச்சினன் கெட்டுப் போன வளை கட்டிக்கிட்டான்னு பேரு வாங்கிட்டு இதுகள கரையேத்த முடியுமா? நானும் விஷம் குடிச்சு சாவேன்" என்று அண்ணி சப்தமிட்டாள். "கூத்தி குடித்தனம் அது. எப்படிடா அந்த பொண்ணு நல்லா இருக்கும்."

'தேவு, எல்லாரையும் முதல்ல வீட்டுக்கு இட்டுகிட்டு போ. வந்து எதுனா செய்துக்க!'

தேவு குழம்பினான்.

கல்யாண சத்திரத்துக்கு வந்ததும் சிரம பரிகாரமாகி ஒரு வாய் காப்பி சாப்பிட்டதுதான் கடைசி. நிச்சயதார்த் தம் மாதிரி எதாவது செய்யலாம் என்று திட்டமிட்டு வாசலில் நடந்த குழப்பத்தில் சகலமும் மறந்து போய் தேவுவின் அண்ணனை எந்த ஆஸ்பத்திரியில் சேர்த் திருக்கிறதோ அங்கே போய் வாசலில் வயிறு ஒட்ட நின்று என்ன செய்தி வெளியே வருமோ என்று காத்திருந்தது...

அந்த நேரம் வாழ்க்கையில் மிகக் கொடுமையான நேரம். வெறும் பூவோட நிக்காதடி கல்யாணப் பொண்ணே. திருகு பில்லையாவது வச்சுக்கோ. பின்னே திருகு பில்லை, முன்பக்கம் சந்திரபிரபை-சூரிய பிரபை, ஒற்றைப் பின்னல், பட்டுகுஞ்சலம், விரல் நுனிகளில் அல்டா, இடுப்பில் பட்டுப் புடவையாய் ஆஸ்பத்திரி வாசலில் நிற்க அசிங்கமாய் இருந்தது. எல்லோரும் பார்த்துப் பார்த்துப் போக துணியே இல்லாதது போல் தோன்றியது.

விடிகாலை மூன்று மணிக்கு ஒன்றும் பயமில்லை என்றார்கள். ஆனால் அதற்குப் பிறகுதான் பயங்கரமே ஆரம்பித்தது. உள்ளே என்ன பேசினார்கள், ஏது பேசினார்கள், யார் பேசினார்கள் எதுவும் தெரியவில்லை. அம்மாவும் அவளும் வெங்கடேஷும் அனாதையாய் நின்றார்கள். 'இப்ப வுட்டுறு ராஜி, நான் சொல்றத கேள். இப்ப வுட்டுறு என்னை.' தேவு குளறி குளறி பேசினபோது எதுவும் புரியவில்லை.

''எப்படி வுடறது தேவு, நியாயமா நீ செய்யறது? பாவி'' வெங்கடேஷ கத்தினான்.

''வெங்கடேசு புரியாத பேசற.''

''அவ கழுத்துல தாலி ஏறினா நாலைஞ்சு உசிரு இங்க படபடன்னு வுழுந்துடும். அப்புறம் எனக்கு கல்யாணமாவே இருக்காது வெங்கடேசு... கருமாதியாயிடும்!'' வாய்விட்டு தேவு அழுதான்.

அழும் ஆணைப் பார்த்த போதே சகலமும் உள்ளே ஒடிந்து போயிற்று. கெஞ்சி புண்ணியமே இல்லை என்று தெரிந்து போயிற்று. காலைப் பிடிச்சு கெஞ்சி

யிருந்தா கல்யாணப் பந்தலுக்கு வந்திருப்பானோ என்கிற எண்ணம் பின்னால் வரக்கூடாது என்பதற்காக,

"தேவு...தேவு..." என்று கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

"எங்க வீட்டை நான் ரொம்ப தப்பா எடை போட்டுட்டேன் ராஜி. சாவு எங்களுக்கு பெரிசில்லை டான்னு கத்தறாங்க. செத்துட்டா ரொம்ப சிரமமாயிடும் ராஜி. நாம சிரிக்கவே முடியாத போய்விடும். கொஞ்சம் பொறுத்துக்க."

"அவமானமாயிடுமே..."

"எத்தினியோ அவமானம்... அதுல இது ஒண் ணுன்னு நினைச்சுக்க."

"என்ன சொல்றே?" —வெங்கடேஷ் எகிறினான்.

"சும்மா கத்தாத வெங்கடேசு! ராஜியாலதான் நிலைமை ரொம்ப மோசமாயிருச்சு. வேற ஜாதின்றதுக்கு கூட அவங்க மறுக்கலை. கெட்ட பேரு இருக்கேன்னு பயப்படறாங்க."

"உங்கிட்ட இந்த ஊருக்கு அவ வரதுக்கு முன்னியே சகலமும் சொல்லலையா?"

"லைட்டா ஏதோ சொன்னே வெங்கடேசு. ஆனா, இவங்க விவரமா கேட்டு விட்டு வந்து கத்தறாங்க. ராஜி கன்னிப் பொண்ணா இல்லையான்றதுகூட எனக்கு முக்கியமில்லை..."

பளீரென்று வெங்கடேஷ் தேவுவை அடித்தான்.

''உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணின நாயே.''

''நாயே கீயேன்னு பேசினே நடக்கறதே வேற.''— தேவு கன்னம் பொத்தி கத்தினான்,

''தேவு தேவு, என்னடா இதெல்லாம்? இப்படி நட்டாத்துல வுட்டுட்டு போறேங்கிறயே?'' —அம்மா கத்தினாள்.

''ஒரு மாசம்... ஒரே ஒரு மாசம்...''

தேவு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந் தான். யாருக்கும் அதில் நம்பிக்கை வரவில்லை.

''நான் போய் கேட்கிறேன். பொம்மனாட்டிதானே உங்க தங்கையும் மன்னியும்!''

''ஒரு மாசத்துல வரேங்கறானே தேவு... நம்ப லாமா?''

''நம்பு! இன்னிக்கு சாவறத ஒரு மாசம் கழிச்சு. சாவரோம். இந்தக் கல்யாணம் நடந்தா சாவு நிச்சயம்.''

''அது எப்படிம்மா? கூடாதுன்னு கண்டிப்பா சொல்லியிருக்கலாமே.''

''ஏன், நீ படியேறி வந்து பொண்ணு கொடுக் கறேன்னு கேட்டியா?''

''இப்படி அவமானப் படுத்தறேளேம்மா.''

"நாங்க யாரையும் அவமானம் செய்யலை. அப்படி ஒருவேளை நீங்க படியேறி பொண்ணு கேட்டுருந்தா கூட நான் உட்கார வச்சு ஒரு வாய் காப்பி கொடுத்து, இது எங்களுக்கு தோதுப்படாதுன்னு சொல்லி பஸ் ஏத்தி வுட்டுறுப்பமே கண்டி..."

"நின்ன வாக்குல முடிச்சுடணும்னு பார்த்தீங்களே, அது சரியா? ஆயிரம் காலத்துப் பயிரில்லையா?"

"நானும் அதுதான் சொல்றேன். இத்தனைக்குப் பிறகு மறிச்சா... உங்களுக்கும் பொண் குழந்தைகள் இருக்கு, யோசனை பண்ணுங்கோ."

"என்ன, சாபம் வுடறியா? நாங்கெல்லாம் பொல்லா பொம்பளைங்க. ஐயரு குடும்பம்னு நான் நாக்கை கடிச்சிக்கிட்டு இருக்கேன். என்னை ரேங்கிவுட்டே நடக்கறதே வேற."

"என்னை அடிச்சு வேணா கொல்லுங்கோ. இந்த கல்யாணத்தை நிறுத்த வேண்டாம்மா."

அம்மா குனிந்து அந்தப் பெண்ணை நமஸ்கரித்தாள்.

"நீ ஏம்மா அதுங்க கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணி..." வெங்கடேஷ் வலுக்கட்டாயமாய் தூக்கினான்.

"ஏண்டா, நீ வந்தா கொண்டைய புடிச்சு உலுக்கிடுவியா?"

"சரிதான் போடி..."

''ஏய், எங்கவீட்டு பொம்பளைங்கள எதுனா பேசின கொலை வுழும்.''

''பொண்ணை பெத்தவ கால்ல விழறா, மரம் மாதிரி நிக்கிறியே... எத்தினி நாள் நிப்பே? உன் தாலி அறுந்து தரைல புரண்டு உருளும் பார்... அன்னிக்குத் தெரியும் எங்க வயத்தெரிச்சல்!''

''அடிறி... அவன் வாயிலே அடிறி!''

மூத்திர பேஸினை எடுத்து படேரென்று வெங்க டேஷ் மூஞ்சியில் அந்தப் பெண் அடித்தாள். வெங்கடேஷ் இடது கையை அனிச்சையாய் தடுக்க, அது எறிந்தவள் மீதே விழுந்து கால் கட்டை விரலை தாக்க, மடமடவென்று பல பேர் எழுந்தார்கள்.

வெங்கடேஷ் அம்மாவோடு ஆஸ்பத்திரி வாசலுக் குப் பின்னடைந்தான். உள்ளே கூச்சல் பலமாக, தனியார் ஆஸ்பத்திரி விழித்துக் கொண்டு சகலரையும் நெம்பி வெளியே தள்ளிற்று.

''வேலையும் வேணாம்... ஒரு மயிரும் வேணாம். கிளம்புடா நீ. அங்கே வந்து மாடு மேய், சாணம் தட்டு, கிளம்பு நீ. ஒரு மாசம் இரண்டு மாசம் எதுவும் கிடை யாது. எந்த சங்காத்தமும் இனி கிடையாது. அந்த ஊரு எல்லைய நீ தாண்டக்கூடாது. கிளம்பு நீ.''

இருண்ட வீதி குரல்கள் பட்டு எதிரொலித்தது.

காலை ஆறு மணிக்கு அண்ணனை வெளியே அலாக்காய் தூக்கி வந்து டாக்ஸியில் ஏற்றினார்கள்.

ஆறே முக்காலுக்கு பஸ் ஸ்டாண்டில் இருந்தார்கள்.

ஆட்டோவில் அம்மா, வெங்கடேஷ், ராஜி மூவரும் பஸ் ஸ்டாண்டுக்குத் தொடர்ந்தார்கள்.

திருவள்ளுவர் பஸ்ஸில் அந்த கும்பல் உட்கார்ந்திருக்க, தேவு டிக்கட் வாங்க, கண்டக்டரிடம் மன்றாடினான்.

''போடி, போய் கால்ல விழு. என்னை கைவிட்டுறாதேன்னு சொல்லுடி. போடி...'' அம்மா துரத்தினாள்.

நடு பஸ் ஸ்டாண்டில் அந்த காலைப் பொழுதில் யார் யாரோ அன்னியர்கள் பார்க்க, அந்த பெண் குழந்தை, அழகும் அறிவும் அன்பும் நிறைந்த ராஜேஸ்வரி, விதியின் வசப்பட்ட பெண்; அவன் காலில் குனிந்து வணங்கி விம்மி அழுதது எழுந்திருக்காமல் முதுகு வளைத்து, வளைந்த முதுகு குலுங்க, நேற்று கட்டின பட்டு புரள, கூந்தல் மண்பட அழுதது...

யாரோ அந்த கண்டக்டர்... பழிபாவத்துக்கு அஞ்சிய ஜென்மம் போலிருக்கிறது.

''யம்மா, யம்மா, யார்மா நீ? எதுக்கு அழுவுற? ஐயோ தரைல வுழுந்து... ஏங்க யாரு இது? ஏன் என்னா ஆச்சு? கல்யாணப் பொண்ணா? ஏங்க நீங்க கல்யாணப் பொண்ணா?'' பதறினான்.

உள்ளே அந்த கூட்டம் அமைதியாய் உட்கார்ந்திருந்தது.

தேவு கால் நகர்த்தி மீதி காசு வாங்காமல் பஸ்ஸில் ஏறினான்.

''ஏழு கொண்டலவாடா, கோயிந்தா— கலியுக வரதா...எந்து கோஸம் ஈ பாபம்?''

யாரோ உதறினார்கள்.

பஸ் ஸ்டாண்ட் உறைந்து அவள் அழுகையை கவனித்தது. துக்கப்பட்டது.

''அடப் பாவி! பொம்பளை கால்ல வுழுந்து அழுதும் காணாத போறானே... விளங்குவானா அவன்? வாழ்ந்துடுமா அந்த குடும்பம்? யம்மா, அந்த ஆளு பஸ் ஏறிட்டாரு, நீ எந்திரி...''

எழுந்து அங்கேயே தரையில் அமர்ந்து ஒரு சிமெண்ட் சீட்டில் சாய்ந்து கொண்டாள்.

பஸ் உறுமிற்று. மெல்ல பின்னால் நகர்ந்தது, ராஜி புடவைத் தலைப்பால் அது நகர்வது பிடிக்காதது போல முகம் பொத்தி அழுதாள்.

ஸ்டாண்ட் கடைசி வரையில் அந்த பஸ் பின்னே நகர்ந்தது. மெல்ல முன்னேறிற்று.

வெங்கடேஷ் ஓடிப்போய் பஸ் நிற்குமிடத்தில் உள்ள புழுதியை ஒரு கொத்து எடுத்தான்.

''மகாபாபி... சண்டாளா. தின்ன சோத்துக்கு வஞ்சகம் பண்ண நாயே! உன் குலம் உருப்படாதுடா. உன் வீட்டுல ஒரு பொண்ணும் வாழமாட்டாடா. ஒரு

ஆம்பளையும் நிமிர்ந்து நடக்கமாட்டாண்டா. அழிஞ்சு போவேள். பாழா போவேள். டேய் மித்ர துரோகி! நீ துடிச்சு துடிச்சு சாகப்போற, இது சத்தியம். மகாமாயே! சமயவரத்தாளே! எரியற என் வயிறு மேல இது சத்தியம். உன் சோறெல்லாம் மண்ணாப் போகணும். உன் உடம்பெல்லாம் புண்ணாப்போகணும். போ...போடா... போ."

பஸ் தாண்ட புழுதியை தரையில் அடித்தான். வெடித்து சிதறி ஓவென்று அழுதான்.

அம்மா தள்ளாடினாள். யாரோ எழுந்து கைத்தாங்லாய் நாற்காலியில் உட்கார வைத்தார்கள்.

ஏற்றி வந்த ஆட்டோ டிரைவர் திகைத்துப் போய் மூவரையும் பார்த்தான்.

"ஏங்க மீட்டர் கட் பண்ணிடட்டுமா?" மெல்ல வந்து வெங்கடேசனைக் கேட்டான்.

"வேணாம்பா. கொஞ்சம் இரு வர்றோம்."

அம்மாவை மெள்ள தேற்றி கைலாகு கொடுத்து தூக்கினான். 'வா, ராஜி!' என்றான்.

ராஜி எழுந்து முகம் துடைத்துக் கொண்டாள். ஆட்டோ நோக்கி நடந்தாள்.

ஆளுக்கொரு பக்கமாய் அம்மாவை அணைத்துக் கொள்ள, ஆட்டோ கிளம்பியது.

"எங்க போவணுங்க?"

எங்கே போவது? யாருக்கும் தெரியவில்லை! எவ்வளவு தூரம் போவது? அதுவும் தெரியவில்லை!

“இப்படி எங்கயாவது போப்பா, எனக்குத் தெரியலை.”

“எனக்கு புரியுதுங்க. நானும் அக்கா தங்கச்சியோட பிறந்தவன்தான். ஒரு ஓட்டலாண்ட நிறுத்தறேன். காப்பி வாங்கி ஆயாவுக்கு கொடுங்க. ரொம்ப கேரா இருக்கறாங்க.”

பாய்க்கடைக்கு அருகே ஒரு வளைவில் வண்டி நிறுத்தினான்.

“என்ன இடம் இது?” —அம்மா கண் விழித்துக் கேட்டாள்.

“கந்தசாமி கோயில்கிட்ட நிறுத்தியிருக்கான். வா, ஒரு வாய் காப்பி சாப்பிடு.”

“எதுக்குடா?”

“வாம்மா!” வெங்கடேஷ் இழுத்தான்.

ஆட்டோ டிரைவர் நாலு ஸீட் தள்ளி தனியே உட்கார, அவனுக்கும் சேர்த்து காப்பி ஆர்டர் செய்தான். வயிற்றுக்குள் சூடாய் திரவம் போனதும் தெம்பு வந்தது.

‘சரி, இனி மேற்கொண்டு...’ என்ற கேள்வி வந்தது.

“ராஜி! ஆர் யூ ஆல்ரைட்?”

ராஜி தலையசைத்தாள்.

"சரி, நேர நம்ம வீட்டுக்குப் போ. கதவு சாவி அப்பா கிட்ட இருக்கு. பக்கத்துல மணிகண்டன் இருப்பான், அங்க போ. அவன் குடிசைல உட்கார்ந்திண்டுரு. நா ஒன் அவர்லே சத்திரம் போய்ட்டு அங்க வரேன். கல்யாணம் இல்லைனு சொல்லணுமே. ராஜி, மணி கண்டன் இடத்துல உட்கார வேண்டாம். நம்ம வீட்டு கொல்லைப் பக்கமா உட்காரு."

வீட்டு வாசலில் ராஜி இறங்கினாள்.

வாசலில் பெரிய கோலம் போடப்பட்டிருந்தது. கோலத்தில் மாட்டு சாணம் இருந்தது.

"பத்திரமா இரு ராஜி. உள்ள போ. இன்னும் ஒன்னவர்ல வரேன்."

ராஜி கல் உடைசல்களைத் தாண்டி பின்பக்கம் போனாள். அவன் இடுப்பில் துண்டுடன் சரணம் வரிந்து கொண்டிருந்தான். பரந்த முதுகில் பூணூல் நதி போல வழிந்து சரிந்து சுற்றியிருந்தது.

ராஜி உடைந்த சுவர் வழியே தன் வீட்டுக் கொல்லைப்புறம் போனாள். பாத்ரூம் கதவு சார்த்திக் கொண்டாள். கால் அலம்பி வெளியே வந்தாள்.

வாசல்படியில் உட்கார்ந்து கொண்டாள். அவன் முதுகு ஒவ்வொரு சரணத்துக்கும் ஏறி இறங்கியது.

தவறோ! இவனைப் புறக்கணித்தது தவறோ! இவனுக்கு சரியென்று பதில் சொல்லியிருந்தால் எந்த வேதனையும் வந்திருக்காதோ? இனம் இனத்தோட

சேரும் என்று யாரோ பெருமூச்சு விடும் காரியம் தவிர, வேறு இடைஞ்சல் எதுவும் வந்திருக்காதோ?

''ராஜி, நீயா...'' மணிகண்டன் கல்லில் அடி பட்டவன் மாதிரி நின்றான்.

ராஜி மௌனமாய் எழுந்து நின்றாள்.

''என்ன ஆச்சு?'' —மணிகண்டன் கத்தினான்.

''கல்யாணம் நின்னு போச்சு!''

''ஏன்?''

''நிறுத்திட்டா!''

''ஐயோ பாவிகளா!''

''எனக்கு நிக்க முடியலை. நான் உட்கார்ந்துக் கட்டுமா?''

''தாராளமா. இரு, நாற்காலி கொண்டு வரேன்.'' ஓடினான். அவள் மறுபடி கொல்லைப் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டாள்.

நாற்காலியோடு வந்தவன் தயங்கினான். ''இதுல உட்காரேன்'' என்றான்.

அவள் தலைகுனிந்து அசையாது படியில் உட்கார்ந் திருந்தாள்.

''அப்பா எங்கே?''

''சத்திரத்துல!''

"அம்மா, வெங்கடேஷ்?"

"இப்பதான் என்னை இறக்கி விட்டுட்டுப் போனா."

"சத்திரத்துலேர்ந்தா?"

"அவங்க வீட்லேர்ந்து எல்லாரும் படையா வந்து அவரை கையோட கூட்டிண்டு போய்ட்டா!"

"எப்ப?"

"காலைல..."

"அவனை வெட்டி...வெட்டியெறியலையா யாரும்."

ராஜி தலை குனிந்து கொண்டாள்.

"கல்யாணமே நடக்கலையா?" மறுபடி சந்தேகமாய் கேட்டான். "ஐயோ எத்தனை செலவு? எத்தனை செலவு?"

"என்னதான் சொன்னான்?" மறுபடி கத்தினான்.

"ஒன்றும் சொல்லலை!"

"போலீஸுக்குப் போன் பண்ணலையா?"

"போலீஸுக்குப் போன் பண்ணி...என்ன ஆகும்? அவரே வேண்டாம்னு போறபோது...என்ன செய்ய?"

"உள்ளவைச்சா ஏழு வருஷம் கடுங்காவல்!"

"கடுங்காவல் தரணும்னா இத்தனை செய்தது? கல்யாணம் பண்ணிக்கத்தானே... வேண்டாம் விடுங்கோ."

"அம்மா துடிச்சுப் போய்டுவா ராஜி."

"அதான் கவலையா இருக்கு."

"உன்னைப்பத்தி கவலை வரலையா உனக்கு?"

"இப்ப தெரியலை ஒன்றும். மெள்ள மெள்ள கவலை வந்து குவியுமோ என்னமோ? என்ன பாவம் பண்ணினேன் தெரியலை. யாரை நோகடிச்சேன்னு புரியலை. என்ன...என்ன சாபம் வாங்கிண்டு வந்து இப்படி இடி மேல் இடியா...அடி மேல அடியா..."

மறுபடி அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

"ராஜி, நான் உன்னைப் பண்ணிக்கறேன்!"

மணிகண்டன் நாற்காலிவிட்டு எழுந்து நின்றான்.

ராஜி சட்டென்று அழுகையை நிறுத்தி விட்டு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சொல்லு ராஜி...இப்ப சொல்லு...நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன். நேரே சத்திரத்துக்குப் போவோம். உங்கம்மா கால்ல விழுவோம்." கிட்டத் தட்ட அவன் மூச்சு முன் நெற்றியை தாக்கிச் சுடும் நிலையில் நின்றான்.

ராஜி தலைகுனிந்து கொண்டாள். யோசித்தாள்.

"நேத்து சாயந்திரம் சாப்பிட்டது; பேயா பசிக்கறது. உங்ககிட்ட சாப்பிட ஏதாவது இருக்கா?"

"ஒன் செகண்ட்."

துள்ளிக் குதித்து அரைச்சுவர் தாண்டி ஏறினான். சரளைக்கல் குவியலில் குதித்தான். சறுக்கி ஓடினான். குடிசைக்குள் புகுந்தான்.

ராஜி வானம் பார்த்தாள். தொலைதூரம் கண்சுருக்கி நோக்கினாள். குனிந்து கால் கட்டைவிரல்கள் பார்த்தாள். பூமியை துளைத்துக் கொண்டு யோசித்தாள். உள்ளே, குடிசையில் பாத்திரம் உருளும் ஓசை கேட்டது.

''சாரி ராஜி! பழையது இருக்கு...நேத்து சாதம். ஜலம் விட்டது இருக்கு. சாத்துக்குடிபழம் ஒன்று நைவேத்தியம் பண்ணினேன். அது இருக்கு.''

''பழையது போறும்.''

''சூடா இட்லி வாங்கிண்டு வந்துடட்டுமா...ஒரு நிமிஷம்!''

''வேண்டாம், பழையது போறும்.''

அவன் பாத்திரம் கொண்டு வந்து காலின் கீழ் வைத்தான். எவர்சில்வர் போணியில், அரை மட்டத்துக்கு சாதம்; மீதி மட்டம் நீர் இருந்தது. ராஜி இரண்டு கைகளால் பாத்திரம் சுழற்றினாள். நீர் சுழன்று சோற்றுப் பருக்கைகள் மேலே கொண்டு வந்து உள்ளே அழுத்திற்று. சுழல் மாதிரி சுழன்று அமைதியாயிற்று.

ராஜி, சுழல் நின்றதும் பாத்திரம் தூக்கி நீர் மட்டும் வாயில் விட்டுக் கொண்டாள். ஜில்லென்று சாத ஜலம் வயிற்றுள் இறங்கியது. மறுபடி இரண்டு மிடறு குடித்தாள்.

''பிழிஞ்சு குடி ராஜி. ஊறுகா வேணுமா தொட்டுக்க?''

''வேண்டாம்.'' ராஜி கையால் சாதம் அலைந்து அழுந்த பிசைந்தாள். நீர் கனத்துக் கொண்டது.

நிதானமாய் யோசித்துக் கொண்டே நான்கு வாய் சாதத்தோடு குடித்தாள்.

வயிற்றில் சோறு இறங்க இறங்க, மெல்ல தலை சுற்றியது. பசி வேகத்தில் உணவு இறங்கியதும் காய்ந்த வயிறு 'ப்போவ்' என்று கூச்சலிட்டது. ராஜி பாத்திரம் அலம்பி வைத்துவிட்டு குழாயடிக்குப் போய் கையலம்பி னாள். வாய் கொப்புளித்தாள். முகத்தில் ஜலம் அறைந்து அலம்பிக் கொண்டாள். கழுத்து முழுக்க கழுவிக் கொண்டாள்.

''இரு, குங்குமம் தரேன் நெத்திக்கு...கோயில்ல அர்ச்சனை பண்ணது இருக்கு.''

மறுபடி உள்ளே ஓடினான்.

சிறிய பொட்டலம் கொண்டு வந்து படிக்கட்டில் வைத்தான். ராஜி பிரித்து விரல் நுனியில் குங்குமம் எடுத்து இட்டுக் கொண்டாள்.

''என்ன ராஜி, பதிலே சொல்லலையே?''

''வேண்டாம். தேங்க்ஸ்!'' —ராஜி பதில் சொன்னாள்.

''புரியலை ராஜி, நீ சொல்றது.''

''எனக்கு கஷ்டங்கிறபோது பதறி சாதம் போட்டு... தேங்க்யூ!''

''நான் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னேன் ராஜி.''

''வேண்டாம்.''

''ஏன், நான் கூலி வேலைக்காரனாப் படறதா?''

''நூத்துல தொன்னூறு பேருக்கு இங்க கூலி வேலை தான்.''

''பின்னே ஏன் வேண்டாங்கற?''

''எனக்கு இனி கல்யாணமே வேண்டாம்.''

''நொந்து போய்ட்டியா? உன்னுது ராங் செலக்ஷன் ராஜி. இரண்டு மாசமா நான் இதைத்தான் வித விதமா சொல்லிண்டு இருக்கேன்.''

''மே பீ .. ஆனா, இனிமே செலக்ஷனே இல்லை.''

''ராஜி நான்...''

ராஜி கை உயர்த்தினாள்.

''நீங்க கேட்டு நான் மறுத்ததை தயவுசெய்து பர்ஸனல் இன்ஸல்டா எடுத்துக்க வேண்டாம். என் வேதனை உங்களுக்கு மேலோட்டமா புரிஞ்சிருக்கு. நான்தான் இதுக்கு ரெமிடின்னு நினைக்கிறேள். இல்லை, என் வேதனைக்கு நான்தான் ரெமிடி.''

''ஏதாவது குறையா என்கிட்ட?''

''எனக்குத் தெரியாது. ஆக, என் குறை எனக்கு தெரிஞ்சுபோச்சு. குறையோட நான் யாருக்கும் வாக்கப்பட தயாராய் இல்லை.''

''உனக்கு என்ன குறை?''

''எனக்குத்தான் தெரியும். என்னை மாதிரி தவிக்கிற பெண்ணுக்குத்தான் தெரியும். உங்களுக்குத் தெரியாது. எனக்கு தலைய சுத்தறது. நான் கொஞ்சம் படுத்துக் கட்டுமா?''

படிக்கட்டில் உடம்பு சுருக்கி புடவையைப் போர்த்தி தலைக்கு கையை அண்டக் கொடுத்து சாய்ந்தாள்.

''உடனே வேண்டாம் ராஜி, இன்னும் ஒரு வாரம் கழிச்சு...'' அவன் தயங்கித் தயங்கிப் பேசினான்.

''ஒரு வாரம் கழிச்சு உலகம் மாறிடுமா? நீங்க, நான், எங்க அம்மா, அண்ணா எல்லாம் மறந்துட்டு புதுசா பிறந்திடுவோமா? போன ஜென்மத்து வாசனையா இந்த வாரம் ஆய்டுமா?''

''நான் மறந்துட்டேன் ராஜி; சகலமும் மறந்துட்டேன். இதுதான உன் பயம்?''

அவன் பேச்சில் ஆர்வமும் அவசரமும் கொப்புளித்தன.

ராஜி சோர்வோடு எழுந்திருந்தாள்.

''பட்டி விக்கிரமாதித்தன் கதை படிச்சுருக்கேளா? விக்கிரமாதித்த ராஜாவும், பட்டியும் ஆத்தங்கரையோரமா போய்ண்டிருந்தா... இடுப்புத் துணிய ஆத்துல நழுவ விட்டுட்டு அதைப் பிடிக்க முயற்சி பண்ணி, அடிச்சு புரண்டு வர வெள்ளத்துல நீச்சல் தெரியாம ஒரு கன்னிப் பொண் தத்தளிச்சுண்டிருக்கறதப் பார்த்தா. விக்கிரமாதித்த ராஜா உடனே நீர்ல பாஞ்சு அந்தப் பொண்ணைக் கொத்தா தூக்கித் தோள்ள போட்டுண்டு கரைக்கு

நீந்தி வந்தான். கொண்டு வந்து கரைல போட்டான். குளிர்ல சுருண்டு கிடக்கற பொண் மேல பட்டி தன் சட்டையை அவுத்துப் போட்டான். பொண் மயக்கம் தெளிஞ்சு எழுந்தது.

- "யார் என்னை காப்பாத்தினேளென்னு கேட்டது. நான்தான்னார் ராஜா. ஐயா, நான் கன்னிப்பொண். என்னைத் துணியில்லாம பார்த்துட்டீங்க. இனி நான் வேற ஆளுக்கு வாக்கப்படறது சரியில்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னுத்து அந்தப் பெண்...

"ஏன், பட்டிகூடத்தான் பார்த்தான், நீ போர்த் திண்டுருக்கறது அவன் சட்டைதான். அவனையும் பண்ணிப்பியான்னான் ராஜா. வாஸ்தவம்! ஆத்தோடப் போன என்னை தோள்ளப் போட்டு எல்லா இடத்துலே யும் தொட்டு தூக்கிண்டு வந்தது நீங்க. எனவே, எனக்கு நீங்கதான் புருஷன்.

தன் கண்லகூட என் உடம்பு பட்டுடக் கூடாதுன்னு தன் துணிய அவிழ்த்து என் மேல போட்ட பட்டி, எனக்கு தகப்பன். தொட்ட நீங்கள் புருஷனாகவும், துணி கொடுத்தவன் தகப்பனாகவும் எனக்கு ஆனதாலே, பட்டியே உங்களுக்கு என்னை தாரை வார்த்துத் தரலாம் னாளாம் அந்தப் பொண். பட்டி தாரை வார்க்க, ராஜா அந்தப் பொண்ணை அங்கேயே கல்யாணம் பண்ணிண் டானாம்...

"இந்தக் கல்யாண அடியிலே சிக்கி தவிச்சுக் கிடக்கற எனக்கு சோறு போட்டேள். என் அவமானம் தெரிஞ்சவா நீங்க. உங்கள நான் எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும்? ராஜா தொட்டு தூக்கினது தெரிஞ்ச

பிறகு, பட்டி கல்யாணம் பண்ணிக்கிறது நல்லதா?சரியா? எனக்கு நீங்க புருஷனாதான் இருக்கணுமா? அப்பாவா இருக்கப்படாதா?''

அவன் எழுந்தான். தள்ளாடினான். மெல்ல திரும்பி நடந்தான். சுவர் தாண்டினான், கல் குவியல் எகிறினான், கடந்தான்.

'சபரிமலை சாஸ்தாவே சரணமய்யப்பா' நெஞ்சு மீது கரம் குவித்து, படம் நோக்கி, சரணங்கள் சொன்னான்.

ராஜி சரிந்தாள். இறுகப் போர்த்திக் கொண்டு பாதங்களை மறைத்துக் கொண்டு படியில் உடம்பு சுருக்கி தூங்கினாள்.

''ராஜி...ராஜி...உங்கம்மா குளத்துல விழுந்துட்டா ளாம். ஜி.எச்.லேர்ந்து ஆள் வந்திருக்கு.''

மணிகண்டன் தள்ளி நின்று குரல் கொடுக்க, திடுக் கிட்டு எழுந்தாள். 'என்ன' என்று மறுபடி விஷயம் கேட்டாள். சிரித்தாள். இன்னும் இடி பாக்கி இருக்கோ... எழுந்து அவனிடம் இருபது ரூபாய் கடன் வாங்கி ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

அம்மா உடம்பு தேறியதும் பாத்திர பண்டங்களுடன் கும்பகோணம் பஸ் ஏறினாள்.

மூன்று சைக்கிள் ரிக்ஷாவில் பாத்திர பண்டங்கள் ஏற்றி பட்டாமணியத் தெரு வீட்டுக் கதவு திறந்து கூடத்தில் சாமான்கள் வைத்தாள்.

சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

'பேக் டு த பெவிலியன்!' இது பெவிலியனா? இது தான் என் வளையா? இதுதான் என் இடமா? ஆம் எனில் இங்கே யார் எனக்கு நட்பு? எவர் எனக்குத் துணை? யார் உறவு?

என் வளையிலேயே நான் அன்னியப்பட்டு கிடக்கப் போகிறேனா? எனக்கு ஏன் ஒரு நல்ல ஸ்நேகமே கிடைக்கவில்லை? என் மனசு கொட்டியழ, ஏன் ஒரு தோள் கிடைக்கவேயில்லை?

இங்கே யார் நட்பு எனக்கு?

சட்டென்று டீச்சர் ஞாபகம் வந்தது. இல்லஸ்ட் ரேடட் வீக்லி டீச்சர். பன்னீர்பாலக் டீச்சர். ஆம்பளைய நம்பாதீங்கடி என்று பாடம் நடத்திய பிறகு, அறிவுரை கூறும் டீச்சர். தனியே வாழ்ந்து தானே தினுசு தினுசாய் பொங்கி, தானே தின்று எவரையும் லட்சியம் செய்யா திருக்கும் டீச்சர்.

''அம்மா, நான் டீச்சர் வீட்டு வரைக்கும் போய்ட்டு வரேன்.''

''எதுக்குடி? வந்ததும் வராதுமா?''

''ஏன், போனா என்ன?''

''ஏதாவது விசாரிக்கப் போறா!''

''இங்க யாருக்கும் எனக்கு நடந்த கருமாதி தெரி யாது. நா வரேன்.''

டீச்சர் இருப்பாளோ? இல்லை சினிமாவுக்குப் போயிருப்பாளோ, தெரியவில்லை.

அழைப்பு மணி அழுத்த, கதவு திறந்து கொண்டது. தூங்கிக் கொண்டிருந்திருப்பாள் போலும். மலங்க மலங்க விழித்தாள்.

''யாரு?''

''ராஜி, டீச்சர்!''

''வா...வா...என்னடி திடீர்னு காணாம போய்ட்ட? திடீர்னு வந்து நிக்கற. வா...உட்கார்! சௌக்கியமா?''

''இல்லை, டீச்சர்.''

டீச்சர் கணநேரம் தயங்கினாள்.

''என்ன சொல்லு?''

''மனசுவிட்டுப் பேச வந்திருக்கேன் டீச்சர்.''

''என்ன சாப்பிடற? பூசணிக்காய் துருவிப்போட்டு ஹல்வா கிளறினேன். எடுத்துக்கிறயா?'' குளிர்பெட்டி திறந்து உறைந்து ஜில்லென்றிருந்த ஹல்வா வழித்து இரண்டு தட்டில் போட்டுக் கொண்டு வந்தாள். டப்பா திறந்து மிக்ஸர் கொட்டிக் கொண்டாள்.

''ஏண்டி, கோயில் சுவத்துக்கு பயந்தா ஊர் விட்டு ஓடிட்டே? எவனோ தெருப்பொறுக்கி எழுதினான்னா நீ ஓடறதா. சுவத்துல யார் பத்தி எழுத முடியாது. டீச்சர், வாத்தியாருடன் ஜல்சான்னு என்னைப் பத்தியும் எழுதலாம். ஓடிடுவேனா? கிடக்கான் கேடுகெட்ட நாய்ன்னு போய்டுவேன். எவனாவது என்னன்னு கேட்டா, ஆமா ஜல்சாதான்...நீயும் வரயான்னு கேட்பேன். சொல்லு என்ன ஆச்சு?''

அரைமணி அசையாது ராஜேஸ்வரியின் கதை கேட்டாள்.

"பஸ் ஏறிப் போயட்டானா? ஏண்டி போகவிட்டே? கத்தி எடுத்து சதக்குன்னு குத்திட்டு ஜெயிலுக்கு போயிருக்க வேண்டியதுதானே? முட்டிண்டேன்டி, லவ் பண்ணாதீங்கோ...லவ்... பண்ணாதீங்கோ... ஆம்பளைய நம்பாதீங்கோன்னு. தினம் கதறினேன்டி. கேட்கலை... கேலி பண்ணினேள். நான் இன்னிக்கு நேத்திக்கு இந்த முடிவுக்கு வரலை; எம் பதினாறு வயசுல எங்க அக்கா தலைமுடியை பிடிச்சு தரதரன்னு தெருவுல இழுத்துண்டு போய் புள்ளையார் கோயில் வாசல்ல செருப்பால அவ ஆம்படையான் அடிச்ச அன்னிக்கு தீர்மானம் பண்ணி னேன். எனக்கு ஆம்பளையே வேண்டாம்ன்னு தீர்மானம் பண்ணினேன். தமிழ்குலப் பொண்ணா, இந்து தர்மபத்தினியா பாரத புத்திரியா வாழணும்னு தீர்மானம் பண்ணினேன். முதல்ல நான் மனுஷி. என்னை மதிக்காத, மனுஷத்தனத்தோட நடத்தாம எந்த டைட்டில் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம். என் மனசை அடிச்சு நொறுக்கிட்டு எனக்கு எந்த கௌரவ மும் வேண்டாம்...

"நீ ஏன் ராஜி லவ் பண்ணினே? உன்னையே கேட்டுக்கோ. செக்யூரிடியா? காமமா? இது இரண்டு மேவா. ஆம்பளை செக்யூரிடியா? உன்னை அடிச்சு வெளிய துரத்துறவன் எப்படி உனக்கு செக்யூரிடி ராஜி. எனக்கு இரண்டாயிரத்து நானூற்று நாப்பது ரூவா சம்பளம், ஆயிரம் ரூபா ட்யூஷன். இதுதான் என் செக்யூரிடி. உத்தியோகம்தான் என் புருஷன்...

"கொதிக்க கொதிக்க வெந்நீரில் குளிச்சுட்டு சோப்பு வாசனையோட நல்லா சாப்ட்டுட்டு படு. அடிச்சுப்

போட்டா மாதிரி தூக்கம் வரும். ஏன் ராஜி, அவன் கால்ல விழுந்தே? அதுவும் நடு பஸ் ஸ்டாண்ட்ல. உன்னை இழிவுபடுத்திண்டே ராஜி. 'நீ இல்லாம நான் இல்லை'ன்னு சொல்லியிருக்கே. பிராணநாதா! 'புருஷன் சுகமே பெண்கள் சௌபாக்கியம்' டயலாக்கெல்லாம் சொல்லாதே, ஆம்பளை நாய்க்கு திமிர் அதிகமாயிடும். காலுக்கு உதவாத செருப்ப தூக்கிப் போடறாப்பல உதறி எறி. கெட்டுப் போனவள்னு சொல்வானா? சொல் லிண்டு போகட்டும். சித்ரவதைபட்டு பத்தினியா இருக் கறதவிட, சுதந்திரமான தேவடியாளா இருக்கலாம்...

''குடும்பத்தலைவி, தாய், சுமங்கலி இதெல்லாம் பம்மாத்து, ஏமாத்து வேலை. உன் உணர்வு, உன் இருப்பு மதிக்கப்படலைன்னா, நீ அடிமையா இருக்கணும்னா, இதிலேர்ந்து நீ விடுபடு.

நெகிழ்ந்து போறதும், ஐயோன்னு நெஞ்சுல ஃவச்சுக் கறதும், என் அழகால உலகத்தை கவுத்துடலாம்னு நினைக்கறதும் பேதமை. புத்தியே முக்கியம். மணி கண்டனை நீ மறுத்தது ஒன்றுதான் புத்திசாலித்தனம்.

''நாளைக்கு ஏதாவது யோசனை பண்ணினா, என்னடி, தேவு யோசனையானு கேட்பான். ஏதோ தோனி பாயஸம் பண்ணினா, என்னடி இன்னிக்கு அவனுக்கு பர்த்டேயாம்பான். உனக்கு ஒரு இழிவும் வரலை ராஜி. பெரிய இழிவுலேர்ந்து தப்பிச்சுருக்க. யாராவது கல்யாணம் நின்னுடுத்தான்னு கேட்டா, தலை குனிஞ்சு பொலபொலன்னு அழாதே. ஆமாம், அந்த ஆள் ஒரு ஃபிராடுன்னு தெரிஞ்சுது...ச்சீ...போடான்னு வந்துட்டோம்ன்னு சொல்லு. அந்த ஆளை எங்கயாவது பார்த்தா உங்கண்ணன் இன்னும் சாகலையான்னு கேளு.

ரௌத்திரம் பழகு ராஜி. வெஞ்சினம் கொள். சதி, நார் மடி, மொட்டைத்தலைன்னு இவனுங்க பண்ணின அநியாயம் நினைச்சு நினைச்சு கோபம் வரவழைச்சுக்கோ. பெண்ணுக்கு பொட்டு கட்டி தேவடியான்னதை நினைச்சு சீறு. உனக்கு ஒண்ணுமே நடக்கலை. ராஜி ஒரு அவமானமும் இல்லை. படி ராஜி... எக்யூப் பண்ணிக்கோ. நிறைய படி. வேலைக்குப் போ. திமிரா இரு. அடங்கினே, அழிச்சுடுவானுங்க. மேடம்ன்னா... சார்ன்னு சொல்லு. டீன்னா.. டான்னு சொல்லு...லிவ் அலோன்! அப்பா, அண்ணா யாருக்கும் கட்டுப்படாதே.

''அம்மாவா இருக்கணும்னு ஆசை வருதா...செடி கொடி வளர்த்துக்கோ. மரம் நடு. இந்த வீட்டுப் பின்னாடி இரண்டு தென்னை மரம், ஒரு கொய்யாமரம் இருக்கு. மூணுக்குமே நான்தான் அம்மா. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு உனக்கு இயல்பா இல்லை, கத்துக் கொடுத்தா தூக்கி எறி. கால் மேல கால் போட்டு உட்காரு. அவன் செய்யற வேலை அத்தனையும் உன்னால செய்யமுடியும். அவனைவிட ஒரு வேலை அதிகமா செய்ய முடியும். புள்ளை பெற முடியும். பத்துமாசம் கீழே இறக்காத ஒரு கனம் தாங்க முடியும்.''

''கும்பகோணத்தைவிட மெட்ராஸ் வசதியில்லையா, லேடீஸ்க்கு...'' —ராஜி அப்பாவியாய்க் கேட்டாள்.

''முட்டாள்! இந்த கும்பகோணத்தை மாத்து. மெட்ராஸைவிட பாம்பே வசதி. பாம்பேயைவிட பாரீஸ் வசதி...ஓடுவியா? ஏண்டி ஓடணும்? எவனுக்கு பயந்து ஓடணும்?''

''வேற யாராவது கல்யாணம் பண்ணிக்கறேன்னு வந்தா?''

''இதெல்லாம் விஷயம், எப்படி உன் ஐடியான்னு கேளு. சரின்னா இரண்டு வருஷம் பேசிப் பாரு. கல்யாணம் பண்ணிக்கோ. சரி வரலையா, கழுட்டி தூக்கி எறி. எப்ப வேணா எறிவேன்னு பயமுறுத்தி வை.''

''அன்பு...ஸ்நேகம் பொய்யா?''

''இல்லை... நிஜம். அடிச்சா அன்பு வராது. கடிச்சு குதறினா ஸ்நேகம் வராது. அன்புக்கு அன்பு. நட்புக்கு நட்பு. அடிக்கு அடி. எழுந்து நில் ராஜி. உனக்கு தெரிஞ்ச எல்லா பொண் குழந்தைக்கும் இன்னிக்கு வர உன் கோபத்தை ஊட்டு, தைரியம் சொல்.''

''டீச்சர்!''

''கேளு ராஜி!''

''பின்னால வயசு காலத்துல...''

''யார் சோறு போடுவான்னு கேட்கறியா? கைகால் விழுந்துடுத்துன்னா யார் காப்பாத்துவான்னு கேட்கறியா?

''எனக்கு எண்ணூறு ரூபா பென்ஷன் வரும். எங்க யாவது ஆசிரமத்துல கொடுத்துட்டு அங்க போய் உட்கார்ந்துப்பேன்.

''ஏன் ராஜி, நீ ஆரம்பி அப்படி ஒரு ஆசிரமம். அதுக்கு தயார் பண்ணிக்கோ. போ ராஜி...'ஹோம் ஃபார் ஹோம்லெஸ்'தான் உன் லட்சியம். நீ ஆரம்பிக்கப் போற ஔவை அகம்தான் உன் கனா. கைவீசி நட ராஜி. உனக்கு பாரமேயில்லை மனசுலேன்னு நட.''

ராஜி எழுந்தாள். உடம்பு பாரமெல்லாம் கால் வழியே இறங்கிப் போயிற்று. "தாங்க்யூ டீச்சர்!"

"எனக்கு தாங்க்ஸ் சொல்லாதே, தேவுக்கு சொல்."

"ஏன்?"

"அவன் உதறினதாலதானே நீ முழிச்சிண்டே, இல்லேன்னா தூங்கிண்டே தானே இருப்பே. கரெக்டா? அப்பா வராளா?"

"நாளைக்கு வருவா...லாயர் நோட்டீஸ் விட ஏற்பாடு பண்றா."

"முடுக்கிவிடு. மேக்ஸிமம் தொந்தரவு கொடு. பதற வை. நாளைக்கு அவன் கல்யாணம் பண்ணப் போற பெண்ணையாவது மரியாதையா நடத்தட்டும். இல்லை பொம்பளையே வேண்டாம்னு ஓடட்டும்."

"வரேன் டீச்சர்."

"ஆல் த பெஸ்ட்!"

ராஜி இறங்கி தெருவில் நடந்தாள். 'கை வீசி நட ராஜி—' டீச்சர் குரல் காதில் கேட்டது.

'கை வீசம்மா கை வீசு...
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய் திங்கலாம் கை வீசு!'

உள்ளே சம்பந்தமில்லாமல் பாட்டு ஓடிற்று.

அப்பா! இப்பத்தான் கை வீசி நடக்கறதுக்கே அர்த்தம் தெரியறது. பின்னலை முறுக்கிண்டு, புடவைத் தலைப்பை பிடிச்சுண்டு, பூக்கூடையை இறுக்கிண்டு கை வீசி நடப்பேன். இனி கடைசி வரைக்கும் கை வீசி நடப்பேன். நானே கடைக்குப் போவேன். எனக்குப் பிடித்த மிட்டாயை-எனக்குப் பிடித்த புத்தகத்தை-எனக்குப் பிடித்த உடைகளை-எனக்குப் பிடித்த உத்தியோகத்தை நானே உலககெங்கும் கடையில் வாங்குவேன். எவர் குறித்தும் பயமின்றி மெதுவா தின்பேன். அள்ளி விழுங்காமல், அரைகுறையாய் திங்காமல், என் ருசி அறிந்து, என் மனசு நிரம்ப அனுபவித்துச் சாப்பிடுவேன்.

'கை வீசம்மா கை வீசு...'

ராஜிக்கு ஒரு வயசில் கேட்ட பாட்டுக்கு இப்போது தான் அர்த்தம் புரிந்தது.

□□□

# பின்னுரை

திரு. பாலகுமாரன் அவர்களுக்கு,

சோழர் காலத்தில் ஆணும், பெண்ணும் சமமாய் இருந்திருக்கலாம். பெண்ணின் ஆலோசனை கேட்டு அரசன் பரிபாலனம் செய்திருக்கலாம். ஆனால், குறிப்பாக கடந்த ஒரு நூற்றாண்டாகப் பெண்ணின் நிலைமை அதே சோழ பூமியில் பெரிதும் க்ஷீணித்துப் போய் விட்டது.

அதீதமான செல்வச் செழிப்பினால் ஆண் வக்கிர புத்தி அடைந்து சீட்டாடுதலும், கூத்தியுடன் குலாவுவதுமே தொழிலாகக் கொண்டுவிட்ட இடத்தில், அதே இடத்து பெண் ஒருத்தி, வாழ்வில் தன் அறியாமையினால் செய்த தவறுகளைத் திருத்தி, அதிலிருந்து மீண்டு, ஆணை மீறி வாழ்வு நடத்த வேண்டும் என்று 'பாஸிடி' வாக கூற உங்களால் மட்டுமே முடியும்.

இந்தக் கதையில் ராஜேஸ்வரியின் தாய் ஒரு சகதியான வாழ்க்கையில் இருந்தாலும், அதேவிதமான சகதியில் தன் பெண் விழுந்துவிடக் கூடாது என்று ஆசைப் பட்டாலும், இதற்கு உதவி செய்ய அவளுக்குத் தெரியவில்லை. ராஜியின் தந்தைக்கோ இதுபற்றி சிறிதும் அக்கறை இல்லை. அவள் தாய்மாமனுக்கோ அவளை

சகதியில் தள்ளிப் பார்ப்பதைத் தவிர வேறு ஆசை இல்லை. அவள் அண்ணனுக்கு உதவும் ஆசை உண்டே தவிர, எப்படி எதன் மூலம் என்கிற தெளிவு இல்லை. சூடுபட்டுக் கொண்ட டீச்சரின் சூளுரைகள், ராஜேஸ்வரிக் குத் துக்கிரித்தனமாக முதலில் படுகிறதே தவிர, தன் தேவை என்ன என்பது தெரியவில்லை. ஒன்றின் மீது ஒன்றாய்ப் பல சோதனைகளுக்கு உட்பட்டு தவிக்கிற பொழுதே வாழ்க்கை புரிகிறது ராஜேஸ்வரிக்கு. அடி பட்டுத்தான் தெரிந்து கொள்ள முடியும் என்கிற நியதி யிலிருந்து இந்தப் பெண்ணும் தப்பவில்லை. தெளிந்த பிறகு 'கை வீசுகிறாள்.' 'கை வீசம்மா கை வீசு' என்பதற் குப் புதிய பாடம் கற்கிறாள்.

எல்லாம் சரி, நீங்கள் ஏன் 'விமன்ஸ் லிப்பை' பெண் தனித்து வாழட்டும் என்கிற கோப முடிவை இந்தக் கதைக்குக் கொடுத்தீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஆண்களை பயமுறுத்தவா? அவனைப் புறக்கணித்தால் அவன் புருஷ வேஷம் கலையும் என்ற நோக்கமா? இல்லை, 'தனித்திரு' என்று பெண்களைச் சொல்ல முற்படுகிறீர்களா?

கடைசி அத்தியாயத்தில் டீச்சர் நடத்துகிற பேருரை மிகவும் யோசிக்க வேண்டிய விஷயம். அன்புக்கு அன்பு, நட்புக்கு நட்பு, அடிக்கு அடி என்று பயமுறுத்துகிறாள் டீச்சர்.

இந்த முடிவு ஆரோக்கியமானதாக இருந்தாலும், இதற்குப் பிறகு மோசமான விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்கிற அச்சம் வருகிறது எனக்கு. It is only a revengeful attitude... ஆணைத் 'தூக்கி எறி' என்பது பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் (நிறைய பேர் பாதிக்கப்

பட்டிருக்கிறார்கள்) பிடித்த விஷயமாக இருக்கிறது. இதன் பின்விளைவுகள் என்ன என்பதை உங்கள் அடுத்த நாவலிலாவது யோசிக்க வேண்டும்.

மற்றபடி கதையின் நடை உங்களுக்குக் கைவந்த அற்புதமான நடை. பாலிகை கரைக்கிற அம்மாவும், பட்டாசு சத்தத்திற்கு நடுவே கை பின்னிக் கொண்ட ராஜேஸ்வரியும் படிக்க சந்தோஷமாக இருந்தது. தொடரின் நடுவில் ஒரு வாரம் வரவில்லையே, ஏன்?

இப்படிக்கு

உஷா

□□□

திருமதி உஷா அவர்களுக்கு,

வணக்கம்.

உங்கள் கடிதம் 'இதயம் பேசுகிறது' மூலம் கிடைத்தது. பாராட்டுகளுக்கு நன்றி.

முதல் விஷயம், தொடர் நடுவே ஒரு வாரம் நின்று போனதற்கு நான் காரணமில்லை. 'இதயம் பேசுகிறது' இதழின் இட நெருக்கடியே காரணம். இதுவரை என் எந்தத் தொடரும் இப்படி இடையே தவற விடப்பட்டதில்லை.

இரண்டாவது விஷயம், 'விமன்ஸ்லிப்' வளர்க்கிறீர்களே... 'ஆணைத் தூக்கி எறி' என்று போதிக்கப்பட்ட பிறகு பின் விளைவுகள் என்ன என்று கேட்கிறீர்கள்.

விளைவுக்கு விளைவு வராது போகாது. என்ன விளைவு வரினும் அடங்கி வாழ்தலை முற்றிலும் தவிர்த்து, சுயமாய்-சுதந்திரமாய் பெண்கள் வாழ முற்பட்டார் களெனின்—இதற்குத் துணிந்தார்கள் எனின் ஆணாதிக்கம் தானாய் குறையும் என்று நான் கருதுகிறேன். 'தனித்துப் போகும் துணிச்சலுண்டு' என்று ஆண் அறியும்போது பெண்ணுக்கு மரியாதை மிகும் என்று கருதுகிறேன். 'அன்புக்கு அன்பு செய், நட்புக்கு நட்பு தா' என்று தான் டீச்சர் சொல்கிறாள். 'அடித்தால் பதிலுக்கு அடி' என்று போதிப்பது, அன்பு பிச்சையிடப்படாமல் மதித்தலாய் விளங்கட்டும் என்பதற்காகத்தான்.

ஆண் ஆக்கிரமிப்பு எப்போது தகரும்? பெண் சுயமாய் நிற்கிறபோதுதான் என்பது என் எண்ணம். மேலும், கெஞ்சிப் பெறுவதல்ல சுதந்திரம்.

என் கதையை—அதன் வளர்ச்சி விகிதத்தை மிகச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். உறவும் சூழலும் கை விட, இனி தனக்குத் தானே துணை என்று ராஜி பாடம் பெறுவதே இந்நாவல். இந்த படிப்பினைக்கு அந்தக் குழந்தை செலவழித்தது அதிகம். பட்ட வேதனை அதிகம். இத்தனை வேதனை வேறு எவருக் கும் வரவேண்டாம் என்று எழுதப்பட்ட நாவல் இது.

இந்த நாவலில் ஒரு அத்தியாயத்தில் நான் செக்ஸ் அதிகம் எழுதியதாய் பலர் கோபப்பட்டார்கள். செக்ஸ் தவறு என்று வளர்க்கப்பட்ட வெளி உலகம் அதிகம் தெரியாத பெண்ணை, உடல் தொட்டு உசுப்ப அவள் மனசு தாக்கப்படும் விதத்தை வெளிப்படையாய் சொன்னேன். மறைத்து வைக்கப்பட்ட விஷயம் மறை முகமாய் தாக்கும்போது எவருக்கும் வக்ரம் வரும். இந்த

வேதனையைச் சொல்லி முகம் பொத்தி அழுத பெண் குழந்தையை எனக்குத் தெரியும்.

காதலையோ, காமத்தையோ கம்பீரமாய் அறிவிக்க ஆண் தவறும்போது, கள்ளத்தனம் காட்டுகிறபோது; உடம்பும் மனசும் வெவ்வேறாகி ஒரு பெண்பிள்ளை தவிப்பதை இரக்கம் உள்ளவர்களாலேயே அறிந்து கொள்ள முடியும். பேடிகள் ஆளுமை செய்யின் பெண் பிள்ளை பேதமை மிக்கவளாய்த்தான் இருப்பாள். அவள் பேதமையைத்தான் அங்கு சொன்னேன்.

திருமதி விஜயம் பாலசுப்ரமண்யன், திருவான்மியூரி லிருந்து கோபப்பட்டிருக்கிறார்.

சித்ரவதைப்பட்டு பத்தினியாய் இருப்பதைவிட, சுதந்திரமான தேவடியாளாக இருப்பது எப்படி என்கிறார். அடிபட்டு மனசு சிறுத்துப்போன கும்பகோண டீச்சரின் கோபம் அது. பெண், ஆண் மீது உமிழ்ந்த வெறுப்பு எச்சல் அது. பத்தினி பத்தினி என்று என்னை அடக்கி சாகடிப்பதைவிட இது மேல் என்கிற ஆங்காரம் அது! மனுஷத்தனமும் அடக்கமும் எப்போது வரும்? மதிக்கப்படும்போது வரும். நேசிக்கப்படுகிற பெண் பிரியமுள்ளவளாய் இருப்பாள். தலைமுடியை கொத்தாய் இழுத்து காதலிக்கச் சொன்னால்,'போடா நாயே' என்கிற பேய்வெறி வரும். 'உன் மரபு நாசமாய்ப் போக' என்கிற ஆத்திரம் வரும். விபச்சாரியாய் இருப்பது வேதனைதான்.

ஆனால், இது புருஷனிடம் அடிபட்டு சாவதைவிட உத்தமம் என நினைக்கத் தோன்றும். என் நாவல் 'இப்படி இரு' என்று சொல்லவில்லை. 'இப்படி இருந்து விடுவார்களோ' என்று பயப்படுகிறேன்.

என் பயம் எத்தகையது என்று ஹிம்ஸைப்பட்ட பெண்ணுக்குத்தான் தெரியும். பெண்ணே பெண்களின் வேதனையைப் புரிந்து கொள்ள மறுப்பதுதான் இன்றைய கொடுமைகளின் உச்சம்!

மற்றபடி, இந்த 'ரிவென்ஜ் ஆட்டிட்யூடு'க்கு என்ன பின் விளைவுகள் என்று நிச்சயம் எழுதுவேன். விடை தேடுதல் தவிர, எழுதுபவனுக்கு வேறென்ன வேலை?

தெளிவாய் எழுதிய கடிதத்திற்கு என் நன்றி!

என்றென்றும் அன்புடன்,
**பாலகுமாரன்**
101/8 A, வெங்கடாசலம் தெரு,
மைலாப்பூர் சென்னை–600 004,

12–7–1989

□□□


பாலகுமாரன்
கை
வீசம்மா
கைவீசு